242/தோ-தா/யமகம்
/[69] 8/ 2
பக்கம் 263

உ

# இராஜ வைத்திய மகுடமென்னும் தேரையர் அருளிச் செய்த யமக வெண்பா

(விரித்தியுரையுடன்)

ஆக்கியோன்:
ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு
அவர்கள்

விலை ரூ.

1973.

# இராஜ வைத்திய மகுடமென்னும்
# தேரையர் அருளிச் செய்த யமக வெண்பா

(விரித்தியுரையுடன்)

ஆக்கியோன்:

**ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்**

தமிழ்நாடு அரசு
சித்த மருத்துவ வளர்ச்சிக் குழுவுக்காக பதிப்பித்து
**இராசிபுரம் திரு. ஜே. எல். அனந்தைய்யார்,**
இராசிபுரம் K. M. ரங்கைய்ய செட்டியார் குமாரர்
**திரு. ர. சந்திரகாசன்**
அவர்களால்
**நன்கொடையாக கொடுக்கப்பட்டது**

விலை ரூ.

இராசிபுரம் ஸ்ரீ ராமா பிரஸில்
அரசினருக்காக பதிப்பிக்கப்பட்டது.

**1973.**

புதுப்பித்தோர் :

சித்த வைத்தியர்கள்

**ஜே. எல். அனந்தய்யர் R. I. M. P.**

**கே. எம். ஆர். சந்திரகாசன் R. I. M. P.**

இராசிபுரம். சேலம் Dt.

# அணிந்துரை.

வரலாற்றுக் காலத்துக்கு மிக முற்பட்ட செந்தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவம் இப்பொழுது நூல் வடிவில் கிடைப்பதரிதாகிவிட்டது. சில நூற்றுண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் வாழ்ந்த பெருந்தகையாளர்கள் சிதறிக் கிடந்த ஓலைச் சுவடிகளை சேமித்து தங்கள் சொந்த செலவில் நூற்கள் வடிவமாக வெளியிட்டனர். அப்பெரும் வள்ளலார்களுள் **ஹக்கீம் அப்துல்லா சாயபு** அவர்கள் ஒருவராவர். அவர் அரும் பெரும் பாடுபட்டு நூறு ஆண்டுகளுக்கு முன் அச்சிட்டு வெளியிட்ட புத்தகங்கள் இன்றைக்கு அப்புத்தகங்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது. சில ஆண்டுகளுள் இந் நூற்களெல்லாம் மறைந்தேவிடும் என்பதாகிறது. மேலும், இந் நூற்களை விரிவுபடுத்தி புதிதாக பதிப்பிக்க தக்க ஆசிரியர்களும் சிலரே தற்சமயம் நிலவுகின்றனர். அவர்களும் வயோதிகமடைந்து விட்டார்கள். எனவே, சித்த மருத்துவ நூற்கள் மறைந்து விடாமலிருக்கவும் ஆசிரியர்களிருக்கின்ற காலத்திலேயே அவைகளை புதுப்பித்து அச்சிட வேண்டும் என்ற திடமான எண்ணம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் **மாண்புமிகு. பேராசிரியர். க. அன்பழகன்** எம். ஏ., அவர்களுக்கு உண்டாகி, சித்த நூற்களை அச்சிட்டு வெளியிட சித்த மருத்துவ வளர்ச்சிக் குழுவினை நிறுவினூர். குழுவின் மூலமாக சித்த மருத்துவ புத்தகங்களை அச்சிட ஆக்க வேலைகள் நடக்கும் சந்தர்ப்பத்தில் ராசிபுரம் **திரு. அனந்தையர்**, வைத்தியர் K. M. ரங்கைய்ய செட்டியார் குமாரர் **திரு. சந்திரகாசன்** ஆகிய இருவரும் இந்திய முறை மருத்துவத்துறை இயக்குனரை அணுகி ஹகீம் அப்துல்லா சாகிப் அவர்களால் நூற்றுண்டு முன்பு வெளியிட்ட "தேரையர் யமக வெண்பா என்னும் நூலை விருத்தியுரையுடன் தங்கள் சொந்த செலவில் வெளியிட்டு சித்த மருத்துவ குழுவுக்கு நன்கொடையாக கொடுக்க முன் வந்தார்கள். மேலும் இந்நூலை முதுநிலை

மேல் படிப்பு (M. D. Siddha) பட்ட தாரிகளுக்கு பாட புத்தக மாகவுள்ளதால் மருத்துவ மாணவர்களுக்கு அரை விலையிலும் மற்றவர்களுக்கு முழு விலையாகவும் விற்கக் கேட்டுக் கொண் டனர். அரசாங்கததின் நோக்கமும் இதேக் கொள்கையை கையாள்வதால் அவ்வாறே செய்யப்படும்என்று கூறப்பட்டது.

மேற் சொன்ன இருபெரும் தகையார்களுக்கு அரசின் சார்பாக இந்திய மருத்துவ இயக்குநர் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகிறார்.

(ஒ-ம்)

இந்திய மருத்துவ இயக்குநர்.

22-11-73.

கடவுள் துணை.

# இராஜ வைத்திய மகுடத்தின்

## முதற் பாக அட்டவணை.


| அ. | பக்கம். |
|---|---|
| அக்கினிக் கட்டின் கற்பம் ... ... | 57 |
| அசாத்திய நாடி லக்ஷணம் ... ... | 11-12 |
| அசாத்திய மேக லக்ஷணம் ... ... | 175 |
| அசாத்திய லக்ஷணம் ... ... | 13-16 |
| அட்டையின் விஷ வகைகள் ... ... | 135-137 |
| அபினி விஷமித்த லக்ஷணம்<br>அபினி விஷமித்தால், அதற்கு முறிப்பு } ... | 210 |
| அப்பிரக சுத்தி ... ... | 77 |
| அப்பிரக பற்பத்திற்கு அனுபானமும் தீரும் நோய்களும் | 133 |
| அப்பிரக பற்பமும், அதன் பிரமாணமும் ... | 130 |
| அப்பிரக பற்பத்தின் அனுபானம் ... | 137 |
| அப்பிரக பற்பத்தின் குண நிச்சயம் ... | 138 |
| அப்பிரக பற்பத்தின் பத்தியம் ... | 137 |
| அப்பிரக பற்பத்தின் முறை ... | 130 |
| அப்பிரக பற்பத்தை மருந்தீட்டிற்குக் கொடுக்கும் விதம் | 139 |
| அப்பிரக பற்பத்தை விஷங்களுக்கு ... | 135 |
| அப்பிரகம் விஷமித்தால் அதன் முறிப்பு ... | 138 |
| அமுக்கராக் கிழங்கின் கற்பம் ... | 50 |
| அயசுத்தி ... ... ... | 73 |
| அயநாக சுத்தி ... ... ... | 112 |
| அயநாக பற்பத்தால் தீரும் நோய்கள்<br>அயநாக பற்பத்தின் பத்தியம் } ... | 111 |
| அயநாக பற்பம் முறை ... ... | 109 |
| அயபற்பத்தால் தீரும் நோய்கள்<br>அளவு பிரமாணம், அனுபானம், பத்தியம் } ... | 91-95 |
| அயபற்பத்திற்கு பிரமாணமும், பத்தியமும் ... | 94 |
| அயபற்பத்தைப் புசிக்கும்போது ஆகா வஸ்துக்கள் | 94 |

| | பக்கம் |
|---|---|
| அரைப்பிற்குச் சாறு முதலியவைகளெடுக்கும் விதி | 95 |
| அரைப்பிற்கு பொது விதியாவது ... | 89 |
| அலரி விஷமித்தால், அதற்கு முறிப்பு ... | 209 |
| அலிஞ்சிலின் கற்பம் ... ... | 35 |
| அனுபான திரவியங்களில் தேனிற்கு இனம் இன்னனவென்பது ... | 91 |
| ஷை நீரிற்கு ... | 92 |
| ஷை நெய்யிற்கு ... | 93 |
| ஷை பாலிற்கு ... | 93 |
| ஷை முலைப்பாலிற்கு ... | 93 |
| ஷை வெண்ணெய்க்கு ... | 93 |
| ஷை வெந்நீர்க்கு ... | 93 |
| அனுபான திரவியங்களின் பிரமாணம் ... | 94 |
| அஸ்தி சுத்தி .... .... ... | 246 |
| அஸ்தி பற்பத்தால் தீரும் நோய் .... ... | 248 |
| அஸ்தி பற்பத்தின் அளவு பிரமாணம் ... | 248 |
| அஸ்தி பற்பத்தின் அனுபானம் .... ... | 248 |
| ஷை செய்முறை .... ... | 246 |
| அஸ்தி பற்ப வகைகள் .... ... | 245 |

## ஆ

| | |
|---|---|
| ஆயில் பட்டையின் கற்பம் .... ... | 53 |
| ஆலம் பாலின் கற்பம் .... ... | 40 |
| ஆலின் கற்பம் ... ... ... | 52 |

## இ

| | |
|---|---|
| இஞ்சின் கற்பம் .... .... ... | 36 |
| இந்திரியப் பரிட்சை .... .... | 67 |
| இரசகர்பூரம் விஷமித்த லக்ஷணம் ... | 210 |
| இரசகர்ப்பூரம் விஷமித்தால் அதன் முறிப்பு ... | 210 |
| இரச சுத்தி (சூதம்) .... .... ... | 76 |
| இரச பற்பத்தால் தீரும் நோய்கள் ... | 171 |

| | பக்கம் |
|---|---|
| இரச பற்பத்தின் அளவுப் பிரமாணம் ... | 170 |
| ஷை அனுபானம் ... | 172 |
| ஷை கால பிரமாணம் ... | 173-175 |
| ஷை மகிமை .... ... | 170 |
| ஷை முறை .... ... | 169 |
| இரச பரிட்சை (பஞ்சேந்திரியங்களிலுள்ள) ... | 36 |
| இரசம் விஷமித்த லட்சணம் ..... ... | 207 |
| இரசம் விஷமித்தால், முறிப்பு ..... .... | 207 |
| இலவண சுத்தி .... .... ... | 82 |
| இலவண பற்பத்தால் தீரும் நோய்கள்<br>இலவண பற்பத்தின் அளவுப் பிரமாணம்<br>ஷை அனுபானம்<br>ஷை நாள் பிரமாணம்,<br>மகிமை, முறை, வல்லபம் .... | 122-124 |
| இலிங்க சுத்தி<br>இலிங்க பற்பத்தால் தீரும் நோய்கள், அளவு பிரமாணம், அனுபானம், முறை, புசிக்க ஏற்ற மாதங்கள், விடங்கள், விஷமித்த லட்சணம், அதன் முறிப்பு .... | 224-231 |
| இறகின் சுத்தி<br>இறகின் பற்பத்தால் தீரும் நோய்கள், அளவு பிரமாணம், அனுபானம், முறை ... | 257 |
| இறகின் பற்ப வகைகள் ..... | 257 |
| இறகுபற்பஞ் சேர்ந்த சர்வ விடாரி ..... | 260 |

ஈ

| | |
|---|---|
| ஈக்களின் கடி விஷ வகைகள் ..... | 137 |

உ

| | |
|---|---|
| உத்தாமணியின் (வேலிப் பருத்தியின்) கற்பம் ..... | 52 |
| உருளைக்கிழங்கின் கற்பம் ..... | 51 |

ஊ

| | |
|---|---|
| ஊமத்தை விஷமித்தால், அதன் முறிப்பு ..... | 210 |

எ **பக்கம்**

எகு (எழுகு) சுத்தி .... .... .... 71

எகு பற்பத்தால் தீரும் நோய்கள், அளவு பிரமாணம், அனுபானம், பத்தியம், பரீஷை, முறை, வேளைப் பிரமாணம் .... 95-98

எச்சிற் பரீக்ஷை .... .... .... 66

எட்டி விஷமித்தால் அதன் முரிப்பு .... 210

எருக்கின் கற்பம் ... ... .... 34

எருமைக் கடியின் விஷ லக்ஷணம் (இயற்கை வெறி) 198

ஷை (செயற்கை வெறி) 198

எலிகடி விஷ வகைகள் ... ..... 136

எலுமிச்சம் பழத்தின் கற்பம் ... ... 54

எலும்பின் சுத்தி .. .... ... 246

எலும்பின் பற்பத்தால் தீரும் நோய், அளவுப் பிரமாணம், அனுபானம், முறை, எலும்பின் பற்ப வகைகள் .... 246-251

ஏ

ஏலத்தின் கற்பம் ... ... ... 47

ஒ

ஓரிதழ் தாமரையின் கற்பம் ... 49

க

கச்சூரத்தின் கற்பம் ... ... ..... 37

கஞ்சாவின் கற்பம் ... ... ... 37

கஞ்சா விஷமித்த லட்சணம் — — 210

கடுக்காயின் கற்பம் — — — 38

கந்தப் பரீக்ஷை — — — 64

கருங்குட்டத்தின் சிகிச்சை (சாத்திய) ,, (அசாத்திய) — 215

கருப்பத்தைப் பற்றின மேக ரண லக்ஷணம் களவு ரண வகைகள் — 174-175

களிப்பிரண்டையின் கற்பம் — 53

கள்ளின் தீமை — — — 49

கற்றூழையின் கற்பம் — — — 46

கற்பத்திற்கு கடைப்பிடியின்னதென்பது — 68

| கா | பக்கம் |
|---|---|
| காந்த சுத்தி — — — | 74 |
| காந்த பற்பத்தால் தீரும் நோய்கள், அளவு பிரமாணம், அனுபானம், முறை, காந்த பற்பம் புசிக்கும்போது ஆகும் வஸ்துகள், ஆகா வஸ்துகள் — | 115-119 |
| காரீய சுத்தி — — — | 148 |
| காரீய பற்பத்தால் தீரும் நோய்கள், அனுபானம், முறை, புசிக்கவேண்டிய நாள் பிரமா — | 124-130 |
| காருட மகிமைக் குளிகை — — | 261 |
| கால நாடித் துணிவு — — — | 16 |
| காற் குளம்பு சுத்தி — — — | 240 |
| காற்குளம்பு பற்பத்தால் தீரும் நோய்கள், அளவுப் பிரமாணம், அனுபானம், முறை காற்குளம்பு பற்ப வகைகள் — | 239-242 |
| காஞன் கற்கம் — — — | 51 |
| **கி** | |
| கிட்டிக் கிழங்கின் கற்கம் — — | 50 |
| கிளிஞ்சிற் சுத்தி (பெருங்) ,, (சிறு) — — | 234 |
| கிளிஞ்சிற் பற்பத்தால் தீரும் நோய்கள், அளவுப் பிரமாணம், முறை, உண்ண ஏற்ற மாதங்கள், விடங்கள் — | 220-224 |
| **கீ** | |
| கீழா நெல்லியின் கற்பம் — — | 37 |
| **கு** | |
| குப்பைமேனியின் கற்பம் — — | 42 |
| **கெ** | |
| கெந்தக சுத்தி — — — | 78 |
| கெந்தக பற்பத்தால் தீரும் நோய்கள், அனுபானம், முறை<br>கெந்தக பற்பம் சேர்ந்த சர்வவிடதோடாரி மாத்திரை,<br>கெந்தகம் விஷமித்த லக்ஷணம்<br>கெநதகம் விஷமித்தால், அதன் முறிவு — | 211-220 |

| கொ | | பக்கம் |
|---|---|---|
| கொம்பு சுத்தி | — — — | 252 |
| கொம்பு பற்பத்தால் தீரும் நோய்கள், அளவு பிரமாணம், அனுபானம், முறை, பற்ப வகைகள், மதன காமேசுரம் | — | 251-256 |

**கோ**

| | | |
|---|---|---|
| கோட்டான் அஸ்தி பற்பத்தால் தீரும் நோய்கள், பற்ப முறை | — | 249-251 |
| கோரைக்கிழங்கின் கற்பம் | — — | 50 |

**கௌ**

| | | |
|---|---|---|
| கௌரி பாஷாணம் விஷமித்த லக்ஷணம், பாஷாணம் விஷமித்தால், அதன் முறிப்பு | — | 208-209 |

**ச**

| | | |
|---|---|---|
| சங்கு சுத்தி | — — — | 81 |
| சங்கு பற்பத்தால் தீரும் நோய்கள், மயிர் வளர்ச்சி செய்யும் முறை, அனுபானம், பத்தியம், முறை | — | 176-184 |
| சத்தப் பரீட்சை | — — — | 59 |
| சர்வ விடாரிக் குளிகை | — — | 261 |

**சி**

| | | |
|---|---|---|
| சிறு கிளிஞ்சிற் சுத்தி | — — — | 234 |
| சிறு கிளிஞ்சிற் பற்பத்தால் தீரும் நோய்கள், அளவுப் பிரமாணம், அனுபானம், முறை, உண்ண ஏற்ற மாதங்கள், விடம் | — | 220-224 |
| சிறுகீரையின் கற்பம் | — — — | 51 |

**சீ**

| | | |
|---|---|---|
| சீதேவியார் செங்கழுநீரின் கற்பம் | — — | 35 |
| சீரகத்தின் கற்பம் | — — | 39 |

**சு**

| | | |
|---|---|---|
| சுத்தி முறைகள் | — — — | 68-85 |
| சுரையின் கற்பம் | — — — | 37 |

சூ — பக்கம்

சூதத்தின் அல்லது இரசத்தின் சுத்தி — 76

செ

செங்குட்டத்தின் சிகிச்சை (அசாத்திய) — 217
,, (சாத்திய)
செய்யான் விஷ வகைகள் — — 137

சே

சேத்தும சுரக்குணம் — — — 11
சேராங்கொட்டையின் கற்பம் — — 44

சொ

சொர்ண பற்பத்தால் தீரும் நோய்கள், அளவு பிரமாணம், அனுபானம், முறை, விசேஷ மகிமை, புசிக்க ஏற்ற மாதங்கள், விடங்கள், புசிக்கும் போது ஆகும் பதார்த்தங்கள், ஆகாச் செயல். — 139-146

த

தகாச் செய்கையினுலுண்டான மேகரண லட்சணம் 175
தண்ணீரில் விழுந்துண்டான தோஷ சிகிச்சை — 220
தந்தங்களின் பற்பத்தால் தீரும் நோய்கள், அளவுப் பிரமாணம், அனுபானம், பற்பத்தின் முறை, பற்ப வகைகள் — 242-245

தா

தாகை ரண வகைகள் — — — 167
தாருட்ய கற்பம் — — — 58
தாமரை கற்பம் — — — 55
தாம்பிர சுத்தி — — — 68
தாம்பிர பற்பத்தால் தீரும் நோய்கள், அளவு பிரமாணம், அனுபானம், நாள் பிரமாணம், மகிமை, முறை, புசிக்கும் போது ஆகாத வஸ்துகள், ஆகும் வஸ்துகள் — 98-112

பக்கம்

தாளக பற்பத்தால் தீரும் நோய்கள், அனுபானம், முறை, பழகவேண்டிய கால அளவு, விஷமித்த லக்ஷணம், விஷமித்தால் அதன் முறிப்பு — 201-210

து

துந்தநாக சுத்தி (அல்லது) நாகசுத்தி — 77

துத்தநாக பற்பத்தால் தீரும் நோய்கள், துத்தநாக பற்பத்தின் அளவுப் பிரமாணம், அனுபானம், முறை, புசிக்க ஏற்ற மாதங்கள், ரணங்களுக்கு உபயோகிக்கும் முறை — 153-161

துளசியின் கற்பம் — — — 47

தூ

தூதுவளையின் கற்பம் — — — 42

தே

தேக நிறப் பரீக்ஷை — — — 62

தேள் விஷ வகைகள் — — — 136

தேற்ருன் கற்பம் — — — 46

ந

நகை ரண வகைகள் — — — 167

நட்டுவக்காலி விஷ வகைகள் — — 137

நரிக் கடியின் லக்ஷணம் (பேய்) — — 137

நரிக் கடியின் லக்ஷணம் இயற்கை வெறி செயற்கை வெறி 197

நரிக் கடியின் விஷ வகைகள் — — 137

நவநீத பற்பத்தால் தீரும் நோய்கள், அளவு, பிரமாணம், அனுபானம், முறை, புசிக்கஏற்ற மாதங்கள், புசிக்க ஏற்ற விடங்கள் — 199-201

நன்ஞரியின் கற்பம் — — — 52

| நா | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| நாக சுத்தி (துத்த நாகம் என்பதைப் பார்க்க | | | — | 77 |
| நாடிப் பரிசைஷ | — | — | — | 12 |
| நாணலின் கற்பம் | — | — | — | 38 |
| நாபி சுத்தி | — | — | — | 85 |
| நாய் கடியின் லக்ஷணம் (இயற்கை வெறி)<br>,, (செய்கை வெறி) | | | — | 197 |
| நாய்க்கடி விஷ வகைகள் | | — | — | 136 |

நெ

| | | | | |
|---|---|---|---|---|
| நெல்லியின் கற்பம் | — | — | — | 46 |

நே

| | | | |
|---|---|---|---|
| நேர்வாள சுத்தி | — | — | 80 |
| நேர்வாளம் விஷமித்தலின் லக்ஷணம்<br>நேர்வாளம் விஷமித்தால், அதன் முறிப்பு | | — | 209 |

நோ

| | | | |
|---|---|---|---|
| நோயணுகார் இன்னுரென்பது | | — | 28 |
| நோயாளிக் கறிவுறுத்தல் | — | — | 32-34 |
| நோயுறுவது இன்னுரென்பது | — | — | 27 |

ப

| | | | | |
|---|---|---|---|---|
| பசும்பாலின் கற்பம் (காய்ச்சாத) | | — | = | 39 |
| ,, (காய்ச்சின) | | — | = | 49 |
| பசுவின் கடியின் லக்ஷணம் (இயற்கை வெறி)<br>,, (செயற்கை வெறி) | | | — | 197 |
| பச்சை நாபி விஷமித்த லக்ஷணம்<br>பச்சை நாபி விஷமித்தால், அதன் முறிப்பு | | | — | 209 |
| பட்சிராஜக் குளிகை | — | — | — | 261 |
| பத்தியத்திற்குக் கடைப்பிடி யின்னதென்பது | | | — | 105 |

பக்கம்

பத்தியபதார்த்தங்களில்இலந்தைப்பழத்திற்கு இனங்கள் இன்னவென்பது:
,, எலுமிச்சம் பழத்திற்கு
,, கஞ்சிக்கு
,, களாவிற்கு
,, கள்ளிற்கு
,, காச்சொறிக் கீரைக்கு
,, கிச்சிலிக்கு
,, சர்க்கரைக்கு
,, தமரத்தம் பழத்திற்கு
,, நாவற் பழத்திற்கு
,, நெய்க்கு
,, நெல்லிப் பழத்திற்கு
,, பண்ணியத்திற்கு
,, பாகற் காய்க்கு
,, பாலிற்கு
,, பீர்க்கங் காய்க்கு
,, மாதளம் பழத்திற்கு
,, மாம்பழத்திற்கு
,, மோர்க்கு
,, வாழைப் பழத்திற்கு
,, விளாம் பழத்திற்கு
,, வெண்ணெய்க்கு
,, வெள்ளரிப் பழத்திற்கு — 105–108

பரிசப் பரிக்ஷை — — — 60

பலகரை சுத்தி — — — 82

பலகரை பற்பத்தால் தீரும் நோய்கள் — 193

,, பற்பத்தின் அளவுப் பிரமாணம்
,, நாள் பிரமாணம்
,, முறை
,, புசிக்கும்போது ஆகா பதார்த்தங்கள்
,, ,, ஆகும் பதார்த்தங்கள்
,, விஷங்களுக்கு உபயோகிக்கும் முறை — 189–199

பவள சுத்தி — — — 84

பவள பற்பத்தால் தீரும் நோய்கள், அளவுப் பிரமாணம், அனுபானம், பத்தியம், முறை, புசிக்க ஏற்ற மாதங்கள், விடங்கள், விரிய நஷ்டத்திற்கு உபயோகிக்கும் முறை — 182–189

பற்களின் சுத்தி (மிருகங்களின்) — — 242

| | |
|---|---|
| பற்களின் பற்பத்தால் தீரும் நோய்கள், அளவு பிரமாணம், அனுபானம் — | 244-245 |
| பற்களின் பற்ப முறை பற்களின் பற்ப வகைகள் — | 246-251 |
| பற்ப சிந்தூர மாத்திரைகளே அவுஷதங் களிற் சிறந்ததென்பது — | 26 |
| பற்பஞ் செய்ய பொது விதி — — | 88-91 |
| பற்ப வகை — — — | 85 |
| பனையின் கற்பம் — — — | 45 |
| பன்றிக் கடியின் லக்ஷணம் (இயற்கை வெறி) ,, (செயற்கை வெறி) — | 198 |

பா

| | |
|---|---|
| பார்பு விஷ சிகிச்சை — — — | 136 |
| பாஷாண சுத்தி — — — | 79 |
| பாஷாணம் விஷமித்த லக்ஷணம் பாஷாணம் விஷமித்தால், அதன் முறிப்பு — | 206 |

பி

| | |
|---|---|
| பித்த சுரக் குணம் — — — | 10 |
| பிரம தண்டின் கற்பம் — — — | 55 |
| பில்லையைக் காய வைத்தல் முதலிய விதி — | 90 |
| பிள்ளை பெற மாட்டாமல் வருந்துவோர்க்குக் கற்பம் | 58 |

பு

| | |
|---|---|
| புடபாக விதி — — — | 91 |
| புளியாரையின் கற்பம் — — — | 40 |

பூ

| | |
|---|---|
| பூரானின் கடி விஷ வகைகள் — — | 136 |

பொ

| | |
|---|---|
| பொன்னுங்காணியின் கற்பம் — — | 43 |

ம

| | |
|---|---|
| மணத்தக்காளியின் கற்பம் — — | 47 |
| மண்சீலை செய்யப் பொது விதி — — | 19 |

மரணக் குறிப்பின் துணிவு — — 15
மலட்டிற்குக் கற்பம் — — — 56
மலட்டின் லக்ஷணம் -- — — 56
மலப் பரீக்ஷை — — — 65

மு

முட்டையோடுகளின் சுத்தி
முட்டையோடுகளின் பற்பத்தால் தீரும் நோய், அளவுப் பிரமாணம், அனுபானம், முறை, பற்ப வகைகள் — 236-239
முத்துச் சுத்தி — — — 83
முத்துப் பற்பத்தால் திரும் நோய்கள், அனுபானம், நாள் பிரமாணம், முறை, ரணங்களுக்கு உபயோகிக்கும் விதம் — 161-168

மூ

மூக்கிரட்டையின் கற்பம் — = 42
மூஞ்சூறு விஷ கடி வகைகள் = = 137
மூத்திரப் பரீக்ஷை = = = 65

மே

மேகப் புண் வகைகள் = = = 174

மோ

மோகினி பைத்திய ரோகச் சிகிச்சை = 220
மோகை ரண வகைகள் = = 166-168

வ

வசலையின் கற்பம் = = = 51
வண்டு கடி விஷ வகைகள் = = 136
வள்ளைக் கொடியின் கற்பம் = — 41

வா

வாட் கோரையின் கற்பம் = = 50
வாதமாதி முத்தேசிகட்கும் தகுமிடம், தகாவிடம் 25

| வி | | பக்கம் |
|---|---|---|
| விடதோடாரி மாத்திரை (சர்வ) | — | 218 |
| வில்வத்தின் கற்பம்<br>விளாவின் கற்பம் | — | 48 |
| விஷநாடித் துணிவு — — | — | 14 |

**வெ**

| | | |
|---|---|---|
| வெண் குட்டத்தின் சிகிச்சை (அசாத்திய)<br>,, (சாத்திய) | — | 216 |
| வெண்ணொச்சியின் கற்பம் — | — | 41 |
| வெள்ளி பற்பத்தால் தீரும் நோய்கள்<br>வெள்ளி பற்பத்தின் அளவுப் பிரமாணம், அனுபானம், காலப் பிரமாணம், முறை | — | 149-153 |
| வெள்ளீய சுத்தி (வங்கம்) — | — | 75 |
| வெள்ளீய பற்பத்தால் தீரும் நோய், அளவு அளவு பிரமாணம், அனுபானம், நாள் பிரமானம், முறை | — | 151-153 |
| வெறிகளின் லட்சணம் (அசாத்திய)<br>,, (சாத்திய) | — | 196 |

**வே**

| | | |
|---|---|---|
| வேம்பின் கற்பம் — — | — | 45 |

**வை**

| | | |
|---|---|---|
| வைத்தியஞ் செய்யச் செல்லுகையில் ஆகாச்சகுனம் | | 22 |
| ,, ,, (நற்சகுனம்) | | 23 |
| வைத்தியஞ் செய்ய திதியறிதல் | — | 18 |
| ,, நட்சத்திரமறித்தல் | — | 19 |
| ,, நாளறிதல் | — | 18 |
| ,, மாதமறிதல் | — | 20 |
| ,, லக்கினமறிதல் | — | 21 |

| | | பக்கம் |
|---|---|---|
| வைத்தியஞ் செய்யுமுன் கவனிக்க வேண்டியவைகள் | | 17 |
| வைத்தியத் தொழிலுக்கு யோக்கியா யோக்கியர்கள் | | 29 |
| வைத்திய முறைமைக்குக் கட்டுபடாதவர்கள் | — | 29 |
| வைத்தியருக் கறிவுறுத்தல் | — — | 31 |
| வைத்தியரை யழைக்கத் தகாத் தூது | — | 24 |
| வைத்தியரை யழைக்குந் தூது லட்சணம் | — | 24 |

ர

ரசம் (இரசம் என்பவைகளைப் பார்க்கவும்)

ல

லவணம் (இலவணம் என்பவைகளைப் பார்க்கவும்)

**இராஜ வைத்திய மகுடம் முதற்பாக அட்டவணை முற்றிற்று.**

உ

கடவுள் துணை.

தேரையர் திருவாய்மலர்ந்தருளிய

# இராஜ வைத்திய மகுடம்

என்னும்

## யமகவெண்பா.

மூலமும் - உரையும்.

——(=)——

### கடவுள் வணக்கம்.

நந்தே ரையயரருளி ராச வைத்யமகு
டந்தே ரையயரருளி ளுலச்செ—னந்தேரை
யேகனமாக் காணவிவர்ந் தெங்குமுல வப்புரியு
மேகனமாக் காருணிய மே.

(இதன்பொருள்.) [நம் தேரையர் அருள் இராச வைத்ய மகுடம்]=நமது தேரைய மகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய இராஜவைத்திய மகுடம் (என்னும் இந்நூல்)[தேர் ஐயர் அருளினல்]=(எவற்றினும்) தேர்ந்த பெரியோர்களின் ஆசீர்வாதத்தினல் [அச்சு என் அம் தேரையே கனமாக்காண இவர்ந்து]=அச்சு என்கின்ற சிறந்த இரதத்தையே மேன்மையாகத் தோன்ற ஊர்ந்து [எங்கும் உலவ]=உலகமெங்கும் பவனிவரும்படி [ஏகன் அம் மா காருணியம் புரியும்]=ஏக நாயகனுன (கடவுள்) சிறந்த தமது பெருங்கருணையைப் பாலிப்பர்—எ-று.

(தாற்பரியம்.) தேரைய மகாமுனிவர் திருவாய்மலர்ந்த இராஜவைத்ய மகுடம் என்னும் இந்நூல் அச்சிற் பதிந்து உலகெங்கும் பரவுவதற்கு ஏகநாயகரான கடவுள் திருவருள் பாலிப்பார் என்பதே.

## பாயிரம்.

### விநாயகர் துதி.

அத்தி முகம னணிமழவா குங்கருணை
யத்தி முகம னணிகாப்பே—யத்தி
முகவா கடமேனை முன்னுத தேரன்
முகவா கடமறைக்கு முன்.

(இதன்பொருள்.) [அத்தி முகம் மன் அணி மழவு ஆகும்] =(கயிலை) மலையை இடமாகவுடைய சிவபிரானது அழகிய குமாரராகிய [கருணை அத்தி முகம் மன் அணி காப்பு]=திருவருளமைந்த யானை முகமுள்ள விநாயகக் கடவுள் சமீபித்த காவலாகும்; [கடம் ஏனை முகவா அத்தி]=குடங்களாலும் மற்றைப் பாத்திரங்களாலும் மொள்ளுதற் கேலாத கடலை (யொத்தது) [முன்னுத தேரன்முக வாகட மறைக்கு முன்]= அளவிடப்படாத தேரமகா முனிவரருளிய ஆயுள்வேதத்திற்கு முதலில்—என்றவாறு. ஏ-அசை

(தாற்பரியம்.) எவராலும் அளவிடப்படாத நுண்ணறிவினையுடைய தேரையரருளிய இந்த வைத்திய சாஸ்திரத்திற்குக் கயிலைமலையை இடமாகவுடைய சிவபிரானது அழகும் கருணையும் நிறைந்த யானைமுக முள்ள விநாயகக் கடவுள் முதலிற் காப்பாகும் என்பதே.

### பலதேவர் துதி.

சத்தியத்த னத்தன் சயம்பேரம் பன்வீரன்
சத்தியத்த னத்தன் சதாகதிமால்—சத்தியத்தன்
காரிமதி சேய்பொன் கவிராகு கேதநுமன்
காரிமதி பூநீர்தீ காப்பு.

(இ-ள்) சத்தி அத்தன் நத்தன் சயம்பு ஏரம்பன் வீரன்]=உமாபதியாகிய (சிவபெருமானும்) சங்கேந்திய திருமாலும் தாமரை மலரில் உதித்தவனாகிய (பிரமனும்) விநாயகரும் வீரபத்திரரும் [சத்தி அத்தன் அத்தன் சதாகதி மால் திசத் அத்தன்]=வேலைத்திருக்கரத்தேந்திய முருகக் கடவுளும்

காட்டுக்குக் காவலாகிய (வயிரவரும்) வாயுதேவனும் புதனும் பாதிநாளைக்குரிய சூரியனும் [காரி மதி சேய் பொன் கவி ராகு கேது அநுமன்]=சனியும் சந்திரனும் செவ்வாயும் வியாழனும் சுக்கிரனும் இராகுவும் கேதுவும் ஆஞ்சனேயரும் [காரி மதி பூ நீர் தீ காப்பு]=அரிகர புத்திரரும் (யாவரும்) எண்ணத்தக்க பூதேவியும் கங்காதேவியும் அக்கினிதேவனும் காப்பாகும் - எ-று.

(தா - ம்.) திரிமூர்த்திகளையும், அவர்களில் முதன் மூர்த்தியின் குமாரர்களையும், நவக்கிரகங்களையும் சதுர்ப் பூதங்களையும் ஆஞ்சனேயரையும், காப்பாகக் கூறியது. (உ)

## இதுவுமது.

வல்லமையா லேசுவர்க்கம் வாகுதரங் கண்ணமரி
வல்லமையா லேசுவர்க்க மாதரிமே—வல்லமையாற்
கும்பமுனியாதிசட்டை கொங்கணர்கோரக்கர்சித்தர்க்
கும்பமுனி யாதிகல்வெல் கூர்.

(இ - ள்) [வல் அமை ஆல் ஏ சுவர்க்கம் வாகு உதரம் கண்]=சூதாடுகருவி மூங்கில் ஆலிலை அம்பு (இவைகளை முறையேபோன்ற) தனத்தையும் தோளையும் வயிற்றையும் கண்ணையுமுடைய [அமரி]=போரில் வல்லவளாகிய துர்க்கையும் [வல்லமையால் ஏய் சுவர்க்கம் மாதரி]=(தனது) வல்லபத்தாலடைந்த தேவலோகத்திலுள்ள காளியும் [மேவல் அமையார்]=இச்சையில்லாதவர்களாகிய [கும்பமுனி ஆதி சட்டை கொங்கணர் கோரக்கர் சித்தர்க்கும்பு] = அகத்தியமுனிவர் முதலாகச்சட்டை முனிவர் கொங்கணமுனிவர் கோரக்கமுனிவர் நவநாதசித்தர்கள் (ஆகிய இவர்களும்) [அம்முனியாது இகல் வெல் கூர்]=அருளைக் கோபியாமல் பகையை வெற்றி கொள்ள அருள்வார்கள்—எ - று.

(தா - ம்) துர்க்கை, காளி, முனிவர்கள், சித்தர்கள் ஆகிய இவர்கள் இந்நூற்கு நேரும் பகையாகிய இடையூற்றையகற்றி அருள்புரிவர்கள் என்பதே. (௩)

## இதுவுமது.

சொன்னவரை மீதிருந்து தூயமறை யாகமநூற்
சொன்னவரை மீதிருந்து தொல்லுளஞ்சேர்—சொன்னவரை
யாதரிக்கும் பாரி லதுபோன் மருந்தனுர்வை
யாதரிக்கும் பாரினியை யா.

(இ - ள்) [சொன்னவரை மீது இருந்து] = பொன்மலையாகிய (மேருமலையின்) மேல் எழுந்தருளி [தூய மறை ஆகமம் நூல் சொன்னவரை] = பரிசுத்தமாகிய வேதங்களையும் ஆகமங்களையும் சாத்திரங்களையும் அருளிச்செய்த சிவபிரானை [மீதிருந்து தொல் உளம்சேர்] = மேம்பாடான திருத்தமெய்திப் புராதனமாயுள்ள உன் மனத்தில் தியானிக்கக்கடவாய் (அப்படி செய்தால்) [சொல் நவரை ஆதரிக்கும் பாரில் அதுபோல்] = செந்நெற்பயிரும் காய்த்தானியங்களும் (பசிப்பிணியை நீக்கிக்) காக்கும் உலகத்தில் அவ்வாறு [மருந்து அனுர் வையாது அரிக்கும்] = (உன்னாற் செய்யப்படும்) ஔடதங்கள் பிணிகளை நிலைக்கவொட்டாமல் அழிக்கும் [பார் இனி ஐயா] = ஐயா இனி நீ, (பரீட்சித்துப்) பார்—எ - று.

(தா - ம்) ஈஸ்வரனை இதயத்தில் தியானித்து நீ மருந்து செய்வாயாகில் அம்மருந்து அதி விரைவில் பிணிகளையொழிக்கும் என்பதே. (ச)

## அவையடக்கம்.

முத்தமிட்டு றைக்குமன்னர் மூடனென்வாய்ச் சொற்கொளல்
[சேய்
முத்தமிட்டு றைக்குமிலை மொய்கொளல்போன் - முத்தமிட்டுச்
சங்கமுற முன்புசிறுர் தாங்களிக்கக் காட்டேரற்
சங்கமுற முன்னுதல்போற் றுன்.

(இ - ள்.) [முத்தமிழ் துறைக்கு மன்னர்] = (இயல் இசை நாடகமென்னும்) முத்தமிழ்களின் எல்லைக்குத் தலைவர்களாகிய (புலவர்கள்);[மூடன் என் வாய்ச்சொல் கொளல்] = அறிவிலேனுகியஎனது வாயிலுதிக்கும் சொற்களை அங்கீகரித்தல்[சேய் முத்தமிட்டு உறைக்கும் இலை மொய் கொளல்போல்] = (தாய்மார்கள் தம்முடைய) குழந்தைக்கு முத்தம் கொடுத்து (அதன்வாயி

ஞற்றரும்) காரமாகிய வெற்றிலையைத் (தாம்பூலமாகக்) கொள்ளுதல்போலவும் [முத்தம் இட்டு சங்கம் உற]=முத்துக் களை ஈன்று சங்குகளிருக்கவும் [முன்பு சிறுர் தாம் களிக்க காட்டு] =எதிரிற் சிறு பிள்ளைகள் சந்தோஷிக்கும்படி காட்டுகின்ற (ஏரல் சங்கம் முறம் முன்னுதல்போல்]=கிளிஞ்சிலின் கூட்ட மாகிய முறங்களை (மேன்மையாக) நினைக்குதல்போலவும் ஆகும் – எ - று. [தான்]=அசை.

(தா - ம்.) அறிவிலேன் சொற்களைப் பெரியோரங்கீகரித் தல், தாய்மார்கள் தம், குழந்தைகள் வாயினுற்றரும் வெற்றிலை யைத் தாம்பூலமாக மகிழ்தல் போலவும், அவர்கள் விளையாடும் கிளிஞ்சில்களை முறமாக மகிழ்தல் போலவுமாம் என்பதே. (ரு)

### இதுவுமது.

நாகரத்தி னத்தை நகையி லிடலெனவே
நாகரத்தி னத்தை நடத்தினே—நாகரத்தி
யாயுள்வே தத்தை யருந்தமிழி ஞற்புனைந்தே
யாயுள்வே தத்தையறி யாய்.

(இ - ள்.) [நாகரத்தினத்தை நகையில் இடல் எனவே]= சர்ப்பத்தினிடத்துள்ள மாணிக்கத்தை ஆபரணங்களில் பதிப் பதுபோலவே [நாகரத்தின் அத்தை நடத்தினேம்]=(தேவ பாஷையாகிய) நாகரத்திலிருந்ததைச் செய்தோம் [நாகர் அத்தி ஆயுள்வேதத்தை அரும் தமிழிஞல் புனைந்து]=தேவர் களுடைய கடலாகிய (பாற்கடல்போன்ற) ஆயள்வேதத்தை அருமையான தமிழ்ப் பாவையில் அலங்கரித்து [ஆய் உள் வேதத்தை அறி ஆய்]= தாய் போன்ற (புலவர்களே) இதனுள் ளிருக்கும் குற்றங்களை யுணர்ந்து ஆராயுங்கள் —எ - று.

(தா - ம்.) சர்ப்பத்தினிடத்திலுள்ள மாணிக்கத்தை எடுத்து ஆபரணங்களிற் பதிப்பதுபோல, நாகர பாஷையி லிருந்த இந்நூலைத் தமிழ்ப்படுத்தினேனுகலின், புலவர்களே, தாய்போன்ற கருணையுள்ளவர்களாய் இந்நூலிலுள்ள குற்றங் களைத் தெளிந்து ஆராயுங்கள் என்பதே. எனவே வீணே குற்றங் கூருதீர்களென்றபடி. (சு)

## கருடபகவான் பூஜை.

கத்துருவை யார்சேய் கடிக்குவெண்குஞ் சத்ததுவா
கத்துருவை நீர்போற் கவிக்குருமில்—கத்து
வயினதே யன்பாத மானசமாங் கோயில்
வயினதே யன்பாக வை.

(இ - ள்.) [கத்துரு ஐ ஆர் சேய் கடிக்கு] = கத்துருவின் அழகமைந்த பிள்ளையாகிய (பாம்பின்) கடிவிஷத்திற்கு [வெண் குஞ்சத்தது ஆக துருவை நீர் போல்] = வெள்ளைக் குன்றிமணிச் செடி சமூலமும் செம்மறியாட்டின் சிறுநீரும் போல [கவிக்கு] =(எனது பாடலாகிய) இவ் யமக வெண்பாவிற்கு [உருமில் கத்து வயினதேயன் பாதம்] = இடியைப்போன்றொலிக்கும் கருட பகவானுடைய திருவடிகளை [மானசமாம் கோயில் வயினதே அன்பாகவை] = மனமாகிய ஆலயத்தினிடத்திலேயே பத்தியுடன் ஸ்தாபிப்பாயாக.

(தா - ம்.) சர்ப்ப விஷத்திற்கு வெண்குன்றியின் சமூலமும் செம்மறியாட்டுச் சிறுநீரும் எவ்வாறு பயனைக்கொடுக்குமோ அதுபோல, இந்நூல் இனிது விளங்குதற்குக் கருட பகவானுடைய திருவடித் தியானமே முக்கியமா மென்றபடி.

(எ)

## பார்வதியார் பூஜை.

ஏகாட்சி யாநாளி லெந்தாயு கந்தகதி
யேகாட்சி யாதலினு லேழைநெஞ்சே—யேகாட்சி
யாங்கவிகை வல்லியமே யாரா தனையிடமே
யாங்கவிகை வல்லியமெய் யாய்.

(இ - ள்.) [ஏக அட்சியான் நாளில் எம் தாய் உகந்த கதியே காட்சி] = ஒற்றைக் கண்ணுடைய (சுக்கிரனுக்குரிய) நாளாகிய வெள்ளிக்கிழமையில் நமது மாதாவாகிய பார்வதியார் விரும்பிய பதவியே தரிசனமாகும் [ஆதலினுல் ஏழை நெஞ்சே ஏகு ஆட்சி ஆம்] = ஆகையால் மூடமனமே நீ செல்வாய் நன்னிமித்தம் உண்டாகும் [கவி கைவல்லியமே] = முனைந்துபார் சித்தியாகும் [ஆராதனை இடம் ஏய்] = (அவ்வீஸ்வரி

யைப்) பூசிக்கும் இடத்திற் பொருந்து [ஆங்கு அவிகை வல்லியம் மெய்யாய்]=அவ்விடத்தில் அழிப்பாயாக வெறுக்கத்தக்க (அகங்கார மென்னும்) புலியை நிச்சயமாய்—எ - று.

(தா - ம்.) சுக்கிரவாரத்தில் ஈஸ்வரியின் தரிசனமே சிறந்த பதவியாகும், ஆதலால் மூட மனமே அவ்வீஸ்வரியைப் பூஜிக்கும் இடத்திற்சென்று பொருந்தி, அகங்காரத்தை அடக்குவையாயின் சகலமும் சித்தியாகும் என்பதே. (அ)

### வைரவர் பூஜை.

வயிரவரை நேரோசை வைகரியுள் வைத்தே
வயிரவரை நேராய் வதிந்தே—வயிரவரை
யாரா தனஞ்செயனே யத்துள்வைப்பா யென்மகனே
யாரா தனஞ்செயனே யாம்.

(இ - ள்.) [வயிரவரை நேர் ஓசை வைகரியுள்வைத்து]= நாகசுரக்காரரையொத்த சத்தத்தைத் திட்டமாக உள்ளடக்கிக்கொண்டு [வயிரவரை நேராய் வதிந்து]=வச்சிர மலையைப் போல நிட்டையிலிருந்து [வயிரவரை ஆராதனம் செயல் நேயத்துள் வைப்பாய் என் மகனே] = வைரவக் கடவுளை ஆராதித்தலை அன்பினுல் மனதிற் பதிப்பாயாக எனது மாணுக்கனே [யார் ஆ தனஞ்சயனே ஆம்]=(அப்படி செய்வாயாகில்) நீ யாவன்? ஆ! அருச்சுனனே யாகும் - எ - று. தனஞ்சயனென்ற பாலது எதுகை நோக்கித் தனஞ்செயனென நின்றது.

(தா - ம்.) நாக சரத்தைப்போல் மாறிமாறிவருகின்ற சுவாசத்தைத்திட்டமாக உட்செலுத்திநிஷ்ட்டைகூடி வயிரவக் கடவுட்கு மானதபூஜை இயற்றுவாயாகில் நீ அருச்சுனனைப் போலாவாய் என்பதே. (கூ)

### நூற்பயன்.

செல்வந் தழைக்குந் திடமுண்டாந் தெய்வதமண்
செல்வந் தழைக்குஞ் சிகாவளம்போற் - செல்வந்
தனமாற்று வீரங்கோ தஞ்சீர்த்தி செய்வி
தனமாற்று விக்குமிது தான்.

(இ - ள்.) [செல்வம் தழைக்கும்] = ஐஸ்வரியம் விசேடமாகும் [திடம் உண்டாம்] = தைரியம் உண்டாகும் [தெய்வதம் அண்] = மகிமை பொருந்தும் [செல் வந்து அழைக்கும் சிகாவளம்போல்] = மேகம் வந்தழைக்கின்ற மயிலைப்போல [செல் வந்தனம் ஆற்று] = செல்லத்தக்க உபசாரங்களைப் புரிவாயாக [வீரம் கோதம் சீர்த்தி செய்] = மாத்திரை சிந்தூரம் பற்பம் (ஆகிய இவைகளைச்) செய்துகொள்; [விதனம் ஆற்றுவிக்கும் இதுதான்] = (பிணியின்) துயரத்தைத் தணிப்பிக்கும் இந்நூல் எ - று.

(தா - ம்.) இந்நூலிற் கூறியபடி தவறுமல் மாத்திரை, சிந்தூரம், பற்பம் இவைகளைச் செய்துகொள்வாயாகில், அவற்றுல் ஐஸ்வரியமும் வல்லபமும் மகிமையும் உண்டாகும். ஆயின் நீ மரியாதையுடனிருப்பாயாக என்பதே. (க0)

**இன்னின்ஞர் நூல்களால் நாடி அறியலாமென்பது.**

தாதுவி னுடிபண்டி தர்க்குக் கணிதர்க்கெய்
தாதுவி னுடியெய்திற் சத்தியமாந் – தாதுவினு
கும்பரமர் நந்தி குமாரர்தன் வந்திரிநற்
கும்பரமர் தேரர்சித்தர்க் கும்.

(இ - ள்.) [பண்டிதர்க்கு தாதுவின் நாடி] = வைத்தியர்கட்குத் தாதுக்களின் நாடி நிதானமும் [கணிதர்க்கு விஞடி] = சோதிடர்கட்கு நாழிகையினளவும் [எய் தாது] = (சுலபத்தில்) அடையாது; [எய்தில் சத்தியம் ஆம்] = அவ்வாறடைந்தால் உண்மைப் பிரயோசனம் சித்திக்கும்; [தாதுவின் ஆகும் பரமர்] = பொன் போலும் நிறமுடையராகிய சிவபிரானும், [நந்தி] = நந்திகேசரும், [குமாரர்] = முருகக் கடவுளும் [தன்வந்திரி] = தன்வந்திரியும், [நற்கும்பர்] = சிறந்த அகத்தியரும், [அமர் தேரர்] = யாவராலும் விரும்பப்படுகின்ற தேரையரும், [சித்தர்க்கும்] = சித்தர்களும் (அருளிய நூல்களுக்கும்) அவ்வல்லபமுண்டு) — எ - று.

(தா - ம்.) சிவபிரான் முதல் சித்தர் வரையிற் சொன்ன எழுவரும் கூறியுள்ள வைத்திய சாத்திரங்களாலும் சோதிட சாத்திரங்களாலும் நாடி நிதானமும் நாழிகை நிதானமும்

விளங்குமேயல்லது ஏனையவற்ருல் அவ்விரண்டும் அவ்வளவு விபரமாய் விளங்கா என்பதே. (கக)

பாயிரம் முற்றிற்று.

## நூல்.

### வாதத்தின் பெருமை.

பொற்ரு மரையான் புனைமெய் யரண்காக்கும்
பொற்ரு மரையான் புகல்வதெவன்—பொற்ரும்
வளவினிலை யாக்குரம்பை மன்னென்ன மன்ன
வளவினிலை யாக்கும் வளி.

(இ - ள்.) [பொன் தாமரையான் புனை மெய் அரண் காக்கும்]=பொன் மயமான தாமரை மலரிலுள்ள (பிரமனுற்) சிருட்டிக்கப்பட்ட சரீரமாகிய கோட்டையை ஆளுகின்ற [பொன் தாமரை]= அழகிய கீர்த்தியுடையவரை [யான்புகல்வது எவன்] = யான் என்னென்று கூறுவது [பொத்து ஆம் வளவின் நிலையா குரம்பை மன் என்ன] = துவாரங்களுள்ள இடத்தையுடைய அநித்தியமாகிய இச்சரீரத்திற்கு அரசனென்றுரைக்கும்படி [மன் அவளவின் நிலையாக்கும் வளி]= உயிர் நிலைத்திருக்கும்வரையில் அதனை உறுதிபடுத்தும் வாதம் —எ - று.

(தா - ம்.) பிரமனுற் சிருட்டிக்கப்பட்ட நவத் துவாரங்களுள்ள அநித்தியமாகிய இச் சரீரத்தில் உயிர் தங்கியிருக்கும் வரையில் நிலைபெறச் செய்வதாகிய வாதமானது இச் சரீரமாகிய கோட்டையை அரசாட்சி புரியும் வேந்தனென்று புகழ் பெற்றதாயின் அதன் பெருமையை யான் என்னென்றுரைப்பேனென்பதே. பொத்து எனற்பாலது எதுகைநோக்கிப் பொற்றென நின்றது. (க)

### வாதசுரக்குணம்.

அங்கங்க றுக்குமிசை யானனமா மேனியுளை
யங்கங்க றுக்குமிசை யாதுணவா—யங்கம்
பரமாகப் பண்ணுமுடல் பாவகனு நோய்வி
பரமாகப் பண்ணுநிரு பன்.

(இ - ள்.) [அங்கம் கறுக்கும்]=சரீரம் கருநிறமடையும்; [ஆனனம் ஆம் மிசை]=முகம் நீர் கொள்ளும்; [மேனி உளே அங்கு அங்கு அறுக்கும்] = உடலிலுள்ள உரோமங்களின் கால்கள்தோறும் குத்தும் [உணவு இசையாது] = ஆகாரம் சரிப்படாது; [ஆயம்கம் பரம் ஆக அப்பு அண்ணும்]=வழக்கமாய்ச் சிரோபாரம் உண்டாகும்படி நீர் பொருந்தும்; [உடல் பாவகன் ஆம்]=சரீரமெங்கும் அக்கினிதேவனைப் போன்ற (சுரம்) உண்டாகும்; [நோய் விபரம் ஆகப் பண்ணும் நிருபன்] = பிணியின் விதங்கள் எவற்றையும் உண்டாக்கும் அரசனாகிய வாதம் =எ - று.

(தா - ம்.) உடல் முழுவதும் கருநிறமடைவதும், சரீரமடங்கலும் குத்தலுண்டாவதும்; தேகம் எங்கும் சுரமுண்டாவதும், முகத்தில் நீர் கோர்ப்பதும், தலை கனப்பதும், அன்னத்துவேஷமுண்டாவதும் வாதசுரத்தின் குணமாம். அன்றியும் நோய் விபரம் என்றதனால், மலபந்தம் முதலிய பலவகைக் குணங்களையும் உண்டாக்குமென்றறிக. (உ)

## பித்தசுரக்குணம்.

பாடலமெய் மானுகம் பாறுநிக ராகவுடல்
பாடலமெய் மானுகம் பாறுமே—பாடலங்கம்
பித்தசுர மாகவரு பேராக் கினிமயமாம்
பித்தசுர மாகவரு பேய்.

(இ - ள்) [பாடலம் மெய்]=சரீரம் வெண்சிவப்படையும்; [மால் நாகம்]=பெரும்பாம்பைப் போன்று (சீறுதலுண்டாம்); [பாறுநிகராக] = பருந்தையொத்துச் (சுழன்று பார்த்தலுண்டாம்); [உடல்பாடு]=சரீரத்தை வருத்துதலுண்டாம்; [அலம் எய்]=சஞ்சலம் அடைவித்தலுண்டாம்; [மானு கம் பாறும்]= உவமையற்ற தலைக்குத்தலுண்டாம்; [பாடல் அம் கம்பித்து] =சங்கீதம் பாடுவோர் அழகைப்போன்று தலையசைவுண்டாக்கி, [அ சுரம் ஆக அரு பேர் அக்கினிமாயம் ஆம்]=சரீரம் அப்பாலை நிலத்திலுள்ள அரிய காடாக்கினியின் நிறைவு ஆகும்; [பித்த சுரமாக வருபேய்] = பித்த சுரமென்று வருகின்ற பேயினால்—எ - று.

(தா - ம்.) சரீரம் வெண் சிவப்படைதல், நாகம் சீறு

வதைப்போற் கோபித்தல், பருந்தையொத்துச் சுழன்று பார்த்தல், உடல் முழுதும் நோயுண்டாதல், துயர் மிகுதல், தலைக் குத்தல், தலைநடுக்கம், காடாக்கினி போன்ற வெப்பம் இவை முதலியவை பித்தசுரலட்சணங்களென்பதே. இவை முதலியவை என்றதனுல் மலமூத்திரங்கள் சிவத்தல், எழுந்தோடல், வாய் பிதற்றலும் குறிப்பித்தவாறறிக. (ந)

## சேத்தும சுரக்குணம்.

அஞ்சுவே தத்துண்டா மானகமா ஞகுங்கா
யஞ்சுவே தத்துண்டா மாம்வடவை – யஞ்சுவே
தத்தை யிருத்தை தனிலாக்குந் தப்பாது
தத்தை யிருத்தைநா தன்.

(இ - ள்) [அஞ்சு வே தத்து உண்டாம்] = அச்சமுறத் தக்க தகனமாகின்ற மரணம் சம்பவிக்கும்; [ஆனகம் மான் ஆகும் காயம்] = சரீரம் தம்பட்டத்தின் உருவைப்போன்று வளைவாகும்; [சுவேதத்து ஆம் உண்டாம்] = வியர்வை நீரும் (அடிக்கடி) ஒழுகும்; [வடவை அஞ்சு வேதத்தை இருத்தை தனில் ஆக்கும்]=வடவாக்கினியைப்போன்று ஐந்துவித மாறுதல்களும் ஓர் நாழிகையில் விளையும்; [தப்பாது தத்தை இருத்து ஐ நாதன்] = தவருமல் ஆபத்துக்களை நிலைக்கச்செய்கின்ற சேத்துமத் தலைவனுல்—எ - று.

(தா - ம்.) மரணம் சம்பவிக்கச்செய்தல், சரீரத்தை வளையச் செய்தல்; ஒரு நாழிகையிற் பலவித மாறுதலான குணங்களை விளைவித்தல், வெயர்வை நீர் அடிக்கடியொழுக்குதல், சுரங்காய்தல், கஷ்டசுவாச முண்டாதல், பெருமூச்செறிதல், விக்கல், இரைப்பு, இருமல், தலையிடி ஆகிய இவைகளுண்டாதல் சேத்துமகர லட்சணங்களாமென்பதே. (ச)

## அசாத்திய நாடிலட்சணம்.

அத்தத்தை நாடி யலையாமற் றீபமுறை
யத்தத்தை நாடி யடங்குநெறி—யத்தத்தை
கோழி யரையன் கொடிவாய்தேள் ராசாளி
கோழியரை யன்றெரிந்து கொள்.

(இ - ள்.) [அத்தத்தை நாடி அலையாமல்] = பொருளையே இச்சித்துச் சுழலாமல், [தீபம் முறை] = விளக்கின் முறைமையையொத்து, [அத்தத்து ஐ நாடி அடங்கும் நெறி] = கையில் சேத்துமநாடி அடங்கும் வழி (எவ்வாறெனில்) [அத் தத்து ஐ] = அந்த மரணகாலத்தில் சேத்துமநாடி யானது [கோழி அரையன் வாய்கொடி] = உறையூர்க்கு வேந்தனாகிய (சோழனுடைய) துவசத்திற்பொறித்த (புலிப் பாய்ச்சலைப் போலவும்), [தேள்] = தேள் (கொட்டுதலைப் போலவும்), [ராசாளி] = ராசாளிப் பறவையின் (வேகத்தைப் போலவும்), [கோழி] = கோழி (நடையைப் போலவும்), [அரையன்] = (இப்பட்சிகட்கு) அரசனைப்போன்ற (அன்னத்தின் நடையைப்போலவும் நடக்குமென்று;) [தெரிந்துகொள்] = அறிந்துகொள்வாயாக—எ - று.

(தா - ம்.) சுரம் காயும்போதும் வேறு வியாதியுண்டாயிருக்கும்போதும் சேத்துமநாடியானது, புலிப் பாய்ச்சலைப் போலவும், தேள் கொட்டுதலைப்போலவும், ராசாளியின் வேகத்தைப்போலவும், கோழி, அன்னம், இவற்றின் நடையைப் போலவுமிருக்கின், அசாத்தியக்குறிகளாம். தீபம் எரிந்து அவியும் தருணத்தில் விசேஷ பிரகாசம் தோன்றுவதுபோல, ஜீவன் ஒடுங்கும் சமயத்தில் திடீரென்று இக்குறிகள் உண்டாகுமாகையால், நீ பொருளிச்சையினால் இத்தகைய குறியுள்ளார்கட்கு வைத்தியஞ் செய்து வீணாய்த் திரியாதே என்பதே (ரு)

## நாடிப் பரீட்சை.

அன்ன மயில்குயின்மா வாண்டலையூ ரோதிபுளீ
யன்ன மயில்குயின்மா வாண்டலையா—தன்னமயில்
வித்தகரை யாவாயுள் வேதியரா மேனையர்செய்
வித்தகரை யாவரிது மெய்.

(இ - ள்.) [அன்னம் மயில் குயில் மா ஆண்டலை ஊர் ஓதி புள் ஈ] = அன்னம், மயில், குயில், வண்டு, சேவல், ஊருகின்ற எறும்பு ஓந்தி, கருடன், ஈ, (என்னும் இவ்வொன்பதின் நடைகளை முறையே மும்மூன்றாகப் பிரித்து வாத பித்த சேத்தும நாடிகளின் நடைக்குவமானமாகக் கொள்ள வறியாராய்) [அன்னம் அயில் குயில் மா ஆண்டு அலையாது] = சோற்றைப் புசித்து (வீண்) வார்த்தையாடிச் சிறந்த ஆயுண்முழுவதும் திரியாமல் [அ நம் அயில் வித்தகர் ஐயா ஆயுள்வேதியராம்]

=மேற்குறித்த நமது கூர்மையை (யுணர்ந்த) அறிஞர்களே ஐயா ஆயுள்வேதியர்களாவார்கள். [ஏனையர் செய்வித்த கரை யாவர் இது மெய்] = (அவ்வாறறியாத) மற்றவர்கள் (பெரு வெள்ளத்தின் முன்) கட்டிய மண்ணணை போல்வார்கள்; இஃது உண்மை. —எ - று.

(தா - ம்.) வாத நாடியின் நடை, அன்னம், மயில், குயில் என்னும் இவைகளின் நடைக்கும்; பித்தநாடியின் நடை, வண்டு சுழல்வதற்கும், கோழி நடப்பதற்கும், எறும் ஊர்வதற்கும்; சேத்தும நாடியின் நடை, ஓணன் ஓட்டத்தற்கும், கருடன் வட்டமிடுவதற்கும், ஈ பறப்பதற்கும் ஒப்பாகுமாதலால், இவ் விவரங்களை எவ்வாறறிவதென்று மயங்காமல் நுண்ணறிவினால் ஆராய்ந்து தெளிந்தவர்களே வைத்தியர் களாவார்கள். மற் றையர்கள் பெருவெள்ளத்தின் முன் கட்டிய மண்கரைக் கொப்பாவார்க ளென்பதே. (சு)

## அசாத்திய லட்சணம்.

பாசாங் குசனார் பரிபோ னரம்போடிப்
பாசாங் குசனார்வாய்ப் பல்லானாற் — பாசாங்கு
சாரமில்லை தீபனமுந் தாகமும்போ யீமநிலஞ்
சாரமில்லை யச்சொல்காட் டம்.

(இ - ள்.) [பாச அங்குசனார் பரிபோல் நரம்பு ஓடி] = பாசத்தையும், அங்குசதத்தையு மேந்திய (விநாயகருடைய) வாகனமான (பெருச்சாளியைப்) போல நாடி நடந்து [பாசு ஆம்] பசு நிறத்தையுடைய [குசம்] = தருப்பை (யைப்போன்ற) [நா வாய் பல் ஆனால்] = நாவும் வாயும் பல்லும் (உடைய வர்கள்) ஆய்விட்டால் (பாசாங்கு சாரம் இல்லை) = (அவர்கள் ஜீவிப்பது) பொய்யாகும் (ஆதலாற்) பயனில்லை [தீபனமும் தாகமும் போய்[= உணவையும் தாகத்தையும் ஒழித்தவர் களாய் [=சமநிலம் சார காட்டம் மில்லைய சொல்] = சுடுகாட்டை யடைவதற்காக விறகு (முதலியவற்றை) சேகரிக்கச் சொல் வாய் - எ - று.

(தா - ம்.) நாடி பெருச்சரளியைப் போற் குடுகுடென் றோடி, நாவும், வாயும், பல்லும், தருப்பையைப்போன்ற பசு நிறமடைந்தால் சுடுகாட்டிற்சேரவெண்டியதே என்பதாம் (எ)

## வாதபித்த சேத்தும விஷநாடித் துணிவு

கைகால்வா யாறு கபமந்த மாகவும்பொய்
கைகால்வா யாறு கடுக்குமேற்—கைகால்வாய்
நம்பியிரா தேவையில்லை நாளிலுமோர் சாமமட்டு
நம்பியிரா தேவைகன்ன ஞல்.

(இ - ள்.) [கை கால் வாய் ஆறு கபம்]=கைகளிலும் கால்களிலும் (வியர்வைப்) பிரவாகமும், வாயிற் சிலேத்துமம் (உண்டானாலும்,) [மந்தமாகவும்] - நாடிகள் மந்த கதியாகவும் [பொய்கை கால்வாய் ஆறுகடுக்குமேல்] = குளம், வாய்க்கால், நதி (என்னும் இவற்றின் நீர் வேகத்தை முறையே வாத பித்த சேத்தும நாடிகளின் நடை) ஒத்து இருக்குமானல் [கால் கை வாய்]=யமன் கைவசப்பட்டதே [நம்பீ இரா தேவையில்லை]= சிறந்த பண்டிதனே! இராப் போதளவும் (எதிர்பார்க்க) வேண்டியதில்லை [நாளிலும் ஓர் சாமம் மட்டும் நம்பியிராதே] =பகற்போதிலும் ஓர் சாமம் வரைக்குமாவது நம்பியிருக்க வேண்டாம் [நாற் கன்னல்வை] = நாலு நாழிகை (வரையிற் கெடு) வைப்பாயாக—எ - று.

(தா - ம்.) கை கால் வேர்த்து ஜில்லிட்டு வாயிற் கபம் வழிந்துகொண்டிருப்பதோடு, நாடிகள் மந்தகதியாகவும், அல்லது வாத நாடி குளத்து நீர்போல் நிலையாக நின்றும், பித்த நாடி வாய்க்கால் நீர்போற் குறுகியோடியும், சேத்துமநாடி ஆற்று நீர்போல் விரிந்துமிதந்தோடியும் நடந்தால், ஒரு நாளேனும் அரைநாளேனும் ஒரு ஜாமமேனும் அந் நோயாளி பிழைத்திருப்பானென்று நம்பவேண்டாம். நாலு நாழிகையில் மரணமாவானென்று சொல்லவேண்டுமென்பதே. (அ)

## இதுவுமது.

சாமந்தி யானனநேர் சக்கழிஞ்சிற் கொட்டையிரு
சாமந்தி யானமெனத் தம்பனமேற்—சாமந்தி
வீமலத்தை யேற்று விழிபோல் விழிப்பையுறின்
வீமலத்தை யேற்கை விடு.

(இ - ள்.) [சாமந்தி நேர் ஆனனம்] = செத்த பெண் குரங்கின் (முகத்தை) ஒத்த முகமும், [அழிஞ்சில் கொட்டை

நேர் சக்கு]=அழிஞ்சில் விதையைப்போன்ற கண்களும், [இரு சாமம் தியானமெனத் தம்பனமேல்] = இரண்டு சாமம் வரையில் தியானிப்பவரைப் போல வாயுத்தம்மனமும் இருக்குமானலும், [சாமந்திவீ மலத்தை]=சாமந்தி மலரையொத்த மலத்தையும், [ஏற்று விழிபோல் விழிப்பை உறின்] = எருதின் கண்களையொத்த பார்வையையும் அடைந்தாலும், [வீம் அலத்தையேற்கை விடு]=(அவ்வுயிர்) இறக்கும். (ஆதலால் அதற்காகத்) துயர் கொள்ளுதலை விட்டுவிடுவாயாக— எ - று.

(தா - ம்.) சாகும் பெண் குரங்கின் முகத்தையொத்து முகம் வேறுபட்டு, அழிஞ்சில் விதையைப்போலக் கண்கள் வெளுத்துப் பஞ்சடைந்து, தியானம் செய்பவர்களைப்போலக் கை கால் அசைவற்றுக் காணும் மூர்ச்சை அடிக்கடியுண்டாகி, சாமந்திப் பூவின் மஞ்சள் நிறத்தைப்போலப் பேதியும்கண்டு, எருதின் கண்களைப்போல இமைத்தலின்றிச் கண்களைச்சொரிய வாங்கி விழித்த கண் விழித்தபடியேயிருந்தால் மரணம் நிச்சயமே, அதற்கு விசனப்படுவதிற் பயனில்லை என்பதே. (கூ)

### மரணக்குறியின் துணிவு.

நாகநிற முந்தி நகில்வாகு கால்கையிடை
நாகநிற முந்தி நடுங்கவாய்—நாகநிறம்
வேதியரைத் தேடுவளர் வெண்ணெயென்றக் காலாயுள்
வேதியரைத் தேடுவது வீண்.

(இ - ள்.) [நா கம் நிறம் உந்தி நகில் வாகு கால் கை இடை]=நாக்கு, தலை, மார்பு, நாபி, தனம், தோள், பாதம், கரம், இடை (ஆகிய ஒன்பது அவயவங்களும்) [நாகம் நிறம்]= புன்னைப்பூவின் நிறமுடையதாகி [முந்தி நடுங்க] = முன்னே நடுக்கமுற்று, [வாய் நாகம்]=வாயில் சர்ப்பம் (சீறுவதைப் போன்ற மூச்சுண்டாகி) [வேதி அரைத்து ஏடுவளர் வெண்ணெய் நிறம் என்றக்கால்]=பேதியானது அரைத்துப் பாலேட்டிலுண்டான வெண்ணெயின் வர்ணமுடையதென்று சொல்வோமாயின், [ஆயுள்வேதியரை தேடுவது வீண்] = பண்டிதர்களைத் தேடுவது வீணாகும்—எ - று.

(தா - ம்.) நாக்கு, தலை, மார்பு, தனம், நாபி, தோள், கால், கை, இடுப்பு என்னும் இவ்வொன்பது அவயவங்களும் புன்னைப்

பூவின் மத்தியிலுள்ள மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறமுடையனவர்கி, முன்னரே நடுக்கமும் கண்டு, நாகத்தின் சுவாசத்தைப் போல மேன்மூச்செறிந்து, நாவும் முகமும் சாம்பல் பூத்தது போலாகி, பலவித பேதியு முண்டாகி, அப்பேதியின்மேல் அரைத்துப் பாலேட்டின்மீதுண்டான வெண்ணெய்போற் படர்ந்திருக்கவுங் கண்டால் அசாத்திய மென்பதே. (கo)

### காலநாடித்துணிவு - அசாத்தியம்.

வைகறையை நண்பகலை மாலையைமே லேலவுயிர்
வைகறையை பித்தமுயிர் மாறிமுன்போர்—வைகறையை
மாட முறைகொல் வழிமூ நரம்பினடை
மாடமுறை கொல்சொலிய மன்.

(இ - ள்.) [வைகறையை நண்பகலை மாலையை] = காலையையும் உச்சியையும் மாலையையும் [மேல் ஏல] = முதலில் முறைப்படுத்தி [உயிர் வைகு அறை] = உயிர் வசிக்கும் இடமாகிய (உடலின்கண் [ஐ பித்தம் உயிர் மாறி] = சேத்துமம் பித்தம் வாதம் என்று மாறுபட்டு [போர்வை கறை முன் ஐ] = தோலிலுள்ள உதிரத்திற்கு முன்னிருக்கும் நாடியாகிய [மாடம் உறை கொல்வழி மூ நரம்பின் நடை] = மூன்று நாடிகளின் நடையானது உளுந் (துருளுதல்போன்றதும்) ஜலம் (ஓடுதல் போன்றதும்) கொல்லுகின்ற (அம்பு பாய்வது போன்றதுமான) இயல்புடையதாயின் [இயமன் கொல்மாள் தம்முறை சொல்] = இயமனாற் கொல்லப்பட்டிறக்க வேண்டியது தமது கடமையென்று கூறுவாயாக—எ - று.

(தா - ம்.) காலையிற் பத்து நாழிகை வரையீல் வாதநாடியின் காலமும், அதற்குமேற் பத்து நாழிகைவரையிற் பித்தநாடியின் காலமும், அதற்குமேற் பத்து நாழிகைவரையிற் சேத்தும நாடியின் காலமுமாகவும், இவ்வாறே இரவினும் முன் பத்து நாழிகைவரையில் வாதநாடியின் காலமும், அதற்குமேற் பத்துநாழிகைவரையிற் பித்தநாடியின் காலமும், அதற்குமேற் பத்துநாழிகைவரையிற் சேத்துமநாடியின் காலமுமாகவும் இருப்பதுவே முறைமை. இம்முறை பிறழ்ந்து வாதகாலத்தில் ஐய நாடியும், ஐய காலத்தில் வாத நாடியும்; பித்தகாலத்தில் ஐய நாடியும், ஐய காலத்திற் பித்தநாடியுமாக நடப்பதுடன், வாத நாடியானது அம்பைப்போலெழும்பிச் சாய்ந்து விழுந்தும்,

பித்தநாடியானது மேட்டிலிருந்து பள்ளத்தில் ஜலம் ஓடுவது போல மடமடென ஓடியும், ஐயநாடியானது உளுந்து உருளுதல்போலக் கடகடென உருண்டும் நடந்தால் அசாத்திய மென்பதே. (கக)

## போஜன முதலிய குறிப்புகளையும் சகுனத்தையும் அறிந்து துணிதல்.

போசனத்தை நித்திரையைப் போகத்தை யாதரவைப்
போசனத்தை நேரறிந்து போற்றல்விட்டுப்—போசனத்தைக்
கண்டுமலை யாதி கனவு சகுனமிப்பாற்
கண்டுமலை யாதிபிட கா.

(இ - ள்.) [போசனத்தை நித்திரையை போகத்தை ஆதரவை போசனத்தை]=உணவையும், தூக்கத்தையும், இன்பத்தையும், இச்சையையும், அறிவையும் [நேர் அறிந்து]= நேர்மையுணர்ந்து, [போற்றல்விட்டுபோ]=சிகிச்சை செய்தலை விட்டுப் போய்விடுவாயாக; [சனத்தைக் கண்டு மலையாதி]= (அங்குள்ள) உறவினரைப் பார்த்துப் பிரமிக்காதே; [கனவு சகுனம் இப்பால் கண்டும் அலையாதி] = பின்னர் சகுனக் (குறியையும்) கனவுக் (குறியையும்) அறிந்தும் அலையாதிருப்பாயாக [பிடகா]=வைத்தியனே—எ - று.

(தா - ம்.) அசாத்திய வியாதிக் குறியை நாடிகளால் அறிந்துகொள்வது போலவே, இயற்கையான அன்ன பாளுதிகள், நித்திரை, மல சல விசற்ஜனங்கள் சரீர நிலைமை, பஞ்சேந்திரியத் தொழில்கள் முதலியவற்றால், இரைப்பை, ஈரல், நுரையீரல், மூளை முதலிய இராஜ கருவிகளின் கிரமாக்கிரமங்களையும் நிதானிக்கவேண்டும். அவ்வாறு அவற்றின் தொழில்கள் அறவே அற்றுப்போயிருந்தால், வைத்தியஞ் செய்வதை ஒழித்துவிடு. அன்றியும் நோயாளியின் உறவினருடன் கலந்திருந்துகொண்டு அவர்கள் வார்த்தைக்குட்படாதே. அவ்வாறு உட்பட்டு வைத்தியஞ் செய்தால் அபகீர்த்தி யுண்டாம். மேலும் நீ வைத்தியம் செய்வதற்கு முன்னமே கனவினாலும் சகுனத்தினாலும் அசாத்தியத்தைக் கண்டு நிதானித்து, அங்குப் போய் அலையாமலே நின்றுவிடு என்பதே. போதனம் எனற்பாலது போசனம் என நின்றது.

இங்கு கனவென்பது அவரவர்கள் கொள்கைக்கிணங்கச் சில பெரியோர்களைச் சிந்தித்து வந்தால், அவர்கள் கனவில் வந்து இக் காரியம் கை கூடும் கூடாதெனக் கூறுவதே. சிலர் நிஷ்டையினாலும் அறிந்து கொள்வதுண்டு. (கஉ)

## வைத்தியஞ்செய்யும் திதியறிதல்.

அஞ்சுபத்து முன்னிருத்தை யாபத்தி ரைசதமி
யஞ்சுபத்து முன்னிருத்தை யட்டமிவீ—யஞ்சுபத்து
நல்லுவா வாறு நவமி பதினொன்று
நல்லுவா வாறுபதி னாலு.

(இ - ள்.) [அம் சுபத்து முன் இருந்து ஐயா] = அழகிய சுகத்திற்காக முதன்மையாக வைத்துக்கொள்ளத்தக்க வைத்தியனே! [பத்திரை சதமி அஞ்சு பத்து முன் இருத்தை அட்டமி] = துதிகை, சத்தமி, பஞ்சமி, தசமி, சதுர்த்தி, அட்டமி (என்னும் திதிகள்) உத்தமம் [வீ அஞ்சு பத்து நல் உவா ஆறு நவமி பதினொன்று நல் உவா ஆறு பதினாலு] = நீக்கத் தக்கவை பதினைந்தாவதாகிய கிருஷ்ணபட்சத் தமாவாசை, அதன் வழி வந்த (பிரதமை) நவமி, ஏகாதசி, பௌர்ணமி, சஷ்டி, சதுர்த் தசி (என்பவைகளே)—எ - று.

(தா - ம்.) துதியை, சதுர்த்தி, பஞ்சமி, சப்தமி, அட்டமி, தசமி என்னும் இவ்வாறு திதிகளும் வைத்தியம் செய்யத் தொடங்குதற்கு உத்தமமாம். பிரதமை, சஷ்டி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி (பூர்வபட்ச) அமாவாசை (அமரபட்ச) அமாவாசை என்னும் இத்திதிகள் அதமமாம் என்பதே, எனவே உத்தமத் திதிகளும் அதமத்திதிகளும் நீங்க ஏனைய திரிதியை, துவாதசி, திரயோதசி என்னும் இத் திதிகள் மத்திமமாமென்பது கருத்து.
(கரு)

## வைத்தியம்செய்யும் நாளறிதல்.

மதியாத வன்மதித்து மத்தியென்று சற்று
மதியாத வன்முதன்மை மைந்தர்—மதியாத
பாற்கடலை மானப் பளிங்காண் டளப்பான்சேய்
பாற்கடலை மானவைப்பார் பார்.

(இ - ள்.) [மதி ஆதவன் மதித்து] = திங்களையும் ஞாயிறையும் (உத்தமமாக) எண்ணியும், [மத்தி என்று சற்று மதியாதவர்] = மத்திமமென்று கூடக் கொஞ்சமும் கணிக்கத்தகாதவர்கள் [முதன்மை மைந்தர்] = முதலிற் கூறிய (இருவரின்) புத்திரர்களான (புதனும் சனியும்) [மத்தியாத பாற்கடலை மான] = கடையாத பாற்கடலையொப்பாய் (விளங்கும்) [பளிங்கு ஆண்டளப்பான் சேய்] = சுக்கிரனும், வியாழனும், செவ்வாயும் [பாற்கு] = மத்திம பாகத்திற்கு [அடலை மான வைப்பார் பார்] = தங்கள்வல்ல பத்திற்கொத்தபடி உலகத்துள்ள (பெரியோர்கள்) பகுத்துரைப்பார்கள் — எ - று.

(தா - ம்.) வைத்தியம் செய்வதற்காகத் திங்கட்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் உத்தமம். புதன்கிழமையும் சனிக்கிழமையும் அதமம். வெள்ளிக்கிழமையும் வியாழக்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் மத்திமமென்பதே.

உலகத்திலுள்ள பெரியோர் தங்கள் வல்லபத்திற்கேற்றபடி வகுத்துரைப்பார்களென்றமையால், உத்தமமாகிய இரண்டுவாரங்களுள் திங்கள் உத்தமோத்தமம் எனவும், ஞாயிறு உத்தமாதமம் எனவும்; அதமமாகிய இரண்டு வாரங்களுள் புதன் அதமோத்தமம் எனவும், சனி அதமாதமம் எனவும்; மத்திமமாகிய மூன்று வாரங்களுள், வெள்ளி மத்திமோத்தமம் எனவும், வியாழன் மத்திமா மத்திமம் எனவும், செவ்வாய் மத்திமாதமம் எனவும் பகுப்பாரென்றறிக. (கச)

## வைத்தியஞ்செய்வதற்கு நட்சத்திரமறிதல்.

அச்சுவதி கேட்டை யரவுபூ ரட்டாதி
யச்சுவதி கேட்டை யழிக்குமே—யச்சுவதி
கொக்கரிமான் பண்டி கொடுநுகமோ டந்தாசி
கொக்கரிமான் மத்தியிருக் கும்.

(இ - ள்.) [அச்சுவதி கேட்டை அரவு பூரட்டாதி] = அசுவினி, கேட்டை, ஆயிலியம், பூரட்டாதி (ஆகிய இந்நான்கு நட்சத்திரங்களும்) [அச்சு வதி கேட்டை அழிக்கும்] = அச்சம் தங்கிய துயரத்தை ஒழிக்கும். [அ சுவதி கொக்கு அரி மான் பண்டி கொடுநுகம் ஓடம் தாசி கொக்கரிமான்] = அந்த சுவாதி, மூலம், கார்த்திகை, மிருகசீரிடம், உரோகணி, மகம், இரேவதி,

பரணி, திருவோணம் (ஆகிய இவ வொன்பது நட்சத்திரங் களும்) [மத்தி இருக்கும்] = மத்திமமா யிருக்கும் எ - று.

(தா - ம்.) வைத்தியம் செய்வதற்காக அசுவினி, கேட்டை, ஆயிலியம், பூரட்டாதி என்னும் இந் நான்கு நட்சத் திரங்களும் உத்தமமென்பதும், சுவாதி, மூலம், கார்த்திகை, மிருகசீரிடம், உரோகணி, மகம், இரேவதி, பரணி, திருவோ ணம் என்னும் இவ் வொன்பது நட்சத்திரங்களும் மத்திமமென் பதுமே; எனவே, இருபத்தேழு நட்சத்திரங்களுள் உத்தமமும் மத்திமமுமாகிய பதின்மூன்று நட்சத்திரங்கள் நீங்க, ஏனைய பதினன்கு நட்சத்திரங்களும் அதமமாம். அவை யாவன:— திருவாதிரை, புனர்பூசம், பூசம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, விசாகம், அநுஷம், பூராடம், உத்திராடம், அவிட் டம், சதயம், உத்திரட்டாதி என்னும் இவைகளே.

இன்னும், உத்தமமான நான்கு நட்சத்திரங்களுள்ளும் அசுவினி உத்தமோத்தமம்; கேட்டை உத்தமமத்திமம், ஆயிலியம் உத்த மாதமம்; பூரட்டாதி உத்தம அதமாதமம் என்றும்; மத்திமமான ஒன்பது நட்சத்திரங்களுள்ளும் சுவாதி, மூலம், கார்த்திகை, என்னும் இம் மூன்றும் மத்திமோத்தமம்; மிருகசீரிடம், உரோகணி, மகம் என்னும் இம் மூன்றும் மத்திம மத்திமம்; இரேவதி, பரணி, திருவோணம் என்னும் இம் மூன் றும் மத்திமாதமம் என்றும் ஒருவாறு வரையறையாகச் சில நூல் கூறும். ஆயினும் வைத்தியர்கள் இந்த நட்சத்திரங் களின் பலாபலத்தை அநுபோக சித்தமாயுணர்ந்து நிச்சயித்து நடந்துகொள்ளவேண்டுவது ஆவசியகம் (கரு)

### வைத்தியம் செய்ய மாதங்களறிதல்.

சித்திரைவை காசி திரமானி யாடிமத்தி
சித்திரைவை காசி சிதைக்குமே—சித்திரைவை
யங்கா ரகன்போ லனுகூல மாகவதி
யங்கா ரகன்மகிமை யை.

(இ - ள்) [சித்திரை வைகாசி திரம்] = சித்திரை மாத மும் வைகாசி மாதமும் நிச்சயமானவை (உத்தமம்); [ஆனி ஆடி மத்தி] = ஆனி மாதமும் ஆடி மாதமும் மத்திமமானவை; [சித்து இரை வைகு ஆசி சிதைக்கும்] = அறிவும் உணவும்

தங்கிய வாழ்வையும் அழிக்கும் [சீ திரை வை] = காந்தியுள்ள கடலிலிருக்கும் [அங்காரகன் போல் அனுகூலமாக வதி] = வடவாக்கினியைப் போலக் கூடியிருந்து, [மகி அங்கம் ஆர் மையை அகல்] = உலகத்தாரின் சரீரத்திற் பொருந்திய பிணிகளை நிவிர்த்திப்பாயாக—எ - று.

(தா - ம்.) வைத்தியம் செய்வதற்குச் சித்திரை வைகாசி என்னும் இரண்டு மாதங்களும் உத்தமம். ஆனி ஆடி என்னும் இரண்டு மாதங்களும் மத்திமம் என்பதே. உத்தமத்தையும் மத்திமத்தையும் சொன்னமையின், இந் நான்கு மாதங்கள் நீங்க ஏனைய ஆவணி, புரட்டாசி, ஐப்பிசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்னும் எட்டு மாதங்களும் அதமமென்பது கூறாதே யமையும். எவ்வாறெனின், பிரதமத்திற் குறித்த இரண்டு மாதங்களினும் சரீரத்துள்ள அசுத்த மாசுகள் வெளிப்பக்கம் நோக்கமுடையவைகளாயிருப்பதுடன் அக்கால சுபாவத்தால் தேகத்தின் அசுத்தமாசுகள் இளகித் தாமே வெளியாகும். இக்காலத்தில் ஔடதம் புசிப்பதனாலே இயற்கையுதவி செயற்கையுதவி என்னும் இருவகையுதவியு முண்டாதலால் அம்மாதங்க ளிரண்டும் திரம் என்றும்; அவற்றிற்கடுத்த இரண்டு மாதங்களும் அவ்வளவு சிரேஷ்டமானவைகளல்லவாகலின் அவற்றை மத்திமமென்றும் கூறினார். அவற்றின்பின் ஆவணி முதல் பங்குனி வரையில் முறையேயுள்ள எட்டு மாதங்களில் தேகத்துள்ள அசுத்தமாசுகள் வெளிவராமல் உள்ளடங்கியிருப்பதுயல்பாகலின், அக்காலங்களில் எவ்விதமருந்தையுட் கொண்டாலும் பயன்படாதென்பதே. வைத்தியன் உலகத்துள்ள நோயாளிகட் கனுகூலமாக இருந்தே அந்நோயின் வேகத்தை அடக்கவேண்டுமென்றறிவித்தற்பொருட்டு, கடலுடன்கலந் துறவாயிருந்து அதைப்பெருகவொட்டாம லடக்கிய வடவாக்கினியை உவமையாகக் கூறினர். (கக)

## வைத்தியம் செய்வதற்கு லக்கினமறிதல்.

மாடா டரிவை மகரங்கோல் வின்மீன்
மாடா டரிவையரி மைதுனந்தேன்—மாடாடு
கும்பங் கடகங் குறிப்பிலிவை மூன்று
கும்பங் கடகமெனக் கொள்.

(இ - ள்) [மாடு ஆடு அரிவை மகரம் கோல் வில் மீன்] =ரிஷபம், மேஷம், கன்னி, மகரம், துலாம், தனுசு, மீனம்

(என்னும் இவ்வேழு லக்கினங்களையும் [மாடு ஆடு] = (மத்திம) இடத்தில் வழங்குவாய்; [அரிவை] = தள்ளவேண்டியவைகளும் கொள்ளவேண்டியவைகளுமான [அரி மைதுனம் தேள்] = சிங்கம், மிதுனம், விருச்சிகம்; (இம்மூன்றும் தள்ளவேண்டியவைகள்;) [மாடு ஆடு] = செல்வமும் வெற்றியுமுள்ள [கும்பம் கடகம்] = கும்பம், கடகம் (இவ்விரண்டும் கொள்ளவேண்டியவைகள்;) [குறிப்பில் இவை மூன்ருகும்பங்கு] = குறிக்குமிடத்து இவையே (இராசிகளின்) முப்பகுதிகளாகும் [அட கம் என கொள்] = (இவைதாம்) இதனுள் அடங்கிய முக்கிய (கருத்தென்று) நீ அறிந்துகொள்—எ - று.

(தா - ம்.) வைத்தியம் செய்வதற்குக் கும்பம், கடகம் என்னும் இரண்டு லக்கினங்களும் உத்தமம்; ரிஷபம், மேஷம், கன்னி, மகரம், துலாம், தனுசு, மீனம் என்னும் ஏழுலக்கினங்களும் மத்திமம், சிங்கம், மிதுனம், விருச்சிகம் என்னும் மூன்று லக்கினங்களும் அதமமென்பதே. (கஎ)

**வைத்தியம்செய்யச் செல்லுகையில் ஆகாச் சகுனங்கள்.**

பாக்க னிருளி பணிகுறுக்கு முன்னிகலன்
பாக்க னிருளி பனவ்னயில் – பாக்கன்
குசவன் கனவட்டன் கொல்லன் கணக்கன்
குசவன் கனவட்டன் கொள்.

(இ - ள்) [பாக்கன் இருளி பணி குறுக்கு] = பூனை, பன்றி, பாம்பு (ஆகிய இவை) குறுக்கே (போகலாகா); [முன்] = எதிரில் (வரத்தகாதவர்களாவார்) [இகலன் பாக்கன் இருளி பனவன் அயில்பாக்கன்] = பகைவன், செம்படவன், வேடச்சி, பிராமணன், சமையல் செய்வோன், [குசவன், கனவட்டன் கொல்லன் கணக்கன்] = குயவன், குதிரைக்காரன், கருமான், கணக்கன், [குசவன் கன்வட்டன்] = விறகுதலையன், தோட்டி [கொள்] = (என்னும் இவர்களே யென்று) அறிந்துகொள்வாயாக– எ-று.

(தா - ம்.) வைத்தியம் செய்யப் போகும்போது பூனை, பன்றி, பாம்பு என்னும் இவைகள் குறுக்கிட்டாலும், பகைவன், செம்படவன், வேடச்சி, பார்ப்பான், சமையல் செய்வோன், குயவன், குதிரைக்காரன், கருமான், கணக்கன், விறகு தலையன், தோட்டி என்னும் இவர்கள் எதிரில் வந்தாலும், அந்த வைத்தி

யம் பலிக்காதென்று அறிந்துகொள்ளவேண்டுமென்பதே.

பாகன் எனற்பாலது எதுகைநோக்கிப் பாக்கன் என நின்றது, குசம் என்பது மரப்பொதுவிற்குப் பெயராகலின், இவ்விடத்தில் குசவன் என்பதற்கு விறகு தலையனென்றும், வட்டம் என்பது வளைதடிக்குப் பெயராகலின் இவ்விடத்தில் கனவட்டன் என்பதற்குத் தோட்டி என்றும் பொருள் கொண்டனம். (கஅ)

## வைத்தியஞ் செய்யச் செல்லுகையில் நற்சகுனங்கள்.

மந்திரி தந்தன் மகிபாலன் கைக்கோளன்
மந்திரி தந்தன் மடையனிறை—மந்திரிநாய்
வாரணமான் முன்பால் மயில்காரி நாரைவன்னி
வாரணமான் பாறணில்கொள் வாய்.

(இ - ள்.) [மந்திரி தந்தன் மகிபாலன் கைக்கோளன்]= கள்விற்போன், தாடியுடையவன் (நிலத்திற்குடைய) வேளாளன், செங்குந்தன், [மந்திரி தந்தன் மடையன் இறை]=குபேர (னைப்போன்ற செல்வமுடையவன்), நூலுணர்ச்சியுள்ளவன், பூசாரி, வேந்தன், [மந்திரி நாய் வாரணம் மான் முன்]= அமைச்சன் (ஆகிய இவர்களும்), நாய், யானை, மான் (என்னும் இவைகளும்) எதிரில் (வரினும்); [பால்] = (இடப்பக்கத்திலிருந்து வலப்) பக்கமாக [மயில் காரி நாரை வன்னி வாரணம் ஆன் பாறு அணில் கொள்வாய்]=மயில், காக்கை, நரையான், கிளி, கோழி, பசு, பருந்து, அணிப்பிள்ளை, (என்னும் இவைகள் வரினும் நன்மையென்று அறிந்து) கொள்வாயாக—எ - று.

(தா - ம்.) வைத்தியம் பார்க்கச் செல்லுகையில், கள்விற்போனும், தாடியுடையவனும், வேளாளனும், செங்குந்தனும், செல்வமுடையவனும், நூலுணர்ச்சியுள்ளவனும், பூசாரியும், அரசனும், அமைச்சனும் எதிர்ப்படினும்; நாய், யானை, மான் என்னும் இவைகள் எதிரில் வரினும்; மயில், காக்கை, நரையான், கிளி, கோழி, பசு, பருந்து, அணிப்பிள்ளை, என்னும் இவைகள் இடப்பக்கமிருந்து வலப்பக்கமாக வரினும்; அந்த வைத்தியத்தினுற் பிரயோசன முண்டாமென அறிந்துகொள்வாயென்பதே (கக)

## வைத்தியனை அழைக்கும் தூதனிலக்கணம்.

வந்தவனி சத்தன் மகுடன் கிரகத்தன்
வந்தவனி சத்தன் மழன்சேயன் வந்த
வுடலனலங் கார னுன்மத்தன் யோகி
வுடலனலங் காரனளி யோன்.

(இ - ள்.) [வந்தவன் நிசத்தன் மகுடன் கிரகத்தன்] =(வைத்தியரை அழைக்க) வந்தவன், சத்தியவானுகவும், பாகையுள்ளவனுகவும், இல்லறமுடையவனுகவும், (அவனி வந்து சத்தன்]=உலகத்துலாவும், காற்றையொத்த தொனியுடையவனுகவும், [மழன் சேயன்]=இள வயதுடையவனுகவும், செந்நிறமுடையவனுகவும், [வந்த உடலன் அலங்குஆரன்]= கவசந்தரித்த சரீரமுடையவனுகவும், அசைகின்ற மாலையுடையவனுகவும், [உன்மத்தன் யோகி] = விடனுகவும், யோகவானுகவும் [உடலன் அலங்காரன் அளியோன்] = ஐஸ்வரியவானுகவும், (இயல்பாய்) அழகுள்ளவனுகவும், கிருபையுள்ளவனுகவும் (இருந்தால் நன்மை)—எ - று.)

(தா - ம்.) வைத்தியரை அழைக்கவருபவன், சத்தியவந்தனுகவும், பாகை முதலிய தலைக்கவசம் தரித்தவனுகவும், இல்லறத்தானுகவும், மிருது தொனியுடையவனுகவும் இளவயதுடையவனுகவும், செந்நிறமுடையவனுகவும், ஆபரணலங்கிருதனுகவும், சட்டையணிந்தவனுகவும், விடனுகவும், யோகவானுகவும், பாக்கியவந்தனுகவும், இயல்பாய் அழகுடையவனுகவும், கிருபையுடையவனுகவு மிருக்கின் அந்த வைத்தியம் அநுகூலமாமென்பதே. (உ0)

## வைத்தியனை அழைக்கத்தகாதவர்கள் இவர்களெனல்.

கண்டவரை யத்தர் கரியர்முது வர்முண்டர்
கண்டவரை யத்தர் கரியர்தவர்—கண்டவரை
யுள்ளவரா காததொனி யோர்கதைய ரீனர்துனி
யுள்ளவரா காததீ யோர்.

(இ - ள்.) [கண்டவர்] =(வைத்தியரை யழைக்க வந்து) பார்த்தவர்கள் [ஐயத்தர் கரியர் முதுவர் முண்டர்]=சந்தேகியரும், கருநிறமுடையரும், வயோதிகரும், மொட்டையரும்,

[கண்தவர் ஐயத்தர் கரியர்தவர்] = கண்ணிழந்தவரும், யாசகரும், பொய்ச்சாட்சி கூறுவோரும், தவம்புரிவோரும், [கண்தவரை உள்ளவர்] = மூங்கில் வில்லையுடையவரும் [ஆகாத தொனியோர்] = இனிமையைத்தராத குரலுடையவரும், [கதையர் ஈனர் துனியுள்ளவர்] = தடியையுடையவரும், இழிவுள்ளவரும், துயருற்றவரு (மாயிருப்பார்களாயின்) [ஆகாத தீயோர்] =(இவர்களே வைத்தியரை யழைக்கத்) தகுதியற்ற கொடியவர்களாவார்கள்.

(தா - ம்.) சந்தேகியரும், கருநிறமுடையவரும், வயோதிகரும், மொட்டைத்தலையரும், கண்ணற்றவரும், யாசகரும், பொய்ச்சாட்சி கூறுவோரும், தவத்தினரும், வில்லுடையவரும், கடுங்குரலுடையவரும், தடி பிடித்தவரும், இழிவுற்றவரும், துயருற்றவரும், வைத்தியரை யழைக்கத்தகாதவர்களா மென்பதே. எனவே, அவ் வைத்தியம் அநுகூலப்படாதென்பது குறிப்பு. (உக)

**வாதமாதிமுத்தேகிகட்கும் தகுமிடம் தகாவிடம் கூறுதல்.**

காற்படையான் பாலாழிக் கண்படையான்பச்சிமனூர்
காற்படையான் கோவெறிபுன் கண்ணயனோர்–காற்படையான்
வச்சிரத்தன் வாசநலி வாண்மா திடமாந்த்ரு
வச்சிரத்தன் வாழ்வருமை வாழ்.

(இ - ள்) ]காற்படையான்] = சேவற்கொடியுடைய (முருகர்) [பால் ஆழி கண்படையான்] = பாற்கடலில் அறிதுயில் கூரும் (திருமால்,) [பச்சிமன்] = மேற்றிசைப் பாலனன (வருணன்) (ஆகிய இம்மூவரும்) [ஊர்] = வசிக்கும் இடமாகிய (குறிஞ்சி, முல்லை, நெய்தல் என்னும் மூன்று நிலங்களிலும்) [காற்படையான் வெறி கோ (புன்கண்) = யமனுடைய தளகர்த்தனை சேத்தும (ரோகிகட்கும்,) பித்த (ரோகிகட்கும்,) வாத (ரோகிகட்கும் முறையே) துய (ருண்டாம்;) [புன்கண் வச்சிரத்தன்வாசம் அயன் ஓர்கால் படையான்] = துயரத்தை வச்சிராயுதமேந்திய (இந்திரனுடைய) இருப்பிடமான் (மருத நிலத்தில்) பிரமன் ஒருகாலத்தினும் சிருஷ்டிக்கமாட்டான்; [வாள் மாது இடம் நலி ஆம்] = வாளேந்திய துர்க்கையின் இடமான (பாலைநிலம் எல்லாவகை) வியாதியும் விளையத்தக்கதாம்; [துருவ சிரத் தன் வாழ்வு அருமை] = துருவனையொத்த

சிரஞ்சீவியும் (அவ்விடத்தில்) உயிர் பிழைத்திருத்தல் அருமையாகும், (ஆதலால்) [வாழ்]=(இஃதறிந்து) நீ வாழ்வாயாக.

(தா - ம்.) வாதரோகிக்கு நெய்தனில மென்னும் கடற்சார்புடைய நாடாகா; பித்தரோகிக்கு முல்லைநிலமென்னும் காட்டுச் சார்புடைய நாடாகா; சேத்தும ரோகிக்குக் குறிஞ்சி நிலமென்னும் மலைச்சார்புடைய நாடாகா; ஏனெனின், அவ்வந் நிலங்கள் அவ்வவ்வியாதிக் குற்பத்தி ஸ்தானங்களாம். மேற்கண்ட மூவகை ரோகிகட்கும் மருதநிலமென்னும் வயற்சார் புடைய நாடுகளே ஏற்றவைகள். ஏனெனின், அவ்விடத்தில் நல்ல நீர்வளமும், அறுசுவைப் பண்டங்களின் விளைவுமுண்டு என்பதாம். பாலை நிலமென்னும் நீரில்லாக் கடுநிலமானது எவ் விதரோகிக்கும் ஏற்காது. ஏனெனின், அவ்விடத்திற் சுகாதரத் திற்குரிய ஒன்றுமில்லை என்பதே. புன்கண் என்பதை நடுநிலைத் தீபகமாகக்கொள்க. (உஉ)

## அவிழ்த வகைகளிற் பற்ப சிந்தூர மாத்திரைகளே முக்கிய மென்பது.

மூவினையோர் வெண்செய்கரு மொய்ம்புமவை நம்பியறி
மூவினையோர் நன்னூன் மொழிவதிதே—மூவி
வலாரியங்கி காலனிவர் வாகனமாச் செய்ய
வலாரியங்கி யம்புவியாள் வார்.

(இ - ள்.) [மூவினை] = (அவிழ்தங்களின்) மேம்பாடான தொழில்கள், [ஓர் வெண் செய் கரு]=ஒப்பற்ற பற்ப வகைகளும், செந்தூர வகைகளும், மாத்திரை வகைகளுமே, [மொய்ம்பும் அவை] = (பண்டிதர்கட்குள்ள) வல்லபமும் அவ்வவிழ் தங்களே யாகும். [நம்பி]=ஆண்மக்களிற் சிறந்த பண்டி தோத்தமனே, [அறிமூவினை ஓர்)=முக்கியமாய் அறிய வேண் டிய மூவகை நோய்கட்குக்(குறியாகிய நாடிகளை உணர்வாயாக, [நல் நூல் மொழிவது இதே]=சிறந்த வைத்திய சாத்திரங்கள் கூறுவதும் இதுவே, (அன்றியும்) [மூவி] = தனித்தனி, [வலாரி அங்கி காலன் இவர் வாகனமா செய்யவலார்] = இந்திரன், அக்கினி, இயமன் (என்னும் இவர்கள்) ஏறுகின்ற வாகனங் களைப் போன்ற (நிறமுடையவைகளாய் முறையே பற்பம், செந்தூரம், மாத்திரை என்பவைகளை)ச் செய்ய வல்லப முள்ள வர்கள், [இயங்கி அம்புவி ஆள்வார்] = எங்கும் உலாவி உல

கத்தை ஆள்பவர்களாவார்கள்—எ - று.

(தா - ம்.) அவிழ்த வகைகளில் முக்கியமானவை பற்பமும், செந்தூரமும், மாத்திரையுமே யாகலின், அம்மூன்றிலும் மேம்பட்ட முறைகளைக் கைபாக செய்பாகங்கள் தவறுமறச் செய்யவும், அவற்றை உபயோகிப்பதற் குரிய நோய்களை நிதானித்தறிவதற்கு வாதபித்த சேத்தும நாடிப் பரீட்சைகளை நன்றாய்க் கூர்ந்துணரவும் கற்றுக்கொண்டு, ஷை பற்ப, செந்தூர மாத்திரைகளின் நிறங்கள் முறையே வெண்மை, செம்மை, கருமை என்னும் மூவிதமா யிருக்கச் செய்யவேண்டுமென்பதும், அவ்வாறு செய்வோரே உலகத்துள்ள ஏனைய பண்டிதர்கட்கெல்லாம் தலைமை பெறுவார்களென்பதுமே.

## இன்னின்னார் நோயுறுவ ரென்பது.

காலமென்று வைக்கார்முக் காலரா கத்திரிவார்
காலமென்று தின்னார் கயராவார்—காலமென்று
மாலையளை யூறு மயானப் புகைமுதிய
மாலையளை யுந் தழுவு வார்.

(இ - ள்.) [காலம் என்று வைக்கார்]=(உண்பதற்குரிய) வேளை இதுவென்று (நியமம்) வைக்காதவர்களும், [முக்காலர் ஆகத் திரிவார்]=மூன்று பொழு (துண்பவர்களாய்) ஒருவித முயற்சியுமின்றி சோம்பேறிகளா யுலாவுவோர்களும், [காலமென்று தின்னார்]=நையும்படி சுவைத்துப் புசியாதவர்களும், [காலம் என்று]=காலையில் வெய்யிலையும், [மாலை அளை]= இரவில் தயிரையும் (அதைப்போன்ற சீதள வஸ்துக்களையும் [ஊறு ஆம்]=தோஷமுள்ள நீரையும், [மயானப் புகை]=சுடுகாட்டுப் புகை போன்ற தோஷமுள்ள காற்றையும், [முதிய மாலையளையும்]=முதிர்ந்த இயல்புடையவளையும், [தழுவார் கயர்ஆவார்] =அனுசரிப்பவர்கள் பலவகைக் குறைவுகளை யுடையவர்களாவார்கள்—எ - று.

(தா - ம்.) இன்னகாலத்தில் புசிப்பது என்னும் நியதி இல்லாதவர்களும், மூன்றுவேளை புசித்தும் ஒருவித முயற்சியுமின்றிச் சதா சோம்பலா யிரும்பவர்களும், ஒவ்வொரு பதார்த்தங்களையும் நன்றாகச் சுவைத்துத் தின்னாதவர்களும். காலை வெய்யில், இரவில் சீதள பதார்த்தங்கள், தோஷமுள்ள சுடு

காட்டுப் புகை முதலிய விஷவாயுகள், தம் வயதினும் மூத்த ஸ்திரீகள்; சூது, கபடம் முதலியவைகளுள்ள ஸ்திரீகள் ஆகிய இவர்கள் சங்கமம் என்னும் இவைகளை அனுசரிப்பவர்களும். இன்னும் இவைபோன்ற சுகாதாரத்திற் கேற்காதவைகளையும் எந்நாளும் சுகமென்று கொள்பவர்களும் பல வகைக் குறைவுடையவர்களாவார்கள் என்பதே.

## நோயணுகாவிதி.

வைவச் சுதனை மதியே மினிப்பாரில்
வைவச் சுதனை நிகர் வாழ்ந்திருப்பேம்—வைவச்சு
யாமினிப்பா லோடறறூ வங்கூ ழிளவனிதை
யாமினிப்பா லோடல்வரி வேம்.

(இ - ள்.) [வைவச்சுதனை மதியேம்] = யமனை லட்சியப் படுத்தோம்; [இனி பாரில் வைவு அச்சுதனை நிகர் வாழ்ந்து இருப்போம்] = இனி இவ்வுலகத்தில் வசிக்கும் (காலம் வரையில்) திருமாலைப்போல் (நோயற்று) வாழ்ந்துகொண் டிருப்போம்; [வைவு அ சுயாம் இனி பாலோடு] = பழிப்பற்ற நீர் கலவாத மதுரமானபால் (போன்ற சுத்த ஆகாரத்) தோடு, [தூ அறல்] = சுத்த சலத்தையும்; [தூ வங்கூழ்] = சுத்த காற்றையும் [இள வனிதை யாமினி பால்] = இளவயதுடைய பெண்ணை இராக் காலத்தில் (அனுசரித்தலையும்,) [ஓடல்] = வேகமாய் நடத்தல் (முதலிய சரீரப் பயிற்சியையும்) [வரிவேம்] = கடமையாகக் கொள்வோம்—எ - று.

(தா - ம்.) பால்போன்ற சத்துள்ளசுத்த ஆகாரத்தையும், சுத்த காற்றையும், சுத்த ஜலத்தையும், சரீரப்பயிற்சியையும், தனக்கிள வயதுப்பெண்ணை இரவில் காலமுறைப்படி அனுசரித்தலையும், கடமையாகக் கொள்வோமாகையால், இனி யமனுக்கு அச்சங்கொள்ளாதவர்களாய் இவ்வுலகத்தி லுள்ளவரையில் சுகஜீவிகளாய்த் திருமாலைப்போல வாழ்ந்திருப்போமென்பதே.

சுயம் எனற் பாலது எதுகை நோக்கிச் சுயாம் என நீண்டும், இனிப்புப்பால் எனற்பாலது எதுகை நோக்கி இனிப் பாலெனத் தொக்கியும் நின்றவாறறிக.

## வைத்திய முறைமைக்குக் கட்டுப்படாதவர்கள்.

பயந்தவரை மூத்தவரைப் பாலரைப்பெண் டீரைப்
பயந்தவரை மைத்துனரைப் பாறப்—பயந்தவரை
நட்டவரை வாகடத்தி ஞட்டிஞ லோட்டில்விதை
நட்டவரை நேர்குவர்வீ ணுள்.

(இ - ள்.) [பயந்தவரை] = தன்னைப்பெற்றவர்களையும், [மூத்தவரை] = தனக்கு மூத்தவர்களையும், [பாலரை] = தனது பிள்ளைகளையும், (பெண்டீரை] = தனது மனைவிமாரையும், [பயந்தவரை] = (இயல்பாகவே) அச்சமுற்றவர்களையும், [மைத்துனரை] = தனக்கு மைத்துன முறைமை யுள்ளவர்களையும், [பாறு அப்பு அயந்தவரை] = ஓடுகின்ற (வெயர்வை) நீரால் தளர்ந்தவர்களாகிய (பித்த சேத்தும சரீரிகளையும்), [நட்டவரை] = சிநேகிதத்தவர்களையும், [வாகடத்தில் நாட்டினுல்] = வைத்திய முறைமையில் நிறுத்திஞல், [ஓட்டில் விதை நட்டவரை நேர்குவர்] = ஓட்டிலே விதையை நட்டவர்களை ஒப்பார், [வீண் நாள்] = (அதனுற்) காலம் வீணுகும் - எ - று.

(தா - ம்.) மாதா பிதாக்களையும், மூத்த சகோதரர்களையும், பிள்ளைகளையும், மனைவிமாரையும், இயல்பாகவே அச்சமுடையவர்களையும், மைத்துனர்களையும், பித்த சேத்தும சரீரிகளையும், சிநேகர்களையும், வைத்திய முறைமையில் வைத்தால், ஒட்டில் விதை நாட்டினவர்களைப்போற் பயனடையாமல் வீணுழ்கழிக்க நேரிடுமென்பதே. ஏனெனில், மாதா பிதாக்களும், மூத்த சகோதரர்களும் அலட்சியத்திஞலும்; பிள்ளைகளும், பெண்டுகளும் அறியாமையிஞலும்; சுபாவமாகவே அச்சமுற்றவர்கள் மருந்திஞல் எதுவிளையுமோ என்னும் சந்தேகத்திஞலும்; மைத்துனர்கள் பரியாசத்திஞலும்; பித்த சேத்தும ரோகிகள் தங்கள் தேக சுபாவத்திற்கு அவர்கள் துரிதப்படுகிறதுபோல எம்மருந்தும் ஒவ்வாமையிஞலும்; சிநேகர்கள் பயமின்மையாலும், வைத்திய முறைமைக்கிணங்கி நடவார்களென்பதே (உகூ)

## வைத்தியத் தொழிலிற்கு யோக்கியா யோக்கியர்கள்.

தாயத் தவனுந் தபதியுமே ஞதியுமா
தாயத் தவனுந் தறுகணனுந்—தாயத்

தவனும் பரிசனனுஞ் சட்டகனுங் கோனுந்
தவனும் பரிகாரி தான்?

(இ - ள்.) [தாயத்தவனும்] = துக்கமுடையவனும், [தபதியும்] = சிற்பியும், [ஏனுதியும்] = காட்டில் வசிப்பவனுகிய வில்லியனும்; [ஆதாயத்தவனும்] = வியாபாரியும், [தறுகணனும்] = கொடூரகுணமுள்ளவனும், [தாயத்தவனும்] = சூதாடுவோனும், [பரிசனனும்] = சமையல்செய்பவனும், [சட்டகனும்] = பெருநித்திரைகொள்பவனும் [கோனும்] = அரசனும், [தவனும்] = தவசியும், [பரிகாரி தான்?] = வைத்தியர்களா? — எ - று.

(தா - ம்.) சதா துக்க முடையவனுக்குப் புத்திதெளிவின்மையினுலும், சிற்பியானவன், கை கால் முதலிய அவயவங்களுள்ள சிலேகளே வார்க்கத் தெரிந்தவனுயினும் மனித தேகத்திற்குள்ளிருக்கும் தத்துவகுணங்கள் தெரியாதவனுகையாலும், காட்டில் வசிக்கும் வில்லியன், பல மூலிகையின் குணந் தெரிந்திருப்பானுயினும் தேகசுபாவம், வியாதியின் லக்ஷணமுதலியவைகளேத் தெரிந்து சமயோசிதமா யுபயோகிக்கும் தேர்ச்சியில்லாதவனுகையாலும், வியாபாரியானவன் எப்போதும் பொருளேயே சம்பாதிப்பதில் பேராசையுடையவனுகையாலும், கொடூரகுண முள்ளவனுக்கு நோயாளியின் உபத்திரவத்தில் பச்சாத்தாப மிருக்காதாகையினுலும், சூதாடுதல் முதலிய தொழிலேப் பயின்றவனுக்கு எப்போதும் கவனம் அந்தவழியிலேயே செல்லுமேதவிர வேறு வழியிற் செல்லாதாகையினுலும், சமையல் செய்வோனுக்கு போசனபதார்த்தங்களின் எல்லாவகைப் பாகங்களும் தெரிந்திருந்தபோதிலும், அவுடத பாகங்களே முடிக்கும் நுண்ணறிவின்மையிலும், பெருந் தூக்க முள்ளவனுக்கு மன வூக்கமில்லாமற்போமாகையால் எந்த விஷயத்தையும் முறையாய்ச் செய்துமுடிக்கக் கூடாதாகையாலும், அரசனுக்குத் தனது அதிகாரம் சம்பத்து முதலியவைகளினுல் அகங்கார முதலியவைகளிருக்கு மாகையினுலும், தவசிக்கு உலகநாட்ட மில்லாமையினுலும், இவர்களும் இவர்களேப் போல்வாரும் வைத்தியத்தொழிலுக்கு யோக்கியராகார்கள். எனவே, விசனமற்றவர்கள், அங்காதிபாதமென்னும் சாரீர சாஸ்திரந் தெரிந்தவர்கள், மூலிகை முதலிய எல்லாச்சரக்குகளின் குணம், அளவு முதலியவைகள் தெரிந்தவர்கள், பொருளில் பேராசையில்லாதவர், ஜீவகாருண்யமுள்ளவர்கள், சூதாடுதல் முதலிய பஞ்சமாபாதகத்தொழில் ஒழிந்தவர்கள் மருந்து

களை பாகப்படி முடிக்கும் நுண்ணறிவினையுடையவர்கள், தூக்கம், சோம்பல் முதலியவைகளில்லாதவர்கள், அதிகாரச் செருக்கு, பொருட்செருக்கு முதலியவைகளில்லாதவர்கள், இல்லறதருமத்தோடு வாழ்பவர்கள் ஆகிய இவர்களே வைத்திய தொழிலுக்கு யோக்கியராவார்கள் என்பதாயிற்று. (உஎ)

## இன்னார்க்கு வைத்தியம் செய்யலாமென்பது.

மருத்துவரை நோயினர்த மாதாபி தாவா
மருத்துவரை யென்னவருள் வைக்க—மருத்துவரை
கையடையா ளந்தந்தக் காரியத்தி லென்றுநம்பிக்
கையடையா ளந்தந்தக் கால்.

(இ - ள்) [மருத்துவரை] = வைத்தியரை, [நோயினர் தம் மாதா பிதாவா] = பிணியாளிகள் தம்முடைய தாய் தந்தையராகவும், [மருத்து வரையென்ன] = சஞ்சீவிமலையென்றும் (எண்ணி) [மருத்து உவர் ஐ]—வாதம், பித்தம், சேத்துமம் (என்னும் இவைகள்), [கை அடை ஆள் அந்த காரியத்தில் என்று]—ஒழுங்குபெறும்படி அருள்வீராக அதற்குத்தக்க விஷயங்களில் என்றுரைத்து, [நம்பிக்கை அடையாளம் தந்தக்கால் அருள் வைக்க] - நிச்சயமான அறி குறி கொடுப்பார்களாயின் (அவர்களிடத்தில்) கிருபை புரிக—எ - று.

(தா - ம்) வைத்தியரைப் பிணியாளிகள் தம்முடைய தாய் தந்தையர்களாகவும், சஞ்சீவிமலையாகவும் எண்ணி, தங்கள் சரீரத்துள்ள வாத, பித்த சேத்தும நாடிகள் தத்தம் முறைமைகளைப் பெறும்படி யருள் செய்வீராகவென்றுரைத்து, நம்பிக்கையான அடையாளமாகத் திரவியம் முதலியவைகளை கொடுப்பார்களாயின், அத்தகையோர்க்குத் தயைபுரிக என்பதே, உரிமையுடன் உபசரிப்பதற்கு மாதா பிதாக்களையும், பிணிகளை ஒழிப்பதற்குச் சஞ்சீவிமலையையும் உவமித்தமை காண்க. (உஅ)

## வைத்தியருக்கறிவுறுத்தல்.

ஈரமதி மித்திரனு ரெல்லைவரு நோயாளி
யீரமதி மித்திரனு ரென்னில்வினை—யீரமதி

பணடிதரு மைத்தொழினீ பார்நன்மை பண்டிதரும்
பண்டிதரு மெச்சுமகி பா.

(இ - ள்.) ஈர மதி மித்திரனார் எல்லை வரும் நோயாளி] =குளிர்ந்த சந்திரன், சூரியன் (என்னும் இவ்விருவர்க்குரிய) நாளில் (உன்னிடத்தில்) வருகின்ற பிணியாளி, [ஈரம் மதி மித்திரனார் என்னில் வினை ஈரதி] = அன்பும், அறிவுமுள்ள நேசனாகில் (அவனது) நோய் தீரும்படி யூகிப்பாயாக; [பண்டு இது அருமைத் தொழில் நீ பார் நன்மை] புராதனமான இவ் வைத்தியம் அருமை யமைந்த தொழிலாகும் (ஆதலால்) நீ (இத் தொழிலை) பார்ப்பாயாக, (இதனால்) நன்மையுண்டாகும்; [பண்டிதரும் மெச்சும் மகிபா] = வித்வான்களும் வைத்தியர்களும் புகழத்தக்க தலைவனே — எ - று.

(தா - ம்.) நோயாளியானவன் அன்பும் அறிவும் அமைந்தவனாயிருந்து, ஆதிவாரம் சோமவாரம் என்னும் இவ் வாரங்களில் உன்னிடத்தில் வைத்தியம் செய்துகொள்ள வருவானாயின், அவன் நோய் தீரும்படி யோசிப்பாயாக. இவ் வைத்தியம் புராதனமான அருமையமைந்த தொழிலாகலின் இதனை நீ செய்தால் நன்மை விளையும் என்பதே. அன்பினால் நம்பிக்கையும், அறிவினால் அடக்கமு முண்டாதலால், அத்தகையோர் வைத்தியர்கள் சொற்களில் நம்பிக்கையுடன் அடங்கி நடப்பார்களென்பது விளங்க, "ஈரமதி மித்திரனார்" என்றும்; அத்தன்மையுடையவனாயினும் மற்றைய வாரங்களில் வருவானாயின் அவன் பிணிகள் அதிசீக்கிரம் நீங்காதாகலின், "ஈர மதி மித்திரனாரெல்லை வருநோயாளி" என்றும்; இவ் வைத்தியமானது, நவீனமாகத்தோன்றிய அற்பத் தொழில் அல்லவென்னும் பொருட்டு, "பண்டிதருமைத் தொழில்" என்றும், வைத்தியம் செய்வோர்க்குக் கல்வி விற்பத்தியும் அமைந்திருக்கவேண்டியது அவசியமென்று குறிப்பித்ததற்காக "பண்டிதரு மெச்சும்" என்றும் கூறினர் ()

**நோயாளிக் கறிவுறுத்தல்.**

பாணித் தலத்தைப் பரிகாரி தீண்டுதற்குப்
பாணித் தலத்தைப் பரிகரித்துப்—பாணி

யமுதத்தை யெவ்வியபோ லாதரித்துப் போற்றி
யமுதத்தை நேர்வதியை யா.

(இ - ன்:) [பாணி தலத்தை பரிகாரி தீண்டுதற்கு] =கையாகிய இடத்தை வைத்தியர் தொடுவதற்கு [பாணித்தல் அத்தை பரிகரித்து]=தாமதித்தலாகிய அத் (துர்க்குணத்)தை நீக்கி, ]பாணி அமுதத்தை ஒவ்விய போல் ஆதரித்துபோற்றி =ஜலமானது பாலைக் கலந்ததுபோல விசுவாசித்து வந்தித்து, [அம்முதத்தை நேர்வதி ஐயா]=பிரமிக்கின்ற கிளியையொத்து இருப்பாய் நோயாளியே—எ - று.

(தா - ம்.) நோயாளியே! உனதுகையை வைத்தியர் தொட்டுப் பார்ப்பதற்கும், மற்றும்விபரங்களையும் மறைவின்றி தெரிவிப்பதற்கும் ஆலசியம் செய்யும் துர்க்குணத்தையொழித்து, நீரானது பாலுடன் கலந்து ஒன்றுனதுபோல, வைத்தியர் மணவிருப்பத்திற்கிணங்கி, அவருக்கு விசுவாசத்துடன் வந்தனம் புரிந்து அவர் வார்த்தைகளைப் பகுத்துத்தர்க்கியாமல், கிளியைப்போல் மறவாமல் ஞாபகத்தில் வைத்துகொண்டிருப்பாய் என்பதே. எனவே, நோய் வந்தவுடனே வைத்தியருக்குக் கை காட்டிச் சிகிச்சை செய்துகொள்ளாதிருப்பதும், தன் மனம்போனவழி நடப்பதும் வைத்தியரிடத்தில் உண்மைப் பத்தியும் உபசாரமும் இல்லாதிருப்பதும், அவர் வார்த்தைகளைப் பகுத்துப் பார்த்துத் தர்க்கிக்க எண்ணுவதும் துர்க்குணங்களென்பது குறிப்பு. (௩0)

## இதுவுமது.

பத்தியத்தை நோயையனு பானத்தை லங்கனத்தை
பத்தியத்தை முன்மருவன் பண்ணலிற்கொள்—பத்தியத்தை
யேகமா யார்தாலு மேருச் செவிபோனே
யேகமா யார்த்தாலு மெய்.

(இ - ள்.) பத்தியத்தை நோயை அனுபானத்தை லங்கணத்தை] = பத்தியத்தையும், நோயையும், அனுபானத்தையும், லங்கணத்தையும், [பத்தி அத்தை]=(ஆகிய) இவ்வரிசையை, [முன் மருவு அன்பு அண்ணலில் கொள்]=வெகுநாள் பழகிய இச்சையுள்ள (வஸ்துக்களை) அடைவதைப்போல் அங்கீகரிப்பாயாக;[பத்து இயத்தை ஏகமாய் ஆர்த்தாலும் ஏரு செவி

போல்]=பத்து வாத்தியங்களை ஒருங்கே கோஷ்டித்தாலும் கேளாத (செவிடன்) காதைப்போல; [நோய் ஏக மாய் ஆர்த்து ஆலும் எய்]=நோய்களின் (கோஷ்டம்) ஒழியஅழித்து ஆரவாரித்து (ஆனந்தக்) கூத்தும் அடைவாய்—எ - று.

(தா - ம்.) பத்தியத்தினாலும், நோயினாலும் அனுபானத்தினாலும், லங்கணத்தினாலும் உண்டாகும் அருவருப்பை லட்சியப்படுத்தாமலும், வெகுநாட்பழகிய இனிய வஸ்துக்களைப் பெறுவதற்காக எதிர் பார்க்கும் மனக்களிப்புடன் சகிப்பாயாகில், நோய்களெல்லாம் நீங்கப்பெற்றவனாய், நீ யிழந்து போன பழயசுகம் நூதனமாயுண்டாகப் பெற்றவனாய் ஆனந்த மடைவாயென்பதே. (ருக)

## கற்பங்கள்.

### எருக்கு.

கற்ப முறைபெண்போற் கணவனெனும் பண்டிதன்சொல்
கற்ப முறைமுக் கடுகூண்வி—கற்பமுறை
மூவருக்கங் கட்டை முதலொடுநெல் மாத்திரமுன்
மூவருக்கங் கட்டையது முன்.

(இ - ள்) [கற்பு அம் உறை பெண் போல்]=பதிவிரதா தன்மம் (என்னும்) அழகானது வசிக்கப்பெற்ற மாதைப் போன்ற (நோயாளிக்கு) [கணவன் எனும் பண்டிதன் சொல்]= மணவாளன் என்னப்படும் வைத்தியர் கூறுகின்ற [கற்பமுறை] =கற்பங்களின் கிரமமாவது [முக்கடுகு]=சுக்கு, மிளகு, திப்பிலியும்,[ஊண்]=உணவுகளின் [விகற்பம்]=வித்தியாசமில்லாமல், [உறை] = ஜலத்திலே, [மூஅருக்கங்கட்டை முதலோடு]= முதிர்ந்த எருக்கங்கட்டை வேர்ப்பட்டை; [நெல் மாத்திரம் உண்]= நெல்லினெடையாகப் புசிப்பாயாகில்; [அது அங்கு மூவருக்கு அட்டைமுன்]=அக்கற்பமானது சரீரத்திலுள்ள (வாத பித்த சேத்துமம் என்னும்) மூன்று பேர்களுக்கும் அட்டையாம் (என்று) நினைப்பாயாக—எ - று.

(தா - ம்.) கணவன் சொல்தவராத கற்பு வாய்ந்த பத்தினியைப்போல, வைத்தியர் சொற்படி நடப்பவர்க்கு அவ்வைத்தியர் கூறும் கற்பவிதியாவது என்னவென்றால்; ஆகார

விகற்பங்களை யொழித்து அதாவது அவ்வவ்வியாதிகளுக் கேற்ற பத்தியத்துடனே (ஓர் மண்டலம்வரையில்) சுக்கு, மிளகு, திப்பிலி, என்னும் மூன்றையும் தனித்தனி யிடித்த சூரணத் துடன் நாட்சென்ற எருக்கங்கட்டை வேர்ப்பட்டைச் சூரணத் தில் வேளைக்கு நெல் எடையாகக் கலந்து, நல்ல ஜலத்தில் கரைத்துச் சாப்பிட்டு வந்தால், வாத பித்த சேத்துமமென்னும் முப்பிணிகட்கும் இக்கற்பம் அட்டையைப்போலாம் என்பதே. எனவே, மேல்தோலை நீக்கியிடித்து வஸ்திரகாயஞ்செய்த சுக்குத்தூள் விராகனெடை-$\frac{1}{2}$, 1. பழமையான எருக்கன் வேர்ப் பட்டையின் மேற்புரணி முதலியவைகளை நீக்கித்துண்டித்து நிழலில் உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம், ஒரு நெல்லெடை, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து கொஞ்சம் சலத் திற்போட்டுக் கலக்கிப் பானம்செய்யவும்; இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் - 40, நாள் வியாதிபலம் தேகபலம் முதலியவைகளுக் கேற்றபத்தியத்துடன் செய்து வந்தால் வாதரோகங்கள் திரும்.

மிளகை யிளவருப்பாய் வறுத்திடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் 4-முதல் 6, குன்றிமணியெடை, மேற்படி எருக்கன்வேர்ப்பட்டைச் சூரணம் நெல்லெடை-1, இவ்விரண் டையு மிஸ்ரமித்து முன்கண்டதுபோற் செய்யின் பித்த ரோகங்கள் திரும்.

அரிசித்திப்பிலியை யிளவருப்பாய் வருத்திடித்து வஸ் திரகாயம் செய்த சூரணம் விராகனெடை $\frac{1}{4}$, $\frac{1}{2}$ மேற்படி எருக்கன் வேர்ப்பட்டைச் சூரணம்-நெல்லெடை-1, இவ்விரண் டையும் முன்கண்டபடி செய்யின் கபரோகங்கள் தீரும்.

அட்டையைக்கெட்ட இரத்தம் கட்டியிருக்குமிடத்தில் கடிக்கவிட்டால், அவ்வட்டையானது அவ்விடத்தைப் பற்றிப் பிடித்து அக்கெட்ட இரத்தத்தை யுரிஞ்சி பற்றற நீக்கி விடுவதுபோல, இக்கற்பமானது மேற்படி நோய்களைப் பற்றறத்தீர்த்து விடுமென அட்டையை உவமானித்தார். (32)

**அழிஞ்சில்; சீதேவியார்; செங்கழுநீர்.**

அங்கோல வித்தை யயின்றுன்முன் போலவினை
யங்கோல வித்தை யடங்குமே—யங்கோல

முண்டா மரைவாசி யுற்பலமே லாகியதை
யுண்டா மரைவாசி யுள்.

(இ - ள்) [அங் கோல வித்தை முன்போல அயின்றூல்] = அழிஞ்சிற் கொட்டையை மேற் சொல்லியபடி புசித்தால், [வினை அங்கு ஓல வித்தை அடங்கும்] = (வாதமாதிமுப்) பிணிகள் சரீரத்தினிடத்துக் கோஷ்டம் செய்கின்ற தந்திரங்கள் ஒழியும்; [அம்கோலம் உண்டாம்] = சிறந்த சிங்காரங்களமையும்; [மரைவாசி உற்பலம்] = தாமரை மலர்வாசியான சீதேவியார் செங்கழுநீர் (என்னும்) [மேல் ஆகியதை] = மேன்மையான மூலிகையை [உண்டு ஆம் அரைவாசி உள்] = (கற்பம்) புசித்து முடியும் பாதி மண்டலத்திற்குள்ளே—எ-று.

(தா - ம்) அழிஞ்சிற் கொட்டையை இடித்து வஸ்திரகாயம்செய்த சூரணத்தையும் முன்னளவே முன் சொன்னபடியே திரி கடுகுத்தூளுடன் அனுபானித்து முன் முறைப்படியே செய்து வந்தால், முப்பிணிகளும் முறையே ஒழியும்.

சீதேவியார் செங்கழுநீர்க் கிழங்கை மேல் தோல் நீக்கி நிழலுலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ் செய்த தூள் விராகனெடை-1, 1½, இதனைமேற் சொன்னபடி திரிகடுகுத் தூளுடன் முன் முறைப்படி செய்து வந்தால் அரை மண்டத்திற்குள்ளாகவே மேற்கண்ட பிணிகளொழிந்து, அழகமையும் என்பதே. (33)

## இஞ்சி

இருந்தே னலங்கார மெய்தயின்று மீறி
யிருந்தே னலங்கார மெய்து—விருந்தேனு
ணீவி ரகசியமா நென்மாவு டன்கலந்து
ணீவி ரகசியமா நெய்.

(இ - ள்) இரும் தேன் காரம் எய்து அலம் அயின்று] = சிறப்புற்ற தேனில் (ஊறிய) காரமுற்ற இஞ்சியைத் தின்று, (மீறி இருந்தேன்) = (நரை, திரை, மூப்பைக்) கடந்து (வெகு நாள்) இருந்தேன்; [அலங்காரம் எய்துவிர்] = நீங்களும் அவ்) வழகைப் பெறுவீர்கள்; [உம் தேனுஉண் நீவி] = உங்களுடைய களவுத் தனத்தை மனத்தினின்றும் நீக்கி, [ரகசியமா] = அந்த

ரங்கமாக; [நெல் மாவுடன் அகசியம் ஆ நெய் கலந்து உண் நீவிர்]=நெல்லரிசியின் மாவோடு ஆச்சரியமான பசுவின் நெய்யையுங் கூட்டி நீங்களும் உண்பீர்களாகில்.

(தா-ம்) இஞ்சியைத் தோல்போக்கி பாகப்படுத்தி நல்ல தேனி லூறவைத்துத் தினந்தோறும் கற்ப முறைப்படி புசித்து வந்ததனுல், நரை திரை மூப்பின்றி நான் வெகுநாளிருந்தேனுகலின், நீங்களும் அவ்வாறு செய்வதுடன், நெல்லரிசிமாவுடன் பசுவின் நெய் கலந்து தினந்தோறும் புசித்துவந்தால் அவ்வழகையடைவீர்களென்பதே.

இஞ்சியைப் பாகப்படுத்தித் தேனிலூறவைத்து சுத்தப் படுத்தினதற்கு இஞ்சி முறப்பா என்று பெயர். இதன் முறை நமது யூநாநி வைத்திய தாருட்ய விருத்திபோதினியில் விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் சொல்லியிருக்கிற பிரமாணப்படி காலையிலொருவேளை சாப்பிட்டும், நெற்பொரி மாவுடன் பசுவின் நெய் சமனுய்க்கலந்து ஆகாரத்திற்குப் பதிலாய் சாப்பிட்டும், பத்தியப் பிசகில்லாமலிருந்தால் ஆயுள் விருத்தி, தேகபலம் மனுேபலம் முதலியவையுண்டாம். ()

### கீழாநெல்லி; சுரை; கஞ்சா; கச்சூர்.

ஆமலகை வாணு ளதிகமலே யோடுகுறை
யாமலகை யுண்ணு யனலெங்கே—யாமலகை
சாகச் சுரையாற் றனுவாயு மார்வலிகஞ்
சாகச் சுரையாஞ சம்.

(இ - ள்) [ஆம் அல கை வாள் நாள் அதிகம்] = நன்மையையும் தீமையையும் வெறுக்கத்தக்க (வயோதிகப்பருவம் வராமல்) ஆயுள் நாலே அதிகப்படுத்த (வேண்டுமாயின்) [அலேயோடு குறை ஆமலகை உண்] = (பசுவின்) தயிருடனே கீழாநெல்லி (சமூலமும் அரைத்து) புசிப்பாயாக; [அனல் நோய் எங்கே]=மேகவெட்டையாற் (காணும்) பிணிகளெல்லாம் எவ்விடத்திருக்கும்; [ஆம் அலகை சாக சுரையால்[=நீரேற்றமென்னும் பேய் இறக்கவேண்டின் சுரைக்கொடியாலும்; [தனுவாயு மார்வலி நாசம்]=தனுவாதமும், மார் நோயும் அழிய (வேண்டின்)[கஞ்சா கச்சுரையால்]=(முறையே) கஞ்சாவினுலும் கச்சூர்க் காயினுலும் (ஆம்)—எ - று.

(தா - ம்) ஆயுளை விர்த்தித்துக்கொள்ள வேண்டுமாயின், கீழாநெல்லியைச் சமூலமும் அரைத்தவிழுது பலம் - 1, இதனை - 1 ஆழாக்கு பசுவின் தயிரில் குழப்பித் தினந்தோறும் கற்ப முறைப்படி பானஞ்செய்யவேண்டும். அதனால் மேகவெட்டை யாற் காணும் எல்லாப்பிணிகளும் ஒழியும் என்பதும்;

நீரேற்ற வியாதி ஒழிய வேண்டுமாயின், சுரைக்கொடி யிற் காய் நீங்கலாக ஏனை யசமூலம் பலம்-3 வெள்ளைப்பூண்டி தழ் பலம்-$\frac{1}{4}$, இவ்விரண்டையும் சிதைத்து, 2-ஆழாக்குச் சலம் வார்த்து ஒரு ஆழாக்காகச்சுண்டக் காய்ச்சி யிறுத்து வடிகட்டி பானஞ்செய்யவேண்டும், இவ்விதம் காலை மாலை 2-வேளையும் 40-நாள் செய்யவேண்டும் என்பதும்; அல்லது சுரைக்கொடி மாத்திரம் பலம்-5, இதனை 2-ஆழாக்கு சலத்திலிட்டு அரை பாகமாக சுண்டவைத்து வடிகட்டி பானம் செய்யவும். இவ் விதம் காலை மாலை 2-வேளையும் 40-நாள் செய்யவேண்டும் என்பதும்.

தனுர்வாயு நீங்கவேண்டுமாயின், கஞ்சாவின் விதையை மிளகுடன் கலந்து வரிசைச் சிரமப்படி ஒன்று முதற் பெருக்கி ஒரு மண்டலம் புசிக்கவேண்டுமென்பதும்,

மார் நோயானது நிவர்த்தியாக வேண்டுமாயின், பேரீச்சங் காயைக் கொட்டை நீக்கி மெழுகு பதமாகிற வரையில் தேனி லூறவைத்துத் தினந்தோறும் வேளை யொன்றிற்கு ஒவ்வொன் றுக 2-வேளையும் ஒரு மண்டலம் வரையிற் புசித்து வரவேண் டும் என்பதுமேயாம். (35)

### கடுக்காய்; நாணல்.

மாலைக் கடுக்காய் வருணமாத் தானுணக்கா
மாலைக் கடுக்காய் மகோதரம்போ=மாலை
யடக்குஞ் சரவணநீ ரார்பித்த மாமெய்
யடக்குஞ் சரவணமே யாம்.

(இ - ள்) [மாலை கடுக்காய் மா வருணம் உண]=மாலைக் காலத்திற் கடுக்காய்த்தூளை நீருடன் (சலந்து) புசிக்க, [காமாலை கடுக்காய்]=காமாலை (நோயால்) வருந்தமாட்டாய்; [மகோ தரம் போம்]=மகோதரவியாதியும் நீங்கும்; [மாலை அடக்கும்]

=மயக்கத்தையும் ஒழிக்கும்; [சரவண நீர்]= நாணல் (வேர்க்) கஷாயம்? [ஆர்]= புசிப்பாயாக; (அது) [பித்தமாம் மெய் அட] = பித்தத்தாலாகிய(பிணிகளை) சரீரத்தினின்றும் போக்குதற்கு, [குஞ்சர வணம் ஆம்] = யானையின் வலியை யொத்ததாகும்— எ - று. (தான் ஏ அசைகள்)

(தா - ம்.) மாலைக் காலத்தில் ஒரு விராகனெடை கடுக்காய்த்தூளை அரையாழாக்கு சலத்திற் குழப்பி கற்ப முறைப் படி பானஞ்செய்து வந்தாற் காமாலை, மகோதரம், மயக்கம் என்னும் இவைகள் நீங்கும் என்பதும்:

ஒரு பலம் நாணல்வேரை நையச்சிதைத்து, இரண்டா ழாக்கு சலத்திற்போட்டு நாலிலொருபாகமாகச் சுண்டக் காய்ச்சின கஷாயத்தை மேற்சொன்ன முறைப்படி குடித்து வந்தாற் பித்தகாங்கை முதலிய பிணிகள் நீங்குமென்பது மேயாம். (36)

**காய்ச்சாத பசுவின்பால்; சீரகம்.**

தாரோட்ட மப்பாலார் சட்டகத்தே யுட்டணப்போர்த்
தாரோட்ட மப்பாலார் சாட்சிசொலத்—தாரோட்ட
வீக்கப் பிணியசன வேதிபுல்ல மெய்க்கதையே
வீக்கப் பிணியசனி மெய்'

(இ - ள்.) [தாரோட்டம் அப்பால் அர்]= தாரோட்ட மென்னும் (காய்ச்சாப் பசுவின்) பாலை உண், [சட்டகத்து உட்டண போர்தார்] = சரீரத்திலுள்ள காங்கையின் யுத்த வரிசைகள் [அப்பாலார் சாட்சிசொல்ல ஓட்டம்]= எதிரிலுள்ள வர்கள் சாட்சி சொல்லும்படி ஓடிப்போம்; [தார் ஓட்ட வீக்கப் பிணி]= மாலையைப் போன்று (வளைந்துள்ள) உதடுகள் வீங்கு கின்ற நோய்க்கு [அசன வேதி புல்லம்]= போசன குடாரி (என் னும் சீரகமும்) நாட்டுச் சருக்கரையும் (ஆகும்;) (அது) [மெய் கதை வீக்க பிணி] = சரீர மென்னும் கதாயுதத்தை இறுக்குதற்குக் கட்டாகும்; (அதனால்) [மெய் அசனி] = உனது சரீரம் வயிரமாகும்— எ - று.

(தா - ம்.) காய்ச்சாத பசுவின் பாலை கற்பமுறைப்படி சீரண சக்திக்கேற்றதுபோல் $\frac{1}{2}$, 1, 2 ஆழாக்குக் காலையிற்

புசித்து வந்தால், சரீரத்துள்ள காங்கைகளெல்லாம் ஓடிப்போமென்பதும்;

உதடுகள் வீங்குகின்ற பிணிக்கும், சரீரத்தையுறுதிப்படுத்துவதற்கும், சீரகத்தை யிள வறுப்பாய் வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் விராகனெடை-½, சீனிசருக்கரை விராகனெடை-1, இவ்விரண்டையுங் கலந்து காலை மாலை 2 வேளையும் மேற்சொன்ன முறைப்படி புசித்து வரவேண்டுமென்பதுமேயாம் (37)

## ஆலம்பால்; புளியாரை.

பூதற் சுதைபோற் பொருபாண்டு வைக்கறுகு
பூதச் சுதையுண் புளியாரை—பூத
விரைவாத மேகமற வெட்டுமுகின் மேலே
விரைவாத வென்னவவை மேல்.

(இ - ள்.) [பூதச்சுதைபோல் பொரு பாண்டுவைக்கு]= சுண்ணத்தாற்செய்த பூதத்தைந்போலப் போராடுகின்ற பாண்டுரோகத்திற்கு [அறுகு பூதச்சுதை உண்]= அறுகின் (கட்டைச் சூரணத்தையும்) ஆலம் பாலையும் புசிப்பாயாக; [புளியாரை]= புளியாரைக் (கற்பமானது) [பூத விரைவாதம் மேகம் அற வெட்டும்]= நாட்சென்ற அண்ட வாதத்தையும், மேகரோகத்தையும் நீங்கும்படி அழிக்கும்; [முகின் மேலே விரைவாதம் என்ன]= மேகங்களின்மீது பாய்கின்ற (பெருங்) காற்றையொத்து, [அவைமேல்] = அந்த ரோகங்களின்மேற் (பாய்ந்து)—எ - று.

(தா - ம்.) சுண்ணத்தாற்செய்த பூதத்தையொத்த வெண்ணிறமுள்ள பாண்டுரோகத்திற்கு அறுகங்கட்டையை நிழலிலுலர்த்தி யிடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் பலம்-½ ஆலம்பால் பலம்-¼, ½, இவ்விரண்டையும் கலந்து, கற்பமுறைப்படி யுண்ணக்கடவாயென்பதும்,

புளியாரையை நிழலிலுலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் வேளை 1-க்கு விராகனெடை-1½, 2 இவ்விதம் காலை மாலை-2-வேளையும் கற்பமுறைப்படி சாப்பிடுதல் நாட்சென்ற அண்டவாதம், மேகம் ஆகிய ரோகங்களின்மேல்,

மேகத்தின்மீது பாய்கின்ற பெருங்காற்றைப்போற் பாய்ந்து அழித்துவிடுமென்பதுமேயாம். (38)

### வெண்ணொச்சில்; வள்ளைக்கொடி.

சிந்துவா ரத்துணருஞ் சீதக்க ழிச்சலறச்
சிந்துவா ரத்துணருஞ் சீனிநெயுண்—சிந்துவார்
மாமூத்தி ரந்தோடு வாய்ப்பிலையட் டுண்டக்கான்
மாமூத்தி ரந்தோடு வார்.

(இ - ள்) [சிந்துவாரத்து உணரும் சீதக்கழிச்சல் அற]= கடலையொத்து (விசேடித்ததென்று) அறியத்தக்க சீதோஷ்ணக் (கலப்பால் வருகின்ற) பேதி ஒழியும்படி, [சிந்து வாரத்துணரும் சீனி நெய் உண்]=வெண்ணொச்சியிலையும் சருக்கரையும் நெய்யம் கலந்து புசிப்பார்களாயின்,[சிந்து வார்] =(அந்நோய்) போக்குவார்கள்; [மாமூத்திரம்[ = பெருமூத்திரம் (என்னும் நீர் ரோகத்திற்கு) [தோடு வாய்ப்பு இலை அட்டு உண்டக்கால்] =காதுக்கொத்திருக்கின்ற வள்ளைக்கொடியினிலையைச் சமைத்துப் புசிப்பார்களாயின், (அந்த வியாதி என்பவர்கள்) மூத்த மா இரைந்து ஓடுவார்] = வயோதிகமடைந்து குதிரையின் ஓட்டத்தைப்போல இரைச்சலிட்டு ஓடுவார்கள்—எ - று.

இரைந்தோடுவார் எனற்பாலது எதுகைநோக்கி இரந்தோடுவாரென நின்றது.

(தா - ம்.) கடல்போற் பெருகுகின்ற சீதக்கழிச்சலுக்கு, வெண்ணொச்சிற் கொழுந்து ஒரு பங்கு, சுக்குச்சூரணம் ஒரு பங்கு, சீனிசருக்கரை-2-பங்கு, இவற்றைக் கலந்து அதற்குத் தக்கபடி பசுவின் நெய் விட்டு அடிப்பற்றுமற்கிளறி வேளை 1-க்கு விராகனெடை $\frac{1}{4}$, $\frac{1}{2}$ யாக ஒரு மண்டலம் புசித்து வரவேண்டுமென்பதும்;

பெருமூத்திரம் என்னும் நீர் ரோகத்திற்கு, வள்ளைக் கொடியின் இலையைக் கீரையைச் சமைப்பதுபோற் சமைத்து கற்ப முறைப்படி ஒரு மண்டலம் புசித்து வரவேண்டுமென்பது மேயாம்.

## மூக்கிரட்டை; குப்பைமேனி

கோணத் தடைவாதக் கோட்டாலை மாறவினைக்
கோணத் தடைமுழுதுங் கொள்ளட்டுக்—கோணத்தை
யட்டியிலை மேனி யயிறிவிளக் கெண்ணெயின்மெய்
யட்டியிலை மேனியை யாம்.

(இ - ள்.) ]கோணத்தடை வாதக் கோட்டாலை மாற]= மூக்கடைப்பும், வாதத்தால் (விளையும்) நோய்களும் தீரும்படி. [இணை கோணத்து அடை முழுதும் அட்டு கொள்]=மூக்கிரட்டையின் இலை (முதலிய) ச மூலம் சமைத்து உட்கொள்வாயாக, [கோணத்தை அட்டி]=(அந்நோய்)தூரத்திற்சேர்ந்து (விடும்) [மேனி இலை விளக்கெண்ணெயின் அயிறி] = குப்பைமேனி இலையை (அவித்து) ஆமணக்கு எண்ணெயில் (தாளித்து) புசிப்பாயாக, [மேனி ஐ ஆம் அட்டியிலை மெய்] = சரீரத்தில் அழகுண்டாகும் தடையிலை; இஃதுண்மை—எ - று.

(தா - ம்.) மூக்கிரட்டை சமூலமும் கொண்டுவந்து சமைத்துக் கடைந்தாவது குழம்பு செய்தாவது ஒரு மண்டலம் வரையில் கற்ப முறைப்படி புசித்து வந்தால், மூக்கடைப்பு ரோகமும், வாத ரோகங்களும், ஒழியுமென்பதும்;

குப்பைமேனிக் கீரையைச் சமைத்து விளக்கெண்ணையால் தாளித்து ஒரு மண்டலம் வரைக்கும் கற்பமுறைப்படி புசித்து வந்தால் (வியாதிகளெல்லாம் ஒழிந்து) அழகுண்டாமென்பதுமேயாம்.

## தூதுவேளை.

திருக்குளத்தை நன்ருக்கித் தின்னுவையே னல்ல
திருக்குளத்தைப் போலே திருந்துந் – திருக்குளத்தை
யெல்லா மிரவுவினை யென்னவடுந் தூதுவளை
யெல்லா மிரவுமினி யென்.

(இ - ள்.) திருக்கு உளத்தை நன்று ஆக்கி தின்னுவையேல்]=குற்றமுள்ள மனதைச் சுத்தப்படுத்திப் புசிப்பாயாகில், [நல்ல திருக்குளத்தைப் போலே திருந்தும் திருக்கு]= தூய்மையான அழகுள்ள தடாகத்தை யொத்துச் செவ்வையாகும்

கண்கள்: [உள் அத்தை யெல்லாம் இரவு வினை என்ன அடும் தூதுவனை] = அக்கண்களுள் ளிருக்கும் சிவப்பு (தடிப்பு முதலிய நோய்கள்) அனைத்தையும் எளிய நோய்களென்றுரைக்கும்படி அழிக்கும் தூதுவளை (என்னும் மூலிகை); [இரவும் எல் ஆம்] = இராக்காலமும் பகற்காலமாகும்; [இனி என்] = இன்னும் (நான்) என் சொல்வது — எ - று.

(தா - ம்.) தூதுவேளை பூ, காய் என்னும் இவற்றை முறையே பதார்த்த வகைகளாகவும், வற்றலாகவும், ஊறு காயாகவும், குல்கந்த் (Confection) ஆகவும் செய்து, நெய் அனு கரணமாகக்கூட்டி ஒரு மண்டலம் வரையிற் புசித்து வந்தால், நேத்திரத்திலுள்ள பித்தநீர், சிவப்பு, தடிப்பு முதலிய ரோகங் களையெல்லாம் போக்கி இராக்காலமும் பகற்காலம்போல் ஒளி கொடுக்கும் என்பதே.

தூதுவேளை குல்கந்து முறை:- காம்பு முதலியவைகளை நீக்கிச் சுத்திசெய்த தூதுவேளைப்பூ விதழ் வீசை-$\frac{3}{4}$ காய்ச்சி நூரை நீக்கி சுத்திசெய்த தேன் வீசை-1¼ இரண்டையும் நன் ருய் மிஸ்ரமித்து நாற்பது நாள் வெயிலில் வைத்து எடுத்துக் கொள்வதே. நாள்தோறும் நன்ருய் மிஸ்ரமமாகும்படி கிளறி யும் வரவேண்டியது, வேளை-1-க்கு பலம் ¼-1-சாப்பிடலாம்.

**பொன்னுங்காணி.**

பொன்னுங்கா ணிக்கீரைப் போற்றியுணக் கற்பமுறை
பொன்னுங்கா ணிக்கீரை போதுமே—பொன்னு
யிருபதி லக்கமதி யேற்பத் தியத்தை
யிருபதி லக்கமதி யே.

(இ - ள்.) [பொன் ஆம் காண் இக் கீரை போற்றி உண] = சூரியன்போல் விளங்குகின்ற இந்த வார்த்தையை நம்பிப் புசிப்பதற்கு [கற்பம் முறை பொன்னுங்காணிக்கீரை போதுமே] = கற்ப முறைகளிலே பொன்னுங்காணிக் கீரை (ஒன்றே) பற்றுமே, [பொன்னுய் இரு] = (உன் சரீரம்) பொன் மயமா யிருக்கு (மென்றும்,) [பதில் அக்கம்] = பிரதி கண்கள் (உண்டா மென்றும்) [மதி] = நீ எண்ணுவாயாக; [ஏல் பத்தியத்தை இருபது இலக்கம் மதி] = ஏற்றுக்கொள்வாய் (அதற்குரிய) பத்

தியத்தை இருபதென்னும் எண்ணுள்ள மாதங்கள் (வரையில்) —எ - று. ஏ - அசை,

(தா - ம்.) பொன்னுங்காணிக் கீரையை நெய்யில் வதக்கிப் பாகமாக மிளகுத்தூளும், உப்பும் சேர்த்துப் புளியை நீக்கித் துவட்டலாகச் செய்து, கற்ப முறைப்படி இருபது மாதங்கள் வரையிற் புசித்து வந்தால், சரீரம் பொன்மயமாவதுமல்லாமல், கண்களுக்கும் மிக்க ஒளியுண்டாமென்பதே, (42)

## சேராங்கொட்டை.

காற்பாச மாகக் கடுப்புகா லின்முன்னே
காற்பாச மாகக் கதலுமே—காற்பாசஞ்
சேரா விரைக்கற்பஞ் சீராவா மெய்க்கதனுற்
சேரா விரைக்கற்பந் தின்.

(இ - ள்.) [கால் பாகம்]=காலிலே விலங் (கிருப்பது போல் நடக்கவொட்டாமற் செய்யும் வாதமும்), [ஆகக் கடுப்பு] =சரீரக் குத்தலும், [காலின் முன்னே காற்பாசம் ஆகக் கதலும்] =(பெருங்) காற்றிற்கெதிரில் (அகப்பட்ட) பஞ்சுப் (பொதியைப் போலப் பறக்கும் [கால் பாகம் சேரா விரை] = யமனுடைய பாசக் கயிறு வேகமாகக் கிட்டாது; [மெய்க்கு கற்பு அம் சீரா ஆம்] = சரீரத்திற்கு மேன்மையும் அழகும் (அமைந்த) கவசமும் ஆகும்; [அதனுல்]=ஆதலால்; [சேராவிரைக் கற்பம் தின்]=சேராங்கொட்டையைக் கற்பமாகப் புசிப்பாய்—எ - று.

(தா - ம்.) சேராங்கொட்டையை லேகியமாயாகிலும், கிருதமாயாகிலும், சூரணமாயாகிலும் முறைப்படி செய்து வைத்துக்கொண்டு, ஒரு மண்டலம் வரையில் பிரமாணத்துடனே கற்பமாகப் புசித்துவந்தால், நடக்கவொட்டாமல் கால்களை முடக்கிக்கொண்டிருக்கும் வாத ரோகங்களும், அதனுல் உண்டாகும் சரீரக் குத்தலும், பெருங்காற்றி லெதிர்ப்பட்ட பருத்திப் பொதியைப்போலாகும், அல்லாமலும் இக் கற்பம் சரீரத்திற்கு வச்சிர கவசம் போன்றது என்பதே.

இதன் சில திவ்விய பாகங்கள் நமது யூநாநி வைத்திய தாருட்ய போதினியிற் காணப்படும்.

## வேம்பு; பனை.

பாண்டியன்று ரோமமுவர் பண்ணியமா கத்தொடங்கி
பாண்டியன்று ரோமமுவர் பண்ணியதாம்—பாண்டியன்றுர்
நேத்திரத்தார் மாலையற நீர்குடியட் டானகரு
நேத்திரத்தார் மாலையற நீ.

(இ - ள்) [பாண்டியன் தார் ஓமம் உவர்]=பாண்டியனுடைய மாலையான (வேம்பின்துளிரையும்) ஓமத்தையும், உப்பையும் சேர்த்து, [பண்ணியம் ஆக தொடங்கி]=பலகாரமாகப் (புசிக்க) ஆரம்பித்து, [பாண்டி அன்று ஆர்]=இது விளையாட்டல்ல நீ புசிப்பாய்; [ஓமம் மூவர் பண்ணியது ஆம்] = வேள்வியைத் திரிமூர்த்தி (களைக்குறித்துச்) செய்ததற் (கொப்பான) (பலன்) உண்டாகும்; [பாண்டி ஆர் அன்று] = உரோகணி நட்சத்திரம் பூரணமாயிருக்கும், அத்தினமே (நல்லது); [நேத்திரத்து ஆர் மாலை அற]=கண்ணிற் பொருந்திய (மஞ்சட்) காமாலை ஒழியும்படி, [அட்டு ஆன நீர்குடி] = காய்ச்சிமுடித்த கஷாயத்தைக் குடிப்பாய் [கரு நேத்திரத்தார் மாலை அறம் நீ] =கரும்பட்டுடையினராகிய (பலபத்திரரது) மாலையான (பனை வேரை) முறைமைப்படி நீ—எ - று.

(தா - ம்.) வேம்பின் துளிரைக் கொண்டுவந்து இடித்துத் தூளாக்கி, அத்தூளிற்கரைப்பங்கு ஓமமும், அரைப்பங்கு உப்பும் சேர்த்தும் மறுபடியும் இடித்து ஒன்றுக்கி, அதிரசப் பொடிபோலப் பக்குவப்படுத்தி, இதை இலேசாகமதியாமல், உரோகிணி நட்சத்திரமுள்ள தினத்தில் சாப்பிடத்தொடங்கி, கற்பம் போலச் சாப்பிட்டு வந்தால், திரிமூர்த்திகளுக்கும் வேள்வி இயற்றினுல் எவ்வாறு சகல இடையூறுகளும் நீங்குமோ அதுபோல, சகலநோய்களும் நீங்கப்பெறுவார்கள் என்பதும்;

பனைவேரைப் புதுப் பாண்டத்திலே நறுக்கிப்போட்டு, அதற்கிரட்டி நல்ல தண்ணீர்வார்த்து - 3 - நாள் சூரியபுடமாக வைத்து, அதன்பின் அடுப்பிலேற்றித் தீபாக்கினியாக எரித்துக் கஷாயமாகக் காய்ச்சி, அதில் $\frac{1}{2}$ - 1, ஆழாக்காக இரண்டுவேளையும் தினந்தோறும் குடித்து வந்தால், மஞ்சட் காமாலை, மாலைக்கண், புழுவெட்டு, அருகல் முதலிய நேத்திர

ரோகங்கள் நிவாரணமாகும் என்பதுமேயாம்.

பண்டி எனற்பாலது பாண்டி என நீண்டது. (44)

### தேற்ருன்; நெல்லி; கற்ருழை.

இல்லா மலக மிரண்டு மயின்ருனே
யில்லா மலக மிருக்குமே—யில்லாமல்
வாழைக் கனியும் வடையு மிழுதுமுண்பான்
வாழைக் கனியுள்வைத்த வன்.

(இ - ள்) [இல் ஆமலகம் இரண்டும் அயின்ருல்]=தேற்ருன், நெல்லி (என்னும்) இவ்விரண்டையும் (கற்பமாகப்) புசித்தால், [அகம் நோயில்லாமல் இருக்கும்] = (சரீரத்தின்) இடமெல்லாம் நோய் அற்றிருக்கும், [மல் இல் ஆம்[=(அன்றியும்) வலிமைக்குவீடாகும்; [வாழை கன்னி உள் வைத்தவன்] = (தனது) வாணுளைக் கற்ருழைக் கற்பத்திலேயே செலுத்தினவன் [வாழைக்கனியும் வடையும் இழுதும் உண்பான்] = வாழைப் பழத்தையும், வடையையும், நெய்யையும் உண்பதற்காக.

—எ - று.

(தா - ம்.) தேற்ருன் மரத்தின் விதை, வேர், பட்டை, இலை, காய், கனி, என்னும் இவற்றையும், நெல்லிமரத்தின் விதை, வேர், பட்டை, இலை, காய், கனி, என்னும் இவற்றையும் தனித்தனி ஊறுகாய், துவையல், வற்றல், முதலிய பாகங்களாகச்செய்தும், கஷாயங்களாகச்செய்தும் கற்பமுறைப்படி உட்கொண்டு வந்தால், வல்லை, மகோதரம், சூலை, பாண்டு, பெருவயிறு என்னும் பிணிகளனைத்தும் நிவாரணமாமென்பதும்;

கற்ருழையை ஊறுகாய், வற்றல் முதலிய பதார்த்தங்களாகச் செய்து கற்பமுறையாகப் புசித்துவந்தால், வாழைக்கனி, வடை, நெய் என்னும், இத்தகைய வஸ்துக்களை எக்காலமும் புசித்துச் சீரணித்துக் கொள்ளத்தக்க தீபனமுண்டாமென்பதுமே. (45)

இவற்றின் ஷர்பத்து முதலிய பாகங்களை யெல்லாம் இதன் திறவுகோலிலெழுதப்படும்.

### ஓரிதழ்த்தாமரை; ஏலம்.

புண்டரிக நன்மை பொருந்தவென்ருலேடேகப்
புண்டரிக நன்மை புனைதிநீ — புண்டரிக
நாலுதிர மூக்கு நலிக்கேல நாவியோடு
நாலுதிர மூக்கு பத்து நாள்.

(இ - ள்,) [புண் தரிகம் நன்மை பொருந்த என்ருல்]= இரணத்தையுடைய தலையானது சுகத்தையடைய வேண்டுமானுல், [ஏக ஏடு புண்டரிகம் நன்மை=ஓரிதழ்தாமரையே நல்லது [புனைதிநீ]-(ஆதலால்) நீ அதைப் பூசக்கடவாய்; [புண்டரிகம்]- புலியைப் போன்ற, [உதிரம் நாலும் மூக்கு நலிக்கு]-இரத்தம் ஒழுகுகின்ற நாசி வியாதியான (இரத்த பீனசத்திற்கு) [ஏலம் நாவியொடு]=ஏலத்தைப் பச்சைக்கல்பூரத்துடன் (சேர்த்து) [மூக்கு நாலுதிரம் பத்துநாள்]=மூக்கிலே (ஒருநாளைக்கு) நாலு முறையாகப் பத்துநாள் வரையில் ஆக்கிராணம் செய்வாயாக— எ - று.

(தா - ம்) மேகவெட்டையானது ஊர்த்தமுகமாய்ப் பாய்ந்ததனுல் தலை, முகம், கண்டம், மார்பு முதலியஇடங்களில் பச்சைப்பிசின் போலுண்டாகும் இரணங்களுக்கு, ஓரிதழ்த் தாமரை சமூலமும் உலர்த்தித்தூள் செய்தது-2-பங்கு, பச்சைக் கற்பூரம் 1- பங்கு, கோரோசனை-1-பங்கு இவற்றைக் கலந்து, செல்லத்தக்க பசுவின் நெய்வார்த்தரைத்து கறுத்தமையாகப் பண்ணித் தடவி வந்தால் அவை நிவாரணமாகுமென்பதும்.

இரத்த பீனசத்திற்கு ஏலரிசிச்சூரணம் பங்கு-4, மிளகுச் சூரணம் பங்கு-$\frac{1}{2}$, சீரகச் சூரணம் பங்கு-$\frac{1}{4}$, பச்சைக்கர்பூரம் பங்கு-$6\frac{3}{4}$, பசுவின் நெய் பங்கு-17, இவை எல்லாவற்றையும் ஒன்ருய் நன்ருய் அரைத்து ஒரு சீசாவில் வார்த்து கார்க் இட்டு 1-வாரம் வெயிலில் வைத்து தெளிந்து மேல் நிற்கும் நெய்யை ஒரு நாளைக்கு நான்கு முறையாக பத்து நாள் வரையில் மூக்கில் 4-5-துளிகளாக, நசியம் செய்துவந்தால் அந்தநோய் தீரும் என்பதுமே. (46)

### துளசி; மணத்தக்காளி

விருந்தா வனமே விலக்கவரா பித்தம்
விருந்தா வனவை விடந்த—விருந்தா

மணத்தகளி யென்னவுடல் வாழவுயிர் நல்கு
மணத்தகளி யுண்ணவெகு வாய்.

(இ - ள்.) [விருந்தா வனமே வீலக்க வரா பித்தம்], துளசியின் சாறே தடுத்தலினால் வராது பித்தரோகங்களும்= [விருந்து ஆவன ஐ விடம் தவிரும்]=விருந்தைப்போல் வருபவைகளாகிய சேத்துமத்தின் விஷங்களெல்லாம் நீங்கும்;[தா]= வலிவுள்ள, [மணத்தகளி என்ன உடல் வாழ உயிர் நல்கும்]= கலியாணத்தின் மகிழ்ச்சியைப் போன்ற (மகிழ்ச்சியுடனே) சரீரத்தில் ஜீவன் வாழ்ந்திருக்கும் (தன்மையைக்) கொடுக்கும். [மணத்தகளி வெகுவாய் உண்ண]=மணத்தக்காளியை விசேடமாகப் புசிக்கின்—எ - று.

(தா - ம்.) துளசியின் சாற்றைத் தினந்தோறும் ஒருவன் புசித்து வந்தாலும்; அவ்விலையையே கற்பமுறையாகப் புசித்து வந்தாலும், அதன் வேரையாவது சாற்றையாவது எண்ணெயுடன் கூட்டித் தைலமாகக்காய்ச்சி முழுகிவந்தாலும், அவ்விலைச் சாற்றை ஷர்பத்தாகச் செய்து பயோகித்துவந்தாலும், பித்த ரோகங்களையும், சேத்தும ரோகங்களையும் ஒழிக்குமென்பதும்.

மணத்தக்காளியின் வேர், இலை, காய், கனி முதலியவைகளை முறையே கஷாயம், பதார்த்தம், ஊறுகாய், வற்றல் என்னும் பாகங்களாகச் செய்து கற்பமுறையாய்ச் சாப்பிட்டு வந்தால், எவ்வித ரோகங்களுமின்றி மனக்களிப்புடன் உயிர் வாழச் செய்யுமென்பதுமேயாம். (47)

### வில்வம்; விளா.

மாலூரத் தாலே மடக்கஞர்போ மாந்தவரா
மாலூரத் தாலே மடிவபோன்—மாலூரம்
வெள்ளிலிலை யாக்கமுதல் வேண்டினவர்க் கெப்போதும்
வெள்ளிலிலை யாக்கவரு மேல்.

(இ - ள்.) [மால் ஊர தாலே மடக்கு அஞர் போம் மாந்த] =(வியாதியின்) மயக்கம் ஏறுதலால் நாவை மடக்குகின்ற துன்பம் நீங்கும் புசிக்க, [அரா மால் ஊர் அத்தால் ஐ மடிவபோல்] =சர்ப்பங்கள் திருமால் வாகனமாகக்கொள்ளும் கருடனால்

(தங்கள்) வல்லபம் அழிவதையொத்து, [மால் ஊர் அம்]=தேவலோகத்தார்களின் அழகையும் (கொடுக்கும்) [வெள்ளில் இலே]=விளாவின் இலையானது; [ஆக்கமுதல் வேண்டினவர்க்கு]=செல்வம் முதலியவை விரும்புகின்றவர்கட்கு, [மேல் எப்போதும் வெள்ளில் இலையாக்க வரும்]=இனிமேல் ஓர் காலத்திலும் பாடை(யேறுதல் இல்லாதிருக்கும்படி (நோய்களைப்) பற்றிக் கொள்ளும்-எ-று.

(தா - ம்.) வில்வ மரத்தின் வேர், இலே, காய், கனி முதலியவற்றைத் தனித் தனியே முறையே தைலம், பதார்த்தம், கஷாயம், ஊறுகாய், ஷர்பத்து முதலிய பாகங்களாகச்செய்து, கற்ப முறைப்படி முறையே ஸ்நானம் செய்தும்; புசித்தும் வந்தால், வியாதிகளின் வேகத்தால் நாக்குளறுதல், தாள்திறக்கக் கூடாமை முதலியவற்றைப் போக்கிச் சரீரத்திற்கு அழகுண்டாக்குமென்பதும்;

விளாமரத்தின் வேர், இலே, காய், கனி முதலியவற்றை முறையே மேற் சொன்னவாறு செய்து கற்பமுறையாக அனுஷ்டித்து வந்தால், நோய்களெவற்றையும் அணுகவொட்டாமற் செய்து ஆயுள் விர்த்தியைத் தருமென்பதுமேயாம். **(48)**

**காய்ச்சின பாலின் நன்மையும் கள்ளின் தீமையும்.**

பாலைக் குடியாளுள் பார்வையென வட்டநிசிப்
பாலைக் குடியாளுள் பற்றுமெயிற் – பாலை
சுரையையுண்டா மெய்யென்றுந் துன்பந் துளைக்கச்
சுரையையுண்டா மெய்யென்று சொல்

(இ - ள்.) [பாலை குடி யாளுள் பார்வை என அட்ட]=பாலை நிலத்தில் வசிக்கின்ற துர்க்கையின் பார்வையைப்போலச் (செந்நிறம் பொருந்தக்) காய்ச்சி, [நிசி பாலை குடியா நாள் பற்றும் மெய்யில் பாலை]=இராப் பாலை உண்ணாத தினத்திற் சரீரத்தில் வெப்பம் உண்டாகும்; [சுரையை உண்டு ஆம் மெய்]=கள்ளைக்குடித்து (அதனால்) வளர்ந்த சரீரம், [என்றும் துன்பம் துளைக்க சுரை]=எந்நாளினும் பிணிகள் துவாரமிட்டுக்கொண்டிருக்கத் துளைக (ளுள்ளதாகவே இருக்கும்), ஐ உண்டாம் மெய்யென்று சொல்]=(அன்றியும் சேத்தும வியாதிகளும் உதிக்கும்; இஃது உண்மையென்று உரைப்பாயாக—எ - று.

(தா - ம்) இரவிற் சிவக்கக்காய்ச்சிய பாலைப்புசித்துவரின் சரீரத்தில் வெப்பமணுகாதென்பதும்.

கள்ளைக் குடிப்போரின் சரீரத்திற் பிணிகள் குடிகொண் டிருப்பதுடன் சேத்துமரோகங்களே பெரும்பாலும் உதிக்கு மென்பதுமேயாம். (49)

**வாட்கோரை; கிட்டிக்கிழங்கு.**

நரையானை யான்சதியி னுடான் சசியை
நரையானை யான்சதியி னட்பான்—நரையானைக்
கிட்டிக் கிழங்கையடல் கேட்டுணில்வெண் குட்டமறக்
கிட்டிக் கிழங்கையுண்டு நெல்.

(இ - ள்.) [நரையால் நையான்]=நரையினுலே வருந் தான், [சதியில் நாடான்]=(பிணிகளின்) வஞ்சனையால் தேடப் படமாட்டான், [சசி ஐ நரை யானையின் சதியில் நட்பான் நாரை]=அயிராணியின் தலைவனுன வெள்ளையானை மீதேறும் (இந்திரனும்) பத்தினி (யாயிருப்பதற்கு) நேசிப்பான் அன்பை, [யானைக்கிட்டி] = வாட்கோரை, [கிழம் கை அடல் கேட்டு உணில்] = வயோதிகத்தை வெறுத்து அழித்தலை (நூல்களிற் கேட்டுப் புசிப்பாயாகில்; [வெண்குட்டம் அற கிட்டிக்கிழங்கை உண்டு கெல்]=வெண்குட்டம் நீங்கும்படி நெய்க்கிட்டிக்கிழங் கைப் புசித்து (அதனை ஒழிப்பாயாக).

(தா - ம்.) வாட்கோரையைக் கற்பமுறைப்படி புசித்து வரின், நரை திரைகள் நீங்கி, இந்திரனும் பெண் வடிவங் கொள்ள விரும்பும் அழகைப் பெறுவார்களென்பதும்;

கிட்டிக் கிழங்கை வற்றல், பட்சணம், பதார்த்தம் முதலி யவற்றில் எவ்விதமாகவேனும் செய்து கற்ப முறையாகப் புசித் துவரின், வெண் குட்டம் முதலிய பிணிகள் நீவாரணமாமென் பதுமே. (50)

**கோரைக்கிழங்கு; அமுக்கராக்கிழங்கு.**

கோல வுணவைக் குமர னடலிலடு
கோல வுணவைக் கொடுகயத்தைக்—கோல

நகுடவே ருண்டுதிர நாட்டுவையேன் மேலே
நகுடவே ருண்டுறும்வாழ் ணுள்.

(இ - ள்.) [கோல் அவுண் அவை குமரன் அடலில்]= அம்பினுலே அசுரத் தொகுதியை முருகக் கடவுள் அழித்தது போல, [கோல உணவைக் கொடு கயத்தை அடு]=பன்றியின் ஆகாரமாகிய (கோரைக்கிழங்கை) (கற்பமாகக் கொண்டு க்ஷய ரோகத்தை அழிப்பாயாக; [கோல நகுட வேர் உண்டு உதிரம் நாட்டுவையேல்] = அழுக்காரக்கிழங்கைப் புசித்து இரத்தத் தைச் சரீரத்திலிருத்துவையாகில், [நகுட எர் உண்டு வாணுள் உறும்]= நகுஷனைப்போன்ற அழகுண்டு, ஆயுள்விர்த்தியுமுண் டாம்.—எ-று.

(தா - ம்.) கோரைக்கிழங்கைக் கற்பமாகக் கொள்ளின் க்ஷயரோகம் நிவாரணமாகுமென்பதும்,

அமுக்குராக்கிழங்கைக் கிழங்கை கற்பமாகக் கொள்ளின் இரத்த விர்த்தியும், அழகும், ஆயுள் விர்த்தியும் உண்டாம் என்பதுமே. (51)

**வசலை; காணுன்; சிறுகீரை; உருளைக்கிழங்கு**

வசலை யடையுண் வயமீறுங் காணுன்
வசலை யடையுண் மறமாம்—வசலை
யுருளை யடியிழுதை யோஞ்சில்லி மைந்தா
முருளை யடியிழுதை யுண்.

(இ - ள்.) [வசலை]=(கொடி) வசலை (கொத்து வசலை) (எனனும் இவ்விரண்டின்), [அடை உண்]=இலைகளைப் புசிப்பா யாக, [வயம் மீறும்]=வலிமை மேம்படும்; [காணுன் வசலை உள் அடை மறம் ஆம் வசள் ஐ]=காணுன் (என்னும்) கொடியை (வயிற்றி) னுள்ளே சேர்ப்பையாயின் (அதிக) பராக்கிரமத்தை யுடைய வீர லட்சுமியின் அழகுண்டாகும்; [உருளை அடி இழு தை ஓவும்] = உருளுகின்ற சக்கரத்தின் அடிப் பாகத்தைப் போன்று முடம் நீங்கும், [சில்லி]=சிறுகீரையைப் (புசிப்பாயா கில்); [உருளை அடி இழுதை உண் மைந்து ஆம்]=உருளைக் கிழங்கையும் (அதைச்சேர்ந்த) நெய்யையும் புசிப்பாயாகில்); வலிமை யுண்டாகும்.—எ - று

(தா-ம்.) கொடி வசளே கொத்து வசளே என்னும் இந்தக் கீரைகளைப் பாகமாகச் சமைத்துப் போசனத்துடனே புசித்து வந்தாலும்; காஞன் கொடியின் இரண்டு பிரிவுகளான பெருங் காஞன் முட்டைக் காஞன் என்பவைகளைப் பாகமாகச் செய்து போசனத்துடனே புசித்துவந்தாலும்; சிறுகீரை சமூலத்தையும் மிளகுப்பொடியும் லவணமும் போட்டு நெய்யிலே துவட்டிப் போசனத்துடனே புசித்துவந்தாலும்; உருளேக்கிழங்கை வேக வைத்து மேற்ருேலேப்போக்கி அரிந்து வெங்காயம், உப்பு, மிள குத்தூள் முதலிய சம்பாரங்களேச் சேர்த்து நெய்யிலே வேக வைத்துப் போசனத்துடனேபுசித்துவந்தாலும் மிக்க வீரியமும், வன்மையும், திட காத்திரமும் உண்டாமென்பதே.

பிசிதம் என்னும் ஊன் புசிப்பதனுலே பிசிதாசனர் என்று அசுரர்கட்கும், அமுதம் உண்பதனுலே அமுதாசனர் என்று தேவர்கட்கும் பெயராயிருந்தும், அமுதாசனர்களான தேவர் கள் பிசிதாசனர்களான அசுரர்களே வெல்வதற்காகப் பிசிதம் என்னும் ஊனேப்பார்க்கினும் விசேட வலிமையை விளேவிக்கத் தக்க இவ்வுருளேக்கிழங்கையே புசித்துக்கொண்டு வந்தார்க ளென்று, தன்வந்திரியமென்னும் கீர்வாண வாகட சாத்திரத் தின் பஞ்சமாத்தியாயத்திலே கூறி யிருத்தலின், இந் நூலாசிரி யரும் இவ்வாறுரைத்தனர். உருளேக் கிழங்குக்கு இன்னும் சில வைத்திய கிரந்தங்களில் மதன காமியாதி மூலம் என்னும் பெயர் வழங்குகின்றது. (52)

**நன்ஞரி; உத்தாமணி; ஆல்.**

அங்காரி கைமூலி யாச்சியத்தோ டுண்ண நித்தி
யங்காரி கைமூலி யாறுமே—யங்காரி
பற்ருது வேலிப் பருத்திமுழு தாலாலாற்
பற்ருது வேலிப் பரு.

(இ - ள்.) [அம் காரிகை மூலி ஆச்சியத்தோடு உண்ண] =நன்ஞரி என்னும் மூலிகையை நெய்யுடன் புசித்தால், [நித்தி யம் காரி கைமூலி ஆறும்]=எப்போதும் கருமேகமும், (வாகு மூலம்) என்னும் அக்குளிலுள்ள (கற்ருழை நாற்றமும்) தணி யும்; [அங்க அரி] = சரீரத்தை (நோய் என்னும்) பகை, [பற்ருது]=பிடிக்காது, [வேலிப் பருத்தி முழுதால் ஆலால்]= உத்தாமணியின் சமூலத்தாலும்; ஆலினுலும்; [பல் தாது வேலி

பரு]=பற்களுக்கும், தாதுக்கும், பருத்த காவலுண்டாம்—
எ - று.

(தா - ம்) நன்னுரியின் வேர், இலை, கொடி. பூ, என்னும் இவைகளைத் துவையல், வடகம், குழம்பு முதலிய பாகங்களாகச் சிறு புளி, மிளகு, லவணம் சேர்த்துக் கடுகு நீக்கிச் சமைத்துக் கற்ப முறைப்படி புசித்து வந்தால் கரு மேகமும், கற்றுழை நாற்றமும் நீங்குமென்பதும்,

உத்தாமணி, ஆல் என்னும் இவைகளைத் தனித்தனி சமூலமாகக் கஷாயம், பற்பொடி என்னும் பக்குவங்களாகச் செய்து உபயோகித்துவந்தால் முறையே தாதுவுக்கும், பல்லுக்கும் உறுதியுண்டாகுமென்பதுமே.

அம் காரிகை என்பது நன்னுரி என்னும் பொருள் தருதலின் அங்காரிகை மூலி என்றார். (53)

## ஆயில்பட்டை; களிப்பிரண்டை.

ஆயி லுரியை யடுநீரு ணித்தியமெய்
யாயிலு ரியையெனி லாமிசை—யாயில்
வரிசையாக் கற்குநிகர் வல்லியட்டுண் மெய்க்கு
வரிசையாக் கத்தையுறு வை.

(இ - ள்) [ஆயில் உரியை அடும் நீர் உண் நித்தியம்]= ஆயிற்பட்டையை வெந்நீரில் ஊறற் கஷாயமாகச்செய்து தினந்தோறும் புசித்துவருவாய், [மெய் ஆயில் உரியை எனில் ஆவிமிசை] = உண்மையாகத் தாயைப்போல் ஜீவர்கள்மேல் உரிமையுடையவனு யிருப்பாகில், [ஆய் இல் வரிசை ஆக்கற்கு நிகர்] = அழிந்த வீட்டைப் புதுக்குவதற்குச் சமானமாகும்; [வல்லி அட்டு உண்]=(வச்சிர) வல்லி (என்னும் களிப்பிரண்டையைச்) சமைத்துப் புசிப்பாய், [மெய்க்கு உவர் இசை ஆக்கத்தை உறுவை]=சரீரத்திற்குக் கடலையொத்த பெரும் லாபத்தை யடைவாய்—எ - று.

(தா - ம்) ஆயிற் பட்டையை நிழலிலுலர்த்தி எடுத்துக் கொண்டு, புதுப் பாண்டத்தில் ஒருபடி நல்ல தண்ணீர்விட்டு அதில் ஷை பட்டைத் தூள் ஒரு பலம்போட்டு, ஒருநாள் சூரிய

புடமாக வைத்து, திரி கடுகுத்தூள் வகை ஒன்றுக்குப் பலம் அரைக்காலாகச் சேர்த்து அடுப்பேற்றிக் கமலாக்கினியா யெரித்து, முக்கால் ஆழாக்கா யிறக்கி வடிகட்டிக்குடித்து வந்தால், சரீரத்திலுண்டான வாதாதி முத்தோஷங்களும் விசேடப்படாமல் தத்தம் நிலைமையில் நிற்கும் என்பதும்.

களிப்பிரண்டையைக் கொண்டுவந்து உளுத்தம்பருப்புத் தூள், மிளகு, லவணம் என்னும் இவைகளைச் சேர்த்துக் காயம் முதலிய சம்பாரங்கள் கலந்து, நெய்விட்டுத் தாளித்துத் தினந்தோறும் புசித்துவந்தால், சரீரபலமுண்டாம் என்பதுமே. இடிந்த வீட்டைப் புதுக்குவதுபோல, நோய்களால் மெலிந்துள்ள சரீரத்திற்கு வலுவைக் கொடுக்கும் என்பதற்காக, "ஆய் இல் வரிசையாக்கற்கு நிகர்." என்றார். (54)

### எலுமிச்சம்பழம்.

கோணத் துளையுங் குறியுளையுங் கொக்காகிக்
கோணத் துளையுங் குருளைபோற்—கோணச்
சடமதியுண் மாறுமற் சம்பீரக் கற்பஞ்
சடமதியுண் மாறுமற் சண்.

(இ - ள்.) [கோணத்து உளையும் குறி உளையும் கொக்கு ஆகி] = மூக்கிலுள்ள ரோமங்களும் அந்தரங்க ஸ்தானத்திலுள்ள ரோமங்களும் கொக்கைப்போல் (வெளுத்து), [கோணத்து உளையும் குருளைபோல் கோண சடம்]=வாளினால் வருந்தும் மிருகக் குட்டிகளைப்போல் சரீரம் வளைய; [மதி உள் மாறுமல்] =புத்தியும் மனமும் வேறுபடாமல், [சம்பீரக் கற்பம்]=எலுமிச்சம்பழக் கற்பத்தை, [சடமதி உண்]=ஆறுமாதம் புசிப்பாயாகில், [மாறு ஆம் மல் சண்]=(இக் கற்பமே) கொம்பாகும் (இதைக்கொண்டு அவ் வயோதிகத்தின்) வலிமையை அடித் (தோட்டு) வாய்—எ - று.

(தா - ம்.) எலுமிச்சம்பழத்தைக் கற்பமுறையாக ஆறு மாதம் வரையிற் புசித்துவந்தால், சரீரத்துள்ள உரோமங்களெல்லாம் நரைக்கத்தக்க வயோதிகப்பருவம் வராமலே இளமையுட னிருக்கலாமென்பதே.

## தாமரை; பிரமைதண்டு.

சண்டனையுஞ் சண்டனையுந் தள்ளமல ருள்ளுறையுண்
சண்டனையுஞ் சண்டனையுஞ் சார்மதிபால்—சண்டனையும்
வையாரா யுண்மறைய வைகுவார் வாகடத்தை
வையாரா யுண்மறைய வர்.

(இ - ள்.) [சண்டனையும் சண்டனையும் தள்ள மலர் உள் உறை உண்]=அலித் தன்மையையும் பேடித்தன்மையையும் நீக்குதற்காகத் தாமரை மலரினுள்ளிருக்கும் (மகரந்தத்தை) புசிப்பாயாக; [சண்டன் நையும்]=யமனும் வருந்துவான்; [சண் தனையும் சார்]=ஆறுமாதம்வரையில் புசி; [மதிபால் சண்டனையும்]=பிரமதண்டையும், [வையாராய் உள் மறைய வைகுவார்]=நித்தியாதவர்களாய்த் (தம் வயிற்றினுள்ளே) மறையும்படி செய்து சஞ்சரிப்பவர்கள், [வாகு அடத்தை வையார் ஆயுண் மறையவர்]=தோள்களிலும் (பக்கங்களிலும்) உண்டாகின்ற நோய்களை நிற்கவொட்டார்கள்; வைத்தியர்களே-எ-று

(தா - ம்.) வைத்தியர்களே! அலித் தன்மையையும், பேடித்தன்மையையும் நீக்கவேண்டுமாயின், தாமரை மலரினுள்ளிருக்கும் மகரந்தப்பொடியுடன் சர்க்கரையையும், தேனையும் கூட்டிக் கற்ப முறையாகப் புசிக்கும்படி செய்யவேண்டுமென்பதும்;

தோள்களிலும், பக்கங்களிலும் உண்டாகின்ற வாதரோகங்களை நிவர்த்திக்கவேண்டுமாயின், பிரமைதண்டுப்பூவிலிருக்கும் மகரந்தப்பொடியுடன், முருங்கைப்பிசின் பொடியும், பசுவின் நெய்யுங்கலந்து கற்பமுறையாகப் புசித்துவரச் செய்யவேண்டுமென்பதுமேயாம்.

பிரமை என்பது பால்மதி என்னும் அரை யறிவுடைமையாகலின், செய்யுட்கிணங்க மதிபால் என்று மாற்றியும், தகரத்திற்குச் சகரம் இனமாய் மாதம் மாசம் என வருதல்போல, தண்டன் என்பதற்குச் சண்டன் எனயமகத்திற் கிணங்க மாற்றியும், ஒன்றினை எனற்பாலதை ஒன்றனை எனல் போலச் சண்டினை எனற் பாலதைச் சண்டனை யென்றும் கூறினர். சண்டனையும் சார் என்பதில், வடமொழிப் பதமான ஷண் என்பதற்குச் சண் என வந்ததென்றும், தனை என்பதற்குக் கால அளவு

என்பது பொருளென்றும் அறிக.

### மலட்டின்குணம்.

சொற்கப் படிவிலகித் துண்டமுழை கண்ணிணையுஞ்
சொற்கப் படிவிலகித் தோளுயர்ந்து—சொற்கப்புச்
செவ்வந்தி யம்மையுறழ் சேகரியேன் மாகரியாய்
செவ்வந்தி யம்மையென்று தேர்.

(இ - ள்.) [சொற்கப் படிவு இலகி]=தேவ மாதர்களின் உருவம் விளங்கி, [துண்டம் முழை கண் இணை உம் சொற்கப் படி விலகி தோள் உயர்ந்து]=மூக்கின் துவாரங்களும், இரண்டு கண்களும், இரண்டு தனங்களும் (ஒன்றுக்கொன்று) வித்தியாசமாய், புயங்கள் மேலோங்கி, [சொல் கப்பு] = சொல்லுகின்ற மரக் கிளைகளைப்போன்ற (கடினமுடையதாய்), [செவ் அந்தி அம்மை உறழ் சேகரியேல்]=சிவந்த செக்கர் வானத்தில் அங்குள்ள மேகங் கலந்திருப்பது (போன்ற) (நிறமுடைய) தலைமயிருடையவளாயின், [மா கரியாய்] = (இவைகளே) பெரிய சாட்சியாக, [செவ்]=செவ்வனே, [வந்தி யம்மை என்று தேர்] =மலட்டுத்தன்மையுடையவளென்று தெளிவாயாக—எ - று.

(தா - ம்.) தேவ மாதர்களைப்போன்ற அழகு மாத்திரம் வாய்ந்து, நாசித் துவாரங்களும், நேத்திரங்களும், தனங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசமுற்று, தோள்கள் மேலோங்கப் பெற்று, கடினமானதாய்ச்செம்பட்ட நிறமுள்ள மயிரையும் உடையவளாயின் இக் குறிகளால் அவளை மலடியென் றறிந்து கொள்வாயென்பதே. (57)

### மலட்டுக்குக் கற்பம்.

மாயா மலட்டு வலிக்கமைவேல் சம்படி நீர்
மாயா மலட்டு மடலட்டு - மாயா
பகரணமண் டாமலொரு பங்கீடாய் நாளும்
பகரணமண் டாமலுண்டு பார்.

(இ - ள்.) [மாயா மலட்டு வலிக்கு]=ஒழியாத மலட்டு வியாதிக்கு, [அமை வேல் சம்பு அடி நீர்]=மூங்கில், கருவேல், நாவல் (என்னும் இவற்றின்) வேர்க (ளிற் பிழிந்த) சாற்றை,

[மாயாமல் அட்டு] = பக்குவம் கெடாமற் காய்ச்சி, [மடல் அட்டு]=பனை வெல்லமும், [மாயாபகரணம்]=திருமால் திருடிய பொருளான (பசுவின் வெண்ணெயும்) [மண்டாமல்]= அதிகப்படாமல், [ஒருபங்கீடாய்]=ஓரளவாக, [நாளும்]=தினந்தோறும், [பகர் அண்ணம் அண்டாமல் உண்டு பார்]=சொல்லப்படுகின்ற மேல் வாய் கீழ் வாய்களிற் படாமல் புசித்து, அதன் குணத்தை (அனுபவத்திற்) பார்ப்பாயாக—எ - று.

(தா - ம்.) மூங்கில் வேர், கருவேல் வேர், நாவல்வேர் என்னும் மூன்றையும் வகை யொன்றுக்கு அரைப்பலம் வீதம் நிறுத்து, நல்ல தண்ணீர் முக்காற்படி ஒரு புதுப் பாண்டத்தில் விட்டு, அதில் மேற்படி வேர்களையிடித்துப் போட்டு, அடுப்பேற்றிக் காய்ச்சி, காற்படி கஷாயமானபோது கீழிறக்கி, பனை வெல்லம் அரைப்பலம் போட்டு, அரைப்பலம் பசுவின் வெண்ணெயையும் அதில் விட்டு, இவ்வாறு தினந்தோறும் தவறாமல் ஒரு மண்டலம் வரையில் சாப்பிட்டு வந்தால் மலட்டுத்தன்மை நிவாரணமாமென்பதே. (58)

## அக்கினிக்கட்டின் கற்பம்.

கலியாணப் பூசினிக் காயிரத மெய்யிற்
கலியாணப் பூசினிக் காய்மெய்யார்—கலியாணப்
பாவகத்தை மீறாமற் பண்ணு மனல்செயமாம்
பாவகத்தை நீயறிந்து பார்.

(இ-ள்.) [கலியாணப் பூசினிக்காய் இரதம்]= கலியாணப் பூசினிக்காயின் சாற்றை, [மெய்யில் கலி ஆண பூசு] = சரீரத்தில் தளமாக (சந்தனக்) குழப்புபோற் பூசிக்கொள்வாய், [இனி காய் மெய் ஆர் கலி ஆண]=இனிமேல் உனது சரீரத்தைக் கடலைப்போற் (பெருகிய) அன்புடனே (அங்கினியிற்) காய்ச்சு, [பாவகத்தை மீறாமற் பண்ணும் அனல் செயம் ஆம்]=உருவத்தை மிகுதி யாகவொட்டாமல் தகிக்கின்ற அக்கினி ஜெயமாகும், [பாவகத்தை நீ அறிந்து பார்]=இதனியல்பை நீ அனுபவித்துப் பார்ப்பாயாக—எ - று.

(தா - ம்.) தினந்தோறும் தவறாமல் கலியாணப் பூசினிக்காய்ச் சாற்றைச் சந்தனக் குழம்புபோல் உடம்பிற் பூசிக்கொண்டும் அச் சக்கையைப் பதார்த்தமாகச் செய்து புசித்துக்

கொண்டும் கற்ப முறையாக ஒரு மண்டலம் அனுஷ்டித்து வந்தால், அக்கினிப் பிரவேசமான போதும் நெருப்பு வெப்பம் தராதென்பதே.

### பிள்ளை பெறமாட்டாமல் வருந்துவோர்க்கு கற்பம்.

மாதவத்தை யாற்றி வருகருப்ப மானபத்து
மாதவத்தை யாற்றி மகவீனு—மாதவத்தை
நீவலிகு சக்கனியா னேர்வாள நெஞ்சுதொட்டு
நீவலிகு சக்கனிமார் நேர்.

(இ - ள்.) [மாதவத்தை ஆற்றி வரு கருப்பமான]=பெருந்தவத்தைச் செய்து உண்டாகிய கர்ப்பமானது, [பத்து மாத அவத்தை ஆற்றி]=பத்து மாதங்களென்னும் அவைகளை கழித்து, [மகவு ஈனு மாது அவத்தை]=பிள்ளையைப் பிரசவிக்காத பெண்ணின் உபத்திரவத்தை ஒழிப்பதற்கு, [லிகு சக்கனியால் நேர்வாளம் நெஞ்சுதொட்டு நீவலி]=எலுமிச்சம் பழத்தால் நேர்வாளத்தைககொண்டு நெஞ்சு தொடங்கிக் கீழாக நீ இழுப்பாய், [கனி மார் நேர்] அப்பெண்ணின் மார்பின் மீது நேராக—எ - று.

(தா - ம்.) பிரசவிக்கமாட்டாமல் வருந்துகின்ற பெண்களின் துயரத்தை ஒழிப்பதற்காக, பெரிய எலுமிச்சம்பழம் ஒன்றை எடுத்து, நேர்வாளத்தையும், கடுகுரோகணியையும் வகையொன்றுக்கு ஒரு விராகன் நிறையாயெடுத்து அரைத்து, ஆமணக்கெண்ணெயும் வேப்பெண்ணெயும் கலந்துவிட்டுக் குழைத்து, ஷை எலுமிச்சம்பழத்தில் துவாரமிட்டு இம்மருந்தை அதற்குள் திணித்து, அத் துவாரத்தை மூடி கையிலெடுத்துக் கொண்டு, பிரசவவேதனை படுகின்ற மாதர்களின் நெஞ்சுமுதல் அடிவயிறுவரையில் நேரா மிருதுவாய் உருட்டிக்கொண் டிருக்கும்படி, அவ்விடத்துள்ள மருத்துவச்சிக்காவது, பிரசவவேதனைப் பெண்களின் தாய்மார்கள் முதலியோர்க்காவது உத்தரவு செய்தால் உடனே பிரசவிப்பார்களென்வதே. (60)

### தாருட்ய கற்பம்.

சித்தசன மூலந் தினமுமுண வத்துதெரி
சித்தசன் மூலந் தெரிசிப்பார்—சித்தசனங்

காட்டுமாங் காய்வித்தைக் கண்டுநெய்யோ டுண்டுணரக்
காட்மாங் காய்வித்தை காண்.

(இ - ள்.) [சித்தசனம்] = சித்தர்கள்தொகுதி (கூறிய), [மூலம் தினமும் உண]=கிழங்கு முதலியவற்றை நாள்தோறும் (கற்பமுறைப்படி) புசித்துவரின் [வத்து தெரி சித்து அசனம் மூலம் தெரிசிப்பார்] = பரம்பொருளை அறிகின்ற ஞானத்தை தையும் போகத்தையும் (இவ்விரண்டிற்கும்) காரணத்தையும் பார்ப்பார்கள், [சித்தசன் அம்]=மன்மதன் அழகு (வேண்டுமாயின்), காட்டுமாங்காய் வித்தைக் கண்டு நெய்யொடு உண்டு உணர்]=காட்டு மாங்காயின் விதையைக்கண்டுபிடித்து அதைப் பசுவின் நெய்யுடனே புசித்து அறிவாயாக; [காய் வித்தை காண்]=சரீரத்தின் சாலத்தை நீ பார்ப்பாய், [அக் காட்டும் ஆம்]=(இதுவே) சிறந்த உதாரணமுமாகும்—எ - று.

(தா - ம்.) காட்டுமாங் காய்க்குள்ளிருக்கும் விதையின் பருப்பு, முருங்கைவிதைப் பருப்பு, முந்திரிகைப் பருப்பு, வாதுமைப் பருப்பு, நறுவிலிப் பழக்கொட்டைப் பருப்பு, கோதுமையரிசிப்பால் என்னும் இவ்வாறும்வகை-1-க்கு ஒவ்வொருபலமாக நிறுத்துச் சேர்த்து, பன்னிரண்டுபலம் அத்திப்பால்விட்டு இடைவிடாமல் ஆறுநாள் களரைத்து வில்லைதட்டி நிழலிலே யுலர்த்தி, இவற்றிற்குத்தக்கபடி, பசுவின் நெய்யையும் சீனிசருக்கரையையும் கூட்டி இழைத்து வைத்துக்கொண்டு வேளை-1-க்கு விராகனெடை-3-4-ஆக காலை மாலை யிரண்டுவேளையும் ஒரு மண்டலம்வரையிற் கிரமப்படி புளி, பெண்போகம் ஆகியவை நீக்கிப்புசித்துவந்தால் இரத்தசத்து வன்மையடையும்.(61)

## சத்தப் பரீட்சை.

வீணையிசை நத்தோசை வேயோசை நாயோசை
வீணையிசை நத்தோசை வெற்போசை—வீணையிசை
தாரையியம் பேரியியந் தப்பாதொான் றுதிலக்கந்
தாரையியம் பேர்கனல்வீ தான்.

(இ - ள்.) [வீணை இசை நத்து ஓசை வேய் ஓசை நாய் ஓசை] = வீணையின் ஒலி, சங்கின் ஒலி, புள்ளாங்குழலொலி, பாச்சிகை ஒலி, [வீண் ஐ இசை நத்து ஓசை]=விருதாவாகிய ஓர்வகைப் பறவையின் ஒலி, [வெற்பு ஓசை]=மலையி(னடிவாரத்

தினின்றெழும்) ஒலி, [வீழ் நை இசை] = (கிணற்றில்) வீழ்ந்து வருந்துவோர் ஒலி, [தாரை 'இயம்பேரி இயம்] = தாரையின் ஒலி, பேரியின் ஒலி, (ஆகிய இத்தகைய தொனியுள்ள நோயாளிகட்கு), [தப்பாது ஒன்று ஆதிலக்கம் தாரை இயிம்பு ஏர் கன்னல் வீ தான்] = தவருமல் ஒன்று முதலாகச் (சொல்லத்தக்க) எண்ணின் வரிசையைச் சொல்லுவாய் பொருந்திய நாழிகையில் மரணந்தானென்று—எ - று.

(தா - ம்.) வீணை, சங்கு, புள்ளாங்குழல், பாச்சிகை, பறவை, என்னும் இவற்றின் ஓசையைப்போன்ற தொனியும், மலையின் அடிவாரத்தினின்றும், கிணற்றுக்குள்ளிருந்தும் பேசுவோரைப்போன்ற தொனியும், தாரை, பேரி என்னும் வாத்திய ஒலியையொத்த தொனியும் உடைய நோயாளிகட்கு, முறையே, ஒரு நாழிகை, ஒன்றரை சாமம், $1\frac{3}{4}$- நாள், $16\frac{3}{4}$-நாள், $33\frac{1}{2}$-நாள், 50-நாள், $66\frac{3}{4}$-நாள், $83\frac{1}{2}$-நாள், 100-நாள்என்னும் இக் கணக்கின்படிக்கான நாள்களில் மரணமாவார்களென்றுரைப்பாயாக என்பதே.

ஒன்ருதிலக்கம் என்றது, ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம், நாலாயிரம், ஐயாயிரம், ஆருயிரம் என்பவையே. (62)

### பரிசப் பரீட்சை.

இடங்கரா மைமயிலே யிந்துமத்தி வெம்மை
யிடங்கரா மைமரங்க வித்தை—யிடங்கரா
நாவ முளயரமு நாலேழெட் டொன்பானை
நாள முளியரமா நாடு.

(இ - ள்.) [இடங்கர் ஆ] = முதலை (யின் முதுகைப்போல் அருக்குமாயிள்), முந்நால் (நாள்) = பன்னிரண்டு நாள்களிலும், [ஆமை] = ஆமையின் (முதுகைப்போல் கடினமும் வரட்சியுமாயிருக்குமாகில்), [ஏழெட்டு(நாள்)] = ஐம்பத்தாறு நாள்களிலும் [மயிலே] = மீனின் (வாற்புறத்தைப்போல் சுறுசுறுப்பா யிருக்குமாகில், [ஒன் பான் ஐ (நாள்)] = நாற்பத்தைந்து நாள்களிலும் [இந்து] = சந்திரனைப்(போல் குளிர்ச்சி யதிகமாயிருக்குமாகில்), (முந்நால் நாள்)[ = பன்னிரண்டு (சாமங்களிலும்), [மத்தி] = சீதோஷ்ணம் அதிகமா (யிருக்குமாகில்), [ஏழெட்டுநாள்] =

ஐம்பத்தாறு (சாமங்களிலும்), [வெம்மை]=அதி உஷ்ண (மாயிருக்குமாகில்), [ஒன் பான் ஐ நாள்]=நாற்பத்தைந்து (சாமங்களிலும்), [இடம்]=(முக்கியமான) பாகங்களில், [கராமை]=கையுள்ள மேகம் (போன்ற யானையின் தோலைப்போல் வன்மையாயிருக்குமாகில்), [முந்நால் நாள்]=பன்னிரண்டு (நாழிகைகளிலும்), [மரம்]=மரத் (தைப்போற் கெட்டியாயிருக்குமாகில்), [ஏ ழெட்டுநாள்] = ஐம்பத்தாறு (நாழிகைகளிலும்), [கல்]=கல்லைப்போன்று திண்மையாயிருக்குமாகில், [ஒன் பான் ஐ நாள்] = நாற்பத்தைந்து (நாழிகைகளிலும்), [இத்தை] = இவற்றையும், [இடங்கர் ஆம் நாளம்] = குடத்தைப் போன்றுள்ளதாகிய (தாமரை மலரின்) முள்ளை(யொத்திருக்குமாகில்), [முந் நால் நாள்]=பன்னிரண்டு (வினாடிகளிலும்), [உளி]=உளியைப் (போற் கூர்மையா யிருக்குமாகில்), [ஏ ழெட்டு நாள்] =ஐம்பத்தாறு (வினாடிகளிலும்), [அரமும்] = அரத்தைப் (போன்ற கடுங் கூர்மையா யிருக்குமாகில்), [ஒன் பான் ஐ நாள்] =நாற்பத்தைந்து (விநாடிகளிலும்), [அம்மா] = அம்மா, [நாள் அம் முளியர் நாடு]= தங்கள் வாணாளின் அழகை முடிப்பார்களென்று நீ நாட்டங் கொள்வாயாக—எ - று.

(தா - ம்.) முதலைத்தோல், ஆமையோடு, மீன் வாற்புறம் என்னும் இவற்றைப்போன்ற பரிசமுடைய நோயாளிகளாயின், முறையே பன்னிரண்டு, ஐம்பத்தாறு, நாற்பத்தைந்து நாட்களிலும்; அதி குளிர்ச்சி, அதிசீதோஷ்ணம், அதிவெப்பம் என்னும் இத்தன்மையுடைய நோயாளிகளாயின், முறையே பன்னிரண்டு, ஐம்பத்தாறு, நாற்பத்தைந்து சாமங்களிலும்; மரணமடைவார்கள் முக்கியமும் மிருதுவுமான ஸ்தானங்கள் யானைத்தோல், மரம்; கல் என்னும் இவற்றின் பரிசமுடையவைகளா யிருக்கப்பெற்ற நோயாளிகளாயின், முறையே பன்னிரண்டு, ஐம்பத்தாறு, நாற்பத்தைந்து நாழிகைகளிலும்; அந்தஸ்தானங்களே தாமரை முள், உளி அரம் என்னும் இவற்றின் பரிசமுடையவைகளா யிருக்கப்பெற்ற நோயாளிகளாயின், முறையே பன்னிரண்டு, ஐம்பத்தாறு, நாற்பத்தைந்து விநாடிகளிலும் மரணமடைவார்களென்பதே.

நாள் என்பது தினத்திற்கும், முகூர்த்தத்திற்கும் கால அளவுக்கும் பெயராகலின், இங்கு நாளுக்கும், சாமத்திற்கும், நாழிகைக்கும், வினாடிக்கும் பிரயோகித்தனர். இவ் வெண்பா

விலுள்ளபன்னிரண்டு பொருள்களை மும்மூன்று கொண்ட நான்கு பாகங்களாகப் பிரித்து, ஒவ்வோர் பாகத்துள்ள மூன்றுக்கும் முறையே முந்நால், ஏழெட்டு, ஒன் பான் ஐ என்னும் எண்களைக் கூட்டிக்கொண்டும், நான்கு பாகங்கட்கு முறையே நாள், சாமம், நாழிகை, விநாடி என்னும் நான்கையும் சேர்த்துக் கொண்டும் பொருள்கொள்ளல் வேண்டும் என்பதே. (64)

## தேக நிறப் பரீட்சை.

என்றுமதி செவ்வா யிரணியன்சுங் கன்காரி
யென்றுமதி செவ்வா யிவையொடுமை--யென்றுமதி
யஞ்சுமா தக்கணமே லாறுதிங்க ளாமினுக்கே
லஞ்சுமா தக்கணமே யாம்.

(இ - ள்.) [என்று மினுக்கு]=சூரியனைப் போற் (சிவந்த நிறமும்) மினுக்கு (மிருக்குமாயின்), [துமதி]=இரண்டு மாதங்களிலும், [மதி(மினுக்கு)]=சந்திரனைப்போல் (வெண்ணிறமும்) மினுக்கு (மிருக்குமாயின்), [துமதி அஞ்சு]=இரண்டு மாதம் (கழிந்த) ஐந்து (மாதமாகிய) (மூன்று மாதங்களிலும்), [செவ்வாய் மினுக்கு]=அங்காரகனைப் (போன்ற நெருப்பு நிறமும் (மினுக்கு) மிருக்குமாயின், [துமதி ஆறு திங்கள்] = இரண்டு மாதம் (கழிந்த) ஆறு மாதமாகிய (நான்கு மாதங்களிலும்), [இரணியன் மினுக்கு]=பிரகஸ்பதியைப் (போன்ற பொன்னிறமும்) மினுக்கு (மினுக்குமாயின்), [அஞ்சு மாத] = ஐந்து மாதங்களிலும், [சுங்கன் மினுக்கு] = சுக்சிரனைப் (போன்ற வெண்ணிறமும்) மினுக்கு (மிருக்குமாயின்) [ஆறு திங்கள்]= ஆறு மாதங்களிலும் [காரி மினுக்கு]=சனியைப் (போன்ற கறுத்த நிறமும்) மினுக்கு (மிருக்குமாயின்), [துமதி அஞ்சு மாதக்கணம்]=இரண்டு மாதத்துடன் (சேர்ந்த) அஞ்சு மாதங்களாகிய ஏழு மாதங்களிலும், [என்று செவ்வாய் மதி]=(மரணமாவார்க) ளென்று செவ்வனே யூகிப்பாயாக, [இவையோடு உமை என் மினுக்கு]=கூறிய இவைகளோடு பார்வதியின் (நிறம்) என்று (சொல்லத்தக்க) (சாமள நிறத்துடன் மினுக்கு (மிருக்குமாயின்), [துமதி மேல் ஆறு திங்கள் ஆம்] = இரண்டு மாதங்களின்மேல் ஆறு மாதங்கன் (சேர்ந்த) எட்டு மாதங்களில் (மரணம்) உண்டாகும், [அஞ்சு மாதக்கணமே ஆம்]= (மேற் சொன்ன நிறங்கள் சரியாயிருக்குமாயின்) (நோய்) அச்

சமுறுமா அப்போதைக் கப்போதே (மரணம்) உண்டாம் —எ - று.

(தா - ம்.) தேகமானது சிவந்த நிறத்துடன் பளபளப்புமாக மாறின நோயாளி யிரண்டு மாதங்களிலும்; தேகமானது வெண்ணிறத்துடன் பளபளப்புமாக மாறின நோயாளி மூன்று மாதங்களிலும்; தேகமானது நெருப்பு நிறத்துடன் பளபளப்புமாக மாறின நோயாளி நான்கு மாதங்களிலும்; தேகமானது பொன்னிறத்துடன் பளபளப்புமாக மாறின நோயாளி ஐந்து மாதங்களிலும்; தேகமானது தாவள்ளிய நிறத்துடன் பளபளப்புமாக மாறின நோயாளி யேழு மாதங்களிலும்; தேகமானது சாமள நிறத்துடன் பளபளப்புமாக மாறின நோயாளி யெட்டு மாதங்களிலும் மரணமாவார்கள் என்பதே.

சாமள நிறமென்பது பசுமையும், கருமையும் கலந்த நிறம். (64)

### ரசப் பரீட்சை.

கைப்பினிமை யாம்பிரமை காரலுவர் கார்ப்பாறுங்
கைப்பினிமை யாம்பிரமை கான்மாறிற்—கைப்பிர
வாரமதி பக்கமின்றி வைக றிதியிருத்தை
வாரமதி பக்கமாள் வார்.

(இ - ள்.) [கைப்பு]=கசப்பாகிய (வஸ்துக்கள்)[இனிமை] =மதுரமாகிய, (வஸ்துக்கள்), [உவர்] = உவர்ப்பான (வஸ்துக்கள்), [கார்ப்பு]=துவர்ப்பான (வஸ்துக்கள்), [ஆறும்]=ஆகிய இவ்வறுசுவைப்(பதார்த்தங்களும்),[கை பின் இமை ஆம் பிரமை கால்மாறில்]=வரிசைமாறி இமை நேரத்திற்குள் விளையும் விபரீத காலத்தைப்போல் வித்தியாசப் படுமாயின் (முறையே) [வாரம் மதி பக்கம்]=வாரத்திலும், மாதத்திலும், பட்சத்திலும், [இன்றிவைகல் திதி இருத்தை]=இப்பகலிலும், ஒரு நாளிலும், ஒரு நாழிகையிலும், [கைப்பு இனிமை வாரம் மதி பக்கம் மாள்வார்[=வெறுப்பு உவப்பு அன்பு அறிவு பட்சம் (என்னும் இவைகள் அற்றவர்களாய்) இறப்பார்கள்—எ - று.

(தா - ம்.) கசப்பான வஸ்துக்கள் கசக்காமல் ஏனைய வஸ்துக்கள் கசந்தால், ஒருவாரத்திலும், மதுரமான வஸ்துக்கள்

தித்திக்காமல் ஏனையவஸ்துக்கள் தித்தித்தால், ஒரு மாதத்தி லும்; புளிப்பான வஸ்துக்கள் புளிக்காமல் ஏனைய வஸ்துக்கள் புளித்தால், ஒரு பட்சமாகிய பதினைந்து நாட்களிலும்; கார மாகிய வஸ்துக்கள் காரமாயிராமல் ஏனைய வஸ்துக்கள் காரமா யிருந்தால், பாதிநாளையிலும்; உப்புகரிக்கும் வஸ்துக்கள் உப்பு கரியாமல் ஏனைய வஸ்துக்கள் உப்புகரித்தால், ஒருநாளையிலும்; துவர்ப்புள்ள வஸ்துக்கள் துவர்க்காமல் ஏனைய வஸ்துக்கள் துவர்த்தால், ஒரு நாழிகையிலும்; மரணமாவார்களென்பதே. (65)

## கந்தப் பரீட்சை.

ஆம்பல் கணிதாழை யார்மதலை சாதிமரை
யாம்பல் கணிகடிகை யாமிதிதி — யாம்பல்கணி
திங்க ளிருதயனஞ் செப்புமர ணக்குறிப்பு
திங்க ளிருதயன்றாள் சேர்.

(இ - ள்.) [ஆம்பல் கணி தாழை ஆர் மதலை சாதிமரை] =மூங்கிற்பூ, வேங்கைப்பூ, தாழம்பூ, ஆத்திப்பூ, கொன்றைப்பூ சிறு செண்பகப்பூ, தாமரைப்பூ (என்னும் இம் மலர்களின் மணங்கள்), [ஆம் பல்] = பலவேறு (மணங்களாய் மணக்கு மாகில்), [கணி கடிகை யாமி திதி ஆம்பல் கணி திங்கள்] = = (முறையே) (ஏழு) விநாடிகட்குள்ளும், ஏழு நாழிகைகட் குள்ளும், நான்கு சாமங்கட்குள்ளும், ஏழு தினங்களுக்குள்ளும் விசேடமான (முப்பது தினங்களென்னும்) தொகையுடைய ஒரு மாதத்திற்குள்ளும், [இருது அயனம்] = இரண்டு மாதங்கட்குள் ளும், ஆறு மாதங்கட்குள்ளும் [செப்பும் மரணக் குறிப்பு]= மரண மாவார்களென்று குறிப்பாகச் சொல்லுவாய், [திங்க ளிருதயன் தாள்சேர்]=(இவ்வாறுமுறை தவறுதிருப்பாயாகில்) சந்திரனை (யொத்துத் தூய்மையும் குளிர்ச்சியு மமைந்த (திரு வுள்ள முடைய) கடவுளின் திருவடிகளை யடைவாய்-எ - று.

(தா - ம்.) மூங்கில், வேங்கை, தாழை, ஆத்தி, கொன்றை சிறு செண்பகம், தாமரை என்னும் இவற்றின் மலர்கள், தங்கள் தங்களுக்குரிய சுய மணங்கமழாது வேறு மணம் வீசப்பெற்ற நோயாளிகள், முறையே, ஏழு விநாடிகளிலும், ஏழு நாழிகை களிலும், நான்கு சாமங்களிலும், ஏழுதினங்களினும், ஒரு மாதத் திலும், இரண்டு மாதங்களினும், ஆறு மாதங்களினும் மரண டைவார்களென்பதே. (66)

## மலப் பரீட்சை.

சாகப் புழுக்கை தனிலு முறுகுமெனிற்
சாகப் புழுக்கையறி சற்றுநன்று—சாகப்பு
செம்பாகா நம்மை தடமா மதினுமிகச்
செம்பாகா நன்மையென்று தேர்.

(இ - ள்) [சாகப் புழுக்கைதனிலும் முறுகு மெனில்]= வெள்ளாட்டுப் புழுக்கையினும் கடினமாகுமானல், [சாகப் புழுக்கை அறி]=இறப்பதற்கு அடிமையென்று அறிந்துகொள், [சாக அப்பு சற்று நன்று]=இலேச்சாறுபோன்ற நீர் மயமானல் கொஞ்சம் நன்மையாகும், [செம்பாகு நன்மை ஆம்] = சிவந்த பாகுபோன்றிருக்குமாயின் நன்மையே, [அதினும் மிகத் திடம் செம்பு]=அந்த செந்நிறத்தினும் செம்பின் செந்நிறம் மிகவும் விசேடமாகும், [நன்மை ஆகா என்று தேர்] = மிக்க கருப்பு நிறம் ஆகாதென்று தெளிவாயாக—எ - று.

(தா - ம்.) நோயாளியின் மலமானது வெள்ளாட்டுப் புழுக்கைப்போற் கடினமாயிருக்குமாயினும், அதிக கருமையா யிருக்குமாயினும், அதமமென்பதும், இலேச் சாற்றைப்போன்று நீர் மயமாயிருக்கின் மத்திமமென்பதும், சிவந்த பாகுபோன்ற நிறமுடையதாயின் உத்தம மென்பதும், செம்பின் செந்நிற முடைத்தாயின் உத்தமோத்தம மென்பதுமேயாம். (67)

## மூத்திரப்பரீட்சை,

மாணிக்கம் பால்பிரச மஞ்ச ளிஃதுபிர
மாணிக்கம் பால்வரிசை மாருநீர்—மாணிக்க
முத்தம மாதி யொருநாலு மந்தமுனே
யுத்தம மாதிமதியுன்.

(இ - ள்) [மாணிக்கம் பால் பிரசம் மஞ்சள்] = மாணிக்கத்தைப் போலவும், பாலைப்போலவும், தேனைப்போலவும், மஞ்சளைப்போலவும், [இஃது பிரமாணிக்கம் பால் வரிசை மாரு நீர் மாணிகம்]=இவ் வண்ணம் நிச்சயமாய்ப் பாகமுறைமை வேறுபடாத தன்மையுடைய கோசத்தில்வரும் நீரானது, [உத்தமம் ஆதி ஒரு நாளும்] = உத்தமம் முதலாகச் சொல்லத்தக்க ஒரு நான்கு வரிசைகளையும், [அந்தம் முன்னே]= கடைசியை முதலா

கக்கொண்டு [மம அதி உற்ற மதி உன்] = அதிஷ்டத்தின் விசேஷத்தா லடைந்த அறிவினுல் சிந்திப்பாயாக எ - று.

(தா - ம்.) நோயாளியின் மூத்தரமானது மாணிக்கத்தைப் போலச் செந்நிறமாயிருப்பது அதமாதமம் என்பதும், பால்போல் வெண்ணிறமாயிருப்பது அதமமென்பதும், தேன் போன்ற நிறமாயிருப்பது மத்திமமென்பதும், மஞ்சள் நிறமாயிருப்பது உத்தமமென்பதுமேயாம்.

உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம் என்னும் நான்கையும்அவ்வரிசைப்படியே கடைசியைமுதலாகக்கொண்டு அதமாதமம், அதமம், மத்திமம், உத்தமம் என்று கொள்ள வேண்டுமெனக் குறிப்பிப்பதற்காக, உத்தம மாதியொரு நாலு மந்தமுனே என்றுரைத்தார். (68)

### எச்சிற் பரீட்சை.

எச்சிற் பரிவா யிள நீர்பால் வெண்ணெயளே
யெச்சிற் பரிவா யிலகுநுரை—யெச்சிற்
களியடைமா நன்றுமுதற் கண்ணுன்கு முன்னிக்
களியடைமா மேவுபிட கா.

(இ - ள்.) [எச்சில்] = (நோயாளியின்) எச்சிலே [பரிவு ஆய்] = (வைத்தியர்) அன்புடனே ஆராயும்போது, [இளநீர் பால் வெண்ணெய் அளே] = இளநீரைப்போலவும், பாலைப்போலவும், வெண்ணெயைப்போலவும், தயிரைப்போலவும், [எச்சில் பரிவாய் இலங்கும் நுரை] = (வேகக்) குறைவற்ற குதிரையின் வாயில் விளங்குகின்ற நுரையைப்போலவும், [எச்சு இல் களி அடை மா] = பழிப்பிணையுடைய களியைப்போலவும், அடையைப்போலவும், மாவைப்போலவும் (இருக்குமாயின்) இவ்வெட்டையும், [முதற்கண் நான்கும் நன்று முன்னி] = முதலிற் சொல்லிய உத்தமமாதி நான்காகவும், அவற்றினுட்பிரிவாகிய நான்காகவும் எண்ணி, [மா மேவு பிடகா] = லட்சுமீ கரம் பொருந்திய வைத்தியனே; [களி அடை [= சந்தோஷ மடைவாயாக —எ - று.

(தா - ம்.) நோயாளியின் எச்சிலானது இளநீரைப் போன் றிருக்குமாயின் உத்தமமென்றும், பால்போன்று சற்று

குழம்பாயும் வெண்ணிறமாயு மிருக்குமாயின் உத்தம மத்திம மென்றும், வெண்ணெயைப்போன்று அழுந்தி வெண்மையா யிருக்குமாயின் மத்திமோத்தமம் என்றும், தயிரைப்போன்று சற்றழுந்தி நீர்மயமாயும் வெண்ணிறமாய மிருக்குமாயின் மத்திம மத்திமமென்றும்,குதிரைவாயில் ஒழுகும் நுரையைப்போன் றிருக்குமாயின் அதமோத்தமமென்றும், களியைப்போன்றிருக் குமாயின் அதம மத்திம மென்றும், ஓட்டடையைப்போன்றி ருக்குமாயின், அதமாதம மத்திமமென்றும், மாவைப்போன்று வரட்சியாயிருக்குமாயின் அதமாதமத்தினும் அதமமென்றும் அறியவேண்டு மென்பதே.

எச்சம் என்பதில் அம்முச்சாரியை குறைந்ததுஎச்சு என்பது எச்சு எனக் குறுகியது. (69)

## இந்திரியப் பரீட்சை.

ஐயமளை 'பான்மோர்தே ஞச்சியங்கள் கம்மிவையை
யைய மளையா தறிந்துகொள்வா—யையமளை
யுத்தமத்தை முன்னே ருணரிந்த்ரி யப்பரிட்சை
யுத்தமத்தை நூலதரை யோர்.

(இ - ள்.) [ஐயம் அளை பால் மோர் தேன் ஆச்சியம் கள் கம் இவையை]=கோழை, தயிர், பால், மோர், தேன், நெய், கள், நீர் (என்னும்) இவைபோன்றிருக்கும் (இந்தரியத்தை), [ஐயம் அளையாது அறிந்து கொள்வாய்]=சந்தேகத்தில் வருந் தாது தெரிந்துகொள்ளக்கடவாய்; [ஐ அமலே] = அழகின் மிகு தியையுடைய, [உத்தமத்தை முன்னேர் துணர்]=உத்தமத்தை முதலாக ஒப்பிட்டு அறிவாயாக; [இந்திரியப் பரிட்சை யுத்தம் அத்தை நூல் அதரை ஓர்] = இந்திரியப் பரிட்சையின் தகுதி யையும் நூன் முறையையும் தெளிவாயாக- எ - று.

(தா - ம்.) நோயாளியின் இந்திரியமானது கபத்தைப் போன்றது உத்தமோத்தம மென்றும், தயிர்போன்றிருப்பது உத்தமமென்றும், பால்போன்றிருப்பது மத்தியோத்தமமென் றும், மோர்போனறிருப்பது மத்திம மத்திமமென்றும், தேன் போன்றிருப்பது அதமோத்தம மென்றும், நெய்போள்றிருப் பது அதமமத்திமமென்றும், கள்போன்றிருப்பது அதமாதமோ த்தமமென்றும், நீர்போன்றிருப்பது அதமாதமத்தினும் அதம மேன்றும் அறிந்துகொன்வாயென்பதே.

அமலே என்பது லகளரகர ஒற்றுமையால் அமளே என நின்றது. (70)

## கற்பம், பத்தியம். கடைப்பிடி இம்மூன்றிற்கும் முடிவும் மேலே நடப்பவைக்கும்.

பத்தியங்க டைப்பிடிகற் பம்பெண்மற வாமைநிலே
பத்தியங்க டைப்பிடிநாள் பண்ணவிழ்தம்-பத்தியங்க
நாமொழிவோ மேடலே நன்கியற்று மாறுமற்ற
நாமொழிவோ மேலடலே நண்.

(இ-ள்.) [பத்தியம் கற்பம் கடைப்பிடி பெண்மறவாமை நிலே]=பத்திய (காலத்திலும்) கற்பம் (புசிக்கும் காலத்திலும்), கடைப்பிடியாகக் கொள்ள வேண்டியது) பெண்போகத்தை மறவாதிருக்கும் நிலேமையை (விடுவதை); [பத்தி அங்கு அடை] =அவ் விரண்டினிடத்தும் பத்தியடைவாயாக; [பிடி நாள் பண் அவிழ்தம்]=தகுந்த தினங்களிலே மருந்து செய்வாயாக; [பத்தி அங்கம்] = வரிசையான, அழகுகளே; [நா அம் ஒழி ஓ மேல் அடலே நன்கு இயற்றும் ஆறு]=நாவில் நீர்வரண்ட ஆபத்தின்மேல் (மருந்து) போரைச் செவ்வனே புரிகின்ற தன்மையைப்போல, [மற்றும் நாம் மொழிவோம்] = இன்னும் நாம் கூறுவோம்; [மேல் அடலே நண்]=அதன் மீது வல்லபத்தை அடைவாயாக-எ - று.

(தா - ம்.) பத்தியத்திற்கும், கற்பத்திற்கும் முக்கியமான கடைப்பிடியாவது பெண்போகத்தை மறப்பதென்றும், அப்பத்தியத்தனும் கற்பத்தினும் பத்தியடைய வேண்டுமென்றும், தகுதியமைந்த நாள்களில் அவிழ்தங்கள் செய்யவேண்டுமென்றும், அவ்வவிழ்தங்கள் செய்யவேண்டிய முறைகளே நாம் இனிக்கூறுவோமென்றும் கூறியதேயாம். (71)

---

## சுத்தி முறைகள்:

### 1. தாம்பிர சுத்தி.

செம்பருத்தி நீர்மையறல் சேதாவார் நாளாறிற்
செம்பருத்தி நீர்மையறல் செய்திருநாள்-செம்பருத்தி
யாகவடி முள்ளாங்கி யையிரண்டு நாளினிலம
யாகவடி தாம்பிரமெய் யாம்,

(இ-ள்.) [செம் பருத்தி நீர் மை அறல்]=சிவந்த பருத்தியிலைச் சாறும், வெள்ளாட்டுச் சிறு நீரும் [சேதா வார் நாள் ஆறில்]=சிவந்த பசுவின் நீரும் ஆறு நாட்களில், [செம்பு அருத்தி]=தாம்பிரப் பொடிக்கு ஊட்டி,[நீர் மை அறல் செய்து] =அதனது தன்மையான அழுக்கு நீங்கும்படி செய்து, [இரு நாள்]=இரண்டு தினங்கள் (விட்டு), [செம் பரு உத்தியாக]= செப்பமான விசேட யுக்தியினால், [அடி முள்ளாங்கி]=முள்ளங்கிக் கிழங்கின் (சாறு), [ஐ இரண்டு நாள்]=பத்துநாள் வரைக்கும்; [இனிமை ஆக அடி]=இனி அழுக்கு முழுவதும் போகத் தக்க தாய்) போக்கடிப்பாயாக, (அப்போது) [தாம்பிரம் மெய் ஆம்]=செம்பானது (சுபாவ) சொரூபத்தை அடையும்-எ - று.

(தா - ம்.) நைப்பான தாம்பிரத்தை இராவின தூள் பலம் 1, இதனை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு,

(*a*) பூ முதலனைத்தும் செந்நிறமாயிருக்கும் செம்பருத்தியிலைச் சாறு பலம் 6, இதனை ஷை தூளில்விட்டு சூரியோதய முதல் அஸ்தமிக்கும் பரியந்தம் வெயிலில் வைத்து, இரவில் தூசு முதலியவைகள் விழாமல் பத்திரப்படுத்தவும். இரண்டாம் நாள் காலையிலும் முன் செம்பருத்தியிலைச் சாறு பலம் 6 அதில் விட்டு முன்போல் அதை வெயிலில் வைக்கவேண்டும். இவ்விதம் 6 நாள் பிரதி தினமும், காலையில், 6-6-பலம் செம்பருத்தி யிலைச் சாறு புதிது புதிதாய் விட்டு, சூரியோதயமுதல் அஸ்தமிக்கும் வரையில் வெயிலில்வைத்து வரவேண்டும். இவ்விதம் செய்தானபின்பு மேற்படி செம்பருத்தியிலைச்சாறு விடாமல்-2-நாளும் காலையிலிருந்து மாலைவரை வெயிலில் வைத்து ஒரு குச்சியினால் அடிக்கடிகிளறிவர, அதிலுள்ள சாறுமுற்றிலும் சுவறி யுலர்ந்துபோம். நன்றாயுலர்ந்தபின்பு.

(*b*) ஒன்பதாம் நாள் காலையில், அதில் வெள்ளாட்டு மூத்திரம்-6-பலம் விட்டு முன்போலவே சூரியோதயமுதல் அஸ்தமிக்கும்வரையில் வெயிலில் வைக்கவேண்டும். இவ்விதம் மறு 6-நாள், பிரதிதினமும் காலையில்-6-6-பலம் வெள்ளாட்டு மூத்திரம் புதிது புதிதாய்விட்டு முன்போலவே சூரியோதயமுதல் அஸ்தமிக்கும்வரையில் வெயிலில் வைத்துவரவேண்டும். அதன் பின்பு, மேற்படி மூத்திரம் விடாமல்-2-நாளும் சூரியோதய முதல் அஸ்தமிக்கும் வரையில் வெயிலில்வைத்து முன்போல

அடிக்கடி நன்ருய்க்கிளறிவர, அதிலுள்ள மூத்திரம் சுவறி நன்ரு யுலர்ந்துபோம்.

(c) 17-ஆம் நாள் காலையில் அதில் சிவந்த நிறப்பசுவின் மூத்திரம்-6-பலம்விட்டு மேற்கண்டபடி வெயிலில் வைக்க வேண்டும். இவ்விதம் 6-நாளும் பிரதி தினமும் காலையில்-6-6 பலம் மேற்படி பசுவின் மூத்திரம் புதிது புதிதாய்விட்டு முன் போலவே சூரியோதயமுதல் அஸ்தமிக்கும் வரையில் வெயிலில் வைத்துவரவேண்டும். இப்படிச் செய்தானபின்பு மேற்படி பசுவின் மூத்திரம் விடாமலே-2-நாள் வெயிலில்வைத்து கிளறி வர, மூத்திரமானது சுவறி யுலர்ந்துபோம்.

(d) 25-ஆம் நாள் காலையில் முள்ளங்கிக் கிழங்கின் சாறு 6-பலம் அதில் விட்டு முன்போல் காலைமுதல் மாலைவரையில் வெயிலில்வைக்கவேண்டும். இவ்விதம் 10-நாள் பிரதிதினமும் காலையில்-6-6-பலம் முள்ளங்கிக்கிழங்கின்சாறு புதிது புதிதாய் விட்டு காலைமுதல் மாலைவரை வெயிலுல்வைத்து வரவேண்டும். இப்படி யிந்தப்பத்துநாளும் செய்து, 35-ம் நாள் முதல்-2-நாள் முள்ளங்கிக்கிழங்கின்சாறு விடாமலே காலைமுதல் மாலைவரை யில் வெயிலில்வைத்துக் கிளறிவர, அதிலுள்ள ஈரமெல்லாம் சுவறி யுலர்ந்துபோம்.

இவ்விதம் சற்றும் ஈரமில்லாமல் கலகலென யுலர்ந்த பின்பு, ஒரு ஓட்டில்வைத்து உலையில்வைத்துத் தூதிக்காய்ச்சி, நெருப்பைப்போல சிவந்தவுடன் எடுத்து ஆறவைத்து சலம் வார்த்து நன்ருய்த் தேய்த்துக்கழுவி அழுக்கை நீக்கி அல்லது நெருப்பில் காய்ச்சாமலே சலத்தைவிட்டு நன்ருய்த் தேய்த்துக் கழுவி அழுக்கை நீக்கி மெல்லிய வஸ்திரத்தில் போட்டு மெது வாய் ஈரத்தைப் போக்கி யுலர்த்தி யெடுத்துக்கொண்டால் தாம்பிரமானது களங்கமற்று சுத்தியாய்ப் பிரகாசிக்கும் என்பதே. (72)

இவ்விதம் சுத்திசெய்த தாம்பிரமானது பற்பம், சிந்தூ ரம் முதலிய வைத்திய பாகங்களுக்கும் வேதித்தல் முதலிய வாதபாகங்களுக்கும் உபயோகப்படுமெனக் கூறப்பட்டிருக் கிறது.

## குறிப்பு.

இது ஒருபலம் தாமிரப் பொடிக்கு அளவாகையால் இக் கணக்கின்படி எவ்வளவு வேண்டுமோ அவ்வளவும் முறையே அதிகப்படுத்தியும் குறைத்தும் சித்தம் செய்துகொள்ளலாம்.

சரக்குகளை சுத்திக்காகப் பாகப்படுத்தும்போது இடையிடையில்-2-நாள் உலர்த்தவேண்டியதெனச் சொல்லியிருப்பதால், சிலசமயங்களில் அவ்விதம்-2-நாள்களில் சாறு முதலியவைகள் சுவறி யுலராவிட்டால், எத்தனை நாட்கள் செல்லினும் உலர்ந்தபின்பே மறுபாகத்திற்கு ஆரம்பம்செய்ய வேண்டுமெனத் தெரிந்திருக்கவும் வேண்டும்.

சூரியோதயமுதல் சூரியன் அஸ்தமிக்கும் வரையில் வெயிலில் மருந்து முதலியவைகளை வைப்பதற்கு சூரியபுடமெனப் பெயர். சூரிய வெப்பத்தினல் நீர் முதலியவைகள் சுவறுகிறதுமன்றி, அதன்சக்தியானது அம்மருந்துகளிற்சென்று அதற்கு ஒரு விசேஷ குணத்தையும் சக்தியையும் உண்டாக்கி விடுகிறது. தற்காலம் அமெரிக்க, ஐரோப்பியபண்டிதர்களுள் அநேகர் சூரிய வெப்ப சிகிச்சையினல் அநேக கடினவியாதிகள் தீருகின்றன எனவும், இவ்வுலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களுக்கும் சூரியனல் மாத்திரம் எவ்வகை சக்தியுமுண்டாக்கப் படுகிறதெனவும், அதனல் எல்லா நோய்களையும் நிவர்த்திக்கலாமெனவும் கண்டு அவ்வகைகளைப்பலசாஸ்திர ரூபங்களாக வெளிப்படுத்தி வருகின்றூர்கள். இவர்கள் இவ்விதம் இப்போது கண்டுபிடித்தாலும், நம்முன்னேர்கள் பூர்வத்திலேயே கண்டுபிடித்து சூரியபுடமென்னும் முறையையும் ஏற்படுத்தியிருக்கின்றூர்கள்.

ஆகையால் சூரியபுடம் வைப்பதினல் அம்மருந்துகளுக்கு அனேகவித நூதனசக்தி யுண்டாகிறதெனத் தெரிந்து, இதில் சொல்லியிருக்கிற கணக்கின்படி தவறுமற் செய்யவேண்டியது ஆவசியம் என தெரிந்திருக்க வேணடியது.

## 2 எழுகு சுத்தி.

முந்திரிகைப் போது முடிக்கு மெகுசுத்தி
முந்திரிகைப் போது முடியுமுனே—முந்திரிகை

வேலையிலே யத்தின்மின்னார் வேட்கையிலைப் பாற்களிப்பு
வேலையிலே யத்தினமேல் வீண்

(இ - ள்) [முந்திரிகை போது முடிக்கும் எகு சுத்தி]—கொட்டை முந்திரிகைமலர் பூரணப்படுத்தும்எழுகின் சுத்தியை [முந்திரிகை போது முடியுமுன்] = முந்திரிகை (என்னும் அளவுள்ள காலம்) கழிவதற்குள்ளே; (ஆதலால்) [வேலையில்முந்து] =(இத்தகைய) தொழிலில் முற்படுவாய், [ஐயத்தின் இரி]= சந்தேகத்தினை ஓட்டுவாய்; [மின்னார் வேட்கையில் கை]= மாதர்கள் விருப்பத்தினை வெறுப்பாய்; [அப்பால் களிப்புவேலையில் யத்தினம்] = அதன்பின் சந்தோஷ சாகரத்தில் தினம் அமிழ்ந்திருக்கலாகும்; [மேல் வீண்] = மற்றவைகளெல்லாம் பயனற்றதாகும்—எ - று.

(தா - ம்.) (*a*) ஒரு பலம் எழுகின் பொடியை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு, கொட்டை முந்திரிகைப் பூவின் சாறு-6-பலம் அதில் விட்டு, சூரியோதயமுதல் அஸ்தமிக்கும் வரையில் வெயிலில் வைக்கவேண்டும். இவ்விதம்-6-நாள் பிரதி தினமும் காலையில்-6-6-பலம் கொட்டை முந்திரிகைப்பூச் சாறு புதிது புதிதாய் விட்டு சூரியோதய முதல் அஸ்தமிக்கும் வரையில் வெயிலில் வைத்து வரவேண்டும். இப்படிச் செய்தபின்பு, மேற்படி சாறு விடாமல்-2-நாள் காலை முதல் மாலைவரையில் வெயிலில் வைத்து, ஒருகுச்சியினால் கிளரிவர, அதிலுள்ள சாறெல்லாம் சுவறி யுலர்ந்துபோம்.

(*b*) ஒன்பதாம் நாள் காலையில், அதில் மேற்படி கொட்டை முந்திரிகைப் பூச் சாற்றையே-6-பலம்விட்டு முன்போலவே சூரியோதய முதல் அஸ்தமிக்கும் வரையில் வெய்யலில் வைக்கவேண்டும். இவ்விதம் மறு-6-நாள் பிரதி தினமும் காலையில்-6-6-பலம் மேற்படி கொட்டை முந்திரிகைப்பூச்சாறு புதிது புதிதாய்விட்டு முன்போலவே சூரியோதயமுதல் அஸ்தமிக்கும் வரையில் வெய்யலில் வைத்து வரவேண்டும். இதன் பின்பு மேற்படி கொட்டை முந்திரிகைப் பூச்சாறு விடாமல் 2-நாள் காலை முதல் மாலை வரையில் வெய்யலில் வைத்து முன்போல அடிக்கடி நன்றாய்க் கிளறிவர, அதிலுள்ள சாறு சுவறி நன்று யுலர்ந்துபோம்.

(c) 17-ஆம் நாள் காலையில், அதில் மேற்படி கொட்டை முந்திரிகைப்பூச் சாற்றையே-6-பலம்விட்டு மேற்கண்டபடி வெய்யலில் வைக்கவேண்டும். இவ்விதம் மறு-6-நாள் பிரதி தினமும் காலையில்-6-6-பலம் மேற்படி கொட்டைமுந்திரிகைப் பூச்சாறு புதிது புதிதாய் விட்டு முன் போலவே சூரியோதய முதல் அஸ்தமிக்கும் வரையில்வெய்யலில்வைத்துவரவேண்டும். இப்படிச்செய்தானபின்பு, மேற்படி கொட்டைமுந்திரிகைப்பூச் சாறு விடாமலே-2-நாள் வெய்யலில் வைத்துக்கிளறிவர, சாறு முற்றிலும் சுவறி யுலர்ந்துபோம்.

(d) 25-ஆம் நாள் காலையில் மேற்படி கொட்டை முந்திரிகைப்பூச் சாற்றையே-6-பலம் அதில் விட்டு முன்போல் காலை முதல் மாலைவரையில் வெய்யலில் வைக்கவேண்டும். இவ்விதம் 10-நாள் பிரதி தினமும் காலையில்-6-6-பலம் மேற்படி கொட்டை முந்திரிகைப்பூச் சாற்றையே புதிது புதிதாய் விட்டு, காலை முதல் மாலைவரையில் வெய்யலில் வைத்து வரவேண்டும். இப்படி யிந்தப் பத்து நாளும் செய்து-35-ஆம் நாள் முதல் மேற்படி பூச்சாறு விடாமலே-2-நாள் வரையில் காலை முதல் மாலை வரையில் வெய்யலில் வைத்துக் கிளறிவர, அதிலுள்ள சாறு முதலிய ஈரமெல்லாம் சுவறி யுலர்ந்துபோம், இவ்விதம் நன்ருய் யுலர்ந்த பின் முன்போல் ஓட்டில் வைத்துக் காய்ச்சி அல்லது காய்ச்சாமல் சலம் வார்த்துக் கழுவி மலினத்தை நீக்கிக் கொள்வதே எழூகுவினது சுத்தியாம் என்பதே. (73)

### 3. அய சுத்தி.

இருப்பை யமுத மெனவிரதத்தாலே
யிருப்பை யமுத மெனச்சே—யிருப்பை
யுரமாகத் தாரணியி லொன்றெனல்வே யோங்கி
யுரமாகத் தாரணியி லுன்.

(இ - ள்.) [இருப்பை அமுத மெனல் இரதத்தாலே]= இலுப்பைப்பூவின் பாலென்றுரைக்கும் சாற்றினுலே,[இருப்பை அமுதம் என செய்]=அயப்பொடியை அமுதமென்று சொல்லும்படி செய்வாயாகில் ]உரம் ஆகத்து அணியில் ஆர்] = ஞானத்திலும் திடகாத்திரத்திலும் சவுந்தரியத்திலும், (இணை) யார்; [ஒன்று எனவே ஓங்கி]=(இவ்வான்மா) ஒன்றுதானேன்றுரைக்கும்படி விசேடித்து, [உரமாக தாரணியில் இருப்பை

உன்] நிச்சயமாக இவ்வுலகத்தில் வாழ்ந்திருப்பாய் (இதனை நீ) சிந்திப்பாய்—எ - று.

(தா - ம்.) இலுப்பைப்பூச்சாற்றை மேற்சொன்ன எழுகு சுத்திக்குக் கூறியதுபோலவே, ஒரு பலம் அயப்பொடிக்கு ஆறு பலம் விட்டு, இடையிடை இரண்டு நாள்விட்ட-6-6-நாள்களாக, மும்முறை செய்து, 25-ஆம் நாள் முதல் பத்து நாள்கள் வரையில் இடைவிடாமல் ஷ சாறுவிட்டு வெய்யலில்வைத்துப் பின்பு சாறு விடாமல்-2-நாள் உலர்த்தி முன்போலக்காய்ச்சி யல்லது காய்ச்சாமல் கழுவி யெடுக்க, அயம்சுத்தியாமென்பதே.

## 4. காந்த சுத்தி

வீணைமுனி யாவாரை வேர்ப்பட்டை நீர்ப்பட்டை
வீணைமுனி யாவாரை வேயழுக்கு—வீணைமுனி
கண்டீ ரவமாமே கத்தினங்கண் மாட்டுநிசங்
கண்டீ ரவமாமே கால்.

(இ - ள்.) [வீணை முனி] பயனற்ற செயல்களை வெறுத்து [ஆவாரை வேர்ப்பட்டை நீர் பட்டு] = பொன்னுவரையின் வேர்ப்பட்டைச் சாற்றைவிட்டு, [ஐ வீணை முனி ஆவாரை]= அழகிய மின்னைக் கோபிக்கின்றவராகிய (காந்தமென்பவரை) [வேய் அழுக்கு வீழ்நை]=மூடிக்கொண்டிருக்கும் மலினம் ஒழியும்படி வருத்துவாயாக; [இ கண்டீவரம் முன் மா மேகத்து இனங்கள் மாட்டும்]=இது சிங்கத்தின்முன் எதிற்பட்ட யானையைப்போல மேகரோகங்களை அழிக்கும், [கால் அவமாம் நிசம் கண்டீர்] = (அவ்வாறே) வாதரோகங்களும் அழிந்துபோம்; இது நிச்சயமென்று அறியுங்கள்.

(தா-ம்.) ஒருபலம் காந்தத்திற்கு பொன்னுவாரைவேர்ப் பட்டைச்சாற்றை மேற் சொன்னபடியே-6-பலம் வீதம்விட்டு, இடையிடை இரண்டிரண்டு நாள்விட்ட-6-6-நாள்களாக மும் முறைசெய்து, 25-ஆம் நாள் முதல் பத்துநாள் வரையில் இடைவிடாமல் ஷ சாறுவிட்டு வெய்யலில் வைத்துப் பின்பு-2-நாள் சாறுவிடாமல் உலர்த்திக் காய்ச்சி யல்லது காய்ச்சாமல் கழுவி யெடுக்க, காந்தம் சுந்தியாம். இது பற்பங்கட்கும் செந்தூரங் கட்கும் ஆகும். அச்செந்தூரமாவது பற்பமாவது மேகரோகம் வாதரோகம் என்னும் யானைக் கூட்டங்கட்குச் சிங்கத்தைப் போலாமென்பதே.

(75)

## 5. வங்க சுத்தி.

சிவமுறையா மன்னை தினமுமற வாமற்
சிவமுறையா மன்னைதொடி சேரச் — சிவமுறையா
மாசகல மேதினியாய் வங்கமது தங்கமென
மாசகல மேதினியாய் வாய்.

(இ - ள்.) [சிவம் உறையாம் அன்னை] = சிவம் வசித்திருந்த தாயாகிய (ஐவேலிச் சமூலத்தின்), [தினமும் மறவாமல்] = நாள்தோறும் மறந்துபோகாமல், [சிவம் முறை ஆம்] = குறுணி என்னும் அளவுள்ள சாற்றை, [வங்கம் ஐ தொடி சேர்] = வங்கத்தினது நுண்ணிய (பொடி) ஒரு பலத்திற் சேர்ப்பாயாக, [அ சிவம் உறு ஐயா] = சிறந்த பாக்கியமுற்ற பண்டிதரே, [மா சகலமேதினி ஆய்] = பெரிதாகிய உலகமேவற்றிற்கும் தாய் போன்றவரே[ [அது தங்க மென மாசு அகலம் ஏது இனி [ஆய்வாய்] = அவ் வங்கமானது தங்கமென்றுரைக்கும் வண்ணம் (அதன்) களங்கின் விசேடம் எப்படி யுண்டாம். இதை நீ ஆராய்வாயாக — எ - று.

(தா - ம்.) ஒரு பலம் வங்கப்பொடிக்கு ஐவேலிச் சமூலத்தை இடித்துப் பிழிந்த சாறு-6-பலத்தை விட்டு, உதய முதல் அஸ்தமிக்கும் வரையில் வெய்யலில் வைக்கவேண்டும். இவ்விதம்-10-நாள் பிரதி தினமும் காலையில்-6-6-பலம் மேற்படி ஐவேலிச் சமூலச்சாறு புதிது புதிதாய்விட்டு உதயமுதல் அத்தமிக்கும் வரையில் வெய்யலில் வைக்கவேண்டும். பின்பு-2-நாள் மேற்படி சாறுவிடாமல் வெய்யலில் வைத்துக் கிளறிவர, அச்சாறு சுவறி யுலர்ந்துபோம். 13-ம் நாள் காலையில் மேற்படி ஐவேலி சமூலச்சாறே-6-பலத்தைவிட்டு காலைமுதல் மாலைவரையில் வெய்யலில் வைக்கவேண்டும். இவ்விதம் மீண்டும்-10-நாள் முன்போலவே பிரதிதினமும் காலையில்-6-6-பலம் ஷ மூலிகைச்சாறு புதிதுபுதிதாய்விட்டு காலைமுதல் மாலைவரையில் வெய்யலில் வைத்து வரவேண்டும். மீண்டும்-2-நாள் சாறு விடாமல் வெய்யலில் வைத்து சாறு சுவறி யுலர வைக்கவேண்டும். 25-ஆம் நாள் இதனை யொரு குவிந்த குண்டு சட்டியிற் போட்டு, அதில்-2-படி மேற்படி ஐவேலிச் சமூலச்சாறு விட்டு, அப்பாண்டத்தின்வாயை வேறொருபடிவமான பாண்டத்தினல் மூடி, ஒரு கஜ சதுரக்குழிதோண்டி யதில் அரைகஜ அளவு

சாம்ப ரெருவைக் கொட்டி யதன்மேல் முன் சித்தப்படுத்தின பாண்டத்தைவைத்து அக்குழிநிறைய சாம்பரெருவைக்கொட்டி மூடிவிடவேண்டும். 20-நாட் சென்றபின் னெடுக்க அதன் ஆவியால் வெப்ப மேலேறி அதிகவேகமுள்ளதாயிருக்கும். அதை சலம் வார்த்துக் கழுவி யெடுத்துக்கொள்வதே வங்க சுத்தியாம் என்பதே.

வங்கமெனப் பொதுவாய்ச் சொன்னபடியால், வெள் வங்கம், கருவங்கம் ஆகிய இரண்டு வகைகளுக்கும் இச் சுத்திக் கிரமம் ஆமென்பதாயிற்று.

மேற்கண்டபடி பூமியில் புதைத்து வைப்பதற்கு பூமிப் புடமெனப் பெயர். (76)

## 6. சூத சுத்தி.

துரோண மனுதிவலை சூதசுத்தி யாகத்
துரொாண மனுதினமுந் தோயத்—துரோண
முனிவீ யமர்காறு முத்தொடிக்கெண் ணுக
முனிவீ யமர்காறு மொய்.

(இ - ள்.) [துரோணம் மன்னு திவலை சூத சுத்தி ஆக]= தும்பையிலுள்ள சாறுனது பாதரசம் சுத்தியாவதற்கு, [அனு தினமும் தோய]=தினந்தோறும் ஊறுவதற்காக,[துரோணம்] =பதக்கென்னும் அளவை, [அமர் துரோண முனி வீ காறு]= (பாரத) யுத்தத்திலே துரோணுசாரி இறந்தநா ளளவாகிய (பதினைந்தை), [முத் தொடிக்கு எண் ஆக] = மூன்றுற் பெருக் கிய (நாற்பத்தைந்திற்கு) அதாவது (மேற் கூறிய பதக்கென் னும் இரண்டு மரக்காலின் பலமாகிய இருநூற்றுப் பதிமூன்றே முக்காலை நாற்பத்தைந்திற்குக்) கொடுக்க (வந்த) (ஈவாகிய நாலேமுக்காலை பலமாகக் கொள்க என்பதாம்), [முனி வீ அமர் காறு மொய்]=கோபத்தையழித்து விருப்பைப் காறி யுமிழ்ந்த (பெரியோரை) சேர்வாயாக—எ - று.

(தா - ம்.) ஒரு பலம் ரசத்திற்கு தும்பை சமூலச் சாறு நாலேமுக்காற்பலத்தை விட்டு, நம்பர் (5) ல்சொன்னதுபோல வே, இடையிடை-2-நாள் விட்ட-10-10-நாள் இருமுறைசூரிய புடம் வைத்து-25-ம்நாள் இரண்டுபடி தும்பைச் சமூல சாற்றில்

நம்பர் (5) ன் பாகப்படி-20-நாள் பூமிபுடம் வைத்தெடுத்துக் கழுவிக்கொள்வதே இரச சுத்தியாம் என்பதே. (77)

## 7. நாக சுத்தி

நாகமது ரித்தார் நயனத் திரதமதி
நாகமது ரித்தார் நவமியத்த—நாகமது
கூட்டியா தாரக் குழைத்தா தபமீறக்
கூட்டியா தாரமிருக் கும்.

(இ - ள்.) [நாகமது உரித்தார் நயனத்து இரதம்]= பாம்பினை உரித்த சிவனுடைய கண்ணென்னும் (உருத்திராக்ஷ) இலை ரசத்தை, [நாகம் அது உரித்தார் மதி]=நாகமென்னும் அப் பெயரை யுடையாரை (ஒருபலமாக) நிறுத்து, [நவமி அத்தம் நாற் கம் அது கூட்டி]=ஒன்பதிற்பாதியாகிய நாலரை யுடன் (அந் நாலரையின்) நாலி லொரு பாகமாகிய ஒன்றே அரைக்காலையும் சேர்த்து (ஆகக்கூடிய ஐந்தரையே யரைக்காற் பலச் சாற்றில்), [ஆது ஆர குழைத்து] = அந்த நாகப்பொடி நிறையும்படி கலக்கி, [ஆதபம் மீற கூட்டு] = வெய்யில் ஏறும் படி செய்வாய், [யா தாரம் இருக்கும்]=என்ன நீர் இருக்கும் —எ - று.

(தா - ம்.) ஒருபலம் நாகப் பொடிக்கு உருத்திராக்ஷயிலை ரசம் அஞ்சரையே அரைக்கால் பலம் விட்டு, நம்பர் (5) ல் சொன்னது போலவே, இடையிடை-2-நாள் விட்ட-10-10-ம் நாள் இருமுறை சூரியபுடம் வைத்து, 25-ம் நாள் இரண்டுபடி உருத்திராக்ஷ இலைச் சாற்றில் நம்பர் (5)ன் பாகப்படி, 20-நாள் பூமிபுடம் வைத்தெடுத்துக்கழுவ நாகம் சுத்தியாம் என்பதே.

நாக மதுரித்தார் நயனத்திரதம் நவமியத்தம் நாற்கமது கூட்டி என இயைக்க, நாற்கமது எனற்பாலது நாகமது எனத் தொக்கி நின்றது. (78)

## 8. அப்பிரக சுத்தி

சூலையருக் கஞ்சாறு தோமகலு மப்பிரகை
சூலையருக் கஞ்சாறு தோயமதி—சூலை

யிருமூ வொருபலத்துக் கென்றுமென்று வென்றே
யிருமூ வொருபலத்தை யெய்.

(இ - ள்.) [சூளையருக்கு அஞ்சு ஆறு] = வேசியர்கட்குப் (பெரியோர்) அச்சமுறும் மார்க்கம்போல, [தோம் அகலும்]= குற்றம் ஒழியும்படி, [அப்பிரகை]= அப்பிரகத்தை, [சூளை அருக் கஞ்சாறு]=கற்சூளைச் சிட்டப்பொடியும், எருக்குச் சமூலச் சாறும், [தோய மத்தி]=சேரும்படி கல, [சூளை]= நிர்ணயமாக [என்றும் ஒரு பலத்துக்கு இருமூ]= எத்தினத்திலும் ஒரு பலம் அப்பிரகத்திற்கு, ஆறு பலம் சாறுக (விடுவாய்), (அப்பால்) [என்று என்றே இரு]=சூரியனென்று ரைக்கும்படி இருப்பாய், [மூ ஒரு பலத்தை எய்] = விசேடித்த இணையில்லாத வலிமை யடைவாய்=எ-று.

(தா - ம்.) ஒருபலம் அப்பிரகப்பொடிக்கு எருக்குச் சமூ லச்சாறு பலம்-5-ம், அரைத்து வஸ்திரகாயம் செய்த சிட்டச் செங்கற்பொடி ஒரு பலமும்சேர்ந்த-6-பலத்தைவிட்டு, நம்பர் (5)ல் சொன்னது போலவே யிடை யிடை-2-நாள் விட்ட பத்து பத்துநாள் இருமுறை சூரியபுடம் வைத்து, 25-ம்நாள் எருக்கச் சமூலச்சாறு பலம்-67-ம் அரைத்து வஸ்திரகாயஞ்செய்த சிட்ட செங்கற் சூரணம்-13-பலமும் சேர்ந்த-80-பலத்தைவிட்டு நம்பர் (5) ன் பாகப்படி-20-நாள் பூமிபுடம் வைத்தெடுத்துக் கழுவினதே அப்பிரகம் சுத்தியாமென்பதே. (79)

## 9. கெந்தக சுத்தி

ஆம்பிர மோழை யறலாறு மோர்தொடிக்கே
யாம்பிர மோழை யறலாறே—யாம்பி
மழையுமா தேவியுற மாசறவென் றங்கி
மழையுமா தேவியுற மால்.

(இ - ள்.) [ஆம்பிரம் மோழை அறல்]=(புளியம்) பழத் தின் மேலோட்டைப் பற்றியுள்ள கசிவையூறவைத்திறுத்த நீரும், புளித்த காடித் தண்ணீரும், [மோர்]=(பசுவின் புளித்த மோரும், [ஆறும்]=அவ்வாறு பலமும், [ஓர் தொடிக்கு] = ஒரு பல (கெந்தகத்திற்கு) [அறல் ஆறு பிற மோழை ஆம்] = இஃ தன்றி, சுத்திமார்க்கங்கள் மற்றுள்ளவை மூடத்தனமாகும். [ஆம்பி மழையும்]=காளான்சாறும் அவ்வளவே; [மாதேவி உறு

அம் மாசு அற என்று அங்கி]=கெந்தகத்தில் ஊறியுள்ள அக் களங்கம் நீங்கும்படி சூரியகாந்தியிலும் நெருப்பின் வெப்பத் திலும் ஆகும், [மழையும்]=(இக்கெந்தகம்) மேகத்தையும் ஒவ் வும், [ஆது ஏ வீ உற மால்]=பிணிகள் ஒழிவதற்கு அதுவேஅம் பாகும் எ-று.

(தா-ம்.) புளியம்பழத்தின் மேலோட்டைப் பற்றியிருக் கும் புளிக்கசிவை யூறவைத்த தண்ணீர் அல்லது-1-பலம் புதுப் புளியை, 20-பலம் சலத்தில் கரைத்து ஒரு இரா வைத்து தெளிந்த நீராகிய புளித்தெளிநீர் ஆகிய இவ்விரண்டில் ஒரு வகை நீரும், புளித்த காடியும். புளித்த பசுவின் மோரும், காளான்சாறும் இவை வகை-1-க்குப் பலம்-6-ஆக இந்த இரு பத்துநான்கு பலத்தையும் ஒன்ருய்க்கலந்து ஒரு வாய்குவிந்த பாண்டத்தில்விட்டு, மேலே மெல்லிய வஸ்திரத்தைவேடுகட்டி அதன்மேல் ஒருபலம் கெந்தகத்தைத் தூள் செய்து வைத்து, வேறு பாத்திரத்தால்மூடி தீபாக்கினியாயிரண்டு சாமங்கள் எரித்து எடுத்துப் பார்க்க, கெந்தியானது பாண்டத்திற்குள் ளும், மலினம் மேலும் படிந்திருக்கும். இதுவே கெந்தகத்தின் சுத்தியரம் என்பதே. (80)

## 10. பாஷாண சுத்தி

பாக லிலையாம் பலத்துக் கிரண்டுபலம்
பாக லிலையாம் பலமலினம் — பாகல்
விளாத்தைல மைந்துதின மேலதுமூன் றப்பால்
விளாத்தைல லாகுமது மேல்.

(இ - ள்.) [பாகல் இலை ஆம் பலத்துக்கு இரண்டு பலம்] =பலம் (பாஷாணத்திற்கு) இரண்டு பலம் கொம்புப்பாகற் சமூலச்சாறு ஆகும்; [பலமலினம் பாகல் இலையாம்] = பலமாசு கள் அப்பாஷாணத்திற் கில்லையாம்; [பாகல் விளாத் தைலம்] =பலாக்கொட்டையிற் கலந்திருந்த எண்ணெய்; [ஐந்து தினம் மேலது மூன்று] = ஐமூன்றென்னும் பதினைந்து தினங்களும் ஆகும்; [அப்பால் மேல் அது விள்ளாது அயிலலாகும்] = அதன் பின் மேம்பாடுற்ற அப் பாஷாணத்தை ஒருவருடன் சொல்லா மலே புசிக்கலாகும்-எ-று.

(தா - ம்.) ஒருபலம் பாஷாணக்கட்டிக்கு இரண்டுபலம்

கொம்புப்பாகற் சமூலச்சாறும், மூன்று பலம் பலாக்கொட்டை குழித் தைலமும் கலந்து விட்டு, முன் போலவே வெய்யிலில் வைத்து, இவ்விதம் பிரதிதினமும் காலையில் மேற்படி சாற்றையும் தைலத்தையும் கலந்துவிட்டு, பதினைந்து நாள்வரையில் செய்து, இடையில் இரண்டு நாள் மேற்படி சாறும் தைலமும் விடாமல் வெய்யிலில் வைத்து, அதிலுள்ள சாறு முதலியவை சுவறினபின்பு, மறுபடியும் பதினைந்துநாள்வரையில் முன்போற் செய்து ஆக முப்பது நாள்களும் கழிந்தபின்பு, மறுபடியும் இரண்டுநாள் சாறும் தைலமும் விடாமல் வெய்யிலில் வைத்து நன்ருய் சுவறின பின்பு கழுவி எடுத்துப்பார்க்க அதிலுள்ள மாசுகளெல்லாம் நீங்கியிருக்கும். இதுவே பாஷாண சுத்தியாம் என்பதே. (81)

## 11. நேர்வாள சுத்தி

ஆமலகை யாந்தகரை யாமா மலத்தின்மழை
யாமலகை யாந்தகரை யத்திடைவி-யாமலகை
பத்தரையு மையரையும் பார்த்திறுதி சோபியடு
பத்தரையு மையரையும் பார்.

(இ-ள்.) [ஆமலகை ஆம்]=நெல்லிப்பழச்சாறும்,[தகரை ஆம்]=கையாந்தகரை (என்னும்) கரசலாங்கண்ணிச் சாறும், [ஆமலத்தின் மழை]=பசுஞ்சாணப்பாலும், [ஆம்] = ஆகும்; [அலகை அந்தகர் ஐயத்திடை வீயாமல் அகை]=பேய்போன்ற அறிவிலிகளின் சந்தேகத்திலே அழியாமல் அவர்களை யோட்டுவாயாக; [பத்தரையும் ஐயரையும் பார்த்து இறுதி சோபி அடு] =ஐந்தும் இரண்டரையுமாக நிறுத்துப் பார்த்த பிறகு நேர்வாளத்தை (யுடைத்து) வேகவைப்பாயாக; (அப்பால்) [பத்ரையும் ஐயரையும் பார்]=(அந்த மருந்தையும் வைத்தியரையும்) சீஷனையும் குருவையும் போல நீ பார்ப்பாயாக—எ-று.

(தா - ம்.) ஒரு பலம் நேர்வாளப் பருப்பிற்கு, நெல்லிப் பழச்சாறு, கையாந்தகரைச்சாறு, பசுஞ்சாணப்பால் என்னும் இவ்வொவ்வொன்றுக்குப் பலம் இரண்டரையாகக் கூடிய ஏழரை பலத்தையும் ஒரு பாண்டந்திலே விட்டு, மேலே மெல்லிய சீலைகட்டி, அச்சீலையின்மேல் மேற்படி நேர்வாளப்பருப்பை வைத்து, அதன்மேல் ஒரு பாத்திரம்கொண்டு மூடி, அடுப்பிலேற்றிக் கமலாக்கினியாக ஒருசாமம்எரித்து, எடுத்து அதனுள்

ளிருக்கும் மூளையிலைகளை சுத்தமாய் நீக்கி, சலத்திற்கழுவி நிழலி லுலர்த்தவும். மறுபடியும் முன் மூவகையும் முன்னளவேவிட்டு முன்போல சீலையின்மேல் வைத்து அவித்து எடுத்து நிழலிலு லர்த்தி, மூன்றும் தடவையும் முன் மூவகையும் முன்னளவே விட்டு முன்போலவே சீலையின்மேல் வைத்து அவித்தெடுத்து நிழலிலுலர்த்தி, கொஞ்சம் நெய்விட்டு வறுத்தெடுத்து வைத்துக்கொள்ளவும்; இதுவே நேர்வாள சுத்தியாம். நீயிப்படி முறையாகச்செய்து கொள்வையேல் பேய்போன்ற அறிவிலிகள் நேர்வாளத்தினல் ஆசனக்கடுப்பு, வயிற்றுவலி, குமட்டல் முதலியவைகள் உண்டாமெனச் சொல்லும் சந்தேகத்தை யொழிப்பாய் என்பதே. (82)

## 12. சங்க சுத்தி.

இலைக்கள்ளி யாநந்தை யேகமைந்தா யின்வெய்
யிலைக்கள்ளி யாநந்தை யீவா—ரிலைக்கள்ளித்
தந்தவரை யாகத் தழுவுமுன்னர் நோயகலுந்
தந்தவரை யாகமது தான்.

(இ-ள்.) [இலைக்கள்ளி ஆம் நந்தை]=இலைக்கள்ளிச்சாறு ஐந்து பாகமாம், [ஏகம்]=(சங்கு) ஒருபாகமாம் [ஐந்து ஆயின்] =ஐந்துநாள் கழியுமானல், [பெய்யிலை கள்ளி ஆம் நந்தை]= வெய்யிலின் உஷ்ணத்தைக்கிரகித்துக்கொண்ட சங்கத்தை, [ஈ வாரிலைக்கு அள்ளித் தந்தவர்]=கொடுப்பாரற்ற உனக்குக் கைகளாலள்ளிப் (பொருள்) கொடுத்த பிணியாளிகள், [ஐயாக தழுவுமுன்னர் நோய் அகலும்] = முதன்மையாகச் சாப்பிடத் தொடங்குவதற்கு முன்னமே அவர்கள் நோய் நிவாரணமாகும் [ஆகமது தந்தவரை தான்]=அவர்கள் சரீரம் தந்த மலையைப் போல் தானிருக்கும்.

(தா - ம்.) ஒருபலம் சங்குப்பொடிக்கு ஐந்துபலம் இலைக்கள்ளிச் சாறுவிட்டுச் சூரியோதயமுதல் அத்தமிக்கும் வரையில் வெய்யிலில் வைக்கவேண்டும். இவ்விதம்-5-நாள் பிரதிதினமும் 5-5-பலம் இலைக்கள்ளிச்சாறு புதிதுபுதிதாய்விட்டுக்காலைமுதல் மாலைவரையில் வெய்யலில் வைத்துப் பின்பு-2-நாள் ஷை சாறு விடாமல் வெய்யலில் வைத்துச் சாறெல்லாம் சுவறி யுலர்ந்த பின்பு கழுவி எடுக்கச் சங்கு சுத்தியாம்; சிகிச்சகர்கள் கேட்காமலே பணத்தைத் தாராளமாய்க் கொடுத்த நோயாளிகளின்

வியாதி அவர்கள் மருந்துசாப்பிட ஆரம்பிக்கு முன்பே நீங்கி தேகமுறுதியாம் என்பதே. (83)

## 13 பலகரை சுத்தி.

தமரத்தங் காய்வார் தமைப்புனித மாக்கத்
தமரத்தங் காய்வார் தசமை—தமரத்தங்
கண்டவரை யாகாயங் காமாலை மாமையுடற்
கண்டவரை யாகாயங் காண்.

(இ-ள்.) [தமரத்து அங்கு ஆய்வார் தமை புனிதம் ஆக்க] ஒலியுடனே (சோதிடம் பார்க்குமிடத்தில்) ஆராயத் தக்கவர்களான பலகரையைச் சுத்தி செய்வதற்கு, [தமரத்தங்காய் வார் தசமை]=தமரத்தங்காய்ச்சாறு பத்துபங்கு. [தமர் அத்தம் கண்தவர் ஐயா]=இது உறவினர்களான (வைத்தியர்கள்) கையில் வில்லைப்போன்றது பண்டிதரே, [காயம் காமாலை மாமை உடல் கண்டவரை] = நிலையான காமாலை (யென்னும் நோயானது) அழகிய சரீரத்தில் கண்டபோதே, [ஆகாயம் காண்]=வெளிப்படும்படி (செய்யும்) நீ பார்-எ-று.

(தா - ம்.) ஒருபலம் பலகரைப் பொடிக்குப் பத்துப்பலம் தமரத்தங் காய்ச் சாறு விட்டு, சூரியபுடம் வைக்கவேண்டும். இவ்விதம்-15-நாள் பிரதிதினமும் மேற்படி தமரத்தங்காய்ச் சாறு-10-10-பலம் புதிது புதிதாய் விட்டுச் சூரியபுடம் வைத்துப் பின்பு-2-நாள் ஷை சாறு விடாமல் வெய்யலில்வைத்துச் சாறு சுவறி யுலர்ந்த பின்னெடுத்து கழுவிப்பார்க்க பலகரைச் சுத்தியாம் என்பதே. (84)

## 14. லவண சுத்தி

கழுநீ ரறலவணங் காய்ச்சியதண் டூலங்
கழுநீ ரறலவணங் கக்கி—கழுநீர்
விடவாறு நாண்முழுது மேலுமதே செய்து
விடவாறு நாண்முழுதும் வெல்.

(இ - ள்.) [கழுநீர்]=செங்குவளைச் சமூலச் சாறு [அறல் அவணம்]=கரு மணல்போன்ற கருங் குவளைச் சமூலச்சாறு, [காய்ச்சிய தண்டூலம் கழுநீர் அறல்] = வேகவைத்த அரிசியைக்

கழுவிய நீர் என்னும் இந் நீர்களை, [லவணம் கக்கு இகழும் நீர் விட]=உப்பிற் கக்க வேண்டிய இகழத்தக்க மலினம் விடுவதற்காக, [ஆறுநாள் முழுதும் மேலும் அதே செய்து விட]=ஆறு தினங்கள் வரையில் (ஊறவைத்து) மறுபடியும் அவ்வாறே புரிந்து விடுவாயாகில், [ஆறும்]=அக்களங்கம் நீங்கும், [நாள் முழுதும் வெல்]=(அப்பால் அதைக்கொண்டு) உனது ஆயுணுள் வரையில் (பிணிகளை) வெற்றி கொள்வாயாக—எ - று.

(தா-ம்.) கறியுப்பு ஒரு பலத்திற்கு, செங்குவளைச் சமூலச் சாறு-6-பலத்தைவிட்டு உதயமுதல் அத்தமிக்கும் வரையில் வெய்யலில் வைக்கவேண்டும். இவ்விதம்-6-நாள் பிரதிதினமும் காலையில்-6-6-பலம் செங்குவளைச் சமூலச்சாறு புதிது புதிதாய் விட்டுச் சூரியபுடம் வைத்துப் பின்பு-2-நாள் மேற்படி சாறு விடாமல் சூரியபுடம் வைத்து சாறு சுவறி வறண்டபின், 6-ம் நாள் காலையில்-6-பலம் கருங்குவளைச் சமூலச்சாறு விட்டுச் சூரியபுடம் வைக்கவும். இவ்விதம் 6 நாட் செய்து, 2 நாள் சாறு விடாமல் சூரிய புடம் வைத்து அதில் முன்விட்ட சாறும் சுவறினபின், 17-ம் நாள்-6-பலம் அரிசிக் கழுநீர்விட்டு சூரிய புடம் வைக்கவும். இவ்விதம்-6-நாள் செய்து முடிவிலும் 2-நாள் கழுநீர்விடாமல் வெய்யலில் வைத்துலர்த்தி யெடுத்துக் கொள்வதே லவண சுத்தி யாம் என்பதே. (85)

## 15. முத்து சுத்தி

முத்தினத்தை மாசொழிக்க முன்னினளை மூன்று
முத்தினத்தை மாரூர் முயலுவாய்—முத்தினத்தைக்
கொண்மூவா மாத்தியரைக் கும்பிட் டறநோயைக்
கொண்மூவா மாத்தியரைக் கும்.

(இ - ள்.) [முத்தினத்தை மாசு ஒழிக்க முன்னின்]=முத்தின் தொகுதியை மலினம் போக்கக் கருதுவாயாகில்; [அளை மூன்று]=பசுந்தயிர் மூன்றுபங்கு [முதினத்தை மாரூ முயலுவாய்]=மூன்று நாளைக்கு மாருமல் முயற்சிப்பாயாக; [முத்தி நத்து ஐ கொள்மூ ஆ மாத்தியரை கும்பிட்டு] = மோட்சத்தை விரும்புகின்ற சிறப்பமைந்த அறிவின்மேம்பாட்டு வைத்தியர்களை வணங்கி; [நோயை அறகொண்மூ ஆம் மா தீ அரைக்கும்] =பிணியைத்தொலைக்க, மேகத்தைப்போன்று விசேடித்த வெப்பத்தைத் தணிக்கும்-எ-று.

(தா-ம்.) ஒருபலம் முத்துக்குப்பிளித்த பசுந்தயிர் மூன்று பலம்விட்டு, சூரியபுடம் வைக்க வேண்டும். இவ்விதம்-3-நாள் பிரதிதினமும் பசுவின் தயிர்-3-3-பலம் விட்டு சூரியபுடம் வைத்து, அதன் பின்பு ஷி தயிர் விடாமல்-2-நாள் சூரியபுடம் வைத் துலர்த்தவேண்டும். இவ்விதம் இடையிடை-2-2-நாள் விட்ட-3-நாள்கள் மீண்டும் இருமுறைசெய்து முடிவாயுலர்ந்த பின் கழுவி யெடுத்துக் கொள்வதே முத்து சுத்தியாம்என்பதே. (86)

## 16. பவள சுத்தி

துப்பேக மாறு தொடியீந் திரதநவந்
துப்பேக மாறு தொடியாமே—துப்பேக
மத்தளத்தை யாக மருட்டு மருத்தைநட்டா
மத்தளத்தை யாகபத்தை யாய்.

(இ - ள்.) [துப்பு ஏகம்]=பவளம் ஒருபலத்திற்கு; [ஆறு தொடி ஈந்து இரதம்] = ஆறுபலம் பேரீச்சங்கள் ளென்னும் சாறு; [நவம்]=ஒன்பது நாள்; [துப்பு ஏக]=மலினம் நீங்க; [மாறு]=வேறுபட்டு, [தொடியாம்]=காப்பாகும்; (இதற்கனு பானம்) [துப்பே கம்]=நெய்யே (முக்கியமாயினும்); [கம்]= நீருமாகும்; [மத்தளத்து ஐ ஆக]=மத்தளத்தின் உருவத்தைப் போன்று [மருட்டும் மருத்தை]=வெருட்டுகின்ற வாதரோகங் களையும்; [நட்டு ஆம் அத்தளத்தை யா] = அதன் கீழுள்ள (பித்தத்தின்) சேனைகளான(நோய்களை)மாத்திரமா;[கபத்தை] =சேத்தும ரோகங்களையும் (போக்குமென்று) ஆராய்வாயாக எ - று.

(தா - ம்.) ஒருபலம் பவளத்திற்கு ஆறுபலம் பேரீச்சங் கள்விட்டு சூரியபுடம் வைக்கவும். இவ்விதம் ஒன்பதுநாள்வரை யில், இடைவிடாமல் பிரதிதினமும்-6-6-பலம் ஷி கள் புதிது புதிதாய்விட்டுச் சூரியபுடம் வைத்து-10-ம்நாள் முதல்-2-நாள் ஷி கள் விடாமல் வெய்யலில் வைத்து கள் முற்றிலும் சுவறி யுலர்ந்தபின் கழுவியெடுப்பதே பவள சுத்தியாம். இப்பவளத் தினை செய்யப்படும் பற்பத்தை நெய்யிலும் ஜலத்திலும் சாப்பிட, வாத ரோகங்கள், பித்த ரோகங்கள், சேத்தும ரோ கங்கள் ஆகியவை நிவாரணமாகுமென்பதே.

### 17. நாபி சுத்தி

நாவிதனு லாசை நறுக்கலெனச் சுத்திசெய்த
நாவிதனு லாசை நடத்தலா—நாவிதனற்
கூறவற்றோ மோர்கவினங் கோமயமூன் றாதியொரு
கூறவற்றோ டோர்மதியிற் கொள்.

(இ-ள்.) [நாவிதனல்=அம்பட்டனலே [ஆசை நறுக்கல் என]=குற்றமாகிய மயிர்களைப் போக்குதல் போலே; [சுத்தி செய்த நாவிதன்னல்]=சுத்திசெய்த நாபியினல் [ஆசை நடத்தலாம்]=(வைத்தியர்) தம்முடைய இஷ்டங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம்; [எ இதனல் கூற அற்றோ]=இந்த என் ஒரு நாவாற் கூறமுடியுமோ; [மோர் கவினம் கோமயம் மூன்று]=பசுவின்மோர், வெண்ணெய், சாணப்பால் (என்னும் இம்) மூன்றும்; [ஆதி ஒரு கூறவற்றோடு ஓர் மதியிற் கொள்] = முதலிற் சொல்லியிருக்கும் நிகரற்ற பாகங்களுடனே ஒரே மனதாகத் தெளிந்துகொள்வாயாக—எ - று.

(தா - ம்.) ஒருபலம் நாபிக்குப் பசுவின்மோர்-6-பலம் விட்டுச் சூரியபுடம் வைக்கவேண்டும். இவ்விதம்-10-நாள் பிரதிதினமும்-6-6-பலம் பசுவின் மோர் விட்டு சூரியபுடம் வைத்து-2-நாள் ஷை மோர்விடாமல் வெய்யலில் வைத்து சுவறினபின், வெண்ணெய்-6-6-பலம் பிரதிதினமும் சேர்த்து முன்போலவே பத்துநாள் செய்து-2-நாள் அது சேர்க்காமல் வெய்யலில் வைத்துப் பின்பு சாணப்பால்-6-6-பலம் பிரதி தினமும் விட்டு-10-நாள் சூரியபுடம் வைத்து முடிவில்-2-நாள் அது விடாமல் சூரியபுடம் வைத்துக்கழுவிஎடுத்துக்கொள்வதே நாபி சுத்தியாம். இதன் மகிமை விசேடமானது என்பதே.

(88)

---

## பற்ப வகை.

---

### 1. அயபற்பம்

கரும்பொன் றவளங் கழறுது மொன்றிற்குக்
கரும்பொன் றவளங் கணிவேர்—கரும்பொன்

பதுமாழை கன்னி பனிரண்டு மூன்று
பதுமாழை யத்தமேல் பண்.

(இ - ள்.) [கரும்பொன் தவளம் கழறுதும்]=அயத்தின் பற்பத்தைக் கூறுகின்றோம், [ஒன்றிற்கு] = (அயம்) ஒருபலத்திற்கு [ஒன்று கரும்பு அவள அம் கணிவேர்] = (நட்சத்திரத்தில்) முதலாவதாகிய அசுவனி (முதல்) புனர்பூசம் வரையிலாகிய ஏழுபலம் அழகிய வேங்கைவேர்ப்(பட்டைச்சாறு); [கரும்பு ஒன்பது அத்தம்]=செங்கரும்பின்சாறு ஒன்பதிற் பாதியாகிய நாலரைப்பலம்; [மாழை கன்னி பனிரண்டு அத்தம் மூன்று அத்தம்]=புளியமர (வேர்ச்சாறும்) கற்றாழை (வேர்ச்சாறும்) முறையே பன்னிரண்டிற் பாதியாகிய ஆறுபலமும், மூன்றிற் பாதியாகிய ஒன்றரைப்பலமும், (ஆகும்) [பத்து மேல் அத்தம் மாழை பண்]=பத்தின் மேல் அரை சேர்ந்த(பத்தரைமாற்றையுடைய) தங்கமாக (ச் சரீரத்தை)ச் செய்யும் எ - று.

(தா - ம்.) (a) முன்சொன்ன முறைப்படி சுத்திசெய்த அயப்பொடி பலம்-1-க்கு சிவப்பு வேங்கைவேர்ப்பட்டைச்சாறு ஏழுபலம்விட்டு, அரைப்பதற்கு முதல்நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத்தில் கல்வத்தில் அதை யரைக்க அரம்பித்து, மீண்டும்-7-பலம் புதிதான முன் சாற்றையே சிறுகச் சிறுக விட்டு அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை தட்டிப் பனியில் வைக்கவேண்டும். இரண்டாம் நாள் உதயத்தில் அரைக்க ஆரம்பித்து முன் அளவாகிய-7-பலம் புதிதான முன் சாற்றையே சிறுகச்சிறுகவிட்டு பகல் முழுவதும் அரைத்துப் பில்லை தட்டி இரவில் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும்-5-நாளும் அரைத்தரைத்து வில்லைதட்டி யாறவைத்தபின்பு-8-ம் நாள் உதய முதல் மாலை வரையில் அந்த பில்லையை வெய்யலில் வைத்தெடுத்து, பில்லையைக் காயவைக்க வேண்டிய மற்ற - 6 - நாள்களுள்-5-நாள் பில்லையை வெளிக் காட்சியாகவும்-1-நாள் கவசித்தும் காயவைக்க வேண்டும். அதாவது அதை ஒரு ஓட்டில்வைத்து மேலோடு மூடி-7-சீலை மண்செய்வதே கவசித்தலாம், இவ்விரு வகையிலும் நன்றுயுலர்ந்தபின்பு, பதினஞ்சாம் நாள் உதயத்தில் நாற்பது காட்டு வராட்டியில் புடமிட்டு ஒருநாள் ஆறவிட்டு மறுநாட் காலையிலெடுக்கக் கால்வாசி பற்பமாம்.

(b) மறுபடி பதினேழாம் நாள் உதயம் தொடங்கி

ஒன்பது தினங்கள் வரையில், நித்தியமும், கால்வாசி பற்பமான ஷ்டி அயப்பொடி பலம்-1-க்கு செங்கரும்பின் ரசம்-4½-4½-பலம் விகிதம் சிறுகச் சிறுகவிட்டு பகலெல்லாம் அரைத்து இரவில் வில்லைதட்டிப் பனியில் ஆறவைத்து, இவ்விதம் ஒன்பது தினங்களும் கழிந்த பிறகு, பில்லையை வெய்யலில் காயவைக்கவேண்டிய-9-நாள்களுள்-8-நாள் பில்லையை வெளிக்காட்சியாய் வெய்யலிலே யுலர்த்தியும்-1-நாள் முன்போல் ஓட்டில் வைத்து சீலைமண்செய்து வெய்யலிலுலர்த்தியும், ஐம்பது காட்டுவரட்டியில் புடமிட்டு, ஒருநாள் ஆரவைத்து, மறுநாள் எடுத்துப்பார்க்க அரைவாசி பற்பமாம்.

(c) அவ்வாருகவே முப்பத்தியேழாம் நாள் முதல் பன்னிரண்டுதினங்கள்வரையில் நித்தியமும், அரைவாசிபற்பமான ஷ்டி அயம் பலம்-1-க்கு-3-3-பலம் விகிதம் புளியமரத்தின் வேர்ப்பட்டைச்சாறு சிறுகச்சிறுக விட்டுப் பகலெல்லாம் அரைத்து முன்போலவே இரவில் வில்லைதட்டிப்பனியில் ஆறவைத்து, இவ்விதம் -12- தினங்கள் வரையிற் செய்துவந்து, அதன்பிறகு பில்லையை வெய்யலில் காயவைக்க வேண்டிய-12-நாள்களுள்-11-நாள்கள் வரையில் பில்லையை வெய்யலில் வெளிக்காட்சியாய்க் காயவைத்து வந்தும்-1-நாள் அதை ஓட்டில் வைத்து சீலைமண்செய் துலர்த்தியும்-32-காட்டுவரட்டியிற் புடமிட்டு, ஒருநாள் ஆறவிட்டெடுத்துப்பார்க்க, முச்கால்வாசி பற்பமாம்.

(d) அதன்பின் அறுபத்திமூன்ரும்நாள்உதயம்தொடங்கி பதிமூன்று தினங்கள் வரையில் பிரதிதினமும், முக்கால்வாசி பற்பமான ஷ்டிஅயம் பலம்-1-க்கு கற்ருழை வேர்ச்சாறு-1½-1½-பலம் விகிதம் சிறுகச் சிறுகவிட்டுப் பகலெல்லாம் அரைத்து முன்போலவே இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைத்து, இவ்விதம் பதின்மூன்று தினங்களானபிறகு, மேற்கூறியபடியே பில்லையைய் வெய்யலில் காயவைக்கவேண்டிய பதின்மூன்று நாள்களுள் -12- தினங்களும் பில்லையை வெளிக்காட்சியாய் வெய்யலில் காயவைத்தும்-1-நாள் பில்லையை ஓட்டில்வைத்து சீலைமண் செய்துலர்த்தியும், இருபத்தேழு காட்டுவரட்டியிற் புடமிட்டு-1-நாள் ஆறவைத்தெடுத்துப்பார்க்க முழுக்கூறும் வெண்மையான பற்பமாகும்.

இந் நூலாசிரியரான தேரைய மகாமுனிவர் தாம் எடுத்துக்கொண்ட வெண்பாவிற்குள் இவ்விரிவு அடங்காமையான் சுருக்கிக் கூறினரேனும், நூன்னமப்பிரானென்னும் கிரந்தகர்த்தாவானவர் இவ்விரிவை யுரைத்திருக்கின்ருராகலானும், பொருண்மைப் பிரானென்னும் வியாக்கியானகர்த்தாவானவர் (தொகை வகை விரியென்னும் முத்திற முறைமையும் உத்தம நெறியுறவோதுவர்) என்றமையானும், வரலாற்று முறைமையின் எஞ்சி நின்றவையும் எடுத்துரைத்தனம்.

எனவே ஷி வெண்பாவிற் சுருக்கிக் கூறியவற்றையே விரித்துக் கூறிய தல்லது வேறு புகுத்துக்கூறியதன்றறிக.

மருந்துகள் அரைக்குந் தொழிற்கு நித்திரை, சோம்பல், மந்தம் என்னும் இவைகளாகா வாகலின், பகற்காலமெல்லா மரைத்து இரவில் வில்லைதட்டி வைக்கக்கூறினர்.

## குறிப்பு.

இப்பற்ப முறையிலும், இனி கூறப்படும் பற்ப முறைகளிலும் கால்வாசி, அரைவாசி, முக்கால்வாசி, முழுவாசி பற்பமாமென பங்குக்கூறுய் சொல்லப்பட்டிருப்பதேதுக்கென்றுல்:— அந்தந்த மூலிகைகளினுல் அரைத்துப்போடப்பட்ட சரக்குகள், செய்முறைப் பிசகினுல், ஆங்காங்கு சொல்லியிருக்கும் பங்குக்கூறுய் பற்பமாகாவிட்டால், மீண்டும் அந்தச் சாற்றையே விட்டரைத்து, அங்கு சொல்லியிருக்கும் அளவு பற்பமாகிற வரையில் அவ்விதமே செய்யவேண்டியது. அப்படி யாகாத வரையில் அதற்கடுத்த பாகத்திற்கு முயற்சிசெய்யலாகாது. ஆகையால் ஆரம்பத்திலிருந்தே கைமுறை பாகப்படி சாக்கிரத்தையுடன் செய்யவேண்டியது ஆவசியகம். அப்படிச் செய்தால் ஒருபோதும் தப்பாமல் அதில் சொல்லப்பட்டிருப்பதுபோலவே முடியும் என்பதற்காகவே.

## பற்பங்களைச் செய்யும்போது முக்கியமாய் கவனிக்கவேண்டிய பொது விதிகள்.

(1) பற்பங்களாகச் செய்யவேண்டிய சரக்குகளை முன்னர் கிரமப்படி சுத்திசெய்தே ஆரம்பிக்க வேண்டியது. கிரமப்

படி சுத்தி செய்யப்படாத சரக்குகளின் பற்ப முதலியவைகளி ஞல் சுகுணத்திற்குப் பதிலாய்த் துர்க்குணமே யுண்டாம்.

(2) அரைக்கவேண்டிய சாறு வகைகளானவை, பட்டை இலை முதலியவைகளிலிருந்து எடுக்க வேண்டியதாயின், அவற் றை, கல், மரம் ஆகிய உரல்களிலிடித்துத் தனிச் சாருகவே பிழிந் தெடுத்து, சீலையில் வடிகட்டிப் பீங்கான் முதலிய பாத்திரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இரும்பு முதலிய லோக உரல் களிலும், பாத்திரங்களிலும் முறையே யிடிக்கவும் வைக்கவுங் கூடாது.

கடினமாய்ச் சாறுவரப்பட்ட இலை, பட்டை முதலியவை களைக்கொஞ்சம் சலம் தெளித்திடித்துப் பிழிந்துகொள்ளவேண் டும். ஆனல், சேர்த்த தண்ணீர் பாகத்தின் அளவைச் சமப் படுத்த முன் சொல்லப்பட்ட அளவை அவ்வளவு அதிகப்படுத் திக்கொள்ளவேண்டும். இவ்விதம் சில இலை முதலியவைகளில் தண்ணீர் தெளித்துச் சாறு பிழியலாமெனினும், சில சாறு வகை கள் சலம் சேர்வதனல் அவை முறிந்து, அசல் குணங்கெட்டுப் போம். சாறுகளை அன்ருடம் புதிதாக எடுத்துக்கொள்வதே உத்தமம். ஒருநாளெடுத்த சாற்றையே மறுநாள் முதலிய பலநாள் உபயோகப்படுத்துவது அவ்வளவாய்ப் பிரயோசனத் தைக் கொடுக்கத்தக்கதன்று,

சாறுகளை அரைக்கவிடும் ஒவ்வொரு தடவையிலும் அதை நன்ருய் கலக்கியே விடவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அதன் சத்தானது கீழே படிந்து நிற்கும். மேல் தெளிவை மாத்திரம் விட்டரைக்க வேணடியபோது அப்படிச் செய்ய வேண்டியதில்லை.

(3) அரைப்பிற்குப் பொது விதியாவது:- ஒரு பலம் சரக்கிற்கு-1-நாளைக்கு இவ்வளவு சாறு விட்டரைக்க வேண்டிய தென்ருல், அந்த அளவு சாற்றை யெடுத்து, அந்த சரக்கில், சிறுகச் சிறுகவும், சுவறச் சுவறவும் விட்டு அரைக்கவேண்டிய தே விதி. சில சமயம் அரைப்பானது குறைவாவதினுலும், காலபேதங்களினுலும் அவ்விதம் சுவற ஏதுவில்லாமல்போமா கையினுல் அச் சமயங்களில் அவ்வளவு சாறு சுவற எத்தனை நாட் சென்ற போதிலும் அத்தனை நாளையும் ஒரு நாளெனவே கணக்கிடல் வேண்டும். ஆனல் சரக்கின் தன்மையினுலாவது,

கால பேதத்தினுலாவது ஒருநாளைக் கேற்படுத்தபட்ட அளவானது குறித்த காலத்துக்குள்ளேயே சென்று போகிறதாயிருந்தால், அங்கு குறித்த கால முழுவதும் அரைப்பிற்கு வரும்படியாக அச் சாற்றை பங்கிட்டு, குறித்த காலத்திற்கும் அச் சாற்றின் அளவிற்கும் சரியா யொத்திருக்கும்படியாகவே மிகவும் குறைந்த அளவாக விட்டரைக்க வேண்டும். ஒரு நாளைக்கென ஏற்படுத்தப்பட்ட சாருனது சீக்கிரம் சுவற வில்லையென, அரைப்பிற்குப் பதிலாய், நெருப்பில் அல்லது வெய்யலில் வைத்துச் சுவறவைக்கலாகாது.

கைவிடாமல் அரைக்கவேண்டியதெனினும், விட்டு விட்டு அரைக்கவேண்டயதெனினும் முறையேகைவிடாமலும், விட்டு விட்டும் அரைக்கவேண்டியதேயொழிய அதற்குவிரோதமாய்ச் செய்யலாகாது. ஏனெனில் அப்படிச்செய்வதனுல் அனேகவித மாறுதலுக் கிடமாகும்.

எப்போதும் அதிக அவசரமாகமாவது அதிக மந்தமாயாவது அரைக்கலாகாது. இவ் விரண்டு வகையிலும் கெடுதிக் கேதுவே.

(4) அரைத்த சரக்கைப் பில்லை தட்டிக் காயவைத்து, காய்ந்த பில்லையை ஓட்டில் வைத்து மேலோடு மூடி, வாய்க்குச் சீலை மண் செய்து, மறுபடியும் உலர்த்தி நன்ருய்க் காய்ந்த பின்பே புடம் போடவேண்டியது ஆவசியகம். எத்தனை நாள் ஒரு சரக்கை யரைக்கின்ருேமோ, அத்தனை நாளு மதைக் காயவைக்கவேண்டியதும் ஆவசியகம். இவை பற்ப முறைகளின் பெரும்பான்மையானப் பொது விதி. இவை அநுபவசாலிகளான வைத்தியர்களெல்லோருக்கும் தெரிந்தவைகளே யாகலின், இனிசொல்லப்படும் முறைகளில் சிலவிடங்களில் விரித்துச் சொல்லாமல் குறிப்பாகவே சொல்லப்படும். எப்படியெனில், ஒரு சரக்கை யரைத்து பத்து நாள் காயவைக்கவேண்டியதென்ருல் இப்பத்து நாள்களுக்குள் 9-நாள் முழுவது அப் பில்லையை வெளிக்காட்சியாக வெய்யிலில் காயவைக்க வேண்டும். மீதியான ஒரு நாள் முழுவதும், முன்காய்ந்த பில்லையை ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலை மண் செய்து, காயவைக்க வேண்டியது இன்னும் பின் காணப்படும் முறைகளில் (கவசித்தல்)என்பதற்கு) ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலை மண்செய்ய வேண்டியதென அருத்தங்கொள்ள வேண்டி

யது என்பதே. இந்த விஷயங்களை கவனித்து அப்படிக் குறிப்பாய்ச் சொல்லப்பட்டவிடங்களில் மேற்கண்டபடி அருத்தங் கொள்ளவேண்டியது.

(5) மண்சீலை செய்யப் பொதுவிதியாவது:- நெருப்பிற் கோடாமல் நிற்கும் சரக்குகளான தாம்பிரம், அயம், வங்கம், முதலியவைகளுக்கும் இவை போன்றவைகளுக்கும்-5-முதல்-7-மண்சீலையாம். நெருப்பிற்கோடும் சரக்குகளான, கெந்தி, தாளகம் முதலியவைகளுக்கும் இவை போன்றவைகளுக்கும்-7-முதல்-11-மண்சீலையாம்; ஆனபோதிலும் மேற்கண்ட சரக்குகளுடன் சேர்க்கப்படும் மூலிகை முதலியவைகளின் பலத்திற்கேற்கவும், புடம் போடப்படும் விதத்திற் கேற்கவும் மண்சீலை அதிகப்படுவதும் குறைவது முண்டு.

(6) புடம்-காட்டெரு அல்லது வரட்டியென்பது பொதுவாய் $2\frac{1}{2}$-முதல்-3-பலமுள்ளது. புடபாகம் அனுபவத்திலும் கைமுறையினாலும் நிச்சயித்தறியவேண்டியதே யொழிய எழுதுவதினால் தெரிந்து கொள்ளக்கூடாது. புடம் போடப்படும் விதத்தினாலும், இட பேதத்தினாலும் அனேக விகற்பங்களுக் கேதுவாகிவிடும். ஆகையால் எப்போதும் புடத்தைக் காற்றடக்கமான விடத்தில் ஒன்றன்மே லொன்றாய்ச் சீராயடுக்கிப் போடவேண்டியதே பெரும்பான்மையான பொது விதி.

இதைச் சேர்ந்த மற்ற விபர முதலியவைகள் இதன் திறவுகோலில் எழுதப்படும்.

### அயபற்பத்திற் கனுமான விவரம்.

காண்டம் பிரசங் கவினநெய்பால் கொங்கை வெந்நீர்
காண்டம் பிரசங் கவினவிழ்தங்-காண்டம்
படலமத்தி யாயமனு பானப்ர யோகம்
படலமத்தி யாயமனு பண்

(இ-ள்.) [காண்டம் பிரசம் கவினம் நெய் பால் கொங்கை வெந்நீர்]=நீரும், தேனும், வெண்ணெயும், நெய்யும் பாலும், முலைப்பாலும், வெந்நீரும் (என்னும் இவைகள்); [காண் தம்பி ரசம் கவின் அவிழ்தம்]=பார்ப்பாய் மாணாக்கனே சாரமென்னும் அழகிய மருந்துகளுக்கு, [காண்டம் படலம் அத்தியாயம்]=சம்பத்( திற்குத்தக்க சேர்க்கையுடன் பகுத்து,[அனு

பான பிரயோகம் படல் அமத்தி ஆயம் அனு பண் ]= அனுபானப் பிரயோகம் சேரும்படிச்செய்து (அதனுல் அடையும்) இலாபத் தொடர்ச்சியைச் செய்வாயாக-எ-று.

(தா - ம்.) அய பற்பத்திற்கு அனுபானத் திரவியங்களாவன, நீர், தேன், வெண்ணெய், நெய், பால், முலேப்பால், வெந்நீர் என்பவைகளே.

நீர் என்று சொன்னதனுல், இஞ்சி ரசம், மிளகு ரசம். திப்பிலி ரசம், சுக்கு ரசம் என்னும் இவை முதலியவைகளும்,

தேன் என்றுரைத்ததனுல் கள், கரும்புரசம், திராக்ஷப் பழ ரசம், பேரீச்சம்பழரசம் என்னும் இவை முதலியவைகளும்,

வெண்ணெய் என்றதனுல் கற்கண்டு, சர்க்கரை, வெல்லம் என்னும் இவை முதலியவைகளும்,

நெய் என்றுரைத்ததனுல் வில்வாதி லேகியம், வித்தாதியுக்களி, தக்கோலாதிக்களி என்னும் இவை முதலியவைகளும்,

பால் என்றுரைத்ததனுல் மோழைக் கஞ்சியும்,

முலேப்பால் என்றுரைத்ததனுல் சிறுநீர், உமிநீர் என்னும் இவை முதலியவைகளும்,

வெந்நீர் என்றுரைத்ததனுல் துளசிச்சாறு, வெற்றிலேச்சாறு என்னும் இவை முதலியவைகளும் அடங்கியிருத்தல் காண்க.

மேற் சொல்லிய அனுபானத் திரவியங்களே மருந்துக்கு எண்மடங்காகச் சேர்க்க வேண்டும்.

அன்றியும் ஷை பஸ்பத்தை அண்டவாதத்திற்கு இஞ்சி ரசத்திலும்,

மகோதரம் என்னும் பெரு வயிற்றிற்கு மிளகுத்தைலம் அல்லது அதன் ரசத்திலும்,

வல்லேக்குத் திப்பிலித்தைலம் அல்லது அதன் ரசத்திலும்,

பக்க சூலேக்குச் சுக்கின் ரசத்திலும்,

வாதப் பிடிப்புக்குத் தேனிலும்,

குன்மம் என்னும் வயிற்று வலிக்குக் கள்ளிலும்,

சத்தி என்னும் வாந்தி ரோகத்திற்குக் கரும்பு ரசத்திலும்,

சூசிகை என்னும் வியாதிக்கு முந்திரிகைப் பழ ரசத்திலும்,

பாரிசவாய்விற்குத் திராக்ஷ ரசத்திலும்,

பித்த சத்திக்குச் சர்க்கரையிலும்,

வீக்கலுக்குக் கற்கண்டிலும்,

பித்த காசமென்னும் க்ஷயரோகத்திற்கு வெல்லத்திலும்,

பித்த வுப்பசத்திற்கு நெய்யிலும்,

பித்த இருமலுக்கு மகா வில்வாதி லேகியத்திலும்,

பித்த சுரத்திற்கு வித்தாதி யுக்களியிலும்,

பித்த பாண்டுவுக்குத் தக்கோலாதிக் களியிலும்,

பித்த சோபைக்கு ஆச்சிய விஜயார்த்தமென்னும் உக்களி ஹலுவாவிலும்,

சேத்துமாதிக்க வியாதிகட்குப் பாலிலும்,

சேத்தும ஜன்னிக்கு மோழை என்னும் கஞ்சியிலும்,

சிரோபாரத்திற்குக் கோதுமை, சாமை என்னும் இவற்ருலாய கஞ்சியிலும்,

நீராமைக்குக் கசகசாவினுலாவது மூங்கிலரிசியினுலாவது செய்யப்பட்ட பாயாசத்திலும்,

நீர்க்கட்டுக்கு முலைப்பாலிலும்,

நீரிழிவுக்குச் சிறுநீரிலும்,

சிரங்கு, சொரி, கரப்பான், குட்டம் என்னும் வியாதிகட்கு உமி நீரிலும்,

வீக்கத்திற்கு வெந்நீரிலும்,

நேத்திர வியாதிகட்குத் துளசிச்சாற்றிலும்,

கபாசுவேதாரந்தை என்னும் மிதமற்ற வேர்வையுண்டாகும் ரோகத்திற்கு வெற்றிலைச் சாற்றிலும், கொடுக்க வேண்டுமென்றும் அறிக (90)

## அயபற்பத்திற்குப் பிரமாணமும், பத்தியமும்.

சாமை தினையரிசி தர்மம் புராணமதி
சாமை தினையரிசி தர்மமுனஞ்—சாமை
யாகத்தியமோர் காடிபுளி யாமலகங் கன்னி
யகத்தியமோர் நீக்கவறி வாய்.

(இ - ள்.) [சாமை தினை அரிசி தர்மம்] = (அயபற்பம் சாப்பிடுகையில்) சாமை (யவ்வளவும்) தினை (யவ்வளவும்)நெல்லரிசி (யவ்வளவும்)பிரமாணமாகும்;[புராணம் மதி]=(நாளின் தொகையாவது) பதினெட்டு மாதம் (என்னும் முப்பது), [சாம்மை]=குற்றங்கள் அகலும், [தின்]=ஆகலின் (இம்மருந்தைப்) புசிப்பாயாக, [ஐ அரிட்சி தர்மம் உன்]=(இம் மருந்து) விசேட அச்சத்தைத்(தருவதான)அம்பென்று நினைப்பாய்,[அஞ்சாமை] =(நோய்களுக்கு) அச்சமடையாமையோடு;[அகத்தி அம்மோர் காடி புளி ஆமலகம் கன்னி]=அகத்திக் கீரையையும் (மிகு) நீர் (குடித்தலையும்) காடியையும், புளியையும், நெல்லிக்காயையும், பெண் போகத்தையும்; [அறிவு ஆய் நீக்க அகத்தியம் ஓர்]= அறிவினால் ஆய்ந்து (இவற்றை) நீக்கும்படி அவசியமாகத் தெளிவாயாக—எ-று.

(தா - ம்.) அயபற்பம் சாப்பிடுவதற்கு உத்தமப் பிரமாணம் சாமை யரிசியும், மத்திமப் பிரமாணம் தினையரிசியும், அதமப்பிரமாணம் நெல்லரிசியுமாம்.

அப் பற்பத்தைச் சாப்பிட வேண்டிய நாளின் அளவு, முப்பத்திரண்டுநாள் உத்தமமும், பதினெட்டுநாள் மத்திமமும் பன்னிரண்டுநாள் அதமமும், அதற்குக் குறைந்த நாள்கள் அதமாதமமுமாம்.

பத்தியம் முக்கியமாய், அகத்திக் கீரை; நல்ல தண்ணீர், மோர், காடி, புளி, நெல்லிக்காய், பெண்போகம் என்னும் இவைகள் நீக்கவேண்டியது. மேற் சொல்லிய அபத்திய வஸ்

துக்களில் பெண் போகம் ஒன்றே மிக முக்கியமாகையால், கன்னி என்பதைக் கடைசியாக வைத்து அதற்குப்பின், அகத்தி யமோர் நீக்க வறிவாய் என்றார்.

### இதுவுமது.
### முற்கூறிபத்தியத்தை விரித்துரைத்தல்.

களிப்பாக்கு வெங்காயங் கஞ்சா வபினி
களிப்பாக்கு வெங்காயங் கள்ளு–களிப்பாக்கு
பத்தியங்கெட் டாதவிழ்தம் பாவைபெரும் பான்மை
பத்தியங்கெட் டாதவிழ்தம் பாழ்.

(இ - ள்.) [களிப்பாக்கு வெங்காயம் கஞ்சா அபினி]= களிப்பாக்கு, வெங்காயம், கஞ்சா, அபினி; [களிப்பு ஆக்கு வெம் காயம்கள்]=மகிழ்ச்சியை விளைவித்துச் சரீரத்திற்கு வெப்பம் தருவதானவைகள்; [உகளிப் பாக்கு]=தாண்டுதற் பொருட்டு; [பத்தி அங்கு என் தாது அவிழ்தம் பாவை பெரும் பான்மை]= மேற்சொல்லிய வரிசைகளுள் எள்ளளவு இந்திரியம் கழலுதற் கேதுவாம்) தமது பெண்போகமே அதி விசேடமாகும்; [பத்தி யம் கெட்டு ஆது அவிழ்தம் பாழ்]=இப்பத்தியம் கெட்டுப் (போமாயின்) அம் மருந்து வீணாகும்–எ-று.

(தா - ம்.) களிப்பாக்கு, வெங்காயம், கஞ்சா, அபினி, தென்னங்கள், பனங்கள், ஈச்சங்கள், சாராயம் முதலியவைகளும் பெண்போகமும் முக்கியமான பத்தியமாகும். அவற்றுள்ளும் பெண்போகமே அதிமுக்கியமான தென்பதே. (92)

### 2. எகு பற்பம்

உக்கிரவை வேலிபுளி யூன்வேர்ப் புரணிமழை
யுக்கிரவை வேலிமுக மோர்மூன்றே-யுக்கிரவை
கள்வார்க்கப் பாலாகுங் காபுடமூன் ருகில் முறை
கள்வார்க்கப் பாலாகுங் காண்.

(இ - ள்.) [உக்கு இரவை] = எகுகின் இரவைப்பொடி, [வேல் இவுளி ஊன்] = கருவேல் மா ஊனுன், [வேர்ப் புரணி மழை] = (என்னும் இவற்றின்) வேர்ப்பட்டைச்சாறு, [உக்கிர வைவேலி முகம் ஓர் முன்று]=வேகமும் கூர்மையுமான வேலேந்

திய முருகக் கடவுளின் முகங்களாகிய (ஆறின் அளவென்று) மேற் சொன்ன (மூன்றையும் உணர்வாயாக, [உக்கு இரவை கள்வார்க்கு அப் பாலாகும்] =(மேற்படி சாறுகளைச்) சொரிந்து சற்று திருடுகின்றவர்கட்கும் பற்பமும் முறைதப்பிப்போகும், [காபுடம் முன்று] = இவ்வாறு மூன்று புடங்கள் வரையில், [ஆகில் முறை]=(சொத்தாகுமாயின்) பூரண முறையாம், [கள் வார்க்கப் பால் ஆகும் காண்]=(இதன் பரீட்சை எவ்வாறென்னின்) அந்தப் பற்பத்தில் எள்ளளவெடுத்து எந்தக் கள்ளிற் போட்டபோதினும் சாறுகளாய்விடும் பார்த்துக்கொள்-எ-று.

(தா - ம்) (*a*) முன் சொன்ன முறைப்படி சுத்திசெய்த எகு அரப்பொடி பலம் ஒன்றிற்கு கருவேலம் வேர்ப்பட்டைச் சாறு-3-பலம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊற வைத்து மறுநாளுதயத்தில் அதைக் கல்வத்தில் அரைக்க ஆரம்பித்து மீண்டும் புதிதான -3- பலம் ஷை கருவேலன் வேர் பட்டைச் சாற்றையே, சிறுகச் சிறுக விட்டு, அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைதட்டிப் பனியில் வைக்கவும். இரண்டாம்நாள் உதயத்தில் அரைக்க ஆரம்பித்து முன் அளவாகிய-3-பலம் புதிதான முன் சாற்றையே சிறுகச்சிறுக விட்டு பகல் முழுவதும் அரைத்துப் பில்லை தட்டி இரவில் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும்-4-நாளும் அரைத்தரைத்துப் பில்லைதட்டி ஆறவைத்த பின்பு-7-ம் நாள் உதய முதல் மாலை வரையில் அந்தப் பில்லையை வெய்யலில் வைத்தெடுத்து, பில்லையைக் காயவைக்கவேண்டிய மற்ற -5- நாள்களுள் -4- நாள் பில்லையை வெளிக்காட்சியாயும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து நன்ரு யுலர்ந்த பின்பு-13-ம்நாள் உதயத்தில் 64-காட்டு வராட்டியில் புடமிட்டு, ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் காலையில் புடமிட்டு, ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் காலையில் எடுக்க மூன்றில் ஒரு கூறு பற்பமாயிருக்கும்.

(*b*) மறுபடி-15-ம் நாள் உதயம் தொடங்கி-6- தினங்கள் வரையில், நித்தியமும் மூன்றிலொரு கூறு பற்பமான மேற்படி எகுப்பொடி பலம்-1-க்கு மாமர வேர்ப்பட்டைச் சாறு-2-2- பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டுப் பகலெல்லாம் அரைத்து இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைத்து, இவ்விதம்-6- தினங்கள் கழிந்த பிறகு, முன்போல-5-நாள் பில்லையை வெளிக்காட்சியாகவும்-1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து

மறுநாள் உதயத்தில்-48-காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒரு நாள் ஆறவைத்து மறுநாள் காலையில் எடுக்க மூன்றிலிரண்டு கூறு பற்பமாயிருக்கும்.

(c) அவ்வாருகவே-29-ம் நாள் உதயந் தொடங்கி-6-தினங்கள் வரையில், நித்தியமும் மூன்றி லிரண்டு கூறு பற்பமான மேற்படி யெகுப்பொடி பலம்-1-க்குஊனுன்கொடி வேர்ப்பட்டைச்சாறு -1½-1½-பலம் விழுக்காடு விட்டு முன்போல அரைத்தும், முன்போல உலர்த்தியும்-36-காட்டு வரட்டியில் புடமிட்டு-1-நாள் ஆறவிட்டெடுக்க முழுக்கூறும் தாவனிய பற்பமாயிருக்கும்.

இப் பற்பத்தைப் பரீக்ஷிக்கவேண்டின் எவ்வித கள்ளிலாவது ஷி பற்பத்தில் எள்ளளவு போட்ட மாத்திரத்திலே அந்தந்த ரசங்களாய்விடுமென்மதே.

## எகுபற்பத்திற் கனுபானமும் அதன் பிரயோகமும்.

கோடைக்கா மந்திரிக்கை கோறிக்குக் காயரதங்
கோடைக்கா மந்திரிக்கை குன்மக்கெள்—கோடைக்குத்
தேங்கா யமுதத்திர்க்குத் தேனு மெகுபற்பந்
தேங்கா யமுதலறி செய்.

(இ - ள்.) [கோடைக்கு ஆம்] = வாதத்திற்கு நல்ல தண்ணீரும், [மந்திரிக்கு ஐ] = மந்திரியை (யொத்த பித்தத்திற்கு) வெண்ணெயும், [கோறிக்கு காய ரதம்] = கொல்லுதலை யுடைய (சேத்துமத்திற்கு) வெள்ளுள்ளியின் சாறும், [கோடு ஐக்கு மன்திரிக்கை ஆம்] = மாறுபாடான சேத்துமத்திற்கு மனதை வேறுபடுத்துவதான கள்ளு ஆகும், [குன்மக்கு எள்] = குன்மத்திற்கு எள், [கோடைக்கு] = வெப்பத்திற்கு, [தேங்காய் அமுது] = தேங்காய்ப்பால், [அதிர்க்கு தேன் ஆம்] = நடுக்கலுக்குத் தேன் ஆகும், [எகு பற்பம்] = எகு பற்பத்தின் முறைக்காக [தேங்காய் அம் முதல் அறி செய்] = தியங்காதவனுய் அப் பற்பத்தின் அந்த ஆரம்பம் முதலாக (யாவையு முணர்ந்து) நீ செய்வாயாக — எ - று.

(தா - ம்.) வாத ரோகங்கட்கு நல்ல தண்ணீரிலும்,

பித்த ரோகங்கட்கு வெண்ணெயிலும், சேத்தும ரோகங்கட்கு வெள்ளுள்ளியின் சாற்றிலும், சன்னிபாத ரோகங்கட்குக் கள்ளிலும், குன்மத்திற்கு எள்ளூரிய தண்ணீரிலும், வெப்பத்திற்குத் தேங்காய்ப்பாலிலும், நடுக்கலுக்குத் தேனிலும் கொடுக்க வேண்டுமென்பதே. (94)

எகுபற்பத்திற்குப்
**பிரமாணமும், பத்தியமும், நாளும் கூறுதல்.**

கடலைப் பதம்பான்முக் காலேக மாதி
கடலைப் பதம்பான்முக் காலாய்—கடலை
புளியாம் பிரமாது பூணையமு தப்பப்
புளியாம் பிரமாது போல்.

(இ-ள்.) [கடலை] = கடலையின் அளவின், [பதம் பால் முக்கால் ஏகம் ஆதிகள்] = கால், அரை, முக்கால், ஒன்று (என்னும் இந் நான்கும்) (உத்தமம்) மத்திமம், அதமம், அதமாதமம் என்னும் நான்காம், [தலைப்பதம்]=முதன்மையான பெருமையையும், [பால்] =வெண்ணிறத்தையு முடைய பற்பத்தை, [முக்கால் ஆய்] = (ஒரு நாளைக்கு) மூன்று பொழுதாகக்கொள், [கடலை] = நீக்க வேண்டியவற்றை (யறியவேண்டின்), [புளி ஆம்பிரம் மாது]=புளியும், புளிப்புத்தன்மை யுடையவைகளும், பெண்போகமும் [பூண்]=புசிக்க (வேண்டியவை அறியவேண்டின்), ஐ அமுது அப்பு அப்பு உள்ளி ஆம்]=வெண்ணெய்,பால் சலம் பொருந்திய வெங்காயம் என்பவைகளாம், [பிர மாது போல்]=பிரமாஸ்திரத்தைப்போல்—எ-று.

(தா-ம்.) எகு பற்பத்திற்கு அளவாவது கடலையின் காற்கூறு, அரைக்கூறு, முக்காற்கூறு, முழுக்கூறு என்னும் நான்கையும் உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமமென்பதும், இதை ஓர் நாளைக்கு மூன்றுவேளை புசிக்க வேண்டுமென்பதும், புளி, புளித்த வஸ்துக்கள், பெண்போகம் என்னும் இவைகள் ஆகாவென்பதும், வெண்ணெய், பால், வெங்காயம் என்னும் இவைகள் ஆகுமென்பதுமேயாம். (95)

**தாம்பிர பற்பம்.**

நாலுகைசா வாடுமுலை நாகமுனை கள்ளிவன்னி

நாலுகைசா வாடுமுதிர் நாகநெய்யே—நாலுகைசா
தோன்றியடி நேயமுமேற் சொன்னவூர் மன்னிபனேர்
தோன்றியடி நேயமுமேற் சூழ்

(இ - ள்.) [நாலு கைசா வாடு] = நான்கு காற்பலங்களான செம்பின் (பொடி), [நாகம் முன்னை கள்ளி வன்னி மூவை கைசா]=வெற்றிலைச்சாறு, முன்னை யிலைச்சாறு, இலைக்கள்ளிச் சாறு, வன்னியிலைச் சாறு (ஆகிய இந் நான்கும் தனித்தனி) பதினைந்திற் கால்வாசியான (மூன்றே முக்காற்பலங்களாகவும்) [நாலு கை சா ஆடும்] = தொங்கிய கைகளையுடைய பேய்கள் ஆடத்தக்க, [முதிர் நாகநெய்] = முதிர்ந்த புன்னை விதைத் தைலம் [கை சா நாலு]=ஒழுங்கிழக்கும்படிவிடாமல் [தோன்றி அடி நேயமும் மேல்] = காந்தட் கிழங்கின் தைலமும் முன் சொன்ன அளவே, [சொன்ன ஊர்]=பொன்னுலகத்தில், [மன் இபன் நேர் தோன்றி]=நிலை பெற்றிருக்கும் அயிராவதத்தை யுடைய (இந்திரனைப் போன்று) விளங்கி, [அடி நேயமும் மேல் சூழ்]=முதன்மையான நன்மைகளையும் இனிமேல் அடைவாய்
— எ - று.

(தா - ம்.) (a) முன் சொன்ன முறைப்படி சுத்திசெய்த தாம்பிர அரப்பொடி பலம்-1-க்கு, கற்பூர வெற்றிலைச்சாறு $3\frac{3}{4}$-பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து மறுநாளுதயத்தில் அதைக் கல்வத்திலரைக்க ஆரம்பித்து மீண்டும் புதிதான ஷ வெற்றிலைச்சாறு-$3\frac{3}{4}$-பலத்தை சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத் தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். 2-ம் நாளுதயத்தில் அரைக்க ஆரம்பித்து முன் வெற்றிலைச்சாறு-$3\frac{3}{4}$-பலத்தையே சிறுகச் சிறுக வார்த்து பகலில் அரைத்து இரவில் பில்லைசெய்து பனியில் ஆற வைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும்-13-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைதட்டிப் பனியில் ஆறவைத் தாறவைத்த பின்பு-16-ம் நாள் உதயமுதல்-6-நாள் வரையில் அந்தப் பில்லையை நிழலில் உலர்த்த வேண்டும். பின்பு-8-நாள் அதை வெளிக்காட்சியாகவும்-1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்றுயுலர்ந்த பின்பு-31-ம் நாள் உதயத்தில்-66-காட்டு வரட்டியிற் புடமிட்டு ஒருநாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க, ஆறிலொரு கூறு பற்பமாகியிருக்கும்.

(b) மறுபடி-33-ம் நாள், ஆறிலொரு கூறு பற்பமாகிய ஷை தாம்பிரபொடி பலம்-1-க்கு, மின்னியிலைச்சாறு-$3\frac{3}{4}$-பலம் விகிதம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே முன் போல வே யூறவைத்து, மறுநாளுதயத்திலரைக்க ஆரம்பித்து, மீண்டும் புதிதான மின்னியிலைச் சாறு-$3\frac{3}{4}$-பலத்தை விட்டுப் பகல் முழு வதும் அரைத்து இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதயத்தில் அரைக்க ஆரம்பித்து புதிதான முன் மின்னியிலைச் சாறு-$3\frac{3}{4}$-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகலில் அரைத்து இரவில் வில்லைசெய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும்-10-நாளும், பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைத்தட்டி பனியில் ஆறவைத் தாறவைத்த பின்பு-4-நாள் நிழலிலுலர்த்தி-7-நாள் வெளிக்காட்சியாகவும், -1-நாள் கவசித்தும் வெய்யிலுலர்த்தின பின்பு அடுத்த நாளுத யத்தில்-44-காட்டு வரட்டியிற் புடமிட்டு-1- நாளாறவைத் தெடுக்க அஞ்சி லொருகூறு பற்பமாயிருக்கும்.

(c) பின்பு-49-ம் நாள், அஞ்சிலொரு கூறு பற்பமான ஷை தாம்பிரப்பொடி பலம்-1-க்கு, இலைக்கள்ளிச் சாறு பலம்-$2\frac{1}{2}$- விகிதம், அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு ஊர வைத்து, மறுநாளுதயத்தில் அரைக்கத் தொடங்கும்போதும் முன் போலவே இலைக்கள்ளிச் சாறு-$2\frac{1}{2}$-பலம் விகிதம் விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைத் தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். மறுநாளுதயத்தி லரைக்க ஆரம்பித்து மீண்டும் புதிதான இலைக்கள்ளிச்சாறு-$2\frac{1}{2}$- பலம் விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைத்தட்டிப் பனியிலாறவைக்க வேண்டும். இவ்விதம் மீண்டும்-6-நாளும், பிரதிதினமும் முன் சாற்றையே, முன்னள வே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைதட்டி பனியில் ஆறவைத் தாறவைத்து, பின்பு-2-நாள் பில்லையை நிழலிலு லர்த்தி-5-நாள் அதை வெளிக்காட்சியாகவும்-1-நாள் கவசித் தும் வெய்யிலிலுலர்த்தி, அடுத்த நாள் காலையில்-33-காட்டு வரட்டியில் புடமிட்டு-1-நாளாறவிட்டெடுக்க நாலிலொரு கூறு பற்பமாயிருக்கும்.

(d) இதன் பின்பு-67-ம் நாள், காற் கூறு பற்பமான ஷை தாம்பிரபொடி பலம்-1-க்கு, வன்னியிலைச் சாறு பலம்-$3\frac{3}{4}$-

விகிதம், அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு ஊற வைத்து, மறுநாளுதயத்தில் அரைக்கத் தொடங்கும்போதும் முன்போலவே வன்னியிலைச்சாறு பலம்-$3\frac{3}{4}$-விட்டுப் பகல் முழு வதும் அரைத்து, இரவில் வில்லைசெய்து பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதயத்தில் அரைக்க ஆரம்பித்து முன் போலவே வன்னியிலைச்சாறு பலம்-$3\frac{3}{4}$- விட்டு பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைதட்டிப்பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே-2-தினமும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன் னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைதட்டி ஆறவைத் தாறவைத்துப் பின்பு-1-நள் பில்லையை நிழலில் உலர்த்தியும்-2-நாள் அதை வெளிக்காட்சியாகவும்-1-நாள் கவ சித்தும் வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில்-22- காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒரு நாளாறவிட்டு மறுநாளெ டுத்துப் பார்க்க மூன்றிலொரு கூறு பற்பமாயிருக்கும்.

(e) இதன் பின்பு-77-ம் நாள் மூன்றிலொறு கூறு பற்ப மான ஷை தாம்பிர பொடி பலம்-1-க்கும், நாளொன்றுக்கும், புன்னை நெய் என்கிற புன்னை விதைப் பருப்புத் தைலம் பலம் -2-விகிதம் எடுத்து ஷை பொடியை ஒரு இரும்பு சட்டியில் வைத்து, அடுப்பேற்றித் தீபாக்கினியா யெரித்து, ஷை தைலத் தைச் சிறுகச் சிறுக விட்டு, இடைவிடாமல்இரவும் பகலுமாகிய -8-சாமம் சுருக்கிட வேண்டும். இவ்வாறு மீண்டும்-2-முறை சுருக்கிட மூன்றிலிரண்டு கூறு பற்பமாகியிருக்கும்.

(f) இதன் பின்பு-81-ம் நாள் மூன்றிலிரண்டுகூறு பற்பமான ஷை தாம்பிரப்பொடி பலம்-1-க்கு நாளொன்றிற்கு, காந்தட்க்கிழங்கைக் குழித் தைலமாக இறக்கினது பலம்-2- விகிதம் முன்போலவே இடைவிடாமல், 3-நாள் சுருக்கிட்டெ டுக்க பூரணமான பற்பமாமென்பதே.

வடு எனற்பாலது வாடு என்வும், மூவை யெனற்பாலது மூவை யெனவும் செய்யுளிசை நோக்கி முறையே நீண்டும் குறு கியும் நின்றதென்க. (96)

**தாம்பிரபற்பத்திற்குப் பிரமாணமும், நாளும் அதற்காம் வஸ்துக்களும்.**

செப்பிடு வித்தை தினைசாமை காணமுன்னுற்

செப்பிடு வித்தை தினமேழேழ் - செப்பிடுநெய்
யக்காரம் பாலை யபூபம் பலவாழை
யக்காரம் பாலையளை யாம்.

(இ - ள்.) [செப்பிடு இத்து] = சொல்லிய இப்பற்பத்திற்கு (ப்பிரமாணம்); [ஐ தினை சாமை காணம் முன் நால்] = கடுகு, தினை, சாமை, கொள்ளு (என்னும் இந் நான்கில் ஒவ்வொன்றையும்) நான்கு நான்காகக் கொள்க; [தினம் செப்பிடு வித்தை ஏழ் ஏழ் முன் நால்]=(சாப்பிட வேண்டிய) நாள்கள் ஒன்றையே அதிகமாகக் காட்டுகிற விளையாட்டைப்போல ஏழு ஏழாக நான்கு வரையிற் கொள்க. எப்படியெனில் ஏரேழு, ஈரேழு, மூவேழு, நாலேழு முறையே யாகிய ஏழும், பதினான்கும், இருபத்தொன்றும், இருபத்தியெட்டுமாம், [செப்புஇடும் நெய் அக்காரம் பால் ஐ அபூபம் பல வாழை] = (பத்திய வஸ்துக்கள் எவையென்றால்); கிண்ணத்தில் வார்க்கத்தக்க நெய்யும் சருக்கரையும், பாலும், வெண்ணெயும், பண்ணிய வர்க்கங்களும் வாழைப்பழமும் ஆகும்; [அ காரம் பாலை அளை ஆம்]=அப்பற்றின் காரத்தால் இளமைத் தன்மை யடைதல் உண்டாம்

—எ-று.

(தா - ம்.) இப்பற்பத்திற்குக் கடுகும், தினையும், சாமையும், கொள்ளும் முறையே உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம் என்னும் பிரமாணமாயினும்; அவ்வொவ் வொன்றையும் நந்நான்கு பாகங்களாக்கி, அதில் ஒரு பாகத்தினளவாக சாப்பிடுவது முறையே இவ் வொவ்வொன்றிலும் நன்னான்கு உட்பிரிவுகளாகக் கொள்ளவேண்டும். எப்படி யெனில்.

உத்தமமாகிய கடுகுப்பிரமாணத்தில், காற்கடுப்பிரமாணம் உத்தமோத்தமம், அரைக்கடுகுப் பிரமாணம் உத்தம மத்திமம், முக்காற் கடுகுப் பிரமாணம் உத்தமாதமம், முழுக் கடுகுப் பிரமாணம் உத்தமாதமாதமம்.

மத்திமமாகிய தினைப்பிரமாணத்தில், கால்தினைப் பிரமாணம் மத்திமோத்தமம், அரை தினைப்பிரமாணம் மத்திம மத்திமம்; முக்கால் தினைப் பிரமாணம் மத்திமாதமம், முழுத் தினைப் பிரமாணம் மத்திமாதமாதமம்.

அதமமாகிய சாமைப் பிரமாணத்தில் காற்சாமைப் பிர

மாணம் அதமோத்தமம், அரைச்சாமைப் பிரமாணம் அதம மத்திமம், முக்காற்சாமைப் பிரமாணம் அதமாதமம், முழுச் சாமைப் பிரமாணம் அதமாதமாதமம்.

அதமாதமமாகிய கொள்ளுப் பிரமாணத்தில், காற் கொள்ளுப் பிரமாணம் அதமாத மோத்தம், அரைக்கொள்ளுப் பிரமாணம் அதமாதம மத்திமம், முக்காற் கொள்ளுப் பிரமா ணம் அதமாத மாதமம், முழுக்கொள்ளுப் பிரமாணம் அதமா தமாத மாதமம் என்பதே.

அவ்வாறே சாப்பிடும் நாள்களும் ஏழு, பதினுன்கு, இரு பத்தொன்று, இருபத்தெட்டு என்னும் நான்கு பாகங்களாக்கி முறையே உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம் எனக் கொள்ள வேண்டும்.

பத்தியவஸ்துக்கள், நெய், சர்க்கரை, பால், வெண்ணெய் பண்ணிய வகைகள், வாழைப்பழம் என்பவைகளே.

நெய் என்றதனுல் நெய்க்கிணையான வாதுமைக்கொட் டை, பூசினி விதை. பலாக்கொட்டை, கிட்டிக்கிழங்கு, உருளைக் கிழங்கு என்னும் இவை போன்ற நெய் பண்டங்களும்,

சர்க்கரை என்றதனுல், சர்க்கரைப்பாகு, கற்கண்டு, திராட்சிப்பழம், தேன், வள்ளிக்கிழங்கு, பலாப்பழம் என்னும் இவை போன்றவைகளும்,

பால் என்றதனுல் பாலுக்கு நிகரான பாயசம், பாற்கிண் டல், பாற்குழம்பு, பாற்பண்ணியம், பால்வடை, பச்சைமா, பச்சையரிசி, பயற்றங்கஞ்சி என்னும் இவை போன்றவைகளும்,

வெண்ணெய் என்றதனுல் பண்ணியக் குழம்பு, சர்க் கரைக்குழியல், பொரிக்குழைப்பிண்டிஎன்னும் இவை போன்ற வைகளும்,

பண்ணிய வர்க்கங்கள் என்றதனுல் லட்டுகம், மோதகம், பிட்டு, மா, சுசியை, தோசை, இட்டலி இவை போன்றவை களும்,

வாழை என்றதனுல், வெள்ளரிப்பழம், அத்திப்பழம் என்னும் இவை போன்றவைகளும் அடங்குதல் காண்க. (97)

## தாம்பிர பற்பத்தாற்றீரும் பிணிகளும் அனுபானமும்.

வல்லைக்குக் கங்கை வளிக்கறநீக் காச்சியம்பால்
வல்லைக்குக் கங்கை வலிக்கைபுலம்--வல்லைக்குத்
தண்டரிக்கு நாகவல்லி சாய்க்கிக்கு நோய்க்குமரி
தண்டரிக்குத் தேனலிக்குத் தார்

(இ - ள்.) [வல் ஐக்கு கங்கை]=வல்லபமுள்ள சேத்துமத்திற்கு நல்லதண்ணீரும்; [வளிக்கு அறல்]=வாதத்திற்கு வெந்நீரும்; [தீக்கு ஆச்சியம்] = பித்தத்திற்கு நெய்யும்; [பால்] = பசுவின்பாலும் ஆம்; [கம் கை வலிக்கு வல்லைக்கு ஐ புலம்] = தலை கரம் (என்னும் இவற்றின்) நோய்களுக்கும் அதிவிரைவில் (தீர்வதற்கு) வெண்ணெய்யும் சர்க்கரையுமாம்; [வல்லைக்கு தண்டு] = வல்லை (என்னும் நோய்க்கு) மூங்கிலிலைச்சாறு; [அரிக்கு நாகவல்லி] = வெப்பத்திற்கு வெற்றிலைச் சாறும்; [சாய்க்கு இக்கு] = நடுக்கு வாதத்திற்குக் கருப்பஞ்சாறும்; [நோய்க்கு குமரி]=சரீரவாத ரோகங்கட்குக் கற்ருழைச்சாறு; [தண் தரிக்கு தேன்]=ஜில்லிடுதல் நிலைத்திருக்கும் (வியாதிகளான ஜன்னிபாத ரோகங்கட்குத்) தேனும்; [நலிக்கு தார்]= வலிக்கின்ற (காக்கைவலி, குமரகண்டன்வலி) முதலியவலிகளுக்கு (தாமரை; நீலோற்பலம், அல்லி, நெய்தல்) (முதலிய) மலர்களின் சாற்றிலும் கொடுக்க வேண்டும்—எ-று.

(தா - ம்.) வல்லையென்பது முலைச்சிலந்தி, ஸ்தனக்கொப்புளம், கொங்கைப்பரு நகிற்கட்டி என்னும் பல்வேறு வகைப்படும்.

பொதுவாகச் சேத்தும ரோகங்கட்கு நல்லதண்ணீரிலும் வாதரோகங்கட்கு வெந்நீரிலும், பித்த ரோகங்கட்கு நெய்யிலும்;

கைவலிக்கும், தலைவலிக்கும், வெண்ணெயிலும்; சர்க்கரையிலும், வல்லையென்னும் கொங்கைப்பரு முதலியவற்றிற்கு மூங்கிலிலைச் சாற்றிலும்; வெப்ப ரோகங்களான சுரக்காய்ச்சல்

பிரமியக்காய்ச்சல், நளிர்காய்ச்சல், பித்தப் பிரமியக்காய்ச்சல், என்னும் இவை போன்றவைகட்கு வெற்றிலைச் சாற்றிலும்; தேகத்தைவளைத்து நிற்கவும் படுக்கவும் இருக்கவும் ஒட்டாமல் எந்நேரமும் வாதிக்கின்ற நடுக்கு வாதத்திற்குக் கருப்பஞ் சாற்றிலும், சரீரத்தின் சம்பந்தமான கீல்களிலே நரம்புகள் சுருட்டிக்கொண்டு எப்போதும் வலிப்பாகவலித்து வேர்வை யோடும்படி கடுக்கத்தக்க பித்தவாத சைத்திய விகடோபத்திர மென்னும் நோய்க்கும், வாதக்கிராந்திவலிக்கும், பித்தமேக வாயுவிற்கும், கபவாதனமென்னும் சுத்தமே உஷ்ணத்திற்கும் சுத்தவாதானலமென்கிற வாதசுரப் பிணிகட்கும், கற்றாலஞ் சோற்றிலும்; புத்தியை அடிக்கடி மாறச்செய்வதான உன்மத்த சேத்துமத்திற்கும், உன்மத்த வாயுவிற்கும், உன்மத்த பைசாச சுரத்திற்கும், உன்மத்தமேகானலத்திற்கும், மூர்ச்சை, ஜன்னி முதலான ரோகங்கட்குத் தேனிலும், காக்கைவலி, மாதங்காளல் வலி, பாரிடாத்திரி வலி, பெருவாரிக்காய்ச்சல், தொந்தாதி வலி, பூதவேதாள ஜன்னிவலி, பிராந்தியாக்ருதிவலி என்னும் ரோகங்கட்கு நீலோற்பலம் தாமரை அல்லி என்னும் இம்மலர் களின் சாற்றிலும்கொடுக்கக் குணமாமென்பதே. (98)

## தாம்பிரப்பற்பத்திற்குப் பத்தியம்.

சம்பீர மாமா தளைகிச் சிலிநரந்தை
சம்பீர மாமா தமர்த்தைகாச்—சம்பீரம்
வல்லிகளா காபித்த மாழையளை மோர்கார
வல்லிகளா காகா வடு.

(இ - ள்) [சம்பீரம்] = எலுமிச்சம்பழம், [மா] = மாம் பழம், [மாதளை] = மாதுளம்பழம், [கிச்சிலி] = கிச்சிலிப்பழம், [நரந்தை] = நாரத்தம்பழம், [சம்பு] = நாவற்பழம், [ஈரம்] = வெள்ளரிப்பழம், [ஆமா] = நெல்லிப்பழம், [தமர்த்தை] = தமரத்தம்பழம், [காச்சம்] = காச்சொறிக்கீரை, [பீரம்] = பீர்க் கங்காய், [வல்லி களாகாபித்தம்] = இலந்தைப்பழம் களாப்பழம் விளாம்பழம், [மாழை அளை மோர் காரவல்லிகள்] = கஞ்சி சுற்றின சாதம், தயிர், மோர், பாகற்காய், கள்ளு, (என்னும் இவைகள்), [ஆ கா கா வடு] = ஆகாத வஸ்துக்களாகலின் குற்றம் வராமற் காப்பாயாக — எ - று.

(தா - ம்.) ஷிபற்பம் சாப்பிடும்போது பிடிக்கவேண்டிய பத்தியமும் அதன் பின் பிடிக்க வேண்டிய மறுபத்தியம் என்ன

வென்றால்:— எலுமிச்சம்பழம், மாம்பழம், மாதுளம்பழம், கிச்சிலிப்பழம், நாரத்தம்பழம், நாவற்பழம், வெள்ளரிப்பழம், நெல்லிப்பழம், தமரத்தம்பழம், காச்சொறிக்கீரை பீர்க்கங்காய் இலந்தைக்கனி, களாக்காய், விளாங்கனி, கஞ்சி, தயிர், மோர், பாகற்காய், கள் என்னும் இவைகள் புசிக்கலாகாதாகையால், மறுபத்தியம் முடியும் வரையிலும் இவற்றைச் சாப்பிட்டுக் குற்றம் வராமற் காத்துக்கொள்வாயென்பதே.

எலுமிச்சம்பழம் என்றதனால் அதன் ரசமும், ஊறுகாயும் பெருங் களாக்காயும், கடுக்காயும்.

மாம்பழம் என்றதனால் மாங்காயும், மாங்காயூறுகாயும், மாங்காய்க் கறியும், மாவடுவும், மாங்காய் வற்றற்குழம்பும், புளியங்காயும், புளிக்குழம்பும், காட்டு மாங்கா யூறுகாயும், மருகங்காயும்.

மாதளம்பழம் என்றதனால் கடாரப்பழமும், கொடிமாதுளம்பழமும், கொடி முந்திரிகைப்பழமும்,

கிச்சிலிப்பழம் என்றதனால், கிச்சிலி யூறுகாயும், பச்சைத் திராட்சிப்பழமும்,

நாரத்தம்பழம் என்றதனால், நாரத்தங்கா யூறுகாயும், தேத்தான்கா யூறுகாயும், பாவட்டங்கா யூறுகாயும்,

நாவற்பழம் என்றதனால், கருநாவற்பழம், வெண்ணாவற் பழமும், குழி நாவற்பழமும்,

வெள்ளரிப்பழம் என்றதனால், வெள்ளரிப்பிஞ்சும், வெள்ளரிக்காயும், பிச்சப்பழமும், பூசினிக்காயும், பூசினிப் பழமும், பெரும் பூசினக்காய்க் கறியும், புடலங்காயும், வெங்காயத் தாளும், பூவும்,

நெல்லிப்பழமென்றதனால், நெல்லிக்காயூறுகாயும், நெல்லிப்பருப்பும், அதன் வற்றலும், அதன் துவையலும், அரிநெல்லிப்பழமும், அன்னுசிப்பழமும்,

தமரத்தம்பழம் என்றதனால் தமரத்தங்காயும், பிரம்பின் பழமும், நறுவிலிப் பழமும்,

காச்சொறிக்கீரை என்றதனுல், சுக்கங்கீரை, தரக்கீரை, வசலைக்கீரை, அகத்திக்கீரை, பசரைக்கீரை, முன்னைக்கீரை என்னும் இவைபோன்றவைகளும்,

பீர்க்கங்காய் என்றதனுல், தண்டு பீர்க்கங்காயும், வெள்ளை கக்கரிக்காயும், பெருங்கீரைத் தண்டும், வெந்தயக் கீரையும், அதன் குழம்பும், முல்ளங்கிக்கிழங்கும்,

இலந்தைப்பழம் என்றதனுல், இலந்தைக்காயும், சூரைப் பழமும், மணத்தக்காளிப்பழமும், புல்லாஞ்சிப்பழமும்,

களா என்றதனுல், இரும்பிலிப்பழமும், களாக்கா யூறுகாயும்,

விளாம்பழம் என்றதனுல், விளாங்காய்க்கறியும், அதன் பச்சடியும், கோவைப்பழமும், புளியாரைக்கீரையும், பொன்னுங் காணிக் கீரையும், கற்பூரவள்ளியிலையும்,

கஞ்சி என்றதனுல், கஞ்சிசுற்றிய சாதமும், கஞ்சித் தண்ணீரும், புளியோதனமும், நீர்மோரும்,

தயிர் என்றதனுல், புளித்ததயிர், இளந்தோய்ச்சற்றயிர், தயிர்க்கட்டிக்கறி, ததியோதனம், தயிர்ப்பச்சடியும்.

மோர் என்றதனுல், குழம்புமோர், நீர்மோர், அதன் குழம்பு, ததியோதனக்களியும்,

பாகற்காய் என்றதனுல், பாகற்காய்கறி, பாகற்காய் வற்றல், பாகற்கீரை, காட்டுப்பாகல், சுண்டைக்காயூறுகாய், சுண்டைக்காய் வற்றல், நுணுக்காயூறுகாய், நுணுப்பழம், தூது வேளைக்காயூறுகாய் வற்றலும், அத்திக்காயூறுகாய், வற்றல், கறிபழம், ஆலங்காய், இச்சிக்காய், அரசங்காயும், மொச்சைக் காய், பயற்றங்காய், காராமணிக்காய், துவரைக்காய், பெரும் பயற்றங்காய், உளுந்திங்காய், சோளப்பொரி, சோளக்களி, சோளக்கூழ், தினைமா, முத்துச்சோளமும்,

கள் என்றதனுல், பனங் கள்ளும், பனம் பழமும், நுங்கும், பனஞ்செக்கையும், தென்னங்கள்ளும், ஈச்சங்கள்ளும், சாராய

மும், அபினியும், கஞ்சாவும், புகையிலையும், புளித்தகாடித் தண்ணீரும், கழுநீர்க்குழம்பும் ஆகிய இவைகளெல்லாம் ஆகாதென்பதும் குறிப்பாய் விளங்குதல் காண்க. (99)

### தாம்பிரபற்பத்தின் மகிமை.

இப்படிக்கு ணுருணியை யின்முன் முதுமைதள்ளி
யிப்படிக்கு ணுதிசய மெய்திமெய்ய—விப்படிக்கு
வாலிபத்தை மேம்பாட்டை வாச்சியத்தை நீளுயிரை
வாலிபத்தை யெய்திமகிழ் வார்.

(இ - ள்) [இப்படிக்கு உணு ருணி அயில்] = இவ்வாறு உணவாகத் தாம்பிர பற்பத்தைப் புசிப்பாராகில்; [முன் முதுமை தள்ளி]=முன் வந்திருக்கும் வயோதிகத்தைப்போக்கி; [இப்படி குணுதிசயம் எய்தி] = இவ்வுலகத்தில் ஆச்சரியமான குணங்களை யடைந்து; [மெய் அவிர்ப்படிக்கு] = சரீரம் விளக்கமுறும் பொருட்டு; [வாலிபத்தை மேம்பாட்டை வாச்சியத்தை நீள் உயிரை]=இளவயதையும், பெருமதத்தையும், கலைஞானத்தையும், தீர்க்காயுளையும்; [வால் இபத்து ஐ எய்தி மகிழ்வார்] =வெள்ளை யானையையுடைய இந்திரனைப் போலப் பெற்றுக் களிப்பார்கள்—எ - று.

(தா - ம்) இத்தாம்பிர பற்பத்தைப் புசிப்பவர்கள் வெள்ளையானையையுடைய இந்திரனைப்போல, சரீர விளக்கமும் இளமையும், பெருமிதமும், கலை ஞானமும், தீர்க்காயுளும், இன்னும் அநேக விசேட குணங்களும் அடைவார்கள் என்பதாம்.

சீருணி என்பது தலைக்குறையாய் ருணிஎனவும், அவிர்ப்படிக்கு எனற்பாலது அவிப்படிக்கு எனவும், நின்றது, (100)

### அயநாகபற்பம், அதன் பிரயாகம் முதலியவைகள்

அயநாக மேனி யடிகணைகை மேலே
யயநாக மேனி யடிசெய்—யயநாகம்
பான மதுமழைபுல் பாலையர சாதியனு
பானமது மத்தியநுட் பம்.

(இ - ள்) [அயநாகம் மேனி அடி கணை கை]=அயநாகத்

கத்திற்கு குப்பைமேனிச்சாறு, செருப்படையிலைச்சாறு, திப்பிலிச்சாறு, கையாந்தகரைச்சாறு; [மேலே] = அதன்பின்; [அடி அயம் நாகம் மேனி செய்]=முதலில் ஆட்டைப்போலிருந்தவர்களை யானையைப் போன்ற சரீரமுள்ளவர்களாகச் செய்யும்; [அயநாகம்]=இவ்வயநாக பற்பத்தை; [பானம் மது மழைபுல் பால் ஐ]=கள், நீர், சர்க்கரை, பால், வெண்ணெயுமாம், [அரசு ஆதி அனுபான மது] = (மேற்சொல்லியவை) வாதம் முதலியவைக்கு முறையே அனுபானமாகும், [பத்தியம் நுட்பம்]= பத்தியம் (என்னவென்றால்) ரகசியமாகிய (பெண்போகம்) நீக்குதலேயாகும்.

(தா - ம்.) (a) சுத்திசெய்த அயநாகப்பொடி பலம்-1-க்கு குப்பைமேனியிலைச்சாறு -4- பலம் விட்டு, அறைப்பதற்கு முதல் நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்தில் அதை அரைக்க ஆரம்பித்து, மீண்டும் புதிதான ஷை குப்பைமேனிச்சாறு-4-பலம் சிறுகச் சிறுக விட்டு, அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். இரண்டாம்நாள் உதயத்தில் முன்சாற்றையே முன்னளவாகிய-4-பலம் விகிதம் சிறுகச் சிறுகவிட்டு அன்று பகல் முழுவதும் அரைத்து, மாலையில் பில்லைதட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும்-6-நாளும் பிரதிதினமும் முன்சாற்றையே, முன்னளவே விட்டுவிட்டு அரைத்தரைத்து,பில்லை தட்டி ஆறவைத் தாறவைத்து-9-ம் நாள் உதயமுதல் மாலை வரையில் பில்லையை வெளிக்காட்சியாய் வெய்யிலில் காயவைக்க வேண்டும். இவ்விதம் மீண்டும்-6-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யலில் காயவைத்து-17-ம் நாள் காலையில்-44-காட்டுவரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவிட்டு மறுநாளெடுக்க, காற்கூறு பற்பமாகியிருக்கும்.

(b) பின் -19-ம் நாள், காற்கூறு பற்பமான ஷை அயநாகப்பொடி பலம்-1-க்கு, நாளொன்றிற்கு, சிறு செருப்படை சமூலச்சாறு பலம்-3-விகிதம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவில் ஊரவைத்து, மறுநாளுதயத்திலும் முன்சாற்றையே முன்னளவாகிய-3-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு அன்று பகல் முழுவதும் அரைத்து மாலையில் பில்லைதட்டிப் பனியில் ஆறவைக்கவும். மறுநாளுதயத்திலும் முன்னளவாகிய-3-பலம்

முன் சாற்றையே சிறுகச் சிறுக விட்டு, அன்று பகல் முழுவதும் ஆரைத்து மாலையில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்விதமே மீண்டும்-5-நாளும் பிரதிதினமும் முன் சாற்றையே முன்னளவே விட்டு விட்டு, அரைத்தரைத்துப் பில்லைசெய்து ஆறவைத்தாறவைத்து, மறுநாளுதயந்தொடங்கி மாலைவரையில் அப்பில்லையை வெளிக்காட்சியாய் வெய்யிலில் காயவைக்கவேண்டும். இவ்விதம் மீண்டும்-5-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அடுத்த நாள் உதயத்தில்-36-காட்டு வரட்டியிற் புடமிட்டு-1-நாளாறவிட்டு மறுநாளெடுக்க அரைக் கூறு பற்ப மாயிருக்கும்.

(c) இவ்வாறே-35-ம் நாள், அரைக்கூறு பற்பமான ஷை அய நாகப்பொடி பலம்-1-க்கு, நாளொன்றிற்கு, பசும் அரிசித்திப்பிலிச்சாறு பலம்-2-வீதம் விட்டு, அரைப்பதற்கு முதல்நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்தில் முன்சாற்றை முன்னளவே விட்டு, அன்று பகல் முழுவதும் அரைத்து மாலையில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்கவும். மறுநாள் உதயத்திலும் முன்னளவாகிய-2-பலம் முன் சாற்றையே சிறுகச் சிறுக விட்டு பகல் முழுவதும் அரைத்து மாலையில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இப்படியே மீண்டும்-4-நாளும் முன்சாற்றையே முன்னளவே விட்டு விட்டரைத்தரைத்துப் பில்லைசெய்து ஆறவைத்தாறவைத்து, மறுநாளுதயந்தொடங்கி அப் பில்லையை வெளிக்காட்சியாய் வெய்யிலில் காயவைக்க வேண்டும். இவ்விதமே மீண்டும்-4-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து அடுத்த நாளுதயத்தில்-27-காட்டு வரட்டியில் புடமிட்டு-1-நாளாறவிட்டு மறுநாளெடுக்க முக்காற்வாசி பற்பமாயிருக்கும்

(d) மறுபடியும்-49-ம் நாள், முக்காற்கூறு பற்பமான ஷை அய நாகப்பொடி பலம்-1-க்கு, நாளொன்றிற்கு, கரசலாங்கண்ணிச்சாறு பலம்-1-வீதம் விட்டு அரைப்பதற்கு முதல்நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் முன் சாற்றையே, முன்னளவே விட்டு, அன்று பகல் முழுவதும் அரைத்து மாலையில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்கவும். மறுநாளுதயத்திலும் முன்னளவாகிய-1-பலம் முன் சாற்றையே சிறுகச் சிறுக விட்டுப் பகல் முழுவதும் அரைத்து மாலையில் பில்லை செய்து

பனியிலாறவைக்க வேண்டும். இவ்வாறு மீண்டும்-3-நாளும் முன்சாற்றையே முன்னளவு விட்டு விட்டு, அரைத்தரைத்து பில்லை செய்து ஆறவைத் தாறவைத்து, மறுநாளுதய முதல் மாலைவரையில் அப்பில்லையை வெய்யிலில் வெளிக்காட்சியாய்க் காயவைக்கவேண்டும். இவ்விதமே மீண்டும்-3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, மறுநாளுதயத்தில்-16-காட்டு வரட்டியில் புடமிட்டு -1- நாளாற வைத்து மறுநாளெடுத்துப்பார்க்க முழுக் கூறும் பற்பமாகியிருக்கும்.

இப் பற்பத்தைப் பனங்கள், தென்னங்கள், ஈச்சங்கள் என்னும் இவற்றில், பிரமாணப்படி கொடுத்தால், மகோதரம், சூலை, பக்கவாய்வு, பிடிப்பு, வல்லை, அண்டவீக்கம் என்னும் இவைபோல்வன தீருமென்று,

தேனிலே கொடுத்தால், வாதசுரம், வாதபித்தவெப்பம், வாதசேத்தும உஷ்ணம், வாதசன்னி நீர்க்கட்டுரோகம், உஷ்ண காங்கை, மேகவாதம் என்னும் இவைபோல்வன தீருமென்றும்,

சுத்தஜலத்திற்கொடுத்தால், பித்தவாயு, விக்கல், வாந்தி வொய்நீரூறல், தலை திருப்பல், பக்கசூலை, அசீரணம், வியர்த்தல், புன்னகைகொள்ளல் என்னும் இவைபோல்வன தீருமென்றும்,

சர்க்கரையிலாவது, கற்கண்டிலாவது கொடுத்தால், மதுமேகம், வெகு மூத்திரம், கிரிச்சரம், நீரடைப்பு, வெகு தாகம், வெகுபசி, பற்கடித்தல் என்னும் இவைபோல்வன தீருமென்றும்

பசுவின்பால், முலைப்பால், வெள்ளாட்டுப் பால், சாணப் பால் என்னும் இவற்று ளொன்றிற் கொடுத்தால், நளிர்சுரம், முறைக்காய்ச்சல், வெக்கை, உஷ்ணம், பெருவாரிக் காய்ச்சல், சுவேதானலம், நீர்க்கோவை, நீராமை, பெரும்பாடு, பெருங் குஷ்டம், கருங்குஷ்டம், மாரடைப்பு, பெருவயிறு இவைபோல் வன தீருமென்றும்,

வெண்ணெயிற் கொடுத்தால், சிரங்கு, செவ்வாப்பு, பருகட்டி, கொப்புளம், பெருஞ் சொரிக் குட்டம், சிறு சொரிக் குட்டம், மேகவரட்சி, வெப்பம், நேத்திரவாயு, நேத்திரப்படலம், நேத்திரத் துர்மாமிசப்பிணி, சாலேசரப் பிணி, கண்ணோய்,

கண்ணீர் முட்டல், கண் கட்டி, கண் பரு, கண் பீளை சாறல், புழுவெட்டு, இல்லிக்கண்ணோய், மண்டைக்குடைச்சல், ஒருதலை நோய், பீனசங்கள், சல வியாதி, சலதோஷம், விடாவேர்வை இவைபோல்வன தீருமென்றும் கூறினதாம். (101)

### குறிப்பு,

அய நாகத்தின் சுத்திக்கிரமம் இக் கிரந்தத்தில் பிரத்தியேகமாய்ச் சொல்லப்படவில்லை. ஆயினும் துத்திநாக சுத்திக்கிரமமுறையே யிதற்கும் பொருந்துமெனத்தெரிந்திருக்க வேண்டியது.

### வெள்ளீய பற்பம்; அதன் பிரயோகம் முதலியவைகள்.

படலிகையாங் கோவைவரை பட்சமைமுன் பாண்டீ
படலிகையாங் கோவையனு பானம்—படலிகையாங்
கீரந்தே மையங் கிலாலங்கா மன்மரிசங்
கீரந்தே மையவிது கேள்.

(இ - ள்.) [படலிகை ஆம் கோவை] = பெரும்பீர்க்கு, வெள்ளரி, கோவை (என்னும் இவற்றின் சாறுகள்); [பட்சம் வரை]=விருப்பத்துடன் வருவித்துக்கொள்; [முன் ஐ] = மேற்சொல்லிய வரிசைப்படி (செய்), [பாண்டீ]=வெள்வங்க (பற்பமாகும்); [படலிகையாம் கோவை அனுபானம்] = மணிகளாலாகிய மாலையைப் போன்ற அனுபானங்களாவன; [படலிகை ஆம் கீரம் தேம் ஐயம் கிலாலம் காமன் மரிசம்]=துளசிச்சாறு, கரிசாலைச்சாறு, கடுகினிலைச்சாறு, பால், தேன், வெண்ணெய், நல்லநீர், திப்பிலிரசம், மிளகுரசம் (என்னும் இவைகளே); [கீரம் தேம் ஐய இது கேள்]=சொற்களை இனிமையாகவுடைய மாணுக்கனே இதனைக் கேட்பாயாக—எ - று.

(தா - ம்.) (a) சுத்திசெய்த வெள்ளீயப்பொடி பலம்-1-க்குப் பெரும்பீர்க்கையிலைச்சாறு-4-பலம் வார்த்து, அரைப்பதற்கு முதல் நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்தில் அதை அரைக்கவும் புதிதான-4-பலம் ஷை பீர்க்கையிலைச் சாற்றையே சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, மாலையில் பில்லை தட்டிப் பனியிலாற வைக்க வேண்டும். 2-ம்

நாள் உதயத்திலும் அரைக்கத் தொடங்கி முன் பீர்க்கையிலைச் சாற்றையே முன்னளவாகிய-4-பலம் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து வில்லைசெய்துப் பனியில் ஆறவைக்க வேண்டும். இவ் விதம் மீண்டும்-13-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து, அரைத்தரைத்துப் பில்லை செய்து இரவுகளில்பனியிலாறவைத்தாறவைத்து வரவேண்டும் 16-ம் நாள் உதய முதல் மாலை வரையில் இப்பில்லையை வெளிக் காட்சியாய் வெய்யிலில் காயவைக்க வேண்டும். இவ்விதம் மீண்டும்-13-நாள் வெளிக்காட்சியாகவும் முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யலில் காயவைத்து-31-ம் நாள் உதயத்தில்-60-காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவைத்து, மறுநாளெடுக்க மூன்றிலொரு பாகம் பற்பமாகியிருக்கும்.

(b) பின்பு-33-ம் நாள், மூன்றிலொருகூறு பற்பமான ஷை வெள்ளீயப்பொடி பலம்-1-க்கு, வெள்ளரிச்சமூலச்சாறு-3-பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்தில் அரைக்கவும் புதிதான வெள்ளரிச் சமூலச்சாறு-3-பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, மாலையில் பில்லைசெய்து, இரவில்பனியில் ஆறவைக்க வேண்டும். அடுத்தநாளுதயத்திலும் முன் சாற்றையே முன்னளவாகிய-3-பலத்தைச் சிறுகச்சிறுக விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லையைப் பனியில் ஆறவைக்கவும். இவ் விதம் மீண்டும்-8-நாள் பிரதி தினமும் முன் சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்து பில்லைசெய்து, இரவுகளில் பனியிலாறவைத் தாறவைத்து வரவேண்டும். பின் பத்தாநாளுதயந் தொடங்கி-9-நாள் பில்லையை வெளிக்காட்சியாகவும், முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யலில் காயவைத்து மறுநாளுதயத்தில்-40-காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவைத்து மறுநாளெடுக்க மூன்றிலிரண்டு பங்கு பற்பமாயிருக்கும்.

(c) இதன் பின்பு-55-ம் நாள். மூன்றிலிரண்டுகூறு பற்பமான ஷை வெள்ளீயப்பொடி பலம்-1-க்கு கோவைச்சமூலச்சாறு பலம்-1-வீதம் விட்டு, அரைப்பதற்கு முதல்நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் புதிதான கோவைச் சமூலச்சாறு பலம்-2-விகிதம் விட்டு அன்று பகல் முழுவதும் அரைத்தும் பில்லை செய்து இரவில் பனியில் ஆறவைக்க வேண்டும். அதற்கு

மறுநாளுதயத்திலும் முன் சாற்றையே முன்னளவே சிறுகச் சிறுக விட்டு, பகல்முழுவதும் அரைத்து; இரவில் வில்லைசெய்து பனியிலாறவைக்க வேண்டும். இவ்விதம் மீண்டும்-3-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவே வார்த்துவார்த்து அரைத்தரைத்துப் பில்லைசெய்து இரவில் பனியில் ஆறவைத் தாறவைத்து, அடுத்தநாள்உதயந்தொடங்கி-4-நாள்பில்லையை வெளிக்காட்சியாகவும், முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அடுத்தநாளுதயத்தில்-20-காட்டுவரட்டியில் புடமிட்டு; ஒருநாளாறவைத்து மறுநாளெடுக்க முழுக்கூறு பற்பமாம்.

இவ்வெள்ளீய பற்பத்தின் அளவெப்படியென்னில்:- துவரையைநாற்கூறிட்டு, காற்கூறு உத்தமம்,அரைக்கூறு மத்திமம், முக்காற்கூறு அதமம், முழுக்கூறு அதமாதமமாம் என்பதே.

அவ்வாறே புசிக்க வேண்டிய நாட்பிரமாணமாவது:- பதினைந்துநாள் உத்தமம், முப்பதுநாள் மத்திமம், நாற்பத்தைந்துநாள் அதமம், அறுபதுநாள் அதமாதமமாம்.

அனுபானமாவன:— தனிச் சேத்தும வியாதிகட்குத் துளசிச் சாற்றிலும், சேத்தும வாத தொந்தமான மகோதர வுப்பசம், நீரேற்றம் என்னும் இவைகட்குக் கையாந்தகரைச் சாற்றிலும், சேத்தும பித்ததொந்தமான சன்னி, பித்தசோபை பெரும்பாடு என்னும் இவைகட்டுக் கடுகினிலைச் சாற்றிலும்.

தனிப்பித்தமான பயித்திய ரோகத்திற்குப் பாலிலும், பித்தகப தொந்தமான உன்மத்தஜன்னி, மரண மூர்ச்சை, வாயு என்னும் இவைகட்குத் தேனிலும், பித்தவாத தொந்தமான பித்தவாயு, மார்வலி, காரவெட்டை, பித்தோஷ்ணுதி சாரம் என்னும் இவைகட்கு வெண்ணெய்யிலும்.

தனிவாதத்தினு லுண்டாம் பிணிகட்கெல்லாம் குளிர்ந்த தண்ணீரிலும், வாதபித்த தொந்தத்தால் விளையும் வாதபித்த சுரத்திற்கும், விக்கலுக்கும், பித்த சூலைக்கும், வாதானல சுரத்திற்கும், வல்லை, பெறுவயிறு, வாத பித்த இரத்தமூலம், கீழ்மூலம், என்னும் இவைகட்குத் திப்பிலி ரசத்திலும், வாதசன்னி கைகாலசதி, வாதநீர்க்கோவை, ஒருத்தலைநோய், மகோதரம் என்னும் இவைகட்கு மிளகு ரசத்திலும் கொடுக்கவேண்டும் என்பதே.

## காந்த பற்பம்.

நீபம் பரவிசைய நிம்பவடி மேலறலே
நீபம் பரவிசையை நீத்திவையே—நீபம்
பரமா பரணமப் பாலந்தப் பாலும்
பரமா பரணமப் பால்.

(இ - ள்.) [நீபம் பரவிசையம் நிம்பவடிமேல் ஆறல்]= கடம்பம்வேர்ப்பட்டை, தும்பைவேர்ப்பட்டை, வேப்பம்வேர்ப் பட்டை, (என்னும் இவைகளின்) சாறும்; [நீ பரம்பரவிசையை நீத்து]= நீ பம்பரம்போல் (வீணிற்) சுழலும்வேகத்தை ஒழித்து [இவையெ நீபம்] = இவைகளே முறைமையாகக் கொண்டு; [பரம்மாபரண் நாமப்பால் அந்தப் பாலும்] = உடலுக்குச் சிறந்த கவசமாகும்; செப்பு நெருஞ்சிற் சமூலத்திளுலுண்டா கும் அவ்வகையானசாறும் (சேர்ப்பாயாக); ]அப்பால்]=அதன் பின்பு; (காந்தமானது) [பரம ஆபரணம்]=பரமனுக்கு ஆபரண மாகிய (வெண்ணீருபோலாகும்) — எ - று.

(தா-ம்.) (*a*) முன் சொன்ன முறைப்படி சுத்தி செய்த காந்தம் பலம்-1-க்கு, கடப்பம் வேர்ப்பட்டைச்சாறு-5-பலம் விட்டு, அரைப்பதற்கு முதல்நாளிரவே ஊறவைத்து, மறுநாளு தயத்திலும் மீண்டும் புதிதான ஷை கடப்பம் வேர்ப்பட்டைச் சாறு-5-பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவ தும் அரைத்து, இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். 2-ம் நாளுதயத்திலும் முன் கடப்பம் வேர்சாறு -5-பலத்தையே சிறுகச் சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும்-18-நாளும் பிரதி தினமும் முன் சாற்றை யே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத்தரைத்துப் பில்லை தட்டிப் பனியில் ஆறவைத் தாறவைத்த பின்பு-21-ம் நாள் உதய முதல்-19-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் -1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி:நன்ருயுலர்ந்த பின்பு -41-ம் நாள் உதயத்தில்-80-காட்டு வரட்டியிற் புடமிட்டு ஒரு நாளாறவிட்டு மறுநா ளுதயத்திலெடுக்க, நான்கிலொருகூறு பற்பமாகி யிருக்கும்.

(*b*) மறுபடி-44-ம் நாள், நான்கிலோருகூறு பற்பமாகிய ஷை காந்தப்பொடி பலம்-1-க்கு தும்பையிலைச் சாறு-4-பலம்

விகிதம் சிறுகச் சிறுக விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவே முன்போலவே யூறவைத்து மறுநாள் புதிதான தும்பையிலைச் சாறு-4-பலத்தை விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதயத்திலும் புதிதான முன் தும்பையிலைச் சாறு-4-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகலில் அரைத்து இரவில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும்-13-நாளும் பிரதிதினமும் முன்சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப்பில்லைத்தட்டிபனியில்அறவைத்தாறவைத்த பின்பு-14-நாள் வெளிக்காட்சியாகவும் முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யலுலர்த்தின பின்பு, அடுத்தநாளுதயத்தில்-60-காட்டு வரட்டியிற் புடமிட்டு-1-நாள் ஆறவைத்தெடுக்க அரை வாசி பற்பமாயிருக்கும்.

(c) பின்பு-75-ம்நாள், அரைவாசி பற்பமான ஷைகாந்தப் பொடி பலம்-1-க்கு, நூறுவருஷஞ் சென்ற வேம்பின் வேர்ப் பட்டைச் சாறு பலம்-3- விகிதம், அரைப்பதற்கு முதல்நாளிர விலேயே விட்டு ஊறவைத்து, மறுநாளுதயத்தில் அரைக்கத் தொடங்கும்போதும் முன் போலவே முன் வேம்பின் வேர்ப் பட்டைச் சாறு-3-பலம் விகிதம் விட்டு, முன்போலவே பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆற வைக்க வேண்டும். மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான முன் வேர்ப்பட்டைச்சாறு-3-பலம் விகிதம் விட்டுப் பகல் முழு வதும் அரைத்து இரவில் வில்லை தட்டிப் பனியி லாறவைக்க வேண்டும். இவ்விதம் மீண்டும்-8-நாளும், பிரதிதினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து,அரைத்தரைத்துப் பில்லைதட்டி பனியில் ஆறவைத் தாறவைத்து, பின்பு-9-நாள் அதை வெளிக் காட்சியாகவும்-1-நாள் கவசித்தும் வெய்யிலிலு லர்த்தி, அடுத்த நாள் காலையில்-40-காட்டு வரட்டியில் புட மிட்டு-1-நாளாறவிட்டெடுக்க, முக்கால்வாசிபற்பமாயிருக்கும்.

(d) இதன் பின்பு-97-ம் நாள், முக்காற்கூறு பற்பமான ஷைகாந்தப்பொடி பலம்-1-க்கு, செப்புநெருஞ்சிச் சமூலச்சாறு பலம்-2-விகிதம், அரைப்பதற்கு முதல் நாளிரவிலேவே விட்டு ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே செப்பு நெருஞ்சிற் சமூலச்சாறு பலம்-2-சிறுகச் சிறுக விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைசெய்து பனியில் ஆற

வைக்க வேண்டும். மறுநாளுதயத்திலும் முன்போலவே ஷை நெருஞ்சிச் சமூலச்சாறு பலம்-2-சிறுகச் சிறுக விட்டு பகல் முழு வதும் அரைத்து, இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறு மீண்டும்-3-நாள் பிரதி தினமும் முன் சாற்றையே முன்னளவே, வார்த்துவார்த்து, அரைத்தரைத்துப் பில்லைதட்டி ஆறவைத் தாறவைத்து-4-நாள் அதை வெளிக் காட்சியாகவும்-1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில்-20-காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒரு நாளாறவிட்டு, மறுநாளெடுத்துப்பார்க்க முழுக்கூறு பற்பமா யிருக்கும் என்பதே.

## காந்த பற்பத்தின் அனுபானமும், பிரமாணமும்.

மூக்கிற் கரியார் முதலுக் கறலடுத்தார்
மூக்கிற் கரியா முனைக்குள்ளி—மூக்கிற்கு
மாரீச மேகக்கு மாலலங்க லேய்க்குமது
மாரீச மேகக்கு வார்.

(இ - ள்.) [மூக்கிற் கறியார்]=(ஷை பற்பம்) குன்றிமணி யினளவே (சாப்பிடுவது); [முதலுக்கு அறல்] = வாத ரோகங் கட்கு நல்ல தண்ணீரிலும்; [அடுத்து ஆர் மூக்கிற்கு] = அவ்வா தத்தை யடுத்திருக்கும் (பித்தத்தின்) முதிர்ச்சியான (ரோகங் கட்கு); [அரி ஆம்]=வெந்நீரிலும்; [முனைக்கு உள்ளி]=போர்க் குரிய (தளர்த்த னென்னும் சேத்தும ரோகங்கட்கு); [உள்ளி] =வெள்ளைப்பூண்டு தைலத்திலும்; [மூக்கிற்கு] = சுவாச ரோ கங்கட்கு; [மாரீசம்] = மிளகுத் தைலத்திலும்; [மேகக்கு] = மேக ரோகங்கட்கு; [மால் அலங்கல்]=திருமாலின் மாலையாகிய (துளசிச் சாற்றிலும்); [எய்க்கு]=இரைப்பு, இளைப்பு முதலிய ரோகங்கட்கு; [மது]=தேனிலும்; [மாரீசம் ஏக அக்கு வார்]= மயக்கம் தருவதாகிய (மூர்ச்சை ரோகங்கட்கு) ஏகனுகிய (ருத் திரன்) கண்ணென்று (சொல்லும்) உருத்திராக்ஷத்தை யுரைத்த ரசத்திலும் (அனுபானித்துக் கொடுக்கவும்) — எ - று.

(தா - ம்.) இப்பற்பத்தைக் குன்றியி னளவாகப் புசிக்க வேண்டு மென்றமையின், காற் குன்றியி னளவு உத்தமமும். அரைக் குன்றியி னளவு மத்திமம், முக்காற் குன்றியினளவு அதமமும், முழுக் குன்றியி னளவு அதமாதமமுமாம் என்பதும்,

வாத ரோகங்கட்கும், பெரு வயிறு, வல்லை முதலியவை கட்கும் நல்ல தண்ணீரிலும்,

பித்த ரோகங்கட்கும், அதைச் சேர்ந்த முதிர்ச்சியான பித்த வாயு, பித்த பாண்டு, பித்தஜன்னி, மகாஜன்னி, காமாலை என்னும் இவை போன்றவைகட்கும் வெந்நீரிலும்,

சேத்தும ரோகங்கட்கும், அது சம்பந்தமான கப ஜன்னி பாதம், பாலக்கிராணி, பெரும்பாடு, வயிற்று வலி, பக்கச் சூலை, பொருமல், உப்பிசச் சூலை, கிராணி, சுவாச நீர்க்கட்டு, பானுகம் பவாயு, கபக் காய்ச்சல், வெப்புப்பிணி, குட்டம் என்னும் இவை போன்றவைகட்கும் வெள்ளைப் பூண்டு தைலத்திலும்,

மேற் சுவாச அதி யுப்பிசம், வாதானல சுரம், குடலைப் பின்னிமுறுக்கும்பிணிகள், பாரிசவாயு,மகோதரம், மாரடைப்பு என்னும் இவை போன்றவைகட்கு மிளகுத் தைலத்திலும்,

மேக காங்கை, இரத்த காசரோகம், இரத்த பீனசரோகம், இரத்த இருமற் சுவாச காசம், இரத்தக் கழிச்சல், அதிசார ஜன்னி, தாப சுரம் என்னும் இவைபோன்றவைகட்குத் துளசிச் சாற்றிலும்,

இளைப்பினல் வருவதான க்ஷயரோக இருமல், சுவாச விக்கல், வாத பந்தப் பிடிப்பு, மார் நோய், மாரடைப்பு, விடா வேர்வை, வாத ஜன்னி, எரி குன்மம், வாந்தி, எரிகுன்மப் பாண்டு, பாரிசச்சூலை, பெருவாரிக் காய்ச்சல் என்னும் இவை போன்றவைகட்குத் தேனிலும்,

மரண மூர்ச்சையைப்போன்ற காக்கைவலி, பித்தஜன்னி சுப ஜன்னி, உன்மத்தாங்கார மனோரதமூர்ச்சை, ஊர்த்தசுவாச விக்கல், திரிதோஷ தொந்த சுரம், லிங்கப் புற்று, யோனிப் புற்று துன்மாமிச மூலம், பவுத்திரம் என்னும் இவை போன்றவைகட்கு உருத்திராக்ஷமுரைத்த தண்ணீரிலும், அனுபானித்துக்கொடுக்க வேண்டுமென்பதுமேயாம். (103)

**காந்த பற்பத்தின் விதிவிலக்கு.**

ஆச்சியம்பா லக்கார மையா டகிமூலி

யாச்சியம்பா லக்கார மைதோரை—யாச்சியம்பால்
சிந்தமளே யையவிகொள் சேறெண்மோர் காடிபுகை
சிந்தமளே யையவிஃ தே.

(இ-ள்.) [ஆச்சியம் பால் அக்காரம்]=நெய்யும் பாலும் சர்க்கரையும்; [ஐ ஆடகி மூலி]=வெண்ணெய், துவரை, கிழங்கு (என்னும் இவைகள்) [ஆச்சி அம் பால்] = தாயின் அழகிய முலைப்பாலைப் (போற் கொள்ளத்தக்கவைகள்); [அக்காரம் மை தோரை] = இனிமையான நீர் மூங்கிலரிசி; [ஆச்சு இயம்பு] = இவைகளும் ஆகத்தக்க வைகளென்று ரைப்பாயாக; [சிந்தம் அளே ஐயவி கொள்] = புளி தயிர் கடுகு கொள்ளு; [சேறு எள் மோர் காடி புகை] = கள் எள் மோர் காடி புகையிலை, [சிந்து அமளே ஐய விஃதே]=கடலைப்போற் பேரொலியுடன் வார்த்தையாடுதல் என்னும் இவைகளே (நீக்கத்தக்கவை) மாணுக்கனே—எ - று,

(தா-ம்.) நெய்யும் பாலும் சருக்கரையும் வெண்ணெயும் துவரையும் கிழங்கு வகைகளும், மதுரமுள்ள நீர் மூங்கிலரிசி என்னும் இவைகள் ஆகுமென்பதும், புளி, தயிர், கடுகு, கொள்ளு கள், எள், மோர், காடி, புகையிலை, பேரொலியுள்ள வார்த்தை என்னும் இவைகள் ஆகா என்பது மேயாம்.

நெய் என்றதனுல், இதற் கினமான நெய்ப் பூரி, பாதங் கொட்டை முதலியவைகளும், சர்க்கரைஎன்றதனுல், சர்க்கரைப் பொங்கல் முதலியவைகளும், பால் என்றதனுல், பசுவின் பால் முதலிய பால்களும், பால் வடை, பாற் குழம்பு, பால்மோதகம் என்னும் இவைபோல்வனவும், துவரை என்றதனுல், துவரை மாப் பண்ணியம், பருப்புருண்டை முதலிய பருப்பு சேர்ந்த பதார்த்தங்களும், கிழங்கு என்றதனுல், வெங்காயம், கருணைக் கிழங்கு என்னும் இவைபோல்வனவும், மற்றும் இவ்வண்ணமே அதற் கினமானவைகளா மென்பதும், ஆகாதவைகட்கினமாயுள்ளன யாவும் ஆகாதென்பதுமே. (104)

### லவண பற்பம்; அதன் பிரயோகம் முதலியவைகள்.

வாசித் துவரை வளமாக்க வென்றுனூல்

வாசித் துவரை வளலேயம்பு—வாசித்து
நாற்கா ருவநோ நளினந்தே மோர்முனேகோ
நாற்கா ருவநோய்நீ நான்.

(இ - ள்.) [வாசித்து உவரை வளம் ஆக்க என்றால்] = மணத்துகொண்டிருக்கும் லவணத்தைப் பற்பமாக்க வேண்டு மாகில்; [நூல் வாசித்து வரை வளலே அம்பு வா சித்து]=வைத்திய நூல்களேப் படித்து, காஞன், தண்ணீர் முட்டான், அத்தி கொட்டி, [நாற்கு ஆருவம்]=இந் நான்கிற்குரியசாறும்; [நோய் நளினம் தேம் மோர்] = காய்ந்தநீர் தேன் (பசுவின்) மோர்; [முன் ஐ கோ] = இம் மூன்றும் முறையே சேத்துமம் பித்தம் வாதம் என்றும் முப் பிணிகட்கு மாகும்; [நீ நான் நோய் நாற்காருக]=நீ, நான் என்னும் அகங்காரப் பிணியை அழிப்பாயாக-எ - று.

(தா - ம்.) (*a*) முன் சொன்ன முறைப்படி சுத்தி செய்த லவணம் பலம்-1-க்கு, கறுப்புப் பூ வுடையதாய்க் கொஞ்சம் வெண்மையும் செம்மையுங் கலந்திருக்கும் முட்டைக் காஞன் என்னும் பூண்டின் சமூலச்சாறு-4-பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் புதிதான ஷை முட்டைக்காஞன் சாறு-4-பலத்தை சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லேத்தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் முன் காஞன்சாறு-4-பலத்தையே சிறுகச்சிறுக வார்த்து பகலில் அரைத்து இரவில் பில்லேசெய்து பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும்-2-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லே தட்டிப் பனியில் ஆறவைத் தாறவைத்து-5-ஆம் நாள் உதய முதல்-3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் -1-நாள் கவசித்தும், வெய்யிலில் உலர்த்தி, நன்ருயுலர்ந்த பின்பு-9-ஆம் நாள் உதயத்தில்-32-காட்டு வரட்டியிற் புடமிட்டு, ஒருநாளா றவிட்டு, மறுநாளுதயத்தி லெடுக்க, நான்கிலொரு கூறு பற்ப மாகியிருக்கும்.

(*b*) மறுபடி-11-ம் நாள், நான்கிலொரு கூறு பற்பமா கிய ஷை லவணப்பொடி பலம்-1-க்கு தண்ணீர் முட்டான் கிழிங்குச் சாறு-3-பலம் விகிதம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே முன் போலவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும்

மீண்டும் புதிதான ஷை கிழங்குச் சாறு-3-பலத்தை விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். மறுநாளுதயத்திலும் புதிதான முன் கிழங்கின் சாறு-3-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டுப் பகலில் அரைத்து இரவில் பில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும்-4-நாளும், பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னளவே, வார்த்து வார்த்து, அரைத்தரைத்து பில்லைதட்டிப் பனியல் ஆறவைத் தாறவைத்து-5-நாள் வெளிக் காட்சியாகவும், முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யிலிலுலர்த் தின பின்பு, அடுத்தநாளுதயத்தில்-27-காட்டு வரட்டியிற் புட மிட்டு-1-நாளாறவைத்தெடுக்க அரைக்கூறு பற்பமாயிருக்கும்.

(*c*) பின்பு-25-ம் நாள், அரைக்கூறு பற்பமான ஷை லவணப்பொடி பலம்-1-க்கு, அத்திப் பால் பலம்-2-விகிதம், அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு ஊறவைத்து, மறு நாளுதயத்திலும் புதிதான ஷை அத்திப்பால்-2-பலம் விகிதம் விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத் தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். மறுநாளுத யத்திலும் மீண்டும் புதிதான அத்திப்பால்-2-பலம் விகிதம் முன்போலவே விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைத்தட்டிப் பனியிலாறவைக்க வேண்டும். இவ்விதம் மீண் டும்-8-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைதட்டி பனியில் ஆறவைத் தாறவைத்து-9-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யலிலுலர்த்தி, அடுத்தநாள் காலையில்-22-காட்டு வரட்டியில் புடமிட்டு-1-நாளாறவிட்டெ டுக்க முக்காற் கூறு பற்பமாயிருக்கும்.

(*d*) இதன் பின்பு-47-ம் நாள், முக்காற்கூறு பற்பமான ஷை லவணப்பொடி பலம்-1-க்கு, கொட்டியிலைச் சாறு பலம்-1- விகிதம், அரைப்பதற்கு முதல்நாளிரவிலேயே விட்டு ஊற வைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே கொட்டியிலைச் சாறு பலம்-1-விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதயத் திலும் கொட்டியிலைச் சாறு பலம்-1-முன் போலவே விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும்-10-தினம் பிரதி

தினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைதட்டி ஆறவைத்தாறவைத்துப்பின்பு -11-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யலில் உலர்த்தியும், அடுத்தநாள் காலையில்-16-காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு, மறுநாளெடுத்துப் பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும் என்பதும்.

பிரமாணமாவது:— துவரையின் கால்வாசி யளவாகச் சாப்பிடுவது உத்தமம். அரைவாசி யளவாகச் சாப்பிடுவது மத்திமம். முக்கால்வாசி யளவாகச் சாப்பிடுவது அதமம். முழுவாசி யளவாகச் சாப்பிடுவது அதமாதமம் என்பதும்.

இவ்வாறே சாப்பிடவேண்டிய நாள் பிரமாணமாவது:- முப்பத்திரண்டு நாள் உத்தமம். இருபத்து நான்கு நாள் மத்திமம். பதினாறு நாள் அதமம். எட்டு நாள் அதமாதமம் என்பதும்.

இந்த லவண பற்பத்தை வெந்நீரிற் கொள்ள, தலையிடிப்பு, உன்மத்தம், பெரும்பாடு, மகோதரச்சூலை, மூர்ச்சை என்னும் இவை போன்றவைகளும்,

மிளகுத் தூள், கடுகுத் தூள் இவை வகைக்குச் சமனெடை கலந்து அதில் விராகனெடை-$\frac{1}{4}$-லுடன் ஷை பற்பத்தை கலந்து வெந் நீரிற்கொள்ள, வல்லை, சத்தி, ஈளை, இருமல், பாண்டு, விக்கல் என்னும் இவை போன்றவைகளும்;

தேனிற் கொள்ள, பாரிசவாய்வு, மோதகாதிப்பிடுப்பு, உப்பிசம், இரைப்பு என்னும் இவை போன்றவைகளும்,

திப்பிலிப்பொடியுடன் தேனிற் கொள்ள, நேத்திரவாயு, மாலைக் கண், புழுவெட்டு, புளிச்ச கண், ஜன்னி, பித்த காரகம், க்ஷயம் என்னும் இவை போன்றவைகளும்;

புளித்த பசுவின் மோரிற் கொள்ள, கால் கை எரிவு. சரீரா னலம், வாய்நீர்ப் பெருக்கு, பிரமியம், கண் புகைச்சல், வரட்சொரி, சிரங்கு, செவ்வாப்பு, கரப்பான், வெறித்தேமல், தவளைச்சொரி, மருக்கட்டி, தினவு, பெருவாரிக்காய்ச்சல், மூலம், பீனசம், அசீரணம் என்னும் இவை போன்றவைகளும்;

இஞ்சிரசம் சமமாகச் சேர்ந்த தேனிற்கொள்ள, திமிர் வாதம், மாரடைப்பு, பெரு மூர்ச்சை, ருத்திர வாயு, பெரு வியாதி, குட்டம் என்னும் இவை போன்றவைகளும்;

குளிர்ந்த நீருடன் சேர்ந்த தும்பராஷ்ட கஷாயத்திற் கொள்ள, நீர்க்கட்டு, நீரருகல், நீர்ச்சுருக்கு, வயிற்று வலி, குன்மம் என்னும் இவை போன்றவைகளும்;

கடுச்காய்ப் பொடி சேர்ந்த நல்ல தண்ணீரிற் கொள்ள தந்தப் பிளவை, தந்த வாயு, தந்தநோய், பல்லசைவு, பல் ஈறு கட்டல், நாக்கு ரணம், உதட்டு ரணம் என்னும் இவைபோன்றவைகளும்;

கொன்றைப் பிசின் கூட்டின நல்ல தண்ணீரிற் கொள்ள மதுமேகம், நீர்க்கிரந்தி, நீரொழுக்கு, நீர்ப் பெருக்கு என்னும் இவை போன்றவைகளும்;

எருக்கிலைச் சாற்றிற்கொள்ள, தேள், நண்டு தெரிக்கை, செய்யான், பூரான், பாம்பு, பே நாய்க்கடி என்னும் இவை போன்ற விஷ கடிகளும் தீருமென்பதுமாம். (105)

### லவண பற்பத்தின் வல்லபம்.

அன்னஞ் செரிக்கு மசீரணமில் கோமுதலே
யன்னஞ் செரிக்கு மரந்தைகளோ—யன்னமெயா
யுப்படலை யால்வளிக்கே யுப்படலை யால்வலிமை
யுப்படலை யாலதமை யும்.

(இ - ள்.) [அன்னம் செரிக்கும் அசீரணமில்] = அன்னம் சீரணமாகும் அசீரண மிராது; [கோ முதல் ஏய் அல் நஞ்சு எரிக்கும்] = வாத முதலாகப் பொருந்திய கறுத்த விஷங்களை யழிக்கும்; [அரந்தைகள் ஓய் அன்னம் மெய்] = துன்பங்கள் ஓயும்படி அன்னப் பறவைக் கொப்பச் (சரீரத்தி னின்றும்)பிரிக்கும், இஃதுண்மை; [வளிக்கே ஆயு படலையால்]=பிராணவாயுவிற்கு ஆயுளென்னும் கபாடமாகும்; [உப்பு அடு அலை வலிமை] =உப்புநீர் சேர்ந்த கடற்போற் பெருகிய வலுவைக் கொடுக்கும்; [அது] = மேற் சொன்ன சீர்த்திகள்; [உப்பு அடலையால் அமையும்]=உப்புப் பற்பத்தாற் பொருந்தும்—எ - று.

(தா - ம்.) லவண பற்பத்தால் சீரண சத்தி யுண்டாய் அக்கினி மந்தம் நீங்கிச் சரீரத்திலுள்ள ரோகங்களெல்லாம் பிரிந்து ஆயுள் விர்த்தி பொருந்தித் தேகத்துக்கு விசேடித்த வலுவுண்டாமென்பதாம். (106)

## லவண பற்ப மகிமை.

இலவண வெண்மை யிரண்டிலுமில் லாகி
யிலவண வெண்மை யிகமெய்—யிலவண
வாட்கையென்றுற் பத்தியமேன் வாயமுதொன் றுயுளர்க்கு
வாட்கை யென்றுல் வாகடமம் மா.

(இ - ள்.) [இலவண வெண்மை] = இந்த லவண பற்பமானது; [இரண்டிலும் இல் ஆகி] = வைத்தியத்திலும் வாதத்திலும் இருப்பிடமாய்; [இலாவண எண்மை இக] = இல்லாமைத் தன்மையுடைய எளிமையானது ஒழிய; [மெய்யில் அவ்வண வாட்கை என்றுல்] = சரீரத்திலும் நோயில்லாத வாழ்வைத் தருமென்றுரைப்போமாயின்; [பத்து இயம் ஏன்] = பலவார்த்தைகள் என்னத்திற்கு; [வாய் அமுது ஒன்று] = வாய்க்கப்பட்ட நிகரற்ற அமுதமாகும்; [ஆயுளர்க்கு வாகடக் கைவாள் என்றுல்] = ஆயுள்வேதியர்களுக்கு வைத்தியக்கைவாள் என்று சொல்லலாகும்—எ-று. அம் மா வியப்பிடைச்சொல்.

(தா - ம்.) லவண பற்பமானது வைத்தியம் வாதம் என்னும் இரண்டிற்கும் முதன்மையான தாய் வாத முறையில் எவ்வாறு தரித்திரத்தை அதம்பண்ணத் தக்கதோ அவ்வாறே வைத்தியத்தில் நோய்களை அதம்பண்ணத்தக்கது, ஆகையால், நோயாளிகட்கு அமுதமும் வைத்தியர்களுக்கு வாளுமாகுமென்பதாம். (107)

## காரீய பற்பம்.

காருணிய வந்த கனமாகக் காரீயங்
காருணிய வநத கனமாவேள்—காருணிய
நாம மறையாறு நாலுபுட மத்தனமாம்
நாம மறையாறு நலி.

(இ - ள்.) [காரீயம்] = கருவங்கம்; [கார் உண்ணிய வந்த கனம் ஆக] = நீர் குடிப்பதற்கு வந்த (வெண்) மேகத்தைப்போல்

ஆவதற்கு; [காருணி அவம் தகனம் மா வேள் காருணியநாமம்] =பசலை, ஆகாயத்தாமரை, வன்னி, பசுமஞ்சள், செப்புநெருஞ்சி கிருபையின் பெயருடைய (கருணை); [அறை ஆறு]=சொல்லிய ஆறு வஸ்துக்களின் (சாற்றிலே); [நாலுபுடம்] = (ஊறவைத்தல், அரைத்தல் வெயிலிலுலர்த்தல் என்னும் மூன்றும் செய்து (நான்காவதான புடமுமிட்டு (முடிந்தால்) [நலி நாமம் மறை ஆறு மத்தனமாம்]=வியாதிகளின்பெயர்கள் மறைந்துபோகும் முறைமையாக அழிந்துவிடும்—எ - று.

(தா - ம்.) (*a*) பின் சொல்லப்படும் முறைப்படி சுத்தி செய்த காரீயப்பொடி பலம்-1-க்கு, பசலைக்கீரைச்சாறு-6-பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை பசலைக் கீரைச்சாறு-6-பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைத் தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் முன் பசலைக் கீரைச் சாறு-6-பலத்தையே சிறுகச்சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும்-4-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத்தரைத்துப் பில்லைதட்டிப் பனியில் அறவைத்தாறவைத்த பின்பு-7-ஆம் நாள் உதய முதல்-5-நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்றாயுலர்ந்த பின்பு -13-ம் நாள் உதயத்தில்-45-காட்டு வரட்டியிற் புடமிட்டு ஒரு நாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க; ஆறிலொருகூறு பற்பமாகி யிருக்கும்.

(*b*) மறுபடி-15-ஆம் நாள், ஆறிலொருகூறு பற்பமாகிய ஷை காரியப்பொடி பலம்-1-க்கு ஆகாசத்தாமரையிலைச்சாறு-5-பலம் விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவே யூறவைத்து மறுநாளுதயத்திலும் மீண்டும் புதித்தான ஷை ஆகாயத்தாமரையிலைச்சாறு-5-பலத்தை சிறுகச் சிறுக விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதயத்திலும் புதிதான முன் தாமரையிலைச் சாறு-5-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகலில் அரைத்து இரவில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும்-3-நாளும் பிரதிதினமும் முன் சாற்றையே

முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைத் தட்டிப் பனியில் ஆறவைத்தாறவைத்து-4-நாள் வெளிக்காட்சியாகவும் முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யிலுலர்த்தினபின்பு அடுத்த நாளுதயத்தில்-36-காட்டு வரட்டியிற் புடமிட்டு-1-நாள் ஆறவைத்தெடுக்க மூன்றிலொறு கூறு பற்பமாயிருக்கும்.

(c) பின்பு-27-ம் நாள், மூன்றிலொருகூறு பற்பமான ஷி காரீயப்பொடி பலம்-1-க்கு, வன்னியிலைச் சாறு பலம்-4-விகிதம் அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு ஊற வைத்து, மறுநாளுதயத்தில் முன் போலவே வன்னியிலைச்சாறு -4-பலம் விகிதம் விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்துஇரவில்பில்லைத்தட்டிப்பனியில் ஆறவைக்கவேண்டும். மறுநாள் உதயத்திலும் மீண்டும் புதிதான வன்னியிலைச்சாறு -4- பலம் விகிதம் விட்டு பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைதட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்விதம் மீண்டும்-2-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே முன்னளவே விட்டுவிட்டரைத்தரைத்துப் பில்லை தட்டிப்பனியில் ஆறவைத்தாறவைத்து, 3- நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் -1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அடுத்தநாளுதயத்தில்-28-காட்டு வரட்டியல் புடமிட்டு-1-நாளாறவிட்டு மறு நாளெடுக்க அரைக்கூறு பற்பமாயிருக்கும்.

(d) இதன் பின்பு-37-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான ஷி காரீயப்பொடி பலம்-1-க்கு பசுமஞ்சட்சாறு பலம்-3-விகிதம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே பசுமஞ்சட்சாறு பலம்-3-விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதயத்திலும் முன்போலவே ஷி சாறு பலம்-3-சிறுகச் சிறுக விட்டு, பகல் முழுவதும் அரைத்து; இரவில் வில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்விதம் மீண்டும்-1-நாள் முன் சாற்றையே முன்னளவே வார்த்து அரைத்து பில்லைசெய்து ஆறவைத்துப் பின்பு -2-நாள் அதைவெளிக்காட்சியாகவும் முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யிலில்காயவைத்து,அடுத்தநாளுதயத்தில்-18-காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவைத்து மறுநாளெடுத்துப் பார்க்க, மூன்றி லிரண்டுகூறு பற்பமாயிருக்கும்.

(e) பின்பு-45-ஆம் நாள், மூன்றிலிரண்டுகூறு பற்பமான ஷ டி காரீயப்பொடி பலம்-1-க்கு, செப்பு நெருஞ்சிச்சாறு பலம் 2-விகிதம்விட்டு, அரைப்பதற்கு முதல்நாளிரவில் ஊறவைத்து மறுநாளுதயத்திலும் முன்போலவே செப்பு நெருஞ்சிற்சாறு-2 பலம் விகிதம் விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லை தட்டிப் பனியில் ஆறவைக்கவும். மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான செப்பு நெருஞ்சிற்சாறு-2-பலம் விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும். பின்பு-2-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில்-1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி அடுத்தநாள் உதயத்தில்-16-காட்டு வரட்டியிற் புடமிட்டு -1- நாளாறவிட்டெடுக்க ஆறிலைந்து கூறு பற்பமாகியிருக்கும்.

(f) இதன் பின்பு-53-ஆம் நாள், ஆறிலைந்துகூறு பற்பமான ஷ டி காரீயப்பொடி பலம்-1-க்கு, கருணையிலைச்சாறு-1-பலம் விகிதம், அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு யூறவைத்து, மறுநாளுதயத்திலும் புதிதான கருணையிலைச்சாறு -1-பலம் வார்த்து பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதய முதல் மாலைவரையில் பில்லையை வெளிக்காட்சியாகவும் அடுத்த-1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அதற்கடுத்த நாளுதயத்தில்-9-காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவைத்து மறுநாளெடுத்துப்பார்க்க, முழுக்கூறும் பற்பமாயிருக்கும்.

**காரீயபற்பத்திற்கு அனுபானம் முதலியவை.**

சிரவலியாற் பாறு சிகாவளமா வென்றூர்
சிரவலியாற் பாறுளைகா றீவச்—சிரவலியாற்
கானமழை மானமுது கன்னியறல் வன்னியறல்
கானமழை பானமிவை கள்.

(இ - ள்.) [சிரவல் இ ஆல் பாறு சிகாவளம் மா]=கவுதாரி, ஈ, துரிஞ்சில், பருந்து, மயில், வண்டு, [என்று ஆ]= என்று பொருந்திய, [சிரவலி] = தலைநோய், [ஆல்] = நடுக்குவாதம், [பாறு]=விடவாயு, [உளை]=சிணுக்குவாதம், [கால்]= படர் வாதம், [தீ] = திணறு வாதம், (என்னும் இவைகட்கு

முறையே) [வச்சிரவல்லியால்]=பிரண்டைச்சாற்றிலும்;[கான மழை]=துளசிச் சாற்றிலும், [மான் அமுது]=முலைப்பாலிலும் [கன்னி அறல்] = கற்றாழைச் சோற்றின் சாற்றிலும், [வன்னி அறல்] = வெந்நீரிலும், [கான மழை] = தேனிலும், [பானம் இவைகள்]=ஆக இவைகளே அனுபானங்களாம்—எ-று.

(தா - ம்.) இக்காரிய பற்பத்தை, கவுதாரி பறப்பது போன்ற ஒருவித ஒலியும், பதைப்பும், துடிப்பும், தலையிலுண்டாகத் தக்கதாய் வலியும் இரைச்சலும் உண்டாகிற சிணுக்கு வாதத்திற்கும், சைத்திய பாண்டுக்கும், முறை நளிர்சுரத்திற்கும், வெள்ளோக்காளத்திற்கும், பிரண்டைச் சாற்றிலும்;

ஈ எப்படி பறந்து அசையுமோ அவ்வாறான தொனியும், தலையிலடுத்த கன்னத்தில் தோன்றி, உடம்பெல்லாம் நடுங்கும் நடுக்கு வாதத்திற்கும், திமிர் வாதத்திற்கும், அக்கினிமந்த அசீரண வெப்பத்திற்கும், துளசிச் சாற்றிலும்;

பறக்கிற துரிஞ்சிற் பட்சியைப்போல் தேகத்திறபறந்து உபத்திரவத்தைப் பெருக்குவதான விடவாயுவிற்கும், மாற்சால வாயுவிற்கும், பாரிச வாயுவிற்கும், முலைப்பாலிலும்,

பருந்தைப்போற் பறந்து, உச்சந்தலையிற் சத்தமும், பிணிப்பும், சுழற்சியும் உண்டாய், சர்வாங்கமுமுள்ள மயிர்க்கால்கள் தோறும் வெயர்வை தோன்றிக்கடுப்பதற்கும், காக்கை வலி, பெரும்பாடு, மூர்ச்சை, பச்சகந்தவலி, பாரிசவாதக்கிராணி என்னும் இவைகட்கும், கற்றாழைச் சோற்றின் ரசத்திலும்,

மயில் எப்படி சிறகுகளை விரித்தாடி யப்பாற் பறக்குமோ அப்படி முன்பு நெற்றியிற் கிறுகிறுப்பு தோன்றிப் புசித்த அன்னத்தைச் சீரணிக்க வொட்டாமற் செய்து வயிற்றிற் குன்மத்தைப்போல் வலித்து புளியேப்பம் உண்டாய், வாந்தி, விக்கல் கண்டு அதனாற் றுன்பம் விளைக்கும் படர் வாதம், வாதப் பிணிப்பு, வல்லை, மகோதரம், பெருவியாதி, நீரழிவு என்னும் இவைகட்கு வெந்நீரிலும்,

வண்டு பறப்பதுபோலப் பின்புறமான பக்கத்தலையிலே வலியும், அதனது சத்தமும் காதிலும், கண்டத்திலும் வரச் செய்து, உடம்பெல்லாம்பாரித்துக்கொண்டு நளிர்சுரமென்றும்,

பித்தசுர மென்றும், முறைக்காய்ச்ச லென்றும், பிறைக்காய்ச்ச லென்றும், விஷவாத சுரமென்றும், வெக்கை வெப்பமென்றும், பித்த ஜன்னிபாத சுரமென்றும், உட்காய்ச்சலென்றும், அத்தி சுரமென்றும், எலும்புருக்கிக் காய்ச்சலென்றும், வரப்பட்டவை கட்கும்; விப்புருதி, ஆமைக்கட்டு, நேத்திரவாயு, துன்மாமிசப் படலம் என்னும் இவைகட்கும் தேனிலும், அனுபானித்துக் கொடுக்க நிவாரணமாகு மென்பதே. (109)

**இதுவும் காரீய பற்பத்திற் கனுபானம்.**

கற்கவசம் புக்கமலங் காயமுறு காயமெனிற்
கற்கவசம் புக்கமலங் காரீயங் - கற்கவச
மாரிசியு மேல்வலேயு மாலுமறுங் காமனுக்கு
மாரிசியு மேல்வலேயு மாய்.

(இ - ள்.) [காயம் உறு காயம் கற்கு அவ்வசம் புக்கு அமலம் எனில்] = சரீரத்திலுள்ள காயங்கள் (நீங்கி) மலேக்கு (நிகரான) அத்தன்மை யடைந்து பரிசுத்தம் ஆகவேண்டுமா னல்; [கற்க வசம்பு கமலம் காரீயம்] = கடைச் சரக்காகிய வசம்புக் (குடி) நீரில் காரீய (பற்பத்தைப்) புசித்தால்; [கல் கவசம்]=இது வச்சிர கவசமாகும்; [மாரிசியும் மேல் வலேயும் மாலும் அறும்] = மிளகையும் மேற் சொன்னபடி (குடி நீர் செய்து அதில் இப் பற்பத்தைப் போட்டுக் குடித்தால்) வல்லேக் கட்டியும், பித்த சோகையும் நிவாரணமாகும்; [காமனுக்கு]= திப்பிலியை (மேற் சொன்னபடி குடிநீராக்கி ஷெ பற்பத்தை வைத்துப் புசித்தால்); [மார் இசியும்]=மாரைப் பற்றி வலிப்ப தான மாரடைப்பும்; [மேல் வலேயும்]=சரீரத்தின் மேற் கவிந் திருப்பதான பித்த பாண்டும்; [மாய்]=ஒழியும்—எ - று.

(தா - ம்.) ஒருவனுக்கு மேக உஷ்ணதிகளாலும், ஆயுத முதலியவற்ருலும், மிருகாதிகளாலும்உண்டாகும் இரணங்கள் நிவாரண மாவதற்காக, வசம்புக்குடி நீரில், இப் பற்பத்தைப் போட்டும்.

வல்லேயும், பித்தசோகையும், நிவாரணமாக வேண்டுமா யின், மிளகுக் குடிநீரில், இப்பற்பத்தைப் போட்டும்,

மாரடைப்பு, பித்தபாண்டு, முதலியவை நிவாரணமாக

வேண்டுமாயின், திப்பிலிக் குடிநீரில் இப் பற்பத்தைப் போட்டும் புசிக்க வேண்டுமென்பதாம். இவ்வாறு புசிப்போர்களின் சரீரங்கட்கு இப் பற்பமே வச்சிர கவசமாகும், (110)

### காரீய பற்ப முண்ணும் நாள்.

அரைமதியார் முப்பொருண்மை யாகுமுறை யன்னி
யரைமதியார் கிட்டினமெய் யாகி—லரைமதியார்
கண்டனையன் றுண்டதினங் காதினம் போற் காதுமது
கண்டனையன் றுண்டதினங் காண்.

(இ - ள்.) [அரை மதி ஆர் முப் பொருண்மை ஆகும் முறை] = அரைத்தல், கலத்தல், பொடித்தல், என்னும் முப் பகுதியான தொழில்களின் முறைமைப்படி, [அன்னி யரை மதியார்]=வைத்தியர்க ளல்லாதவர்களுடன்யோசியாதவர்களாய் [கிட்டினம் மெய் ஆகில்]=கரு வங்கத்தைப் பற்பஞ் செய்தாகுமானுல்; [அரை மதியார் தனையன் கண் துண்டது இனம் காது இனம் போல்] = அர்த்த சந்திரனைச் சூடிய சிவபிரான் குமாரரான முருகக்கடவுளின் கண்களும, மூக்கின் தொகுதியும், செவிகளின் தொகுதியும் போலப் (புசிப்பாயாகில்); [காதும் அது உண்ட தினம் அன்று கண்டனை காண்]=வருத்துகின்றநோயை இப் பற்பத்தைப் புசித்த அன்றைய தினம் பார்த்தனையன்றி மறுபடி பார்ப்பாயோ—எ - று.

(தா - ம்.) இப்பற்பத்தைப் புசிக்கவேண்டிய நாள்களில் உத்தம, மத்திம, அதமங்கள்எவையென்னில், முருகக்கடவுளின் கண்களான பதினெட்டென்னும் எண்ணை யுடைய நாள்கள் உத்தம மென்றும், அவரது செவிகளான பன்னிரண்டென்னும் எண்ணை யுடைய நாள்கள் மத்திமமென்றும். அவரது நாசிகளான ஆறென்னும் எண்ணையுடைய நாள்கள் அதமமென்றும் அறிவாயாக என்பதாம், (111)

### அப்பிரக பற்பமும், அதன் பிரமாணமும்.

கொத்தவரைச் சாறு குவலையமாம் வல்லியமெய்
கொத்தவரைச் சாறு குறித்தமுக்காற்—கொத்தவரை
யப்படியே யோர்மை யளவுகூ ரஞ்சதுர்த்தி
யப்படியே யிப்படியே யாம்.

(இ - ள்.) [கொத்தவரைச் சாறு குவலையம் ஆம் வல்லி அம்] = கொத்தவரைச்சாறும், நீலோற்பலச் சாறும், கட்டுக் கொடியின் சாறும்; [மெய் கொத்த அரைச்சு ஆறு குறித்த முக் கால்]=அப்பிரகத்தை (மேற்குறித்த சாறுகளில்) முறைப்படி அரைத்துப் (புடம் போட்டு) ஆறின பிறகு சொல்லிய முக்கால் வாசிப் பற்பமாம்; [கொத்தவரை அடி அய்யே ஓர்மை] = பசு மூங்கில் கிழங்கின் சாற்றிலேதான் பூரணமாகும்; [அளவு சூரம் சதுர்த்தி] = சாப்பிடவேண்டிய அளவாவது கடலையில் நாலி லொரு கூறும்; [அப்படியே இப்படியே ஆம்]=அவ்வாறே புசிப் பார்களாயின் இவ்வுலகத் தாராகவா ஆவார்கள் (அல்ல தேவர் களைப் போலாவார்கள்)—எ - று.

(தா - ம்.) (a) முன் சொன்ன முறைப்படி சுத்தி செய்த அப்பிரகப்பொடி பலம் -1- க்கு கொத்தவரை மூலச்சாறு -6- பலம் விட்டு, அரைப்பதற்கு முதல்நாளிரவே யூறவைத்து, மறு நாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை கொத்தவரைச் சாறு -6-பலம் சிறுக சிறுக விட்டு, அன்று பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைதட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இரண் டாம் நாள் உதயத்திலும் முன் சாற்றையே முன்னளவாகிய -6-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகலில் அரைத்து, இர வில் பில்லைதட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும்-4-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னள வே, விட்டு விட்டு, அரைத்தரைத்து, பில்லைதட்டி பனியில் ஆற வைத்தாறவைத்து, பின்பு -7- ஆம் நாள் உதயமுதல் -5- நாள் அதை வெளிக்காட்சியாகவும்-1-நாள் கவசித்தும் வெய்யலில் நன்ருய்க் காயவைத்து பின்பு-13-ம் நாள் காலையில்-40-காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவிட்டு மறுநாளுதயத்தி லெடுக்க, நான்கிலொரு கூறு பற்பமாகியிருக்கும்.

(b) மறுபடியும்-15-ஆம் நாள், நான்கிலொருகூறு பற்ப மான ஷை அப்பிரகப் பொடி பலம்-1-க்கு, நீலோற்பலச் சாறு பலம்-5-விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல்நாளிரவே முன் போலவேயூறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை நீலோற்பலச்சாறு-5-பலத்தை விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்கவும். மறு நாளுதயத்திலும் புதிதான முன் நீலோற்பலச் சாறு-5-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டுப் பகலில் அரைத்து இரவில்பில்லை

செய்து பனியிலாறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும்-3-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே முன்னளவு விட்டு விட்டு அரைத்தரைத்து பில்லை செய்து பனியில் ஆறவைத்தாற வைத்து-4-நாள் வெளிக் காட்சியாகவும் -1- நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, பின்பு மறுநாளுதயத்தில்-36-காட்டு வரட்டியிற் புடமிட்டு -1- நாளாறவைத்து மறுநாளெடுத்துப் பார்க்க அரைக்கூறு பற்பமாகி யிருக்கும்.

(c) பின்பு-27-ம் நாள், அரைக்கூறு பற்பமான மேற்படி அப்பிரகப்பொடி பலம்-1-க்கு கட்டுக்கொடியிலைச்சாறு-4-பலம் வார்த்து, அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு யூற வைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படிச்சாறு 4-பலம் விகிதம்விட்டு முன்போலவேபகல் முழுவதும்அரைத்து இரவில் பில்லை தட்டிப் பனியிலாறவைக்க வேண்டும். மறுநாள் உதயத்திலும் மீண்டும் புதிதான ஷை சாறு-4-பலம் விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைசெய்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்விதம் மீண்டும்-2-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவே வார்த்துவார்த்து அரைத்தரைத்துப் பில்லைசெய்து பனியிலாறவைத்தாறவைத்து -3-நாள் அதை வெளிக் காட்சியாகவும் -1- நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து மறுநாள் காலையில்-32-காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவைத்து, மறுநாளெடுக்க முக்காற்கூறு பற்பமாகியிருக்கும்.

(d) இதன் பின்பு-37-ஆம் நாள் முக்காற்கூறு பற்பமான ஷை அப்பிரகப்பொடி பலம்-1-க்கு, பசு மூங்கிற்கிழங்கின் சாறு பலம்-3-விகிதம் அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி கிழங்கின் சாறு பலம்-3-விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லை தட்டிப் பனியில்ஆறவைக்கவேண்டும். இவ்வாறே அடுத்த-1-நாளுஞ் செய்து-2-நாள் அதை வெளிக் காட்சியாகவும்-1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும் அடுத்தநாள் காலையில்-28-காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒரு நாளாறவிட்டு, மறுநாளெடுத்துப் பார்க்க முழுக்கூறு பற்பமா யிருக்கும்.

இப்பற்பத்தை ஓர் கடலையின் காற்கூறளவாகப் புசிப்பது

உத்தமம், அரைக் கூறளவாகப் புசிப்பது மத்திமம், முக்காற் கூறளவாகப் புசிப்பது அதமம், முழுக்கூறளவாகப் புசிப்பது அதமாதம மென்பதாம்.

## அப்பிரக பற்பத்திற்கு அநுபானமும். தீரும் நோய்களும்.

மண்ணைப்பூ சம்பீர மாலலங்கல் பானெய் தயிர்
மண்ணைப்பூ சம்பீர மாதறல்கண் — மண்ணைப்பூ
கோவுழையன் பற்றல்விடல் கோலமிக லல்கல்பந்தங்
கோவுழையன் பற்றளர்வு கொள்.

(இ - ள்.) [மண்ணை பூசம் பீரம் மால் அலங்கல் பால் நெய் தயிர்] = பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, திருமாலின் மாலையான (துளசி என்னும் இவற்றின் சாறும்) பசுவின் பால், ஷை நெய், மேற்படி தயிர்; [மண்ணைப்பூ சம்பீரம் மாது அறல்கள்] =வெங்காயப்பூச் சாறு, எலுமிச்சம்பழச் சாறு, முலைப்பால், குளிர்ந்த ஜலம், பனங்கள் (முதலியவை); (என்னும் இவற்றை முறையே) [மண் ஐ பூ]=சிறந்த சேத்தும ரோக மிகுதிக்கும், [கோ]=வாதரோகங்கட்கும், [உழையன்] = பித்த ரோகங்கட்கும், [பற்றல்] = இவ்விரண்டும் தொந்தித்த ரோகங்கட்கும்; [விடல்]=இவ்விரண்டும் மாறுபட்ட ரோகங்கட்கும்;[கோலம்] =நீரழிவுக்கும், [மிகல்] = நீர்ப்பெருக்குக்கும், [அல்கல்]= நீர்ச் சுருக்கும், [பந்தம்]=நீர்க்கட்டுக்கும், [கோ உழையன்] = கண்ணினிடத்துள்ள ரோகங்கட்கும், [பல் தளர்வு]=பலவித (நேத்திரக்) குறைவுகளுக்கும், [கொள்=(மேற்கூறியவற்றை) அனுபானமாகக் கொள்வாயாக-- எ - று.

(தா - ம்.) சேத்தும மிகுதியாலாகிய சேத்தும ஜன்னிக்குப் பேய்ப் புடலையின் சாற்றிலும், வாதாதிக்கத்தாற் காணும் வாத ஜன்னிக்குப் பேய்ப்பீர்க்கின் சாற்றிலும், பித்தாதிக்கத்தாலாகிய பித்த ஜன்னிக்குத் துளசிச் சாற்றிலும்,

சேத்துமத்தைப்பற்றி வரப்பட்டதானசீதசுரம், மித்திர சுரம், கபச்சூலை, மகோதரம், பெருவயிறு, நீரேற்றம், வல்லை, கபக்கிராணி, அதிசாரம், பக்கசூலை பயோதர வன்மீகமென்னும் முலைக்கிரந்தி ஆகிய இவைகட்கு, இலக்கணப்பழுதற்ற பசுவின் பாலிலும்,

வாதத்தைப்பற்றி வருகின்ற வாதகுன்மம், வாதானலப் பெருஞ்சுரம், வாதமகோதர விக்கல், மாரடைப்பு, உப்பிசச் சுவாசகாசம், பக்கசூலைத்தம்பனம், மேற்சுவாச ஊர்த்தானலம், பாரீசவாயு, வேர்வைக் குரோதானிலம், ஆமைக்கட்டு, வல்லை, பக்கசூலை என்னும் இவைகட்கு பசுவின் நெய்யிலும்,

பித்தத்தைப்பற்றி வருவதான பித்தசோபை, பித்த சுரம், பக்கஇசிவு, பிராந்திவாயு, மேகவாயு, வெள்ளோக்காளம் அன்னத்துவேஷம் என்னும் இவைகட்கு பசுவின் தயிரிலும்,

சேத்துமத்தைப் பிரிந்து மாறுபட்டதனலுண்டாகிற ஊர்த்தகாசஉப்பசப்பொருமல், மாரடைப்பு, மேற்சொரி, தேமல் தினவு, ஆருச்சிரங்கு, கொப்புளம், நீர்க்கோர்வை, நீரேற்றம், தினவெடுத்துச் சொரிந்தவுடன் புண்ணுகின்ற கடுகன் என்னும் இவைகட்கு வெங்காயப் பூவின் சாற்றிலும்,

வாதத்தைப் பிரிந்து மாறுபட்டதனலுண்டாகும் உருத் திரவாயு, நடுக்கு வாதம், வாத சுர மூர்ச்சை, சரீரமெங்கும் சந்து சந்துக்கும் வசியடித்திருப்பதுபோற் கடுகடுக்கச் செய்யும் பந்தவாதம் என்னும் இவைகட்கு, எலுமிச்சம்பழச் சாற்றிலும்,

பித்தத்தைப் பிரிந்து மாறுபட்டதனலுண்டாகும் அதி உக்கிரமான நெருப்பைப்போற் கண்கள் சிவக்கவும், வாய்நீர் இடைவிடாமற் சொறியவும், வார்த்தைகள் தவறிப் போகவும் செய்வதான உருத்திர பித்தவாயு, இரத்தம் வாயிலே கக்கத் தக்கதாக விக்கலை யுண்டாக்கி, இடைவிடாமல் அசைப்பிக்கும் இரத்தகாசப் பித்தவாயு, காக்கைவலி, மூர்ச்சை வாயு, பேச வொட்டாமற் பல்லைக் கிட்டிக்கொள்ளச் செய்வதான வாத பித்த தொந்த ஜன்னி, பாரித்துக்கொண்டு தலை வலிப்பதான கப ஜன்னி, கூத்தாடிக் கூத்தாடிக் கீழே விழத்தள்ளுவதான சுக ஜன்னி, பசி பசி என்றும், தாகம் தாகம் என்றும் கேட்க, அன்னபானுதிகளைக் கொண்டு போனவுடன் அவற்றை யுட் கொள்ள வொட்டாமற்படி செய்யும் வாதப்பகட்டு, சரீரமெங் கும் எறும்பூறுவதுபோலே யூர்ந்து வரவரத் தானே மெலிந்து கடுகடுக்கச்செய்யும் துர்வாதப் பருவரல் என்னும் இவைகட்கு முலைப்பாலிலும்,

இருவகை நீரிழிவு, அவற்றால் உண்டாகும் ஆயாசம்,

இளைப்பு என்னும் இவைகட்கு குளிர்ந்த ஜலத்திலும்,

மிக்க பிரயாசத்துடனே எரிச்சலுண்டாய், வெகுநேரம் பொறுத்துப் பொறுத்து துளித் துளியாய் இரத்தங் கூடக் கலந்து வருவதான நீரருகல் என்னும் இத்தகைய வியாதிகட்கு, தென்னை, பனை, ஈந்து, என்னும் மூவகைக்கள்ளில்சிரேஷ்டமான தென்னங்கள்ளிலும்,

ஒரு துளி நீரும் இறங்காமற் கட்டியிருக்கும் நீர்க்கட்டு, வாதவெப்பம், கப வெப்பம் என்னும் இரண்டும் தொந்தித்தத ஞலுண்டாகும் காதி ஜன்னி, வாதம், மகா மூர்ச்சை, ஜன்னி என்னும் இவைகட்கு, பனங்கள்ளிலும்,

நேத்திரத்தைத் தோண்டிஎடுப்பதுபோலே எப்போதும் வாதைப்படுத்துகிற நேத்திரவலி, நேத்திர எரிச்சல், பீளைசாருதல் என்னும் இவைகட்கு ஈச்ச மரத்துக் கள்ளிலும்,

கண்கட்டி, கண் வீக்கம், இரப்பை, புருவம், இவையிரண்டின் வலி, கண்கள் எட்டிக்கனிபோற் சிவந்து மணலைக்கொட்டிவிட்டதுபோலரித்தல் என்னும் இவைகட்கும் ஷெ ஈச்சங் கள்ளிலும்,

நேத்திரவாயுவால் விழிகளை யுள்ளே இழுத்துக்கொள்ளுதல் முதலியவற்றிற்கு பேரீச்சங் கள்ளுடன் கலந்த குப்பைமேனிச் சாற்றிலும்,

பாரிசவாயுவுக் கிழுப்பதுபோலக் கண்களை இழுப்பதான நேத்திரசூலை, நீர் முட்டல் என்னும் இவைபோன்றவைகட்கு, பேரீச்சங்கள்ளுடன் கலந்த நொச்சிலிச் சாற்றிலும்,

நேத்திரத்தில் வெண்ணெயைப்போல அடிக்கடி பீளை சாருவதற்கு, பேரீச்சங்கள்ளுடன் கலந்தகற்றாழைச் சோற்றின் சாற்றிலும்,

அனுபானித்துக்கொடுக்கவேண்டு மென்பதே.

**அப்பிரக பற்பத்தை விஷங்கட்குக் கொடுக்க அனுபானம்.**

ஆயிலியங் கார்த்திகைதூ யாளூர்தி வண்டெலிநா

யாயிலியங் கார்த்திகையீ யானளுவ்—யாயிலியம்
வெள்ளைக்குஞ் சற்கிமணி வெட்பாலை கள்ளிவன்னி
வெள்ளைக்குஞ் சற்கிகைமை மெய்.

(இ - ள்.) [ஆயிலியம் கார்த்திகை தூயானூர்தி வண்டு எலி நாய்] = நாகம், தேள், பூரம், வண்டு, எலி, நாய், [ஆயிலியங்கு ஆர்த்தி கை ஈ யான் நளு ஈ] = மூஞ்சூறு, நட்டுவக்காலி, மரவட்டை, நரி, செய்யான், அட்டை, ஈ, (என்னும் இத்தகைய விஷங்களுக்கு) [ஆயில் இயம்]=(நிவாரணம்) ஆராய்வாயாகில் சொல்லுகிறோம், [வெள்ளைக் குஞ்சு]=வெள்ளைக்குன்றி,[அற்கி] = எருக்கு, [மணி]=உத்தாமணி, [வெட் பாலை]=வெட்பாலை, [கள்ளி]=இலைக் கள்ளி, [வன்]=வன்னி யிலை, [நீ]=மலைவேம்பு [வெள்] = வெள்ளெருக்கு, [ஐக்குஞ்சு]=தண்ணீர் முட்டான், [அற்கி] = ஓரிலைத் தாமரை, [கை] = கையாந்தகரை, [மை]= ஆடுதின்றாப் பாளை, [மெய்]=குப்பைமேனி—எ - று.

(தா-ம்.) நாக முதலிய சர்ப்ப பேத விஷங்கட்கெல்லாம், வெள்ளைக் குன்றிமணி இலைச் சாற்றிலும்,

கருந்தேள், செந் தேள், வெண் தேள், சினைத்தேள், கொள்ளித் தேள், சன்னித் தேள், சிறு தேள், பெருந் தேள், கடுத்தான், குழவி முதலிய சகல விஷங்கட்கும் எருக்கிலைச் சாற்றிலும்,

கரும் பூரம், வெண் பூரம், செம் பூரம், மண் பூரம், காட்டுப் பூரம், சிறு பூரம், பெரும் பூரம், சாணிப் பூரம் என்னும் இவற்றின் விஷங்கட்கு உத்தாமணிச் சாற்றிலும்,

நீர் வண்டு, மர வண்டு, சிதள் வண்டு, சொரி வண்டு என்னும் இவற்றின் விஷங்கட்கு, வெட்பாலைப் பட்டைச் சாற்றிலும்,

சுண்டெலி, சோடெலி, சினை எலி, காட்டெலி, மோட்டெலி, வெள்ளெலி, காரெலி, போரெலி என்னும் இவ்விதஎலி விஷங்கட்கு இலைக்கள்ளிச் சாற்றிலும்,

மரநாய், தரு நாய், பேய் நாய், வெறி நாய், கடிநாய் என்னும் இவ்வித நாய்களின் விஷங்கட்கு, வன்னியிலைச் சாற்றிலும்,

சுண்டன், மூஞ்சூறு, பிங்களாரி மூஞ்சுறு, சூரனு கரிமூஞ் சுறு, சுந்தராகரி மூஞ்சுறு, என்னும் இவ்வித மூஞ்சூறுக் கடி களுக்கு, மலை வேப்பிலைச் சாற்றிலும்,

நட்டு வக்காலியின் பேதமான மாரகார்த்தி, மோக ஞர்த்தி, மிருகார்த்தி, பெருங்காற்சம்மி, என்னும் இவ்வாருன விஷங்களுக்கு, வெள்ளெருக்குச் சாற்றிலும்,

காட்டு மரவட்டை, பெரு மரவட்டை, செம்மரவட்டை, கரு மரவட்டை, வெண் மரவட்டை, சிறு மரவட்டை என்னும் இவைகளில் விஷங்கட்கு, தண்ணீர் முட்டான் கிழங்குச் சாற் றிலும்,

நுழை நரி, பெருநரி, குள்ள நரி, பேய் நரி என்னும் இவைகளின் விஷங்கட்கு, ஒரிலைத் தாமரைச் சாற்றிலும்,

வெள்ளரைச் செய்யான், பட்டையைச் செய்யான், பெ ரும்படைச் செய்யான், குருதிச் செய்யான், மருட்சிச் செய்யான், வன்மீகச் செய்யான் என்னும் இவைகட்கு, கையார்ந்த கரைச் சாற்றிலும்,

சம்பத்துவரி யட்டை, வச்சிராங்கை யட்டை, சனமாக்கரி யட்டை என்னும் இவைகட்கு, ஆடு தின்ருப்பாலை யிலைச் சாற் றிலும்,

காரீ, பேரீ, பசுமைஈ! மாட்டீ, நாயீ என்னும் இவை களின் விஷங்கட்கு, குப்பைமேனிச் சாற்றிலும் கொடுக்கத் தீரு மென்பதும், பிரமாணம் முன் கூறிய பிரமாண மென்பதுமாம், (114)

### அப்பிரக பற்பத்தின் பத்தியமும் அனுபானமும்

விண்டுபத்தி ரத்தறலே மேலப் பிரகைக்கு
விண்டுபத்தி ரத்திறலே வில்லாகும்—விண்டுபத்தி
மாதமூன் ருகாமை வாய்வடதென் சொல்லத்த
மாதமூன் ருகாமை மாண்.

(இ-ள்.) [விண்டுபத் திரத்து அறலே மேல் அப் பிரகைக்கு] =அப்பிரக பற்பத்திற்கு துளசிச்சாறே (மற்றை எவற்றினும்) மேம்பட்டதாகும்; [உபத்திரத்து விண்டு அறல் ஏ வில் ஆகும்]=நோய் வேதனைகளை விட்டு நீங்குவதற்கு அம்பும் வில்லும் (அதுவே) யாகும்; [பத்தி விண்டு] = வரிசையாகிய வாதாதி முப்பிணிகளும் ஆகாயத்திற் சேர; [மாது அம் ஊன்று ஆகாமை]=பெண்களின் அழகின்மனம் பொருந்துதல் ஆகாது; அது குற்றமாகும்; [மாதம் மூன்று] = மூன்றுவது மாதத்தின்; [வடசொல் தென் சொல் அத்தம்] = வடமொழியிலும் தென் மொழியிலுமுள்ள பெயர்ச் சொல்லின் பொருளான (மிதுனம் ஆனி=சங்கமம் கேடு) என்பதைச் சிறப்பாகக் காட்டுகின்றன —எ - று.

(தா - ம்.) அனுபானத்தில் முக்கியம் துளசிச் சாறென்பதும், பத்தியத்தில் முக்கியமானது பெண்போகந் தவிர்த்தல் என்பதும், அவ்வாறு அப்பத்தியத்தில்தவறுநேரின் சரீரஹானி நேரிடு மென்பதுமாம். (115)

### அப்பிரக பற்பத்தின் குண நிச்சயம்.

வண்ணானை நம்பி மடியையழுக் காக்குதனோய்
வண்ணானை நம்பி வைத்தியனை—வண்ணானை
யாகமதித் துண்டி யயின்றப் பிரகபற்பை
யாகமதித் துண்டியென்கை யை.

(இ - ள்.) வண்ணானை நம்பி மடி அழுக்கு ஐ ஆக்குதல்]= ஏகாலியை நம்பி வஸ்திரத்தின் அழுக்கைப் போக்கி வெளுப்பாக்கிக் கொள்வது (எப்படியோ அப்படியே); [நோய் வள் நானை நம்பி] = நோய்களாலே (பிறர்சொல்லை) கேட்பதற்கும் பேசுவதற்கும் வருந்துகின்ற ஆண்மகனே; [வைத்தியனை] = ஆயுள்வேதியனை; [வண் ஆன் ஐ ஆத மதித்து]=தெளிவுடையவனை குருவாக நம்பி; [அப்பிரக பற்பை உண்டி அயின்று] = அப்பிரக பற்பத்தைப் புசிக்க (வேண்டிய முறைப்படி) புசித்து; [ஆகம் மத்தித்து]=(உனது) சரீரத்திற் பற்றச்செய்து; [தீ என் கையை உண்] = கொடுமை என்கின்ற (நோயின்) வரிசையை விழுங்குவாயாக—எ - று.

(தா - ம்.) வஸ்திரத்துள்ள அழுக்கைப் போக்குவதற்

காக வண்ணனை நம்பி அந்த வஸ்திரத்தை அவனிடத்தில் ஒப்பிப்பது போல, சரீரத்திலுள்ள வியாதிகளைப் போக்க வைத்தியரைக் குருவாக நம்பி, அவரிடத்தில் சரீரத்தை ஒப்பித்து, அவர் சொற்படி இவ்வப்பிரக பற்பத்தைப் புசித்து வந்தாற் சகல நோய்களும் நிவாரணமாகு மென்பதாம். (116)

### அப்பிரக பற்பத்திற்குப் புறநடை.

என்றூழி லேகிருமி யென்னமருந் தீடசத்தி
யென்றூழி லேகிருமி பெய்க்குமுன்னே—யென்றூழி
பூரவள்ளி யப்பிரகைப் பொய்த்தாலி தேமுனகற்
பூரவள்ளி யீயஃதும் போம்.

(இ - ள்.) [என்றூழிலே கிருமி என்ன]=வெய்யிலிலகப்பட்ட புழுவைப்போன்று, மருந்தீடு அசத்தி என்று ஊழில் ஏகி இருமி எய்க்கு முன்னே]=இடுமருந்தால் பலவீனனென் றுரைக்கும்படி வினைவழியே காலங்கழித்து இருமிக்கொண்டு இளைப்பதற்கு முன்பாக, [ஊழி என்று பூர அள்ளி ஈ அப்பிரகை]=நியமத்துடனே தினமும் பூரணப்பிரமாணமாக எடுத்துக்கொடு அப்பிரக பற்பத்தை, [பொய்த்தால் இதே முன்]=(இப்பற்பம்) (முறைகளிற் (பிசகுமானால் இதுவேமுன்கூறியஇடுமருந்தாகும்: [அஃதும்]=(அவ்வாறு இம்மருந்தால் விளைந்த கெடுதியும், [கற்பூரவள்ளி ஈ போம்]=கற்பூரவள்ளி யிலைச் சாற்றில் இப்பற்பத்தையே கொடுக்க நிவாரணமாகும்—எ - று.

(தா - ம்.) மருந்தீட்டால் வெய்யிலிற்பட்ட புழுப்போல் வெதும்புகின்றவர்கட்கு இப் பற்பத்தைப் பிரமாணப்படி கொடுத்தால் நிவாரணமா மென்பதும், ஒருக்கால் இப்பற்பம் செய்கையில் முறைபிறழுமாகில், இதுவே இடுமருந்தைப்போற் கெடுதிவிளைவிக்கு மென்பதும், அவ்வாறு விளைந்த கெடுதியும், மீண்டும் இப்பற்பத்தையே கற்பூரவள்ளியிலைச் சாற்றிற் கொடுக்க நிவாரணமாகு மென்பது மாம். எனவே இப் பற்பத்தை முறை பிறழாமற் சாக்கிரதையாய்ச் செய்யவேண்டுமென்பதும் குறிப்பு. (117)

### சொற்ணபற்பம், அதன் பிரமாண முதலியவைகள்.

சீவனத்தை யாடகியார் சித்திரமச் சங்கதலி

சீவனத்தை யாடகியார் தேரையெனச்—சீவனத்தை
யோதவரை யேகூ றுழிமிதுன மாதிசிலை
யோதவரை யேகூ றுழை.

(இ - ள்.) [சீவனத்தை]=(சீவன் என்னும் பெயருடைய வியாழத்தின் மறு பெயராகிய) பொன்னை, [ஆடகி ஆர் சித்திரம் அச்சம் கதலி] = துவரையிலை, ஆத்தியிலை, ஆமணக்கிலை, அகத்தியிலை, வாழைக்கனி (என்னும் இவற்றின் சாற்றில் அரைத்துப் புடமிட); [சீவனத்து ஐ] = நீரிலிருக்கும் கடவுளாகிய (திருமாலைப் போலவும்), [ஆடு அகி ஆர் தேரை என]= ஆடுகின்ற பாம்பின் வாய்ப்பட்ட தேரையைப் போலவும்' (முறையே சரீரத்தைப் பாதுகாத்துப் பிணிகளை அழிக்கும்) [சீவன்னத்தை]=சீயின் நிறத்தையுடைய (பற்பத்தைப் புசிக்கும் பிரமாணம் எப்படியென்றால்), [ஓது அவரையே கூறு]=(ஆயுள் வேதத்தில்) உரைக்கப்பட்ட அவரைக்கொட்டையின் கூறுகளே யாகும், [ஒழி]=(இம்மருந்து) உண்ணப்படாத (மாதங்களெவையென்றால்), [மிதுனம் ஆதி சிலை] = ஆனி மாதம் முதலாக மார்கழி மாதம் வரையில், [உழை]=(மருந்துண்ணக் கூடாத) இடங்கள் (எவையென்றால்), [ஓத வரையே கூறு] = கடற்சாற்பாகிய (நெய்தநிலமும்) மலைச்சார்பாகிய (குறஞ்சி நிலமும் ஆகிய இவைகளே என்று) நீ யுரைப்பாயாக—எ - று.

(தா - ம்.) (*a*) சுத்திசெய்த சொர்ண அரப்பொடி பலம் -1-க்கு, துவரையிலைச்சாறு-5-பலம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை யிலைச்சாறு -5- பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து, அன்று பகற்காலத்தில் மத்தியில்-1-சாமம் நீங்க, ஏனைய-3-சாமங்களிலும் இடைவிடாமல் அரைத்து, இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் ஷைசாறு-5-பலத்தையே சிறுகச்சிறுக வார்த்துபகலில்அரைத்து இரவில் பில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும்-13-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்துவார்த்து அரைத்தரைத்துப்பில்லைதட்டிப் பனியில் ஆறவைத் தாறவைத்த பின்பு-16-ஆம் நாள் உதய முதல்-14-நாள் அதை வெளிக்காட்சியாகவும்-1-நாள் கவசித்தும், வெய்யிலில் உலர்த்தி, நன்றுயுலர்ந்த பின்பு-31-ஆம் நாள் உதயத்தில் -36- காட்டு வரட்டியிற் புடமிட்டு, ஒரு நாளாற

விட்டு, மறுநாளுதயத்திலெடுக்க, ஐந்திலொருகூறு பற்பமாகி யிருக்கும்.

(*b*) மறுபடி-33-ஆம் நாள், ஐந்திலொறுகூறு பற்பமாகிய ஷை சொர்ணப்பொடி பலம்-1-க்கு, ஆத்தியிலைச்சாறு-4-பலம் விகிதம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே முன்போலவேயூறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும்புதிதான ஷை யிலைச் சாறு-4-பலத்தை விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். மறுநாளுதயத்திலும் புதிதான முன் இலைச் சாறு-4-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகலில் அரைத்து இரவில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும்-10-நாளும் பிரதிதினமும் முன்சாற்றையே முன்னளவே, வார்த்துவார்த்து அரைத்தரைத்துப் பில்லைதட்டிபனியில் ஆறவைத்தாறவைத்து 11-நாள் வெளிக்காட்சியாகவும்-1-நாள் கவசித்தும் வெய்யிலுலர்த்தின பின்பு, அடுத்தநாளுதயத்தில்-32-காட்டு வரட்டியிற் புடமிட்டு-1-நாளாறவைத்தெடுக்க அஞ்சிலிரண்டு கூறு பற்பமாயிருக்கும்.

(*c*) பின்பு-56-ஆம் நாள், அஞ்சிலிரண்டுகூறு பற்பமான மேற்படி சொர்ணப்பொடி பலம்-1-க்கு, ஆமணக்கினிலைச் சாறு -3-பலம் விகிதம், அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு ஊற வைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே ஷை யிலைச் சாறு 3 பலம் விகிதம் விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படி இலைச் சாறு-3-பலம் விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லை தட்டிப் பனியிலாறவைக்க வேண்டும். இவ்விதம் மீண்டும்-7-நாளும், பிரதி தினமும் முன் சாற்றையே முன்னளவே, வார்த்து வார்த்து அரைத்தரைத்துப் பில்லைதட்டி பனியில் ஆறவைத் தாறவைத்து-8-நாள் அதை வெளிக் காட்சியாகவும், -1-நாள் கவசித்தும் வெய்யலிலுலர்த்தி, அடுத்தநாள் காலையில் -25-காட்டு வரட்டியிற் புடமிட்டு-1-நாளாறவிட்டெடுக்க ஐந்தில் மூன்றுகூறு பற்பமாயிருக்கும்.

(*d*) இதன் பின்பு-79-ஆம் நாள், ஐந்தில் மூன்றுகூறுபற்பமான ஷை சொர்ணப்பொடி பலம் -1- க்கு, அகத்தியிலைச்சாறு பலம்-2-விகிதம், அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் முன் போலவே மேற்படி

யிலைச்சாறு பலம்-2-விட்டுப்பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதயத்திலும் ஷை சாறு முன் போலவே பலம்-2-விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே-4-நாள் பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லை தட்டி ஆறவைத் தாறவைத்து -5- நாள் அதை வெளிக்காட்சியாகவும், 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில்-16-காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாற விட்டு மறுநாளெடுத்துப் பார்க்க ஐந்தில் நான்குகூறு பற்பமாயிருக்கும்.

(ε) மறுபடி-93-ஆம் நாள், ஐந்தில் நான்குகூறு பற்பமாகிய ஷை சொர்ணப்பொடி பலம்-1-க்கு அளிந்த வாழைக் கனியின் ரசம்-1-பலம் விகிதம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே முன்போலவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும், மீண்டும் புதிதான ஷை கனிரசம்-1-பலத்தை விட்டுப் பகல்முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதயத்திலும் புதிதான முன் கனிரசமே -1-பலம் விகிதம் சிறுகச்சிறுக விட்டு பகலில் அரைத்து இரவில் பில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே அடுத்த-1-நாளும் முன் போலவே யரைத்து பில்லை செய்தாறவைத்து, அடுத்த-2-நாள் வெளிக் காட்சியாகவும்-1-நாள் கவசித்தும் வெய்யிலிலுலர்த்தின பின்பு, அடுத்த நாளுதயத்தில் -9-காட்டு வரட்டியிற் புடமிட்டு-1-நாளாறவைத் தெடுக்க, முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இப்பற்பம் திருமாலைப் போலச் சரீரத்தை ரக்ஷித்துச் சர்ப்பத்தைப்போல நோய்களாகிய தேரைகளை அழிக்கும் என்பதாம். எனவே ஏனைய பற்பங்களைப்போன்று நோய்களை நிவாரணிப்பதுடன் சரீரத்தை இனிப் பிணியண்டாவகை பாதுகாக்கும் தன்மையு முடைத்தாகலின் இப்பற்பச் சிறப்புடைத்து என்றபடி.

இப் பற்பத்திற்கு பிரமாணமாவது:— ஒரு அவரைக் கொட்டையில், ஆறிலொரு கூறு உத்தமம், ஆறிலிரண்டு கூறு மத்திமம், ஆறில் மூன்று கூறு அதமம், ஆறில் நான்கு கூறு

அதமாதமம், ஆறிலஞ்சு கூறு நிமித்தாதி யதிகம், முழுக்கூறும் நின்னிமித்தியாதிகம் ஆம் என்பதும்.

இப் பற்பத்தைப் புசிக்க ஏற்ற மாதங்களாவன:- ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய இந்த-7-மாதங்களும் ஒழிந்த தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி ஆகிய ஐந்து மாதங்களுமாம் என்பதும்.

இப் பற்பத்தைப் புசிக்க ஏற்ற தானங்களாவன:— நெய்தல், குறிஞ்சி லாகிய இரண்டு நிலங்களும் ஒழிந்த மருதம், முல்லை, பாலை, ஆகிய மூன்றும் ஆம் எனினும் மருதம், முல்லை ஆகிய இரண்டே அதி சிரேஷ்டமானவைகளா மென்பதுமே. (118)

## சொர்ன பற்பத்தின் அனுபானமும், பிணி நீக்கமும்.

வெற்றிலையம் பாணி விதிர்ப்பனலை மேகமன்னோய்
வெற்றிலையம் பாணி விசயமளை—வெற்றிலையம்
பானவநீ தங்கிரந்தி பந்தல் கன்னி யார்தளலைம்
பானவநீ தங்கடிந்து பார்.

(இ - ள்.) [வெற்று இலையம்]=காரண மின்றிச் (சரீரம்) நடுக்குதல், [பாணி விதிர்ப்பு]=கைகள் நடுக்குதல், [அனல்] = சுர காங்கை, [ஐ]=சேத்துமப் பிணி, [மேகம்] = மேக ரோகங்கள், [மன்]=வாத ரோகங்கள்; [நோய்] = பித்த ரோகங்கள் (என்னும் இவைகட்கு முறையே); [வெற்றிலை அம்]=வெற்றிலைச்சாறு, [பாணி] = குளிர்ந்த ஜலம்; [விசயம்] = சர்க்கரை; [அளை] = தயிர்; [வெற்றி இல் அயம்] = குளிர்ச்சி யென்னும் தனது) ஐய மற்ற நீரான (வெந்நீர்);[பால்]=பால்,[நவநீதம்] =வெண்ணெய் (என்னும் இவைகள் அனுபானமாம்); [கிரந்தி] =இரணங்கள்; [பந்தல்]=பிடிப்புகள் (என்னும் இவை இரண்டிற்கும் முறையே); [கன்னி ஆர்] = கற்றாழைச் சோற்றின் சாறும்,ஆத்தியிலைச்சாறும்(அனுபானமாகும்);[தளல் ஐம்பால்] =(முக்கியமாய்) நீக்க வேண்டியது (எதுவென்றால்);[ஐம்பால்] = ஐம்பாலென்னும் கூந்தலுடைய (மாதர்கள் போகமே) (ஆனால்); [நவம் நீதம்] = (அவ்வாறு தள்ளுதல்) புதுமையான பாக்கியம் (போற்பலனைக் கொடுக்கும்); [கடிந்து பார்] = (நீ

இவ்வாக்கியத்தை நம்பி) (அப் பெண் போகத்தை) வெறுத்து (அதன் பயனைப்) பார்ப்பாயாக —எ-று.

(தா - ம்.) காரணமின்றிச் சரீரம் முழுமையும் விட விடென்று நடுக்குகின்ற பிலாரி வாதம், பாரிச வாயு, பக்க சூலை, வல்லை, மகோதரம், பெரு வயிறு என்னும்இவைகட்கு, கம்மாறு வெற்றிலைச் சாற்றிலும்,

கைகள் நடுக்குவதான வாத பித்த தொந்த ரோகம், உற்பாத ஜன்னி, சுவேதானல வாதம்; இருமல், தும்மல் ஆகியவை அடிக்கடி வரச்செய்வதான காசச் சேத்துமம் என்னும் இவைகட்கு, குளிர்ந்த ஜலத்திலும்,

சுவாலாக்கினியைப்போல் விடாமற் காய்கின்ற அத்தி சுரம், மிருத்து சுரம், வாத சுரம், பித்த சுரம், சேத்தும சுரம், மந்த சுரம், விட சுரம், மயக்க சுரம், இரண சுரம், அதிசாரம், பாண்டு, சோகை, பித்த வெட்டை என்னும் இவைகட்கு, சர்க்கரையிலும்,

ஜலப் பிரளையத்தைப் போன்று உற்பாதம் விளைக்கத் தக்க சேத்துமாதிக்க ரோகங்கள், சொரி, சிரங்கு, சிலந்தி, கடுவன், பீனிசம், பரு கட்டி, பெரும்பாடு என்னும் இவைகட்கு பசுந் தயிரிலும்,

மேக காங்கை, அன்னத்துவேஷம், அசீரணம், இரத்த காசம், பித்த குன்மம், பாரிச ஜன்னி என்னும் இவைகட்கு வெந்நீரிலும்,

தனுர்வாயு, சூசிகாவாயு, நேத்திரவாயு, மூர்ச்சைவாயு, உருத்திரவாயு, தொந்தவாயு, விகண்டவாயு, மூலம், பவுத்திரம் என்னும் இவைகட்கு, பசுவின் பாலிலும்,

பித்தசூலை, சத்தி, வலிமூலம், காதடைப்பு, தலையிடிப்பு, பல் ஈறுகட்டல், வலித்தல், அச்சரப் புண், புருவப் பருவு, கண் கட்டி, பக்க வுளைவு, மாரடைப்பு, கை குடைச்சல், தோளிடித்தல், வலித்தல், இடுப்புக் குடைச்சல், நெற்றி வியர்த்தல் என்னும் இவைகட்கு வெண்ணெயிலும்,

மேக வெட்டையாற் காணும் புண்கள், இரணங்கள் என்னும் இவைகட்கு, கற்ருழைச் சோற்றின் சாற்றிலும்,

அவிழ்தம் சாப்பிடுகையில் அவபத்தியம் நடந்து அதனுல் உண்டாகும் பிடிப்புகளுக்கு ஆத்தியிலேச் சாற்றிலும்,

அனுபானித்துக் கொடுத்தால் நீங்குமென்பதும்,

முக்கியமாகத் தள்ளவேண்டியது பெண்போகமொன் றுமே என்பதுமாம். (119)

**சொர்ண பற்பத்தின் உணவும், நன்மையும்.**

காணத் தடலேமந்த காலனுடற் குக்கவினுர்
காணத் தடலேவிறல் கற்பிளமை—காணத்
தருமபூ பங்கனிநெய் சர்க்கரைமா பாலார்
தருமபூ பங்கனிவேந் தன்.

(இ - ள்) [காணத்து அடலே] = சொர்ணத்தின் பற்பமானது; [மந்த காலன்]=அசீரணத்திற்கு நமன் போலாகும்; [உடற்கு கவின் ஆர் காணத்து அடல்]=சரீரத்திற்குப் பொன் போன்ற நிறத்தையும், பொருந்திய செக் (குலக்கையைப் போன்ற) வலிவையும்; [ஐவிறல் கற்பு இளமை காண தரும்]= சவுந்தரியம், பராக்கிரமம், அறிவு, இளமை (என்னும் இவைகளே) யாவரும் பார்க்கும்படி கொடுக்கும்; [அபூபம் கனி நெய் சர்க்கரை மா பால் ஆர்]=அப்ப வர்க்கங்கள், பழ வர்க்கங்கள், நெய், சர்க்கரை, மாப் பண்டங்கள், பால் (என்னும் இவைகளேப் புசிக்கவேண்டும்); [தரும பூபன் கன்னி வேந்தன்)=தருமராசனேப்போன்ற (குணத்தையும்) கன்னி ராசியில் வந்த வியாழன் (கொடுக்கத் தக்க பலன்களேயும் கொடுக்கும் — எ - று.

பூபன், கன்னி வேந்தன் எனற்பாலது எதுகை நோக்கிப் பூபங் கனி வேந்தன் என நின்றது.

(தா - ம்.) சொர்ன பற்பமானது சரீரத்திற்குப் பொன் னிறமும், செக்குலக்கை போன்ற வலியும், பராக்கிரமும், அறிவு விர்த்தியும், இளமையும் உண்டாக்கி, அபூபவர்க்கங்கள், கனி வர்க்கங்கள், நெய், சர்க்கரை, மாப் பண்டங்கள், பால் என்னும்

இத்தகைய வஸ்துக்களை வயிறு நிறையச் சாப்பிட்டுத் தக்ஷண மே ஜீரணமாக்கிக் கொள்ளத்தக்க தீபனத்தை யுண்டாக்கும். இப்பற்பம் சாப்பிடுகையில் முக்கியமாய்த் தள்ளிவிடவேண்டி யது பெண்போகமொன்று மாத்திரமே என்பதாம். (120)

### வெள்ளி பற்ப முறையும், அதன் பிரமாணமும், காரீய சுத்தியும்.

காளிமத்தை யார்குரங்கு காரீய மாசகலக்
காளிமத்தை யார்நவமே காவியன்பால்—காளிமத்தை
வீயளவை சாலிமணி மீரியல்கொள் குன்றிகரு
வீயளவை மண்டலமே மெய்.

(இ - ள்.) [காளிமத்தை ஆர் குரங்கு காளி மத்தை ஆர் காவியன்பால்] = கறுப்பு நிறத்தையுடைய சாமந்திச் சாறு, மேற்படி மணத்தக்காளிச் சாறு, ஷை ஊமத்தைச் சாறு, மேற் படி ஆத்திச்சாறு (என்னும் இவைகளை) காவியன் (என்னும் சுக்கிரனுடைய பெயரான வெள்ளிக்குச்) சேர்த் (தரைத்துப் புடமிடப்) பற்பமாம்; [நவமே] = இது புதுமையோ! [கார் ஈயம் மாசு அகல]=கருவங்கம் மலினமறுவதற்கும், [காளி மத்தை ஆர் குரங்கு காளி மத்தை ஆர்[=கறுப்பு வர்னமுடைய சாமந்திச்சாறு, மேற்படி மணத் தக்காளிச்சாறு, மேற்படி ஊமத்தைச்சாறு, மேற்படி ஆத்திச்சாறு (என்னும் இவைகளே) (இவ்விரசித பற்பம்) [காளி மத்தை வீ]=சிங்கத்தினது வலியை உண்டாக்கும்: [அளவு ஐ சாலி மணி மீரியல் கொள் குன்றி கருவீ]=(இப்பற்பம் சாப்பிடவேண்டிய) பிரமாணம் (என்ன வென்றல்) சிறந்த நெல் மணி, மிளகு, கொள், குன்றி, காக்கை யின் மூக்கு நுனியில் தங்கப்பட்ட அவ்வளவு (என்னும் இவை களின் பிரமாணமே); [அளவை மண்டலமே மெய்] = (இப் பற்பம் சாப்பிடவேண்டிய நாள்களின்) (எல்லை) எவ்வளவென் றல் ஒரு மண்டலமே நிச்சயமாகும்—எ - று.

(தா - ம்) (a) சுத்தி செய்த வெள்ளி அரப்பொடி பலம் 1-க்கு கறுப்பு மணத் தக்காளி சமூலச்சாறு 7-பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே யூறவைத்து, மறுநா ளுதயத் திலும் மீண்டும் புதிதான மேற்படி சமூலச் சாறு 7-பலம் சிறுகச்சிறுகவிட்டு, அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில்

வில்லைதட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இரண்டாம் நாள் உதயத்திலும் முன் சாற்றையே 7-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகலில் அரைத்து, இரவில் பில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும் 7-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன் விகிதம் விட்டு விட்டு, அரைத்தரைத்து, பில்லைதட்டி பனியில் ஆறவைத்தாரவைத்து, பின்பு 10-ஆம் நாள் உதயமுதல் 8 நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யலில் நன்ருய்க் காய வைத்து பின்பு 21-ம் நாள் காலையில் 45 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒரு நாளாறவிட்டு மறுநாளுதயத்தி லெடுக்க, காற்கூறு பற்பமாகியிருக்கும்.

(*b*) மறுபடியும் 21-ஆம் நாள், காற்கூறு பற்பமான ஷெ வெள்ளியரபொடி பலம் 1-க்கு, கறுப்பு ஊமத்தை சமூலச் சாறு பலம் 6 விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல்நாளிரவே முன்போலவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷெ சமூலச் சாறு 6 பலத்தை விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும். அடுத்த மறுநாளுதயத்திலும் புதிதான முன் சமூலச்சாறே 6 பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டுப் பகலில் அரைத்து இரவில் பில்லை செய்து பனியிலாறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 5-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவு விட்டு விட்டு, அரைத்தரைத்து பில்லை செய்து பனியிலாறவைத்தாறவைத்து 6 நாள் வெளிக்காட்சியாகவும் 1 நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, பின்பு மறுநாளுதயத்தில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு 1 நாளாறவைத்து மறுநாளெடுத்துப் பார்க்க அரைக்கூறு பற்பமாகியிருக்கும்.

(*c*) பின்பு 37-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான மேற்படி வெள்ளிப்பொடி பலம்-1-க்கு கறுப்பு ஆத்தியிலைச்சாறு பலம்-5-விகிதம் அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு யூறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படிச் சாறு -5- பலம் விகிதம்விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைதட்டிப் பனியிலாறவைக்க வேண்டும். அடுத்த மறுநாள் உதயத்திலும் மீண்டும் புதிதான ஷெ இலைச்சாறே -5- பலம் விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லை செய்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்விதம் மீண்டும் 3-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்

னளவே வார்த்து, வார்த்து, அரைத்தரைத்துப் பில்லைசெய்து பனியிலாறவைத்தாறவைத்து 4-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து அடுத்த மறுநாள் காலையில் 26-காட்டுவரட்டியில் புடமிட்டு, ஒரு நாளாறவைத்து, மறுநாளெடுக்க முக்காற்கூறு பற்பமாகியிருக்கும்.

(*d*) இதன் பின்பு 49-ஆம் நாள், முக்காற்கூறு பற்பமான ஷி வெள்ளிப்பொடி பலம் 1-க்கு, கறுப்புச் சாமந்திச் சமூலச்சாறு பலம் 4-விகிதம், அரைப்பதற்கு முதல்நாளிரவிலேயே விட்டு ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி சமூலச்சாறு பலம் 4-விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைத் தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். அடுத்த மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி சமூலச்சாறு பலம் 4-விட்டு பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைதட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். பின்பு 2-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 14-காட்டுவரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு, மறு நாளெடுத்துப்பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்,

இப் பற்பத்தை, உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம், மிகுதி, அபரிமிதம் என்னும் ஆறுக்கும் முறையே பொருந்துவனவாகிய, நெல் மணி, மிளகு, கொள், குன்றிமணி, காக்கை மூக்கின் நுனித் தங்கும் வஸ்துவினளவு என்னும் பரிமாணப்படி,

உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம் என்னும் சதுர்வித அளவைக் கேற்ற கால் மண்டலம், அரை மண்டலம், முக்கால் மண்டலம், ஒரு மண்டலம் என்னும் பிரமாணத்துடன் முறை தவறுமற் புசிப்போர்க்குச் சிங்கத்தை யொத்த வலியுண்டாம் என்பதே.

### காரீய சுத்தி.

1-படி கறுப்பு மனத்தக்காளிச் சாறும், அவ்வளவே புளித்த காடியும், அவ்வளவே மோரும் கூடிய மூன்று படியையும் ஒன்றுகக் கலந்து ஓர் பாண்டத்தில் விட்டு மேற் சீலை கட்டி வெய்யிலில் ஒருநாள் வைத்து, மறுநாள் உதயத்தில் மேற்

சீலையை யெடுத்துவிட்டு, மூன்று பலம் காரீயத்தைவேறோர் இரும்புப் பாத்திரத்தில் காய்ச்சி உருகும்போது முன் பாண்டத்திலே விட்டு, ஒரு நாள் சும்மா வைத்து, மறுநாள் காலையில் அதிலே கால் பலம் விளக்கெண்ணெய் விட்டு, உடனே விளக்கெரிப்பதுபோலத் தீபாக்கினியாக அப்பாண்டத்துள்ள சாறுகளெல்லாம் வற்றும் வரையிலெறித்து, மறுபடி கறுப்பு ஊமத்தைச் சாற்றிலும், முன்போலவே செய்து எரித்து, மறுபடி கறுப்பு ஆத்திச் சாறு, கறுப்பு சாமந்திச் சாறு, என்னும் இவற்றினும் அவ்வாருகவே தனித் தனியாகச் செய்து எரித்து எடுக்கக் காரீயம் மலினமற்று சுத்தியாம்,

இக் கருவங்கத்தைக் கொண்டு, வாதம், வைத்தியம் என்னும் இரண்டுக்கும் உதவத்தக்க பற்பம், செந்தூரம் என்னும் இரு வகை யாகவும்; அவ்வம் முறைகளை யநுசரிததுக் கிரமப் பிசகின்றிச் செய்து முடித்துக் கையாளவேண்டுமென்பதாம், (121)

## வெள்ளி பற்பத்திற்கு அநுபானமும், தீரும் நோய்களும்.

மாரிநட்ட மின்மோர் மதுபானெய் முக்கடுதை
மாரிநட்ட மின்னீர் வனஞ்சீனி—மாரிநட்ட
மந்திரி மீளி வலிசன்னி பாண்டுறக்க
மந்திரி மீளிபணி மால்.

(இ - ள்) [நட்டமின் மாரி மோர் மது பால் நெய் முக்கடுதை]=கள்ளிச்சாறு, பசுவின்மோர், தேன், பால், நெய், திரிகடுகு, பொன்னுங்கானிச் சாறு, [மாரி நட்டம் இன் நீர் வனம் சீனி]=கள், வெந்நீர், பனிநீர், குளிர்ந்த ஜலம், துளசிச்சாறு, சர்க்கரை (என்னும் இவைகளில் முறையே) [மாரி]=வாதாதி மூன்றும்) மாறிவரும் (வெப்பமான) சுரம், [நட்டு]=நடுக்கல்; [அம்]=வாதசன்னி; [மந்திரி]=பித்தசன்னிபாதம்; [மீளி]= சேத்துமத்துமத்தாலாகிய (வீக்கம்); [வலி]=வாத (தொந்தத்தாலாய) பிடிப்புகள்; [சன்னி]=இரண சன்னி; [பாண்டு]=விஷபாண்டு; [உறக்கம்]=மூர்ச்சை சன்னிபாதம்; [மந்த]=அக்கினி மந்தம்; [இரி] = உற்பாதசன்னி; [மீளி] = மீண்டும் மீண்டும் வரப்பட்டவைகள்; [பணி]—கம்பித வாயு; [மால்] — மோக

சயிந்துவ ரோகம்; (என்னும் இவ்வகை ரோகங்கட்கு அநிபானித்துக் கொடுக்கலாம்.) எ - று.

(தா - ம்.) வாதாதி மூன்றும் மாறி ஒன்றுக்கொன்று மாறுபாடாக விரோதித்து அதனுல் வாந்தி பேதி அதிகரித்து வெம்மையாகிய சுரத்தை எப்போதும் வளர்க்கப்பட்ட ரோகத்திற்கு, கள்ளிச் சாற்றிலும்,

வாதத்திற் சேர்ந்து பிடிப்புண்டாய் அசீரணத்தைக் கொடுக்கப்பட்ட வாத சுரத்துடனே நடுக்கலைத் தரப்பட்ட ரோகத்திற்கு, பசுவின் மோரிலும்,

வாத ஜன்னிப் பகட்டினுலே அதிக வெப்பத்தையும், தாகத்தையும், சோகத்தையும், மெய்த்திமிரையும் இடைவிடாமற் காயப்பட்ட உஷ்ணத்தையும், பிரமையையும், கொடுக்கப்பட்ட மேக காரகத்திற்கும், அதற்கினமான ரோகங்கட்கும், தேனிலும்;

பித்த ரோகத்துடன் சம்பந்தப்பட்ட வெட்டை ரோகங்கள், பித்தகாசரோகம், குன்மம், திமிர்வாதம், பெரும்பாடு, பித்தசன்னி பாதம், இரத்த மூலம், காமாலை, என்னும் இவைகட்கு, பசுவின் பாலிலும்,

சேத்துமப் பொருமலுடைய கன்னச் சிலந்தி, கன்னக் கிரந்தி, கட்டி, பல்லின் சந்தின் இரத்தப்பொசிதல், கரப்பான், சொரி, சிரங்கு, தேமல், தினவெடுத்துச் சொரிந்தவுடன் தழும்பாகி ஏதோ கடி யென்று பிரமிக்கச் செய்வதான ரோகம், கைகால்களில் நீரேறியிருக்கும் வீக்கம், கைகால்கள் அசையவொட்டாமற் செய்யும் ரோகம், என்னும் இவைகட்கு, பசுவின் நெய்யிலும்,

ஒருபக்கம் முழுவதும் அசைக்க வொட்டாமல் வலித்துக் கொண்டிருப்பதோடு, மூச்சு விட வொட்டாமலும், வாயைத் திறந்துபேச வொட்டாமலும், விக்கலும் பொருமலுமுண்டாய் ஓரிடத்திலிருக்க வொட்டாமல் உடம்பெங்கும் உரலிலிட்டிடிப்பதுபோலக் கழுத்து நோயைத்தரும் பிணிகளெவற்றிற்கும் திரிகடுகில் ஒன்ருன மிளகின் ரசத்திலும்,

வாத சன்னி, வாத சன்னிபாதம், பித்தசன்னி வலி,

பித்தபாண்டு, மகாசன்னி, காசம், சோகை, இரணசன்னி, மகா வாத முயலகன், என்னும் இவைகட்கு திப்பிலியின் ரசத்திலும்,

விஷபாண்டு, வீக்கபாண்டு, உறக்கவாத பாண்டு, விக்கலாதி பாண்டு, பாரிச பாண்டு, பிரமிய பாண்டு, என்னும் இவைகட்கு, சுக்கின் ரசத்திலும்,

வாத நோய் பொருமலுறக்கம், பித்த ரோகப் பொருமலுறக்கம், சேத்தும ரோகப் பொருமலுறக்கம், சன்னிபாத ரோகவுறக்கம் என்னும் இவைகட்கு பொன்னுங்காணிச் சாற்றிலும்,

முப்பிணி தொந்தத்தினுலே அக்கினி மந்தப்பட்டு விற்பனத்தாற் புசித்தவை ஜீரணமாகாம லிருக்கிறதோடு சுரமும், அரட்டலும், புரட்டலும், விகாரமும், விசேடமாய் நித்தமும் பொல்லா உபாதியைத்தரப்பட்ட ரோகங்கட்கு, பனங்கள்ளிலும்,

நளிரும், காய்ச்சலும், வெப்பாக்கினி மிகுதியும், மேலிட்டுத் தேகம் மெலியச் செய்யும் உற்பாத சன்னி மூர்ச்சைகளான ரோகங்கட்கெல்லாம், வெந்நீரிலும்,

மீண்டும் மீண்டும் வரப்பட்ட ரோகங்கட்கு பன்னீரிலும்,

விதிர்ப்புப் பாண்டு ரோகம், மகா கம்பிதவாயு, பன்னுவாயு, பெருவாயு, என்னும் இவைகட்கு, குளிர்ந்த ஜலத்திலும்

வாதத்தைப்பற்றி வரப்பட்ட மோக சயிந்துவ ரோகத்திற்கு, துளசிச் சாற்றிலும்,

பித்தத்தைச் சேர்ந்து வந்த மோக சயிந்துவ ரோகத்திற்கு, சர்க்கரையிலும்,

அனுபானித்துக் கொடுக்க நிவாரணமாகுமென்பதாம்.

(122)

**இதுவும் வெள்ளீயபற்பத்தின் அனுபானமும், புறநடையும்.**

சித்திரவி சித்திரமா சீந்தில்வழை நாகைகம்மொய்
சித்திரவி சித்திரமா செய்வளிக்கீ சித்திரவி

காந்தமதி காந்திமெய்கை காங்கைமல்வல் புல்கல்வில்லீ
காந்தமதி காந்தியைக்குக் காண்.

(இ-ள்.) சித்திரம் விசித்திரம் மா சீந்தில் வழை]= ஆமணக்கு, காட்டாமணக்கு, மா, சீந்தில், சுரபுன்னை, (என்னும் இவற்றின் சாற்றில்) [நா கை கம்மொ ய்]=நாக்கு, கை, தலை, தோள், வாய்; (என்னும் இவ்விடங்களில்) [சித்திரமா விசித்து செய் ஊளிக்கு ஈ]=விநோதமாக இறுக்கிக் கட்டியது போற் பண்ணும் வாயுவுக்கு (அனுபானித்துக் கொடுப்பாயாக); ]காங் கை]=பித்தா (திக்கத்தால் மேற்சொல்லிய இடங்களிற் காணும் நோய்களுக்கு); [ரவிகாந்தம் மதி காந்தி மெய் கை] = சூரிய காந்தி, சந்திரகாந்தி பசுமஞ்சள், குப்பைமேனி, கையாந்தகரை (என்னும் இவற்றின்சாற்றில் அனுபானித்துக்கொடுக்க);[சித்தி] =நிவாரணமாகும்; [காந்தி ஐக்கு] = சேத்து மாதிக்கத்தால் [மேற்சொல்லிய இடங்களிற் காணும் ரோகங்கட்கு); [மல் வல் புல் கல் வில் ஈக]=களிப்பிரண்டை, கட்டுக்கொடி, கீழாநெல்லி, பாகலிலை, வில்வயிலை (என்னும் இவற்றின் சாற்றி லனுபானித் துக்) கொடுப்பாயாக; [அந்தம் மதி]=அவைகள் நிவாரணமா மென்றெண்ணுவாயாக, [காண்] = (இதை நீ அனுபவத்திற்) பார் – எ - று,

(தா - ம்.) வாதாதிக்கத்தால் நாவிலே யுண்டாகும் ரோகங்கட்கெல்லாம், ஆமணக்கிலைச் சாற்றிலும், கைகளிலுண் டாகும்ரோகங்கட்கெல்லாம் காட்டாமணக்கினிலைச்சாற்றிலும், சிரசிலுண்டாகும் ரோகங்கட்கெல்லாம், மாவிலைச்சாற்றிலும், தோள்களிலுண்டாகும் ரோகங்கட்கெல்லாம், சீந்திலிலைச்சாற் றிலும், வாயிலுண்டாகும் ரோகங்கட்கெல்லாம், சுரபுன்னை யிலைச்சாற்றிலும்,

பித்தாதிக்கத்தால் நாவி லுண்டாகும் ரோகங்கட்கெல் லாம், சூரியகாந்திச் சாற்றிலும்; கைகளிலுண்டாகும் ரோகங் கட்கெல்லாம் சந்திரகாந்தி என்னும் அல்லிச் சாற்றிலும், சிரசி லுண்டாகும் ரோகங்கட்கெல்லாம், பசுமஞ்சளிலைச்சாற்றிலும், தோள்களிலுண்டாகும் ரோகங்கட்கெல்லாம், குப்பைமேனிச் சாற்றிலும், வாயிலுண்டாகும் ரோகங்கட்கெல்லாம், கையாந் தகரைச் சாற்றிலும்,

சேத்துமாதிகத்தால் நாவிலுண்டாகும் ரோகங்கட்கெல்லாம், களிப்பிரண்டைச் சாற்றிலும்,

கைகளிலுண்டாகும் ரோகங்கட்கெல்லாம், கட்டுக்கொடியிலைச் சாற்றிலும், சிரசிலுண்டாகும் ரோகங்கட்கெல்லாம் கீழாநெல்லியிலைச் சாற்றிலும், தோள்களிலுண்டாகும் ரோகங்கட்கெல்லாம், பாகலிலைச் சாற்றிலும்; வாயிலுண்டாகும் ரோகங்கட்கெல்லாம், வில்வயிலைச்சாற்றிலும்,

இப்பற்பத்தை அனுபானித்துக் கொடுக்கவேண்டுமென்பதாம்.

### துத்தநாக பற்பமும் அதன் பிரமாணமும்-

துத்தநா கத்தடலை சொன்னெலிக்கா லல்லிகையை
துத்தநா கத்தடலை தோரையொன்றே—துத்தநா
கத்தவரக முண்மை கடலானி கூனிவில்லோய்
கத்தவரா முண்மை கணி.

(இ - ள்.) [துத்த நாகத் தடலை]=துத்தநாக பற்பம் (செய்யவேண்டிய முறையாவது); [சொல் நெல் இக்கு ஆல் அல்லி கை ஐ]=சாலிநெற் பசுங்கதிர், நெல்லியிலை, கரும்பு, குறுவால், அல்லிப்பூ, காந்தள்பூ, தண்ணீர்முட்டான் கிழங்கு (என்னும் இவற்றின் சாறுகள் விட்டரைத்துப் புடமிடப்பற்பமாம் [துத்தம் நாகத்து அடல் ஐ]=தீயைப் போலும், சர்ப்பத்தைப் போலும், வலியும் வேகமு (முள்ளதாகும்); (இப்பற்பத்தின் அளவு) [தோரை ஒன்று]=ஒரு துவரையின் அளவாம்; (இப் பற்பமுண் போர்கள்) [துத்தம் நாகத்தவராம்] = அமுத போனகராகிய தேவலோக வாசிகள் போலாவார்கள்; [உள்மை கடல்]=மனக்களங்கத்தை அறுக்கவேண்டும்; [ஆனி கூனி வில் ஓய்]=ஆனி, பங்குனி, மார்கழி (என்னும் இம்மூன்று மாதங்களிலும் மருந்துண்பதை ஒழிப்பாயாக, [கைத்தவராய் உண்மை கணி] = இவ்வாறு செய்பவர்களே செல்வமுள்ளவர்களாமென்று நீ குறிப்பாயாக—எ - று.

(தா - ம்.) (a) முன் சொன்ன முறைப்படி சுத்தி செய்த துத்தநாகப்பொடி பலம் 1-க்கு, வெண்சாலி நெற்பசுங் கதிர்க் காய்ச்சாறு 5-பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே

ஊறவைத்து மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை கதிர்க்காய்ச்சாறு 5-பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத் தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும், 2-ஆம் நாளுதயத்திலும் முன் கதிர்க் காய்சாறு 5-பலத்தையே சிறுகச் சிறுக வார்த்துப் பகல் முழு வதும் அரைத்து இரவில் பில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும், இவ்வாறே மீண்டும் 3-நாளும் பிரதிதினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத்தரைத்துப் பில்லைதட்டிப் பனியில் ஆறவைத்தாறவைத்த பின்பு 6-ஆம் நாள் உதயமுதல் 4-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்றுயுலர்ந்தபின்பு 11-ஆம் நாள் உதயத்தில் 36 காட்டுவரட்டியிற் புடமிட்டு ஒருநாளாற விட்டு மறுநாளுதயத்திலெடுக்க, ஏழிலொருகூறு பற்பமாகி யிருக்கும்.

(b) மறுபடி 13-ஆம் நாள், ஏழிலொருகூறு பற்பமாகிய ஷை துத்தநாகப்பொடி பலம் 1-க்கு நெல்லியிலைச்சாறு 5-பலம் விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல்நாளிரவே முன்போலவே யூறவைத்து மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை யிலைச் சாறு 5-பலத்தைவிட்டுப் பகல் முழுதும் அரைத்து இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுத யத்திலும் புதிதான முன் நெல்லியிலைச் சாறு 5-பலம் விகிதம் சிறுகச் சிறுகவிட்டு பகலில் அரைத்து இரவில் பில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும் 3-நாளும் பிரதிதினமும் முன் சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைத் தட்டிப் பனியில் ஆறவைத்தாற வைத்து 4-நாள் வெளிக்காட்சியாகவும், 1-நாள் கவசித்தும் வெய்யிலிலுலர்த்தின பின்பு, அடுத்த நாளுதயத்தில் 36 காட்டு வரட்டியிற் புடமிட்டு 1-நாள் ஆறவைத்தெடுக்க ஏழிலிரண்டு கூறு பற்பமாயிருக்கும்.

(c) பின்பு 25-ஆம் நாள், ஏழிலிரண்டுகூறு பற்பமான ஷைதுத்தநாகப்பொடி பலம் 1-க்கு, கருப்பஞ்சாறு பலம் 5 விகிதம் அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயேவிட்டு ஊற வைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே ஷைசாறு 5-பலம் விகிதம் விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைதட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும், மறு

நாள் உதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படிச் சாறு 5-பலம் விகிதம் விட்டு பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லை தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்விதம் மீண்டும் 3-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவே விட்டு விட் டரைத் தரைத்துப் பில்லை தட்டி பனியில் ஆறவைத்தாற வைத்து, 4-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அடுத்தநாளுதயத்தில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு 1-நாளாறவிட்டு மறுநாளெடுக்க ஏழில் மூன்று கூறு பற்பமாயிருக்கும்.

(*d*) இதன் பின்பு 37-ஆம் நாள், ஏழில் மூன்று கூறு பற்பமான ஷெ துத்தநாகப்பொடி பலம் 1-க்கு குறுஆலிலைச் சாறு பலம் 5 விகிதம் விட்டு, அரைப்பதற்கு முதல்நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி யிலைச்சாறு பலம் 5 விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லை செய்து பனியில் ஆறவைக்கவேண்டும். மறு நாளுதயத்திலும் முன்போலவே ஷெ யிலைச்சாறு பலம் 5 விட்டு பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை செய்து பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்விதம் அடுத்த 3-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவே வார்த்துவார்த்து அரைத்தரைத்துப் பில்லைசெய்து ஆறவைத்தாறவைத்துப்பின்பு 4-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அடுத்த நாளுதயத்தில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவைத்து மறுநாளெடுத்துப் பார்க்க ஏழில் நான்குகூறு பற்பமாயிருக்கும்.

(*e*) இதன் பின்பு 49-ஆம் நாள், ஏழில்நான்குகூறு பற்பமான ஷெ துத்தநாகப்பொடி பலம் 1-க்கு வெள்ளல்லிப்பூ சமூலச்சாறு பலம் 5 விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளி ரவில் ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் முன் போலவே மேற்படி பூவின் சமூலச்சாறு 5-பலம் விகிதம் விட்டு பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைதட்டிப் பனியில் ஆறவைக் கவும். இவ்வாறே அடுத்த 3 நாளுஞ்செய்து 4-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த் தியும், அடுத்த நாள் உதயத்தில் 30 காட்டு வரட்டியிற் புட மிட்டு 1நாளாறவிட்டெடுக்க ஏழிலைந்து கூறு பற்பமாயிருக்கும்

(*f*) மறுபடி 61-ஆம் நாள், ஏழிலைந்து கூறு பற்பமாகிய ஷை துத்தநாகப்பொடி பலம் 1-க்கு காந்தட்பூ சமூலச்சாறு 5 பலம் விகிதம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே முன் போலவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும், மீண்டும் புதிதான ஷை சமூலச்சாறு 5 பலத்தை விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். மறுநாளுதயத்திலும் புதிதான மேற்படி சாறு 5-பலம் விகிதம் சிறுகச்சிறுக விட்டுப் பகலில் அரைத்து, இரவில் பில்லை செய்து பனியிலாறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 3 நாளும் பிரதிதினமும் முன்சாற்றையே முன்னளவு விட்டு விட்டு, அரைத்தரைத்து பில்லைசெய்து பனியில் ஆறவைத்தாறவைத்து 4-நாள் வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து பின்பு மறுநாள் உதயத்தில் 30 காட்டு வரட்டியிற் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு, மறுநாளுதயத்திலெடுத்துப்பார்க்க ஏழிலாறு கூறு பற்பமாகியிருக்கும்.

(*g*) பின்பு 73-ஆம் நாள், ஏழிலாறுகூறு பற்பமான ஷை துத்தநாகப்பொடி பலம் 1-க்கு, தண்ணீர்முட்டான் கிழங்குச் சாறு பலம் 5 விகிதம், அரைப்பதற்கு முதல்நாளிரவிலேயே விட்டு ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி சாறு பலம் 5 விகிதம் விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைசெய்து பனியில் ஆறவைக்கவேண்டும். மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை சாறு 5 பலம் விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 3 நாள் பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லை தட்டி பனியிலாறவைத்தாறவைத்து 4 நாள் அதை வெளிக் காட்சியாகவும், 1 நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு, மறுநாளெடுத்துப்பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இப்பற்பம் ஒரு துவரையின் ஆறிலொறுகூறு புசிப்பது உத்தமம், இருகூறு புசிப்பது மத்திமம், முக்கூறு புசிப்பது அதமம், நாற்கூறு புசிப்பது அதமாதமம், ஐங்கூறு புசிப்பது ஒரு புடைத்துணிவு, ஆறுகூறும் புசிப்பது முழுத்துணிவு.

ஆனி, பங்குனி, மார்கழி நீங்கிய ஒன்பது மாதங்களிலும் இப்பற்பம் புசிக்கலாமென்பதே. (124)

## துத்தநாகப் பற்பத்திற் கனுபானமும் தீரும் நோய்களும்.

காலனலை யாமலகை கன்னலிக்கு மோர்சுதைநெய்
காலனலை யாமலகை காசமெரி—காலனலை
பாண்டுமையால் வெண்ணெய் பனிகாடி வல்லியளை
பாண்டுமையா லைகைவெறி பாழ்.

(இ - ள்.) [கால் அனல் ஐ ஆமலகை கன்னல் இக்கு மோர் சுதை நெய்]=செருப்படைச்சாறு, வன்னியிலைச் சாறு, தண்ணீர்க் காணுனிலைச் சாறு, நெல்லி யிலைச்சாறு, சர்க்கரை, கருப்பஞ்சாறு, பசுவின்மோர், ஷை பால், ஷை நெய், (என்னும் இவைகளில் முறையே அனுபானித்துக் கொடுக்க) [கால் அனல் ஐ ஆமலகை காசம் எரி கால் அனல் ஐ]-வாதமும், பித்தமும், சேத்துமமும், காய்ச்சலும், குளிருமான விஷப்பிணியும், கபரோகமும், மேகவெட்டையும், சத்திகுன்மமும், அத்திசுரமும், சன்னிரோகமும்(நீங்கும்) ; [பாண்டு மை ஆல் ஐ கை வெறி பாழ்]= வெண்குட்டம், கருங்குட்டம், விதிர்ப்பு வாதம், சேத்துமஜன்னி, அரோசகம், பித்த ஜன்னி, கயரோகம் (என்னும் இவை கட்கு முறையே); [பாண்டுமை ஆல் வெண்ணெய் பனிகாடி. வல்லி அளை]=வெள்ளைச்சாறு வேளைச் சாறு, குளிர்ந்த ஜலம், வெண்ணெய், பன்னீர், புளித்தகாடி, கட்டுக்கொடி யிலைச்சாறு, தயிர் (என்னும் இவைகளிலே முறையே அனுபானித்துக் கொடுக்க நீங்கும்)

(தா - ம்) வாதப்பிணிகட்கு, செருப்படைச் சாற்றிலும்; பித்தப்பிணிகட்கு, வன்னியிலைச் சாற்றிலும்; சேத்துமப்பிணிகட்கு, தண்ணீர்க்காணு னிலைச்சாற்றிலும்;

காய்ச்சலுங் குளிருமான விஷசுரத்திற்கு, நெல்லியிலைச் சாற்றிலும்; க்ஷயரோகத்திற்கு, சர்க்கரையிலும்; மேகவெட்டைக்கு, கருப்பஞ் சாற்றிலும்; சத்தி குன்மத்திற்கு, பசுவின் மோரிலும்; அத்திசுரம் முதலிய விடாச்சுரங்கட்கு, பசுவின் பாலிலும்; ஜன்னி ரோகங்கட்கு, நெய்யிலும்; வெண்குட்டத்திற்கு, வெள்ளைச் சாறுவேளைச்சாற்றிலும்; கருங்குட்டத்திற்கு,

குளிர்ந்த ஜலத்திலும்; விதிர்ப்பு வாதத்திற்கு, வெண்ணெய்யிலும்;சேத்தும ஜன்னிக்கு, பன்னீரிலும்; அரோசகத்திற்கு, புளித்த காடியிலும்; பித்தஜன்னிக்கு, கட்டுக் கொடியிலைச் சாற்றிலும்; க்ஷயரோகத்திற்கு, பசுவின் தயிரிலும்; அனுபானித்துக் கொடுக்க நிவாரணமாகு மென்பதாம்.

அன்றியும், சோக ஜன்னிபாதம், மகா மூர்ச்சை, நாவரட்சிகண்ட அதிசார ஜன்னி, வெக்கையாலுண்டான ஜன்னி என்னும் இவைகட்கு முலைப்பாலிலும்,

நேத்திரவாயு, பித்த காசப்படலம், பாரிசவாயு, பெரும்பாடு, வேகசுரம் என்னும் இவைகட்கு, சிறு நீரிலும்,

வல்லை, மகோதரம், நீர்க்கட்டு, பாரிசஜன்னி, மார்நோய், விப்புருதி என்னும் இவைகட்கு, உமிநீரிலும்,

அனுபானித்துக் கொடுக்க நிவாரணமாகும் ()

**இதுவும் துத்தநாகப் பற்பத்திற் கனுபானம்.**

தம்பிக்கக் காளைச் சதியாக் கலின்மூர்ச்சை
தம்பிக்கக் காளைச் சதியால்வா — தம்பிக்க
வல்லாரை யார்பொருவு வார்த்துத்த நாகமறி
வல்லாரை யார்பொருவு வார்.

(இ - ள்.) [தம்பிக்கு அக்காளை சதியாக்கலின்] = இளைய சகோதரனுக்கு மூத்த சகோதரியை மனைவியாக்குவது போல, [மூர்ச்சை தம்பிக்க காளை சதியால்] = மூர்ச்சையாகி வாயு தம்பிக்கும்படி சேத்துமம் செய்கின்ற மோசத்தால்; [வாதம் பிக்க] = வாயு வானது சரீரமெங்கும் வருத்த, (வருகின்ற ரோகங்கட்கு) [வல்லாரை ஆர் பொருவுவார் துத்தநாகம் அறி] = வல்லாரைச் சாற்றிலும், ஆத்தியிலைச்சாற்றிலும், தும்பையிலைச்சாற்றிலும், இந்தத் துத்தநாக பற்பத்தைக் கொடுக்க வேண்டுமென்று அறிந்து, [வல்லாரை யார் பொருவுவார்] = வைத்தியம்செய்ய வல்லவர்களை எவர்கள் ஒப்பாவார்கள் — எ - று.

(தா - ம்.) விழிகள் விழித்தபடியே அசைவில்லாதிருக்கவும், மயிர்க்கால்கள்தோறும் வியர்வை விடாமற் பிரளயம் போற் பெருகவும், வாயிலே நுரைதள்ளவும், சரீரத்துள்ள

கீல்கள், சந்துகள், நரம்புகள் இவைகளில் தேள் கொட்டினாற் போன்ற கடுகடுப்புண்டாகவும், செய்யத்தக்க வாதமாரக மூர்ச்சைக்கு வல்லாரைச் சாற்றிலும்;

முன்சொன்ன குணங்களுடனே கள் குடித்தோர்களை யொத்த வார்த்தைகளும், நகைப்பும், கூத்தும் உண்டாகச் செய்யும் பித்தமாரக ஜன்னிக்கு, ஆத்தியிலைச்சாற்றிலும்;

நீரிற் குளித்தோர்களுடைய சரீரத்தைப்போல், எந்நேரமும் சரீரமெங்கும் ஈரமாய் இருக்கச்செய்து, வாயில் நுரை தள்ளி வாயைத் திறக்கவொட்டாமலும், பேசவொட்டாமலும் பல்லைக் கிட்டிக்கொண்டு, நாவிளிம்பும், உதட்டின் விளிம்பும் மரத்தினாற் செய்தது போலவும், பனங்கருக்கைப் போலவுமிருக்கப்பணணி, உற்பாதமான தாகத்தையும், சோகத்தையும், மயக்கத்தையும் விளைவிக்கும் சேத்துமமாரக மூர்ச்சைக்கு, தும்பையிலைச் சாற்றிலும்;

மேற்படி பற்பத்தை அனுபானித்துக் கொடுக்க நிவாரணமாயென்பதாம். (126)

### இதுவும் துத்த நாகப்பற்பத்திற் கனுபானம்.

விக்கினங்கள் வாராமல் வேந்தமைச்சைச் சாரிரண
விக்கினங்கள் வாராமல் வீரதமும் – விக்கினங்க
துத்தநா கப்பொடியைத் தூவின் மதியிரண்டு
துத்தநா கப்பொடியைத் தோல்.

(இ - ள்) விக்கினங்கள் வாராமல்] = (அவயவங்கட்கு) அழிவுகள் நேராமல்; [வேந்து அமைச்சு ஐ சார் இரண வீக்கு]= வாத பித்த சேத்துமங்களால் நேர்ந்த இரணங்களை ஒழிப்பதற்கு; [இன் அம் கள் வார் ஆம் மல் வீரதமும் விக்க இனங்கள்]=இனிமையான குளிர்ந்த ஜலமும், பனங்கள்ளும், சாராயமும், வெந்நீரும், முந்தரிகைப் பழச் சாறும், தேனும், யானைக்கன்றின் தொகுதியாகும்; [துத்த நாகப்பொடியை]=மேற்படி துய்த்தநாக பற்பத்தை; [மதி இரண்டு தூவின்] = இரண்டு மாதங்கள் வரையிற் கொடுத்து வருவாயாகில்; [துத்த நா கப்பு ஒடியை தோல்]=சுவைத்த நாக்கை மூடியிருந்த வெடிப்பையும் தொலைக்கும்—எ - று.

வீக்கு எனற்பாலது விக்கு எனவும், துய்த்த எனற்பாலது துத்த எனவும் நின்றதுகாண்க.

(தா - ம்.) வாதத்தைப்பற்றின கடின ரணங்கட்கு, நல்லநீர் இரண்டு பங்கும் வேப்பெண்ணெய் ஒரு பங்குமாகச் சேர்த்து, அதில் ஷை பற்பத்தை அனுபானித்துக் கொடுத்தும், மேலுக்கும் மேற்படி வேப்பெண்ணெய் ஒரு பங்கும் நல்லநீர் ஒரு பங்குமாகச் சேர்த்து மேற்படி பற்பம் கலந்து பூசியும்;

மேற்படி வாதத்தைப் பற்றின லளித ரணங்கட்கு, கள் இரண்டு பங்கும், தேங்காயெண்ணெய் ஒரு பங்குமாகச் சேர்த்து அதில் ஷை பற்பத்தை ஆனுபானித்துக் கொடுத்தும்; மேலுக்கும் மேற்படி கள்ளும் தேங்காயெண்ணெயும் சமமாகக் கலந்து, அதில் ஷை பற்பம் கலந்து பூசியும்,

பித்தத்தைப்பற்றின கடின ரணங்கட்கு, பட்டைச் சாராயம் இரண்டு பங்கும் ஆமணக்கெண்ணெய் ஒரு பங்கு மாகக் கலந்து, அதில் மேற்படி பற்பத்தை அனுமானித்துக் கொடுத்தும்; மேலுக்கும் மேற்படி சாராயம் ஆமணக்கெண் ணெய் என்னும் இரண்டும் சமமாகக் கலந்து, அதில் மேற்படி பற்பத்தைப் போட்டுப் பூசியும்,

பித்தத்தைப்பற்றின லளிதரணங்கட்கு, வெந்நீர் இரண்டு பங்கும் இலுப்பை யெண்ணெய் ஒரு பங்குமாகச் சேர்த்து, அதில் மேற்படி பற்பத்தை அனுமானித்துக் கொடுத் தும், மேலுக்கும் வெந்நீர் இலுப்பை எண்ணெய் என்னும் இரண்டையும் சமமாகக் கலந்து, அதில் மேற்படி பற்பத்தைக் கூட்டிப் பூசியும்,

சேத்துமத்தைப் பற்றிய கடின ரணங்கட்கு, முந்திரிகைப் பழச்சாறு இரண்டு பங்கும் காட்டாமணக்கெண்ணெய் ஒரு பங்குமாகச் சேர்த்து, அதில் மேற்படி பற்பத்தை அனுபானித் துக் கொடுத்தும்; மேலுக்கும் மேற்படி முந்திரிகைப் பழச்சாறு காட்டாமணக்கெண்ணெய் என்னும் இரண்டையும் சமமாக கலந்து அதில் மேற்படி பற்பத்தைச் சேர்த்துப் பூசியும்,

சேத்துமத்தைப்பற்றிய லளிதரணங்கட்கு, தேன் இரண்டு பங்கும் பிரமதண்டெண்ணெய் ஒரு பங்குமாகச்

சேர்த்து அதில் மேற்படி பற்பத்தைக் கலந்து கொடுத்தும், மேலுக்கும் மேற்படி தேன் பிரமதண்டெண்ணெய் என்னும் இரண்டையும் சமமாகக் கலந்து, அதில் மேற்படி பற்பத்தைக் கலந்து பூசியும், வர நிவாரணமாமென்பதே.

மேலுக்குப்பூசி யூறவைத்துத் தேய்த்துக் கழுவ வேண்டியவை முறையே இலுப்பைப்பிண்ணுக்கு, பச்சைப்பயறு; சீக்கிரானிலை, புளியிலை ஆகிய இவைகளிலொன்றைக் காய்ச்சிய நீர், சீயக்காய், கொள்ளுக்காய், என்னும் இவைகளே. வெந்நீரிலேயே குளிக்கவேண்டும்.

மேலும் இப்பற்பத்தை இரண்டு மாதம் வரையில் விடாமற் புசித்துவந்தால் நாக்கில் வந்திருக்கு வெடிப்பும் நீங்குமென்பதுமாம். (127)

## முத்துப் பற்பம்.

பாண்டுமைய ருக்கியத்திப் பாலாரப் பாலாரப்
பாண்டுமைய ருக்கையது பற்பமே—பாண்டு
நடுக்குமர னுலுமுறை நாலுமுற்றிற் பின்னர்
நடுக்குமர னுலுகதி நாள்.

(இ - ள்.) பாண்டுமை அருக்கை அத்தி]=வெள்ளைச்சாறுவேளை சமூலச்சாறு, வெள்ளெருக்குச் சமூலச்சாறு, அத்தியிலைச்சாறு (என்னும் இவை மூன்றும்) ]பால் ஆரப்பால் ஆர]=வெண்ணிறமுள்ள முத்தினிடத்து நிரம்பவிட்டு; [பாண்டு நடுகுமரன் நாலு]=பாண்டுவின் நடுக்குமாரனாகிய (அருச்சுனனது பெயருள்ளதான) மருதம்பட்டைச்சாறு நான்காவதாகவிட்டு [முறை நாலும் முற்றில்] = இந்நான்கு முறைகளும் முடியுமானல்; [பின்னர் பாண்டும் ஐயருக்கு ஐயது பற்பம்]=அதன்மேல் புகழ்கின்ற ஆயுள்வேதியருக்கு அழகமைந்த பற்பமாகும்; [நதி நாள் நாலு]=நதிகளின் தொகையாகிய (ஏழை) நாளாகக் (கொண்டு அதை) நான்காகச் சேர்த்துப் (புசிக்க); [மரல் நடுக்கும்]=பிணிகளென்னும் கடலை நடுங்கச்செய்யும்— எ - று.

(தா - ம்.) (a) முன் சொல்லப்பட்ட முறைப்படி சுத்தி செய்த துளையிடாத நன்முத்து பலம் 1-க்கு வெள்ளைச்சாறுவேளை சமூலச்சாறு 5 பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளி

ரவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படி சாறுவேளைச்சாறு 5-பலம் சிறுகச் சிறுக விட்டு அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இரண்டாம்நாள் உதயத்திலும்முன்சாற்றையே 5-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 3-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன் விகிதம் விட்டு விட்டு, அரைத்தரைத்துப் பில்லை தட்டி பனியில் ஆறவைத் தாறவைத்து, பின்பு 6-ஆம் நாள் உதயமுதல் 4 நாள் வரையில் அதை லெளிக்காட்சியாகவும் 1 நாள் கவசித்தும் வெய்யலில் காயவைத்து நன்றுயுலர்ந்த பின்பு 10-ஆம் நாள் காலையிம் 9 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு மறுநாளுதயத்தி லெடுக்க, நான்கிலொரு கூறு பற்பமாகியிருக்கும்,

(*b*) மறுபடியும் 13-ஆம் நாள், நான்கிலொருகூறு பற்பமான ஷை முத்துப்பொடி பலம் 1-க்கு வெல்லெருக்குச் சமூலச் சாறு பலம் 5 விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை எருக்குச்சாறு 5 பலத்தை சிறுகச் சிறுக விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைசெய்து பனியிலாறவைக்கவேண்டும். அடுத்த மறுநாளுதயத்திலும் புதிதான முன்சாறே 5-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டுப் பகலில் அரைத்து, இரவில் பில்லைசெய்து பனியிலாறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 3-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவே விட்டு விட்டு, அரைத்தரைத்து பில்லை செய்து பனியிலாறவைத்தாறவைத்து 4-நாள் வெள்க்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, பின்பு மறுநாளுதயத்தில் 8 காட்டு வரட்டியில் புடமிட்டு 1 நாளாறவைத்து மறுநாளெடுத்துப் பார்க்க அரைக்கூறு பற்பமாகியிருக்கும்.

(*c*) பின்பு 25-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான மேற்படி முத்துப்பொடி பலம் 1-க்கு அத்தியிலைச்சாறு பலம் 5 விகிதம் அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு யூறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி யிலைச்சாறு 5-பலம் விகிதம் விட்டு முன்போலவே பகல்முழுவதும் அரைத்து, இரவில் பில்லைதட்டிப் பனியிலாறவைக்க வேண்டும். அடுத்த மறுநாள் உதயத்திலும் மீண்டும் புதிதான ஷை இலைச்சாறே

5 பலம் விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைசெய்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்விதம் மீண்டும் 3-நாளும், பிரதி தினமும் முன் சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து, அரைத்தரைத்துப் பில்லைசெய்து பனியிலாறவைத்தாறவைத்து, 4-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து அடுத்த மறுநாள் காலையில் 7 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவைத்து, மறுநாளெடுக்க முக்காற்கூறு பற்பமாகியிருக்கும்,

(*d*) இதன் பின்பு 37-ஆம் நாள், முக்காற்கூறு பற்பமான ஷை முத்துப்பொடி பலம் 1-க்கு, மருதமிலைச்சாறு பலம் 5 விகிதம்விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவிலே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி யிலைச்சாறு பலம் 5 விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். அடுத்த மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி சாறு பலம் 5 விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்விதம் மீண்டும் 3 நாள் முன் சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து அரைத்தரைத்து பில்லைசெய்து ஆறவைத்தாறவைத்து பின்பு 4 நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 6-காட்டு வரட்டியிற் புடமிட்டு, ஒரு நாளாறவிட்டு, மறுநாளெடுத்துப்பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இப்பற்பத்தை ஏழு, பதினுன்கு, இருபத்தொன்று, இருபத்தெட்டு என்னும் நாட்கணக்காகச் சாப்பிடவேண்டுமென்பதாம்.

இந்நாட்கள் முறையே அதமாதமம், அதமம், மத்திமம், உத்தமமாகும். (128)

### முத்துப் பற்பத்திற் கனுபானமும் தீரும் நோய்களும்.

தாட்சி யிலதை தயிர்நெய்பால் சாதிகந்தே
தாட்சி யிலதைவெண்ணெய் சர்க்கரை நீர்—தாட்சி
யமைச்சிகலி மாலரந்தை யத்திவெம்மை யம்பை
யமைச்சிகலி மாலரந்தை யாம்.

(இ - ள்.) [தாட்சி யிலது] = கள்ளிக்கொழுந்துச்சாறு [ஐ தயிர் நெய் பால் சாதி கம் தே] = குளிர்ந்த, பசுவின் தயிர் மேற்படி நெய், மேற்படி பால், கள், வெந்நீர், தேன், [தாட்சி இலதை வெண்ணெய் சர்க்கரை நீர்] = திராட்சிப் பழரசம், கம்மாறு வெற்றிலை ரசம், வெண்ணெய், சர்க்கரை, பன்னீர் என்னும் இவைகளில் முறையே), [தாட்சி அமைச்சு இகலி மால் அரந்தை அத்தி வெம்மை அம்பை] = வாதம், பித்தம், சேத்துமம், உன்மத்தம், சுரவெட்டை, அத்திசுரம், மூத்திரக் கிரிச்சரம், [அமைச்சி கலி மால் அரந்தை ஆம்] = அண்டவாதம், இருமல், வாதப்பொருமல், பாரிச சன்னி (என்னும் இவைகட்கு அனுபானித்துக்கொடுக்க) நிவாரணமாகும்—எ - று.

வாதத்தைப்பற்றி வரப்பட்ட பிடிப்பு, கைகாற்குத்து, ஊளைப்பு, நீர்க்கோர்வை போல் வயிற்றிற் கட்டிக்கொண்டு மிகவும் வலித்தல், ஆகிய இவைகட்கு, கள்ளிக்கொழுந்து முதலிய சமூலச்சாற்றிலும்,

சத்தி, விக்கல், பெரும்பாடு, வல்லை, மகோதரம், பாரிச வாதத் தொடர்ச்சி, வெப்பவாயு, மேகக்குட்டம், ஆகிய இவைகட்கு, குளிர்ந்த ஜலத்திலும்,

நீர்க்கோர்வை, பாரிச சன்னி, பெருவயிறு, ராஜப்பரு ஆகிய இவைகட்கு, பசுவின் தயிரிலும்,

உன்மத்த சோபை, பெரும்பாடு, பயித்தியவாதம், பெருவயிறு, பித்தமூலம், மயக்கப் பாண்டு, நீரழிவு, சேத்தும சுரம், பிரமயம், ஆகிய இவைகட்கு, பசுவின் நெய்யிலும்,

இரத்த நீரழிவு, உற்பாத அதிசாரம், உற்பாத சத்தி வெப்பானிலம், ஆகிய இவைகட்கு, பசுவின் பாலிலும்,

சொரி சிரங்கு, தேமல், விஷபாண்டு, ஆகிய இவைகட்கு, பனங்கள்ளிலும்,

அத்திப் பயோதரச் சிலந்தி, எலும்புருக்கிப்பரு, பாரிச வெப்பப் பெரும்பாடு, முகப்பரு, பாய்ப்பூட்டுச் சன்னிப்பரு' மேகவெட்டை, அதிசாரம், ஆகிய இவைகட்கு, வெந்நீரிலும்,

மூத்திரக் கிரிச்சரம், நீரருகல், ஊர்த்த சுவாச பந்தம், விக்கல், நீர்க்கட்டு, நீரோழுக்கு, நீரெரிவு, நீர்ப்பீனசம், மது மேகம், யோனிப்புற்று, லிங்கப்புற்று, உரோமக் கிரந்திப்புண், வாதமூலம் ஆகிய இவைகட்கு, தேனிலும்,

நோயுடன் கூடிய அண்ட வாதம், நோயில்லாத அண்ட வாதம், என்னும் இருவகை அண்ட வாதங்கள், கால் வீக்கம், காலிசிவு, பாரிசவாதம், ஆகிய இவைகட்கு, திராட்சிப்பழ ரசத்திலும்,

இருமல், தாகம், ஆகிய இவைகட்கு, கம்மாறு வெற்றிலைச் சாற்றிலும்,

மாரி காலத்தில் கால் கைகளெல்லாம் மரத்தைப் போல் திமிரடைந்து, அசைக்க வொட்டாம லிருப்பதும்; எப்போதும் வலித்துக் கொண்டு, உப்பிசமும், பெரு வயிரும், உடம்பெங்கும் தேள் கொட்டினதுபோன்ற கடுகடுப்பும், எரிச்சலும், விக்கலும், பிரமையும் உண்டாக்கத் தக்கதுமான, இருவகை ரோகங்கட்கும், வெண்ணெய்யிலும்:

சொரி சிரங்கு, கரப்பான், சிலந்தி, செவ்வாப்பு, சரீர மெல்லாம் மொத்தையாகக் கட்டிக்கொண்டு அசைக்கவொட்டாத வேதனையையும், திமிரையும் கொடுத்து, அத்துடன் கோடைக் கொப்பளம், தேமல் இவைகளுண்டாகும் வாதத்தைப் பற்றிய வியாதிகட்கும்; முதலில் உற்பாதக் காய்ச்சலும், குளிருங் கண்டு, அத்துடன் வாந்தி, விக்கல், இருமல் இவைகள் தோன்றித் தேகமெங்கும் சங்கம் பழத்தைப்போன்ற கொப்புளங்கள், பருவுகள், கட்டிகள் புறப்பட்டு உபாதியைக் கொடுக்கும்; பித்தத்தைபற்றிய வியாதிகட்கும் வயிற்றெரிவு, பாரிப்பு, வாதனை, வீக்கம் இவைகளை யுண்டாக்கி, அத்துடன் ஒக்காளம், விக்கல் வரச்செய்து, ஆசனத்தைச் சேர்ந்த இரண்டு பக்கங்களிலும், புட்டங்களிலும் பருவுகள், கட்டிகள் வரப்பண்ணி, அங்குள்ள சதைகள் வெடிக்கச்செய்கின்ற சேத்துமத்தைப் பற்றிய வியாதிகட்கும், சர்க்கரையிலும்;

பித்த சன்னி பாதம், நேத்திரப் படலிகை, நேத்திர வாயு, பாரிசாந்தகாரம், மாலைக்கண், பித்த குன்மம் வாதகுன்மம் ஆகிய இவைகட்கு, பன்னீரிலும்;

அனுபானித்துக் கொடுக்கவேண்டுமென்பதாம்.

## முத்துப் பற்பத்திற்குப் புறநடை.

வெங்காய மாக மிருதுவிஞ வெவ்வளிக்கு
வெங்காய மாக மிருதுவிஞம்—வெங்காய
மூதண்டை யாதண்டை முத்தடலை முத்தடலை
மூதண்டை யாதண்டை முன்.

(இ - ள்.) [வெம் காயம் ஆக மிருத்துவின் ஆ வெவ் வளிக்கு] = வெப்பமுள்ள சரீர மாகும்படி யமனைப் போன்ற கொடிய வாதத்திற்கு, [மாகம் வெம் காயம்]=ஆகாய மளவும் நீண்டிருக்கும்; [மிருதுலின் ஆம்]=மிருதுவான இளநீர்; [வெங் காயம் மூதண்டை ஆதண்டை]=ஈர வெங்காயச்சாறு, அறுகங் கட்டை நீர், ஆதண்டைச் சமூலச்சாறு (என்னும் இம்மூன்றி லும்); [முத்து அடலை]=முத்து பற்பத்தை, [முத்தடலை]= வாதாதி முப் பிணிப் பிடிப்புகளை, [அண்டை முன்]=பக்கத்தி லும், எதிரிலும் (இல்லாமற் போக்க), [மூதண்டை யாது]= பெருத்த தடை யாதிருக்கின்றது—எ - று.

(தா - ம்.) விஷவாத சுரத்திற்கு, இளநீரிலும்; பித்த விஷ சுரத்திற்கு, ஈர வெங்காயச் சாற்றிலும், சேத்தும விஷ சுரத்திற்கு, அறுகங்கட்டைச் சாற்றிலும்; வாதாதி மூன்றும் தொந்தித்த விஷம சன்னிக்கு, ஆதண்டைச் சமூலச் சாற்றிலும்; மேற்சொல்லிய வாதசன்னி, பித்தசன்னி, கபசன்னி, தொந்த சன்னி என்னும் நான்கிற்கும், பொதுவாகக் குளிர்ந்த நீரிலும்; ஷெ பற்பத்தைச் சேர்த்துக் கொடுக்க நிவாரணமாகும் என்ப தாம். (130)

## இதுவும் முத்துப் பற்பத்திற்குப் புறநடை.

முத்துச்சுன் னங்களவு மோகைநகை தாகைரண
முத்துச்சுன் னங்களவு மூங்கில்விளா—முத்துச்சுன்
ஞணற் குளங்கதலி நாவலலை காடிசுரும்
நாணற் குளங்கதலி நாள்.

(இ - ள்.) [முத்துச்சுன்னம்] = முத்து பற்பமானது, [களவு மோகை நகை தாகை ரணம்]=களவுரணம், மோகை

ரணம், நகைரணம், தாகைரணம் (என்னும் நால்வகை ரணங்கட்கும்); [முத்துற்சுன் அம் களவு மூங்கில் விளா]=மூன்றுவகையான கொடிய பிணிகளுக்கும், குளிர்ந்தநீர், களாச்சமூலச்சாறு, மூங்கிற் கிழங்குச் சமூலச்சாறு, விளாவிலைச்சாறு; [முத்துசுன் நாணற்குளம் கதலி நாவல் அளை காடி சுரு அம்]=முந்திரிகைச் சமூலச்சாறு, நாணற் கற்கண்டு, வாழைச் சமூலச்சாறு, சம்பு நாவற்கனி ரசம், தயிர், காடி, கள், வெந்நீர் (என்னும் இவைகளில் ஷை பற்பத்தைச் சேர்த்துக்கொடுக்க நிவாரணமாகும்); [நாள்]=இதைக் கண்டவுடனே; [உளம் நாணற்கு]=(வியாதிகள்) மன (ப்பூர்வமாய்) வெட்கிப்பதற்கு, [கதலி]=(இதுவே) வெற்றிக்கொடியாகும்—எ - று.

(தா - ம்.) மேற்சொல்லிய களவு, மோகை, நகை தாகை, என்னும் நான்கு ரணங்களும், வாத பித்த சேத்தும பேதத்தால் ஒவ்வொன்றும் மும்மூன்ருகி வாதக்களவு ரணம், பித்தக்களவுரணம், சேத்துமக்களவுரணம், வாதமோகைரணம், பித்தமோகைரணம், சேத்துமமோகைரணம், வாதநகைரணம், பித்தநகைரணம், சேத்துமநகைரணம், வாததாகைரணம், பித்ததாகைரணம், சேத்தும தாகைரணம் எனப் பன்னிரண்டாகும்.

இவற்றுள், பாதத்தில் ரணங்கண்டு திமிருண்டாய் அக்கினிமந்தப் படுவது - வாதக்களவுரணம் என்னப்படும், இதற்குக் குளிர்ந்த நீரிலும்,

பல்லடியில் அதிக ரணங்கண்டு மிக வேதனை தோன்றி வாந்தியும், அதிக பசியும், தாகமும் உண்டாவது - பித்தக் களவு ரணம் என்னப்படும், இதற்குக் களாச்சமூலச்சாற்றிலும்,

மூக்குத் தண்டில் அதிகரணங்கண்டு வெகு உபத்திரதத்தைக் கொடுத்து ஒருவேளை அதிக பசியும், மறுவேளை அக்கினி மந்தமும் உண்டாக்குவது - சேத்துமக் களவுரணம் என்னப்படும், இதற்கு மூங்கிற் கிழங்குச் சாற்றிலும்,

கண்டத்தில் ரணங்கண்டு, வாயில் அரோசிகமான உமிநீரை யுண்டாக்குவது - வாதமோகை ரணம் என்னப்படும், இதற்கு விளாவிலைச் சாற்றிலும்,

நெற்றியில் ரணங்கண்டு சதா எரிச்சலையும், பசி தாகத்தையும் உண்டாக்குவது - பித்தமோகை ரணம் என்னப்படும், இதற்கு முந்திரிகைப்பழ ரசத்திலும்,

முழங்காலில் ரணங்கண்டு வலியுடன் பசிதாகமில்லாதிருப்பது - சேத்தும மோகை ரணம் என்னப்படும், இதற்கு நாணற்கற்கண்டுப் பொடியிலும்,

இடுப்பைச் சுற்றிலும் வட்டமான ரணங்கண்டு மரம் போல் ஸ்மரணையின்றிப் பசிதீபன மில்லாதிருப்பது - வாத நகைரணம் என்னப்படும், இதற்கு வாழைச் சமூலச்சாற்றிலும்,

கைவிரல்களின் அடியில் ரணங்கண்டு தோலுரிந்து எரிச்சலும், நமைச்சலு முண்டாகி, விசேட பசியும், மயக்கமுங் காணுவது - பித்தநகை ரணம் என்னப்படும், இதற்குச் சம்பு நாவற் பழச்சாற்றிலும்,

அடிவயிற்றில் ரணங்கண்டு அதிக நீரேற்றங்கொண்டு பசிதாகமின்றி வெள்ளைப் பூண்டு வாசனை ஏப்பமுண்டாவது - சேத்தும நகைரணம் என்னப்படும், இதற்குப்பசுவின் தயிரிலும்,

முதுகில் ரணங்கண்டு அதிக நோயின்றி மார்பின் பள்ளத்தில் நெறிகட்டிப் பசி தாகமின்றி அக்குளில் நோயுண்டாவது - வாத தாகை ரணம் என்னப்படும், இதற்கு, புளித்த காடியிலும்,

அரையில் ரணங்கண்டு, அது வெடித்துச் சிலை நீரும், இரத்தமும், சதா வடிந்து அன்னத் துவேஷமாயிருப்பது - பித்ததாகை ரணம் என்னப்படும், இதற்குக் கள்ளில் அல்லது சாராயத்திலும்,

பீஜத்தில் ரணங்கண்டு அதில்சீழும் சிலைநீரும் வடிந்து, பக்குக்கட்டிச் சதாவேதனை யுண்டாக்கி வயிறு வீங்கச் செய்து பசிதாகம் நித்திரையில்லாமற் பண்ணுவது - சேத்தும தாகை ரணம் என்னப்படும், இதற்கு வெந்நீரிலும்;

ஷை பற்பத்தை யனுபானித்துக் கொடுக்க வேண்டு மென்பதாம். (131)

## இரச பற்பம்

இயக்குரோ தச்சிறையை யேய்புல்கரு மத்த
னியக்குரோ தச்சிறையை யீந்தை—யியக்குரோ
தத்தை யரத்தை தசபஞ் சமிகுறுகு
தத்தை யரத்தையிர தம்.

(இ - ள்.) [இயக்குரோத சிறையை ஏய் புல்]=அசுணப் பட்சியின் (வாலிலுள்ள) இறகைப் போற் (கொழுந்துள்ள) புல்லாகிய (கவரிவார்புல்லின் சாறும்), [கருமத்தன்] = கறுப்பு ஊமத்தையின் சாறும், [நியக்குரோத சிறையை] = ஆல (மொக்கு, சுருள் கொழுந்து) என்னும் சமூலச் (சாறும்), [ஐ]= கம்மாறு வெற்றிலைச் சாறும்; [ஈந்தை] = பேரீச்சங் கள்ளும், (ஆகக்கூடிய ஐந்தாலும் சூதத்தை யரைத்துப் புடமிடப் பற்பமாம்); [இயக்கு ரோதத்தை அரத்தை] = அழச் செய்கின்ற உபத்திரவத்தையும் ரணங்களையும்; [குறுக தத்தை]=இவற்றுலடைகின்ற ஆபத்தையம்; [தசபஞ்சமி அரத்தை இரதம்]= ஐம்பது தினங்களில் அரத்தைப்போன் றழிக்கும் இவ்விரத பற்பம்—எ - று.

(தா - ம்) (a) அசுணமா என்னும் பட்சியின்வாலிறகைப் போன்ற கொழுந்தை யுடைய கவரிவாற் புல்லின் சாறு பலம் மூன்று, ஒரு பலம் சூதத்திற்குவிட்டு ஒருநாளிரவு ஊறவைத்து மறுநாட் காலையிலும் அவ்வளவே ரசம்விட்டு, அது தொடங்கி மாலை வரையிலரைத்து இரவில் வில்லைதட்டிப் பனியில்வைத்து மறுநாள் உதயந் தொடங்கி முன்போலவேயரைத்து, முன் போலவே செய்து, 5-நாள் வரையில் இவ்வாறு செய்து முடித்த பின்பு ஆறும்நாள் உதயம் தொடங்கி ஐந்து நாள் வரையில் வெய்யிலில் உலர்த்த வேண்டும்.

(b) பின்பு 11-ஆம் நாள் காலையில் கருஊமத்தைச் சாறும் முன்னளவே விட்டு முன்போலவே ஐந்துநாளரைத்து ஐந்து நாள் வெய்யிலி லுலர்த்தவேண்டும்.

(c) அதன்பின்பு 21-ஆம் நாள் காலையில் ஆலமரத்தின் மொக்கு, சுருள்கொழுந்து ஆகிய இவற்றின் சாறு முன்னளவே விட்டு முன்போலவே 5 நாளரைத்து ஐந்து நாள் வெய்யிலி லுலர்த்த வேண்டும்.

(*d*) இதன் பின்பு 31-ஆம் நாள் காலையில் கம்மாறு வெற்றிலைச் சாறும் முன்னவேவிட்டு முன்போலவே ஐந்து நாளரைத்து ஐந்துநாள் வெய்யிலிலுலர்த்தி பில்லையை ஓட்டில் வைத்துக் கவசித்து 1-நாள் வெய்யிலில் காயவைத்தும் ஆகக்கூடிய நாற்பத்தொரு நாளுங்கழிந்த நாற்பத்தி யிரண்டாம் நாள் காலையில் நாற்பது வரட்டியிற் புடத்தைப் போட்டு ஒரு நாள் ஆறவிட்டு மறுநாள் எடுத்துப்பார்க்க அரைவாசி பற்பமாம்.

(*e*) அதன்பின், பேரீச்ச மரப்பதனி முன்னளவேவிட்டு முன்போலவே ஐந்துநாளரைத்து ஐந்து நாள் வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலிலுலர்த்தியபின், முப்பத்தைந்து வரட்டியிற் புடம்போட்டு ஒருநாள் ஆறவிட்டு மறுநாளெடுத்துப்பார்க்க முழுப் பற்பமாகும்.

இப்பற்மம் ஐம்பதுநாள் பத்தியத்துடன் புசித்துவத்தால் எவ்வகை ரணங்களையும் ஆற்றி அதனாலுண்டாகும் உபத்திரவங்களையும் ஆபத்தையும் நீக்கிச் சரீரத்தைப் பாதுகாக்கும் என்பதாம். (132)

### இரச பற்பத்தின் அளவும் மகிமையும்.

சூதத் தருவெண்மை தொன்மங் களமீபோற்
சூதத் தருவெண்மை தோரையொன்றே—சூதத்
குருகுளிகை யீராறு கொண்டறிவார் கண்ட
குருகுளிகை யீராறு கொள்.

(இ - ள்.) [சூதத்தரு வெண்மை]=மாமரத்தின் (கண்ணுள்ள) விமலம் (என்னும்) மா விலையானது, [தொல் மங்களம் ஈ போல்] = புராதனமான மங்கலக் குறியைக் கொடுப்பது போன்று, [சூதத்து அரு வெண்மை]=இரசத்தின் அருமையான பற்பம், [தோரை ஒன்றே]=ஒரு துவரையினளவே, [சூதக் குரு குளிகை ஈர் ஆறு கொண்டு அறிவார்] = இச்சூத பற்பமாகிற குருவைக் கொண்டும் (இதையே) குளிகையாக்கிக் கொண்டும் வைத்தியம், வாதம் என்னும் இரண்டு மார்க்கத்திற்கும் (கருவியாகக்) கொண்டு அதன் பயனை (உணர்வார்கள் பண்டிதர்கள்) [கண்ட குருகு உளிகை ஈற் ஆறு கொள்] = (புழுவைப்பார்த்த) குளவியானது அதனிடத்துள்ள குற்றங்களை யறுப்பதுபோல

(இப்பற்பமும் சரீரத்துள்ள பிணிகளை யொழிக்கு மென்று) நீ யறிந்து கொள்வாயாக.—எ - று.

(தா - ம்.) மாவிலையானது எப்படிப்பட்ட காலங்களிலும் முக்கியமான வஸ்துவாய் உபயோகப்படுவதுபோல, இப்பற்பமும் எவ்வித ரோகங்கட்கும் உபயோகமாவதுடன் வாதத்திற்கும் முக்கியமானதாகுமென்பதும். (133)

## இரச பற்பத்திற்குப் புறநடை.

கரும்புறவு வெள்ளைசெம்மை கங்கைநிற மூன்று
கரும்புறவு வெள்ளைசெம்மை கங்கை—கரும்புறவு
மாதமுத வாரிமிச்சில் வன்னியைபான் மோரளைநெய்
மாதமுத வாரியனு வாய்.

(இ - ள்.) [கரும்புறவு, வெள்ளை செம்மை கம்கை நிறம்]=கறுப்புப் புருவைப்போன்றும், வெள்ளைப் புருவைப் போன்றும், சிவப்புப் புருவைப் போன்றும், தலையிலும், கைகளிலும், மார்பிலும், [ஊன் து]=மற்றிடங்களிலும், சந்து கீழ்களிலும் (தேமலிருந்தால் அவைகட்கு) [கரும் புறவு வெள்ளை செம்மை கங்கை]=தேன், கள், சாராயம், குளிர்ந்த நீர், [கரும்பு உறவு மாதமுது அவாரி மிச்சில்]=கருப்பஞ்சாறு, சருக்கரை, முலைப்பால், சிறுநீர், உமிநீர், [வன்னி ஐ பால் மோர் அளை நெய்]=வெந்நீர், பசுவின் வெண்ணெய். பசுவின் பால், பசுவின் மோர், பசுவின் தயிர், பசுவின் நெய்; (என்னும் இவைகளிலே) [மாதம் உதவு ஆரியன் ஆவாய்]=ஷை பற்பத்தை ஒரு மாதம் வரைக்கும் கொடுத்தால் (நீ அந்நோய்களைத் தீர்க்கத் தக்க பண்டிதனுவாய்—எ - று.

(தா - ம்.) தலையில் வாதத்தைச் சேர்ந்த மேக வெட்டையினுற்காணும் கரும் புருவைப்போன்ற கறுத்த தேமற் சொரிக்கு, ஒருவிதமான திமிர், தாமதகுணம், அக்கினிமந்தம், மல பந்தம், அதி நித்திரை, பிணிப்பு, பிரயாசம், இவைகளுண்டாகும், இதற்கு, தேனிலும்;

தலையில் சேத்துமத்தைச் சேர்ந்த மேக வெட்டையினுற் காணும் வெண்புருவைப் போன்ற வெளுத்த தேமற் சொரிக்கு, சொரிந்தால் நீர்வருதல், வயிற்றிற் கட்டி, நோயுண்டாதல், நீரிழிவு என்னும் இக் குணங்களுண்டாம், இதற்கு, கள்ளிலும்,

தலையில் பித்தத்தைச்சேர்ந்த மேகவெட்டையாற்காணும் செம்புருவைப்போன்ற தேமற் சொரிக்கு, சிரங்கு, புண், சொரியச் சொரியச் சிதள் பற்றி வருதல், ஒருவித துர்க்கந்தம், வாய் நீர் சுரத்தல், அரோசகம், வயிற்றில் அனல்போற் காணுதல் என்னும் இக்குணங்களுண்டாம். இதற்கு திராக்ஷ சாராயத்திலும்;

கையில் வாதத்தைச்சேர்ந்த மேக வெட்டையாற் காணும் தேமற் சொரிக்கு, இரத்தத் திமிர், வயிறு மகோதரங் கண்டது போலிருந்து துயர் விளைக்கும், இதற்கு, குளிர்ந்த ஜலத்திலும்,

கையில் சேத்துமத்தைச் சேர்ந்த மேகவெட்டையாற் காணும் தேமற் சொரிக்கு, அதி தினவு, சரீரமெங்கும் அவ்வாறே தினவு, அதிக எரிவு, பெரும் பசி என்னும் இக்குணங்களுண்டாம். இதற்கு, கருப்பஞ்சாற்றிலும்;

கையில் பித்தத்தைச்சேர்ந்த மேக வெட்டையாற் காணும் தேமற் சொரிக்கு, அதிக தினவு, சொரிந்து நீர்வடிந்தால் அதில் புலால் நாற்றம் வீசுதல், வயிற்றிற் குன்மத்தைப் போலெரிந்து நோயுண்டாய் இரைதல் என்னும் குணங்களுண்டாம், இதற்கு, சர்க்கரையிலும்;

மார்பில் வாதத்தைச்சேர்ந்த மேகவெட்டையாற் காணும் தேமற் சொரிக்கு, சொரி புண், அடி வயிற்றிற் வீக்கம், வல்லையைப்போற் காணுதல், பசி தாகமில்லாதிருத்தல் என்னும் இக்குணங்களுண்டாம், இதற்கு, முலைப்பாலிலும்;

மார்பில் சேத்துமத்தைச்சேர்ந்த மேகவெட்டையாற் காணும் தேமற் சொரிக்கு, சிரங்குபோற் கண்டுநோய் விசேடித்தல், அடி வயிற்றில் எலும்பு சந்துகள் நோதல், பசிதாகமில்லாமை என்னும் இக் குணங்களுண்டாம், இதற்கு, சிறு நீரிலும்;

மார்பில் பித்த மேக வெட்டையாற் காணும் தேமற் சொரிக்கு, வரட்சி புண்ணுண்டாதல், வயிற்றிலெரிச்சல், அதி தாகம் என்னும் இக்குணங்களுண்டாம், இதற்கு, உமிநீரிலும்;

சரீரத்துள்ள மற்றைப் பாகத்தில் வாதத்தைச்சேர்ந்த மேகவெட்டையாற் காணும் தேமற் சொரிக்கு, அடித் தொண்டை வீக்கம், அக்கினிமந்தம் என்னும் இக்குணங்களுண்டாம், இதற்கு, வெந்நீரிலும்;

ஷை தானத்தில் சேத்துமத்தைச் சேர்ந்த மேகவெட்டையாற்காணும் தேமற் சொரிக்கு, கால் வீங்குதல், பசிதாகமின்மை வேதனை என்னும் இக்குணங்களுண்டாம், இதற்கு வெண்ணெய்யிலும்;

ஷை ஸ்தானத்தில் பித்தத்தைச்சேர்ந்த மேகவெட்டையாற்காணும் தேமற் சொரிக்கு, புண்ணுதல், தினவு, வயிற்றிலெரிவு, விசேடபசி என்னும் இக்குணங்களுண்டாம், இதற்கு, பசுவின் பாலிலும்;

கீல்களில் வாதத்தைச் சேர்ந்த மேகவெட்டையாற் காணும் தேமற் சொரிக்கு, காலடி விங்குதல், பசியின்மை என்னும் இக்குணங்களுண்டாம், இதற்கு, பசிவின் மோரிலும்;

கீல்களில் சேத்துமத்தைச் சேர்ந்த மேகவெட்டையாற் காணும் தேமற் சொரிக்கு, தினவு, பல் வலி, அதிநீர், கண்களில் வலி என்னும் இக்குணங்களுண்டாம், இதற்கு, பசுவின் தயிரிலும்;

கீல்களில் பித்தத்தைச் சேர்ந்த மேகவெட்டையாற் காணும் தேமற் சொரிக்கு, செங்குஷ்டம் போலிருத்தல், அதி பசியுண்டாதல் என்னும் இக்குணங்களுண்டாம், இதற்கு, பசுவின் நெய்யிலும்;

அனுபானித்துக் கொடுக்க நிவாரணமாகுமென்பதும்.

ஒரு மாதம்வரையிற் புசிக்க வேண்டுமென்பதுமேயாம், (134)

## இதுவும் இரசபற்பத்திற்குப் புறநடை.

கருமத்தங் காய்வித்தைக் கண்ட நெய்மே கப்புண்
கருமத்தங் காய்வித்தைக் கண்ப — கருமத்தம்

பூசினிர தத்தவளம் புல்லளைமோ—ராம்பிரமை
பூசினிர தத்தவளம் பொய்.

(இ - ள்.) [கரு மத்தங்காய் வித்தைக் கண்ட நெய்]= கருப் பூமத்தங்காய் விதையினு லிறக்கிய குழித்தைலத்திலே; [மேகப்புண்]=மேக ரணங்கள்; [கருமத்து அம் காய்வு] = செயற்கையா லுண்டான சிலை நீரொழுகும் காயங்கள்; [இத்தைக் கண்]=இவைகளைக் குறித்து; [பகரும் இரதத் தவளம் அத்தம் பூசின்[ = மேற்சொல்லிய இரத பற்பத்தை (முன் தைலத்திற்குப்) பாதியள (வாகச் சேர்த்து) பூசி வந்தாற் (குணமாகும்); [புல் அளை மோர் ஆம்பிரம் ஐ] = சர்க்கரை, தயிர், மோர், புளி, வெண்ணெய்; [பூசு இன் இரதத்தவள் அம் பொய்]=அலங்கரித்துக் கொள்ளும் இனிமையான சுரதமுடையவளது அழகை (விரும்புதல் என்னும் இவைகள்) ஆகாது—
எ - று.

(தா - ம்.) கருப் பூமத்தங்காய் விதை, பூவரசின் விதை, பிரண்டை விதை, காரை விதை, அழிஞ்சில் விதை, நிலையாவாரை விதை, முள்ளிக்காய் விதை, பெரும் பூசினிக்காய் விதை, வில்வ விதை, எட்டி விதை, பொன்னுவாரை விதை, பருத்தி விதை, புன்னைக் கொட்டை விதை, பேரீச்சங்காய் விதை, பேய்ப் பீரக்கு விதை, பனங்கொட்டை, பேய்ப் புடல் விதை, துளசி விதை, முசுமுசுக்கை விதை, மிளகாய் விதை, விசிறி விதை, ஆகிய இவை வகை 1-க்கு ஒரு வீசை; வெள்ளைக் குங்கிலியம் கால் வீசை, மெழுக்கு பலம் ஐந்து, கொப்பரைத் தேங்காய் பலம் ஐந்து, இவற்றை ஒன்ருய்க் கலந்து குழித் தைலம் இறக்கி, இருபது நாள் ஆறவைத்தெடுத்து அதில் இப் பற்பத்தைச் சேர்த்து மேலுக்குப் பூசின், மேக ரணங்களும், காயங்களும், ஆறிப்போம் என்பதாம்.

அன்றியும், மேகப் புண், கருப்பத்தைப் பற்றினதென்றும், பெண் போக மிகுதியால் வந்ததென்றும் இருவகையாம்.

அவற்றுள் கருப்பத்தைப் பற்றிய மேகரணங்கள், கால், கை, மார்பு, முகம், வாய் ஆகிய இந்த இடங்களில் வெப்பமிக்க சூட்டைப்போல் வெளிக்குக் காட்டும்போது, ஏக தேசத்திற் சுரம் காய்வது போற் காய்ந்து, அன்னத்தை வெறுக்கச்செய்து, உற்பாதமாகப் பசியையும் தாகத்தையும் காட்டி, அக்கினிச்

சுவாலை வீசி, சிவந்த பருவைப் போலவும், கோடைக் கொப்பளத்தைப் போலவும், புன்னைக் காயைப் போலவும், சங்கம் பழத்தைப் போலவும் ரணங் காணும்.

மேற்படி ரணம் வாத தேகமானுல், குதிக்காலடியிலும், பக்க விலாவிலும், முழங்காலிலும், கணுக்கால் மேற் புறத்திலும், புறவடிப் பள்ளத்திலும் காணும்;

பித்த தேகமானுல், மார்பின் பள்ளத்திலும்; முலைக் சண்ணிலும், உந்திச் சிழியிலும், மார்பின் பக்கத்திலும் புறப்படும்.

சேத்தும தேகமானுல், முகம், முதுகு, அக்குட் சந்து, இரண்டு புயங்களின் மேற்பக்கம், பல்லடி, வாய் என்னும் இவ்விடங்களிற்காணும்.

பெண் போக மிகுதியால் உண்டாகும் ரணங்கள், துடையடி மடிப்பு, பீஜத்தின் மேலடிப் பக்கம் என்னும் இவ்விடங்களிற்காணும்.

இது பித்த தேகமானுல், முழங்கால், முலைப்பக்கம், விலாப்பக்கம், ஆகிய இவ்விடங்களிற்காணும்,

சேத்தும தேகமானுல், மூக்குத்தண்டின் விளிம்பு, காது, தலைப் புறப்பக்கம் ஆகிய இவ்விடங்களிற் காணும்,

வாத தேகமானுல், இவ்வாறு புறப்படுவதற்கு முன், கொஞ்சம் வாதத்தைப் போலச் சரீரத்திற் பாதையுண்டாக்கி, சுரத்தைக் காண்பித்தப்படியே நான்கு நாளைக்குள்ளாக அதிக உபத்திரவத்தை விளைவித்து, சரீர முழுவதும் சிலவேளை கறுத்தும், சிலவேளை சிவந்தும், சிலவேளை வெளுத்தும் இவ்வாறு அடிக்கடி பேதப்பட்டுக் காணும்.

இவ்வித ரணம் தானே பழுத்து உடைந்து போனுல் நலம், ஒருவேளை காய்ச்சலில்லாதிருந்து உடையாமலிருந்தாலும் பாதகமில்லை. இல்லாத பட்சத்தில் மருந்துப்பூச்சினுல் பழுத்துடையச் செய்ய வேண்டும். தானே யுடைந்து புண்ணுகிச் சுரவெப்பத்தைக் காட்டுமானுல் அது குணமாகும். நிச்சயமாகவே சுரமிருந்தால் அது அசாத்தியமாம் என்பதே.
(135)

### சங்க பற்பம்.

நனைக்கமுக மாதவிமா நாவலத்தி புன்னை
நனைக்கமுக மாதவியி னுகு—நனைக்க
வளமா குருகுலத்து மன்னு மெனத்தா
வளமா குருகுலத்து மால்.

(இ - ள்) [கமுகம் நனை]=பாக்கு மரத்தின் பாளையாகிய பூவை (இடித்த சாறு), [மாதவி]=குருக்கத்திச்சாறு, [மா]= மாவிலைச் சாறு, [நாவல்] = குழிநாவலிலைச் சாறு, [அத்தி]= அத்தியிலைச் சாறு; [புன்னை]=புன்னை யிலைச்சாறு (என்னும் இவைகளை விட்டு அரைத்துப் புடமிட) [நனை கம் முகம் மாதவி யின்]= தேனுகிய நீருக் கிடமாயிருக்கும் வசந்த மல்லிகையின் நிறம் வாய்ந்த, [நாகு]=சங்கானது; [நனை கவளம் மா குரு குலத்து மன் ஆம் என தாவளம்]=ஈரமான கவளத்தையுண்ணு கின்ற யானையை யுடைய குருகுலத்து அரசனுன பாண்டுவைப் போல வெண்மையான (பற்பமாம்); [மா குருகு உலத்து மால்] =(இப் பற்பமானது) சிறந்த இளமையுடனே திரண்ட கல் போன்ற வலிமையையும் (கொடுக்கும்.)—எ - று.

(தா - ம்.) (a) முன் சொன்ன முறைப்படி சுத்திசெய்த வெண்சங்குப்பொடி பலம் 1-க்கு பாக்குப்பூச்சாறு, 6-பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநா ளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷ்டி பூச்சாறு 6-பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத் தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் முன் பூன்சாறு 6- பலத்தையே சிறுகச் சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 4-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்து, வார்த்து அரைத் தரைத்துப் பில்லைதட்டிப் பனியில் ஆறவைத் தாறவைத்த பின்பு 7-ஆம் நாள் உதய முதல் 5-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்ருயுலர்ந்த பின்பு 13-ஆம் நாள் உதயத்தில் 36 காட்டு வரட்டியிற் புடமிட்டு ஒருநாளாறவிட்டு மறுநாளுத யத்திலெடுக்க, ஆறிலொருகூறு பற்பமாகியிருக்கும்.

(b) மறுபடி 15-ஆம் நாள், ஆறிலொருகூறு பற்பமாகிய ஷை சங்குப்பொடி பலம் 1-க்கு குருக்கத்தியிலைச்சாறு 5-பலம் விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவே முன்போலவே யூறவைத்து மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை இலைச்சாறு 5-பலத்தைவிட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். மறுநாளுதயத்திலும் புதிதான முன் இலைச்சாறு 5-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகலில் அரைத்து இரவில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும் 3-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைத்தட்டிப் பனியில் ஆறவைத் தாற வைத்து 4-நாள் வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலிலுலர்த்தின பின்பு, அடுத்த நாளுதயத்தில் 28-காட்டு வரட்டிற் புடமிட்டு 1-நாள் ஆறவைத்தெடுக்க மூன்றிலொரு கூறு பற்பமாயிருக்கும்.

(c) பின்பு 27-ஆம் நாள் மூன்றிலொருகூறு பற்பமான ஷை சங்குப்பொடி பலம் 1-க்கு, மாவிலைச்சாறு பலம் 5-விகிதம் அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் முன் போலவே ஷை இலைச்சாறு 5-பலம் விகிதம் விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைத் தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். மறு நாள் உதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படி இலைச்சாறு 5-பலம் விகிதம் விட்டு பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைதட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்விதம் மீண்டும் 3-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே முன்னளவே விட்டு விட்டரைத் தரைத்துப் பில்லை தட்டி பனியில் ஆறவைத்தா றவைத்து, 4-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து அடுத்த நாளுதயத்தில் 25-காட்டு வரட்டியில் புடமிட்டு 1-நாளாற விட்டு மறுநாளெடுக்க அரைக்கூறு பற்பமாயிருக்கும்.

(d) இதன் பின்பு 39-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான ஷை சங்குப்பொடி பலம் 1-க்கு குழிநாவலிலைச்சாறு பலம் 4 விகிதம் விட்டு, அரைப்பதற்கு முதல்நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி யிலைச்சாறு பலம் 4-விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லை

செய்து பனியில் ஆறவைக்கவேண்டும். மறுநாளுதயத்திலும் முன்போலவே ஷை யிலைச்சாறு பலம் 4 சிறுகச் சிறுக விட்டு, பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைசெய்து பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்விதம் மீண்டும் 2-நாள் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவே வார்த்தரைத்து பில்லை செய்து ஆறவைத்துப் பின்பு 3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து அடுத்த நாளுதயத்தில் 20-காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவைத்து மறுநாளெடுத்துப்பார்க்க ஆறில் நான்கு கூறு பற்பமாயிருக்கும்.

(e) பின்பு 49-ஆம் நாள்; ஆறில் நான்கு கூறு பற்பமான ஷை சங்குப்பொடி பலம் 1-க்கு அத்தியிலைச்சாறு பலம் 4 விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவில் ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி இலைச்சாறு 4-பலம் விகிதம் விட்டு பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லை தட்டிப் பனியில் ஆறவைக்கவும். மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை யிலைச்சாறு 4-பலம் விகிதம் விட்டு, பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 2-நாள் செய்து, பின்பு 3-நாள் அதை வெளிக்காட்சியாகவும், முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் உதயத்தில் 18-காட்டுவரட்டியிற் புடமிட்டு 1-நாளாறவிட்டெடுக்க ஆறிலைந்து கூறு பற்பமாயிருக்கும்.

(f) மறுபடி 59-ஆம் நாள், ஆறிலைந்து கூறு பற்பமாகிய ஷை சங்குப்பொடி பலம் 1-க்கு புன்னையிலைச்சாறு 4-பலம் விகிதம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டூறவைத்து, மறுநாளுதயத்திலும், புதிதான மேற்படி யிலைச்சாறு 4-பலம் வார்த்து பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைதட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 2-நாள் செய்து பில்லையை 3-நாள் வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து பின்பு மறுநாள் உதயத்தில் 14-காட்டு வரட்டியிற் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு, மறுநாளுதயத்திலெடுத்துப் பார்க்க முழுக்கூறு பற்பமாகியிருக்கும்.

இப்பற்பம் புசிப்போர் சரீரத்திற்கு இளமையையும் வலிமையையும் கொடுக்கும் என்பதாம். (136)

### சங்க பற்பத்தின் பிரயோசனம்.

கானடுக்க மாலை கனலத்தி தும்மல்விக்கல்
கானடுக்க மாலை கழலைமுத்தீ – கானடுக்கம்
பாசமறு கையவிசொல் பாலளைமோர் புல்குளங்கள்
பாசமறு கையவிநீ பம்.

(இ - ள்.) [கால்[ = வாத ரோகம், [நடுக்கம்] = கம்ப வாதம், [மால்] = பித்த ரோகம், [ஐ] = சேத்துமரோகம், [கனல்]=சுரம், [அத்தி]=மூர்ச்சை, [தும்மல்]=தும்மல், [விக்கல்]=விக்கல், [கால்]=வாந்தி, [நடுகு]=குன்மம்,[அம்]=நளிர் [மாலை[ = கண் வியாதி, [கழலை]=புரை குழல், [முத்தி]=வாத பித்த சேத்தும சுரங்கள், (என்னும் இவைகட்கு முறையே) [கான்]=தேன், [அடுக்கம்]=வெந்நீர், [பாசம்]=குளிர்ந்த நீர் [அறுகு]=ஆளி விதையை அரைத்துப்பிழிந்த ரசம், [ஐயவி]= கடுகு சமூலச்சாறு, [சொல்]=நெற்பசுங் கதிர்ச்சாறு, [பால்]= பசுவின் பால், [அளை] = பசுவின் தயிர், [மோர்] = பசுவின் மோர், [புல்]=சருக்கரை, [குளம்[=வெல்லம், [கள்]=பனங் கள், [பாசம்]=பசுவின் நெய், [அறுகு]=அறுகின் சமூலச்சாறு, [ஐ]=பசுவின் வெண்ணெய், [அவி]=நீராகாரம், [நீபம்]= கடப்பம்சாறு, (என்னும் இவைகளில் ஷெ பற்பத்தை அநு பானித்துக் கொடுக்க நிவாரணமாகும்— எ - று.

(தா - ம்.) வாத ரோகத்திற்கு, தேனிலும், கம்ப வாதத் திற்கு, வெந்நீரிலும்; பித்த ரோகத்திற்கு, குளிர்ந்த நீரிலும்; சேத்தும ரோகத்திற்கு, ஆளிவிதையரைத்த ரசத்திலும்; சுரத் திற்கு, கடுக சமூலச்சாற்றிலும்; மூர்ச்சை ரோகத்திற்கு, நெற் பசுங் கதிர்ச் சாற்றிலும்; தும்மலுக்கு, பசுவின் பாலிலும்; விக்கலுக்கு, பசுவின் தயிரிலும்; வாந்திக்கு, சருக்கரையிலும்; குன்மத்திற்கு, பனவெல்லத்திலும்; நளிர்ரோகத்திற்குப் பனங் கள்ளிலும்; கண் வியாதிகட்கு, பசுவின் நெய்யிலும்; புரை குழலுக்கு, அறுகு சமூலச்சாற்றிலும்; வாத சுரத்திற்கு, பசுவின் வெண்ணெயிலும்; பித்த சுரத்திற்கு, நீராகாரத்திலும்; சேத்தும சுரத்திற்கு, கடப்பஞ் சாற்றிலும்; ஷெ பற்பத்தை அநுபானித்துக் கொடுக்க நிவாரணமாகுமென்பதாம். (137)

## சங்க பற்பத்திற்குப் புறநடை.

வலம்புரியை ஞாட்பில் வலம்புரியைக் கேட்டு
வலம்புரியை யென்னவமர் வாங்கும்—வலம்புரியை
சிந்துவா ரத்துமழை தேனிலுண்டு தேனிலின்பஞ்
சிந்துவா ரத்துமழை செய்.

(இ - ள்.) [வல் அம்பு உரி இயை ஞாட்பில்] = வாதம், சேத்துமம், பித்தம் (என்னும் இவைகள் அதிகரித்த) தருணத்தில், [வலம்புரியை கேட்டு]=சங்க பற்பம் (என்னும் சொல்லைக் கேட்டு, [வலம்புரி ஐ என்ன அமர் வாங்கும்]=(இப்பற்பம்) நாம் பிரதக்ஷணம் (செய்யத்தக்க) கடவுளென்று (நினைத்து) (தாங்கள் செய்து கொண்டிருந்த) போரை விட்டு விடும், [வலம்புரி ஐ]=நந்தியா வட்டன்சாறு, [சிந்துவாரத்து மழை தேனில் உண்டு] = வெண்ணொச்சிச்சாறு, தேன் (என்னும் இவைகளில் இப்பற்பத்தைச்சேர்த்து) புசித்து; [தேன் இன்பம் இல்]=இனிப்பான சிற்றின்பத்தை நீக்குவாயாக; (அல்லாமலும்) [சிந்து ஆர்த்தும் அழை செய்[=கடல் போல (ஒலித்தும்) (யாவரையு) மழைத்து அவர்கட்கும் (பரிகாரம்) செய்வாயாக
—எ - று.

(தா - ம்) வாத சன்னி, வல்லை, குன்மம், பெருவயிறு, பாண்டு, மேக வாதம், பட்சவாயு, தனுர் வாதம், சூசிகா வாய்வு, வாத குன்மம், வாத மகோதரம், வாத மூலப் பிரமியம், வாத காசம், வாத கபப்பிணி என்னும் இவைகட்கு நந்தியா வட்டன் சமூலச்சாற்றிலும்,

கபசன்னி, வாதசுரம், நளிரானிலம், விலாப்புறச் சன்னி பாதம், பீனசம், மார்வலி, மகா சலோதரம், வல்லை, என்னும் இவைகட்கு, வெண்ணொச்சிச் சாற்றிலும்,

பித்த சன்னி, பித்த சோகை, பித்த மகோதரம், பித்த காசம், கபம், பித்த பாண்டு, பெரும்பாடு, பித்தமூலம், பித்த வல்லை, பித்த நீர்க்கட்டு, பித்த வாத குன்மம், உன்மத்த சுரம், வாய்நீர்ப் பெருக்கு, என்னும் இவைகட்கு, தேனிலும் கொடுக்க நிவாரணமாகும்,

சிற்றின்பம் நீக்கியிருத்தலே பத்தியமாமென்பதே.(138)

## இதுவும் சங்க பற்பத்திற்குப் புறநடை.

சங்கபுங்க தும்பை சரைசெவிடி யூறிடைபோஞ்
சங்கபுங்க தும்பைவனந் தாழையினெய்—சங்கபுங்க
நார மருணமுன்னை நாவனெல்லி நானமடு
நார மருணமுன்னை நாள்.

(இ - ள்.) [சங்க புங்க தும்பை சரை]=சங்கைப் போன்றும், சாதத்தைப்போன்றும், தும்பை மலரைப்போன்றும் (வெண்ணிறமுள்ள) நரை (மயிரும்) [செ வெடி ஊறு இடை]=செம்பட்ட மயிரும், முனை வெடித்த மயிரும், நடுவிலொடியு மயிரும், சுருட்டை மயிரும், [சங்க புங்க தும்பை வனம் தாழை யினெய்]=சங்கம் பழத் தைலத்திலும், புங்கம் வேர்த் தைலத்திலும், தும்பைத் தைலத்திலும், துளசித் தைலத்திலும், தேங்காய்த் தைலத்திலும், [சங்க புங்க]=சங்க பற்பத்தைச் சேர்த்துத் (தேய்த்துக்கொள்ள), [போம்]=(ஷை மயிர்கள்) மாறிப் போம்; [நாரன்]=வேலம் பாசி; [அருணம்]=எலுமிச்சம் பழம், [முன்னை]=முன்னைக் கீரை, [நாவல்]=நாவற் சாறு, [நெல்லி]=நெல்லிச் சாறு, (என்னும் இவைகளால் கழுவவும்) [நானம்]=(ஷை தைலங்களில்) கொஞ்சம்) கஸ்தூரி (சேர்க்கவும்); [அடு நாரம் அருண முன் ஐ நாள்]=வெந்நீரில் சூரியாஸ்தானமானத்திற்கு முன் ஐந்து நாள் இவ்வாறு தேய்த்து ஸ்நானம் செய்யவும்—எ - று.

(தா - ம்.) நரை மயிருக்கு, சங்கம் பழத் தைலத்தில் கொஞ்சம் கஸ்தூரி கலந்து ஷை பற்பம் சேர்த்து அதிகாலையில் தலையில் தடவிக்கொண்டு, அஸ்தமானம் வரையில் ஊறவைத்துக்கொண்டிருந்து வேலம்பாசியைக் கொண்டு தேய்த்து, வெந்நீரில் ஸ்நானம் செய்யவும். இவ்வாறு ஐந்து நாள் செய்தால் நிவாரணமாகும்.

செம்பட்ட மயிருக்கு, புங்கம் வேர்த் தைலத்தை முன் போலவே செய்து தடவிக்கொண்டு எலுமிச்சம்பழ ரசத்தால் தேய்த்து, ஐந்து நாள் வரையில் விடாது ஸ்நானம் செய்து வந்தால் நிவாரணமாகும்.

முனை வெடித்த மயிருக்கு, தும்பைச் சமூலத் தைலத்தை முன்போலவே செய்து தடவிக்கொண்டு, முன்னைக்கீரை ரசத்

தால் தேய்த்து, முன்போல் விடாமல் ஐந்துநாள் செய்து வந்தால் நிவாரணமாகும்.

நடுவில் முறியும் மயிருக்கு, துளசித் தைலத்தைப் முன் போலவே செய்து தடவிக்கொண்டு, நாவல்ரசத்தால் தேய்த்து, முன்போலவே விடாமல் ஐந்து நாள் செய்து வந்தால் நிவாரணமாகும்.

சுருட்டை மயிருக்கு, தேங்காய்த் தைலத்தை முன் முறை போலவே செய்து தடவி, நெல்லிச் சாற்றால் தேய்த்து, முன் போலவே ஐந்துநாள் செய்து வந்தால் நிவாரணமாகும்.

இத் தைலங்களை அதிகாலையில் தடவிக்கொண்டு ஊற வைத்து அஸ்த மானத்திற்கு முன் வெந்நீரில் ஸ்நானம் செய்ய வேண்டும். ஐந்துநாள் விட்டு விட்டு ஐந்து முறை ஸ்நானம் செய்யவேண்டும். என்பதே. *(139)*

### பவள பற்பம், அதன் பிரமாண முதலியவைகள்.

ஆரோ கணியருக்கை யாறஞ்சு வித்துருமை
யாரோ கணியருக்கை யாமடலை—யாரோ
கணியருக்கை மாருசியை கார்த்திகையின் மீனோய்
கணியருக்கை யாயிருக்கக் கல்.

(இ - ள்.) [ஆர் ஒ கணி அருக்கு ஐ]=ஆத்தி, கொண்றை, வேங்கை, எருக்கு, (என்னும் இவற்றின்) சாற்றால்; [ஆறு அஞ்சு வித்துருமை]= ஆறு நாள், ஐந்துநாள், ஆறுநாள், ஐந்துநாள் (என்னும் முறையே) பவளத்திற்கு வி(ட்டரைத்தால்; [ஆரோ கணி அருக்கை ஆம் அடலை]=(உலகத்தின்) மீதேறி யிருக்கும் சூரியனைப்போல் பிரகாசிக்கும் பற்பமாம்; [யாரோ கணி அருக்கு]=எவர்களோ (இதன் பெருமையை) அளப்பவர்கள் அருமையாகும்; [ஐ மாருசியை]=(இதன் அளவு) மிளகை ஐந்து (பங்காக்கி கொள்க); [கார்த்திகை வில் மீன் நோய்] = கார்த் திகை, மார்கழி, பங்குனி (என்னும் இம்மாதங்களின் இப்பற்பம் புசிக்கிற்றுன்பமாம்; [கணி யருகு ஐ ஆ யிருக்க கல்] = மருத நிலத்தின் சமீபத்தில் தலைவனுயிருப்பதற்கு முயற்சி—எ - று.

(தா - ம்.) (a) முன் சொல்லப்பட்ட முறைப்படி சுத்தி செய்த பவளப்பொடி பலம் 1-க்கு ஆத்தியிலைச்சாறு 6-பலம்

விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படி யிலைச்சாறு 6-பலம் சிறுகச்சிறுக விட்டு, அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைதட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இரண்டாம் நாள் உதயத்திலும் முன்சாற்றையே 6 பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைதட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 4 நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன் விகிதம் விட்டு விட்டு, அரைத் தரைத்துப் பில்லைதட்டி பனியில் ஆறவைத்தாறவைத்து பின்பு 7-ஆம் நாள் உதயமுதல் 5-நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யலில் காய வைத்து நன்ருயுலர்ந்த பின்பு 13-ஆம் நாள் காலையில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க, காற்கூறு பற்பமாகியிருக்கும்.

(*b*) மறுபடியும் 15-ஆம் நாள், காற்கூறு பற்பமான ஷெ பவளப்பொடி பலம் 1-க்கு சரக்கொன்றையிலைச்சாறு பலம் 5 விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல்நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படி கொன்றை யிலைச்சாறு 5 பலத்தை சிறுகச் சிறுக விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைசெய்து பனியிலாறவைக்க வேண்டும் அடுத்த மறுநாளுதயத்திலும் புதிதான முன் யிலைச்சாறே 5 பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டுப் பகலில் அரைத்து இரவில் பில்லை செய்து பனியிலாறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும் 3-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவே விட்டு விட்டு, அரைத் தரைத்து பில்லைசெய்து பனியிலாறவைத்தாறவைத்து 4-நாள் வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, பின்பு மறுநாளுதயத்தில் 25 காட்டு வரட்டியில் புடமிட்டு 1-நாளாறவைத்து மறுநாளெடுத்துப்பார்க்க அரைக்கூறு பற்பமாகியிருக்கும்.

(*c*) பின்பு 27-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான மேற்படி பவளப்பொடி பலம் 1-க்கு இரத்தவேங்கைப்பட்டைச்சாறு பலம் 6 விகிதம் அரைப்பதற்கு முதல்நாளிரவிலேயே விட்டு யூறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி பட்டைச்சாறு 6-பலம் விகிதம் விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைதட்டிப் பனியிலாறவைக்க

வேண்டும். அடுத்த மறுநாள் உதயத்திலும் மீண்டும் புதிதான ஷெ பட்டைச்சாறே 6 பலம் விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைசெய்துப் பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்விதம் மீண்டும் 4-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து, அரைத்தரைத்துப் பில்லைசெய்து பனியிலாறவைத் தாறவைத்து, 6-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காய வைத்து, அடுத்த மறுநாள் காலையில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒரு நாளாறவைத்து, மறுநாலெடுத்துப்பார்க்க முக்காற்கூறு பற்பமாகியிருக்கும்.

(*d*) இதன் பின்பு 41-ஆம் நாள், முக்காற்கூறு பற்பமான ஷெ பவளப்பொடி பலம் 1-க்கு, எருக்குச் சமூலச்சாறு பலம் 5 விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவிலே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி சாறு பலம் 5 விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைதட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். அடுத்த மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி சாறு பலம் 5 விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைதட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்விதம் மீண்டும் 3-நாள் முன் சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து அரைத்தரைத்து பில்லைசெய்துஆறவைத்தாறவைத்து பின்பு 4-நாள் அதைவெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும், வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 25 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு. மறுநாலெடுத்துப் பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இதை மிளகின் ஐந்து கூறில் ஒரு பங்காகப் புசிப்பது உத்தமம், மேற்படி இரண்டு பங்காகப் புசிப்பது மத்திமம், மேற்படி மூன்று பங்காகப் புசிப்பது அதமம், மேற்படி நான்கு பங்காகப் புசிப்பது அதமாதமம், மேற்படி ஐந்து பங்காகப் புசிப்பது துணிவு என்பதும்,

கார்த்திகை, மார்கழி, பங்குனி என்னும் இம்மாதங்களில் புசிக்கலாகாதென்பதும்,

மருத நிலத்திலிருந்தே அவிழ்தங்களைப் புசிக்க வேண்டுமென்பதுமேயாம்.

(140)

## பவள பற்பத்தின் அனுபானமும், தீரும்நோயும்.

துப்புவெள்ளை முத்தீ துனிபனிபந் திப்புவல்லை
துப்புவெள்ளை வெண்ணெய் சுதைதயிர்மோர்—துப்புவெள்ளை
யைவனமா புன்னெல்மலி யார்குளமா வில்வகுள்வே
யைவனமா புன்னைவழையாம்.

(இ - ள்.) [துப்பு வெள்ளை]= பவள பற்பத்திற்கு (அனுபானமாவது), [துப்பு]=கயரோகம், [வெள்ளை]= மேகவெள்ளை [முத்தீ] = வாத பித்த சேத்தும சுரங்கல், [துனி] = கடுப்பு வாதம், [பனி]=நடுக்கு வாதம், [பந்திப்பு]=பிடிப்பு வாதம், [வல்லை]=வல்லை முகப் பெரு வாதம் (என்னும் இவைகட்கு முறையே) [துப்பு] = நெய், [வெள்ளை] = பனங்கள், [வெண்ணெய்] = பசுவின் வெண்ணெய், [சுதை[ = பசுவின் பால், [தயிர்[=பசுவின் தயிர், [மோர்] = பசுவின் மோர், [ஐ]= குளிர்ந்த ஜலம், [வனம்]=துளசிச்சாறு. [மா]=இளநீர், [புல்] =பனை நுங்கு, [நெல்]=நெல்லிக்கனி ரசம், [மலி]=கொத்துமல்லிச்சாறு, [ஆர்] = சந்தனக் குழம்பு, [குளம்] = வெல்லம், [மா]=தேன், [வில்]=வில்வயிலைச்சாறு, [வகுள்]=மகிழம்பூச்சாறு, [வேய்]=மூங்கிற் கிழங்குச்சாறு, [ஐ வள மா]=குளநெல்லின் மா, [புன்னை]=புன்னைச்சாறு, [வழை]=சுர புன்னைச்சாறு, [ஆம்]=வெந்நீர் (என்னும் இவைகளே)—எ - று.

(தா - ம்.) கயரோக உப்பிச வாந்தி, உளமாந்தம், பீஜ வாயு, கோரவாதம் என்னும் இவைகட்கு, பசுவின் நெய்யிலும்;

மேகச் சீழ், மேகச் சொரி, மேகச் சிரங்கின் குட்டம், பெருங்குஷ்டம், விடாததேமல், வெட்டை, சிலந்தி, செவ்வாப்பு, தட்டம்மை, பயறி, ஊழிக் காய்ச்சல் என்னும் இவைகட்கு, பனங்கள்ளிலும்;

வாதசுரம், உம்பிச சன்னி, பெரும்பாடு, பித்தசுரம், பித்த உஷ்ணம், பெருவயிறு, பித்த உதிரவாயு, சுவாச காசம், பித்த பாண்டு, பித்த மூலம், பித்த சேத்துமப் பிரமை, பித்த சன்னி என்னும் இவைகட்கு, பசுவின் வெண்ணெய்யிலும்;

சேத்தும சுரம், விஷசுரம், நீரிழிவு, மல சல பந்தம், ஜலதோஷம், விக்கல், மாரகசன்னி, மூர்ச்சை, வாதசன்னி,

விப்புருதி, பாரிச சன்னி, இருமல் என்னும் இவைகட்கு, பசுவின் பாலிலும்;

கடுப்பு வாதம், பெருவிக்கல், மேற் சுவாசம், சன்னி வாயு, பொருமல், பைசாச சன்னி, மோக சன்னி என்னும் இவைகட்கு, பசுவின் தயிரிலும்;

நடுக்கு வாதம், உதறு வாதம், பக்கவாயு, வாத குன்மம், புகைச்சல், படலகாசம் என்னும் இவைகட்கு பசுவின் மோரிலும்;

நரம்புப் பிடிப்பு, நீர்க்கட்டு என்னும் இவைகட்கு, குளிர்ந்த ஜலத்திலும்;

பாரிச வாதம், வாதாதி முத்தோஷ சுரம் என்னும் இவைகட்கு, துளசிச் சாற்றிலும்;

பித்தகாசம், பெருவாரிப் பிணி என்னும் இவைகட்கு, இளநீரிலும்;

கபகாசம், மகாநீர்ப்பிணி என்னும் இவைகட்கு, பனங் காய் நுங்கின் சலத்திலும்;

பித்த மேகத் தினவு, மேகவெட்டையூறல் என்னும் இவைகட்கு, நெல்லிக்கனி ரசத்திலும்;

கபமேகம், பருகட்டி, ராஜ சிலந்தி என்னும் இவைகட்கு, கொத்துமல்லிச் சாற்றிலும்;

பித்தவாதம், வல்லை, பெருவயிறு என்னும் இவைகட்கு, சந்தனக் குழம்பிலும்;

கபவாதம், பல்வாதம் என்னும் இவைகட்கு, வெல்லத் திலும்;

பித்தவாத நடுக்கல், யோனிப் புற்று, என்னும் இவை கட்கு, தேனிலும்;

சேத்தும வாத நடுக்கல், சுவேத சன்னி என்னும் இவை கட்கு, வில்வயிலைச்சாற்றிலும்;

பித்தவாத பந்தம், மாரடைப்பு, என்னும் இவைகட்கு, மகிழம்பூச் சாற்றிலும்;

சேத்தும பந்தம், சிரோபாரம் என்னும் இவைகட்கு, மூங்கிற் கிழங்குச் சாற்றிலும்;

பித்த வல்லை, வாதானலம் என்னும் இவைகட்கு, குள நெல்லின் தண்டுல மாவிலும்;

சேத்தும வயிற்றுவலி, நீரேற்றம், பல்லடிப் பிணி என்னும் இவைகட்கு, புன்னைச் சமூலச்சாற்றிலும்;

மேகானலப் பிணி, பருவரற்பிணி என்னும் இவைகட்கு, சுர புன்னைச் சாற்றிலும்;

மாரக சன்னி, பக்ஷவாதம் பிரமை என்னும் இவைகட்கு, வெந்நீரிலும்;

மேற்படி பற்பத்தைச் சேர்த்துக்கொடுக்க நிவாரணமா மென்பதே. (141)

### பவள பற்பத்திற்குப் புறநடை.

எல்லாம் பகலா மிருட்டுந் துகிராலே
யெல்லாம் பகலா மினைவுக்கே—யெல்லாமெ
யங்கனையை யங்கனையா யாதரித்துண் பான்மருந்தை
யங்கனையை யங்கனையா யாம்.

(இ - ள்.) [துகிரால்]=பவள பற்பத்தால், [இருட்டும் எல் ஆம் பகல் ஆம்] = இருணிறைந்த இரவும் எல்லென்று சொல்லப்படும் பகலாகும்; [நோய் எல்லாம் பகல் ஆம்]= பிணிகள் யாவும் போக்கடிக்கலாகும்; [மெய் இனைவுக்கே எல் ஆம்]=சரீரத் துயரத்திற்கு இகழ்ச்சிக் குறிப்புண்டாகும்; [பால் மருந்தை]=மேற்படி பால்போன்ற பற்பத்தை; [அங் கனையை அங்கு அன்னையாய் ஆதரித்து உண்]=பெண்ணை அவ்விடத்தில் தாயாக நேசித்துப் புசிக்கக் கடவை; [ஐங்கணை ஐ அம் கனையாய் ஆம்]=பஞ்சபாணத் தலைவனுன (மன்மதனு டைய) அழகு அதிவிரைவில் உண்டாம்—எ - று.

(தா - ம்.( இப் பவள பற்பத்தைப் புசிக்கையில் பெண்களைத் தாய் மாராகப் பாவித்து அதாவது போகத்தையறவே நீக்கிவிட்டால், இரவும் பகலாக விளங்கத்தக்க கண்ணொளியும், சரீரத்துள்ள நோய்களெல்லாம் அழிந்து, அவற்றாலாகிய துன்பங்களும் நீங்கி மன்மதனுடைய அழகும் அதிசீக்கிரத்தில் உண்டாம் என்பதாம்.

ஐங்கணை எனற்பாலது எதுகை நயம்பற்றி அங்கனை என நின்றது. (141)

**இதுவும் பவள பற்பத்திற்குப் புறநடை.**

விரைமா தளைதவைபூல் வெல்லமயிர் கண்டு
விரைமா தளைசுதைநெய் வெண்ணெய்—விரைமா
வருக்கை பனைநரந்தை வாழையுணு வுண்ட
வருக்கை பனைநரந்தை மால்.

(இ - ள்.) [விரை மாதளை]=மாதளைவிரை, [தவை]=முருங்கைவிதை, [பூல்]=புல்லாஞ்சி விதை, [வெல்லம்]=பழவெல்லம், [அயிர்]=சர்க்கரை, [கண்டு]=கற்கண்டு, [விதை]=வித்தாகிய (விந்து), ]மாதளை]=விசேடமான தடையடையும்; [சுதை]=பசுவின்பால், [நெய்]பசுவின்நெய், [வெண்ணெய்]=பசுவின் வெண்ணெய், [விரை]=அத்திப்பழம், [மா]=மாம்பழம், [வருக்கை]=பலாப்பழம், [பனை]=பனம்பழம், [நரந்தை]=கிச்சிலிப்பழம், [வாழை]=வாழைப்பழம், (என்னும் இவைகளை) [உணு உண்டவருக்கு] = ஆகாரமாகப் புசித்தவர்கட்கு [ஐ பன் ஐ]=பலமானது (முன்னிலும்) பதினைந்து (பங்கு) விர்த்தியாம், [மால் நரந்தை]=சரீரத்திற் சிறந்த பரிமளமும் வீசும் —எ - று.

(தா - ம்.) வாதசம்பந்த உஷ்ணத்தைப் பற்றிய மேகமானது விந்தின் வழியே மேற்படி வாதவழும்பானது முற்றிக் களிமண்ணைப்போற் பந்தித்து அடைத்துவிட்டால், குறிநரம்பு அசையாமற்போய்விடும்; அக்காலத்தில் மேகச்சூட்டினால் விந்துருகி நீத்துவிடும்; அதற்கு $\frac{1}{4}$ பலம் மாதளை விதையை 3 பலம் குளிர்ந்த நீரில் நன்றாயூறவைத்து, பலம் பழவெல்லமும் கூட்டியரைத்து, 3-பலம் பசுவின் பாலிற் கரைத்து, அதில் ஷெ பற்பம் பிரமாணப்படி போட்டுக் காலை மாலை என்னும்

இரண்டு நேரமும் புசித்து, நல்லெண்ணெய் கடுகு, புளி முதலியவற்றையும் ஸ்திரீ போகத்தையும் நீக்கி, வேண்டும்போது பசுவின் பாலையே குடித்து, அத்திப்பழம், மாம்பழம் என்னும் இவற்றையே பலகாரமாகக்கொண்டு, இவ்விதம் ஒரு மண்டலம் உட்கொண்டால், மேற்கண்ட வியாதி நிவாரணமாகும் என்பதும்;

பித்தத்துடன் அதி மேக உஷ்ணம் சேர்ந்து வீரிய நஷ்டமுண்டானால், முருங்கை விதையை 3-பலம் குளிர்ந்த நீரில் ஊறவைத்து $\frac{1}{8}$-பலம் சர்க்கரையைச் சேர்த்து, சீரணசக்திக்கு தகுந்தபடி நெய்விட்டுக் கலந்துகொண்டு, முன் பத்தியமே பிடித்து, வேண்டும்போது வெந்நீர்குடித்து, பலாப்பழம், பனம்பழம் என்னும் இவற்றைப் பலகாரமாகப் புசித்து வந்தால், மேற்படி ரோகம் நிவாரணமாகும் என்பதும்,

சேத்தும மேகவெட்டையாற் காணும் வீரிய நஷ்டத்திற்கு, $\frac{1}{4}$-பலம் புல்லாஞ்சி விதையை 3-பலம் குளிர்ந்த நீரில் ஊறவைத்து $\frac{1}{8}$-பலம் கற்கண்டு சேர்த்து, 3-பலம் வெண்ணெயைக் கூட்டிப் புசித்து, பத்தியமும், முன்போலவே, இருந்து வேண்டும்போது கிச்சிலிப்பவாழைப்பழம், என்னும் இவற்றைப் பலகாரமாகச் சாப்பிட்டுவந்தால், நிவாரணமாகுமென்பதும்,

முன்னைய பலத்தைப்பார்க்கினும் பதினைந்து மடங்கு விசேடித்த பலமுண்டாமென்பதுமே. (142)

### பலகரை பற்பமும் அதன் குணமும்.

கவடித் திருநீறு காணவழை வேலி
கவடித் திருநீரார் கண்டங்—கவடி
பலகறையா மொன்றே பலகறையா மெய்க்குப்
பலகறையா மேதுணிந்து பார்.

(இ - ள்.) [கவடித்திரு நீறு காண]=பலகரைப் பற்பத்தைச் செய்யவேண்டுமானல், [வழை வேலி]= சுர புன்னையிலைச் சாறு, சித்திரமூல இலைச்சாறு, [கவடித்து]=குருவியால் சமூலச் சாறு, ]இரு]=காட்டு மல்லிகை சமூலச்சாறு, [நீர்]=நீலோற்பல சமூலச்சாறு, ]ஆர்]= சந்தனக் குழப்பின் தெளிந்த நீர்,

(என்னும் இவற்றாலரைத்துப் புடமிடப் பற்பமாம், [கண்டம்] =(இப்பற்பம்) கவசம் போன்றது; [கவடி]=வஞ்சகத் தன்மை யுள்ள [பலகறையாம் ஒன்றே]=பல வியாதிகளை நீக்குவது ஒன்றுமாத்திரமா, [பலகறையாம் மெய்க்கு]=சரீரத்திற்கு வலிமையை விளைக்கும், இரத்தவிர்த்தி யுண்டாக்கும்; [பல்கு அறையாம் துணிந்து பார்]=(இச்சரீரம்) வளர்தற்கு இருப்பிடமுமாகும்; இதை நிச்சயித்துக் காண்பாயாக — எ - று.

(தா - ம்) (*a*) முன் சொன்ன முறைப்படி சுத்தி செய்த பலகரைப் பொடி பலம் 1-க்கு சரபுன்னையிலைச்சாறு 4-பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை யிலைசாறு 4-பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத்தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் முன் இலைச்சாறு 4-பலத்தையே சிறுகச்சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைசெய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும் 4-நாளும் பிரதிதினமும் முன்சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து அரைத்தரைத்துப்பில்லை தட்டிப்பனியில் ஆறவைத்தாறவைத்த பின்பு 7-ஆம் நாள் உதயமுதல் 5 நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்றாயுலர்ந்த பின்பு13-ஆம் நாள் உதயத்தில் 36 காட்டுவரட்டியிற் புடமிட்டு ஒரு நாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க, ஆறிலொரு கூறு பற்பமாகியிருக்கும்.

(*b*) மறுபடி 15-ஆம் நாள், ஆறிலொருகூறு பற்பமாகிய ஷை பலகரைபபொடி பலம் 1-க்கு சித்திரமூல இலைச்சாறு 4 பலம் விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல்நாளிரவே முன்போலவே யூறவைத்து மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை இலைச்சாறு 4-பலத்தைச் சிறுகச் சிறுக விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லைதட்டிப் பனயில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதயத்திலும் புதிதான முன் சாறு 4-பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு. பகலில் அரைத்து இரவில் பில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும் 3-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைதட்டிப் பனியில் ஆறவைத்தாறவைத்து 4-நாள் வெளிக்காட்சியாகவும், முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலுலர்த்தின பின்பு, அடுத்த நாளு

தயத்தில் 30 காட்டு வரட்டியிற் புடமிட்டு 1-நாள் ஆறவைத்தெடுக்க மூன்றிலொருகூறு பற்பமாயிருக்கும்.

(c) பின்பு 27-ஆம் நாள், மூன்றிரலாரு கூறு பற்பமான ஷெ பலகரைப்பொடி பலம் 1-க்கு, குருவியாலின் அல்லது கல்லாலின் சமூலச்சாறு பலம் 4-விகிதம் அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயேவிட்டு ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே ஷெ சாறு 4 பலம் விகிதம் விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லை தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும், மறுநாள் உதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படி சாறு 4- பலம் விகிதம் விட்டு பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லை தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்விதம் மீண்டும் 3-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே முன்னளவே விட்டு விட்டரைத்தரைத்துப்பில்லை தட்டி பனியில் ஆறவைத் தாறவைத்து, 3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அடுத்த நாளுதயத்தில் 24 காட்டு வரட்டியில் புடமிட்டு 1 நாளாறவிட்டு மறுநாளெடுக்க அரைக்கூறு பற்பமாயிருக்கும்.

(d) பின்பு 37-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான ஷெ பலகரைப்பொடி பலம் 1-க்கு, காட்டு மல்லிகைச்சமூலச்சாறு பலம் 3 விகிதம், அரைப்பதற்கு முதல்நாளிரவிலேயே விட்டு ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி சாறு பலம் 3 விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை செய்து பனியில் ஆறவைக்கவேண்டும். மறுநாளுதயத்திலும் முன்போலவே ஷெ சாறு 3 பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 1-நாள் முன்சாற்றையே, முன்னளவே வார்த்து அரைத்துப் பில்லை தட்டிப் பனியிலாறவைத்து பின்பு 2-நாள் அதை வெளிக்காட்சியாகவும், 1-நாள் கவசித்தும் வெய்யலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 18 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு, மறுநாளெடுத்துப் பார்க்க மூன்றிலிரண்டு கூறு பற்பமாயிருக்கும்.

(e) பின்பு 45-ஆம் நாள், மூன்றிலிரண்டுகூறு பற்பமான மேற்படி பலகரைப்பொடி பலம் 1-க்கு, நீலோற்பல சமூலச் சாறு பலம் 2-விகிதம் விட்டு, அரைப்பதற்கு முதல்நாளிரவில்

ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே முன்சாறு 2-பலம் விகிதம் விட்டு, முன்போலவே பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைதட்டிப் பனியல் ஆறவைக்கவும், மறு நாளுதயத்திலும் மீண்டும் புதிதான முன்சாறு 2 பலம் விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லை செய்து பனியில் ஆறவைக்கவேண்டும். பின்பு 1-நாள் அதை வெளிக் காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி அடுத்தநாள் உதயத்தில் 12 காட்டு வரட்டியிற் புடமிட்டு 1 நாளாறவிட்டெடுக்க ஆறிலைந்துகூறு பற்பமாயிருக்கும்,

(*f*) இதன் பின்பு 53-ஆம் நாள், ஆறிலைந்து கூறு பற்ப மான ஷை பலகரைப்பொடி பலம் 1-க்கு சந்தனக் குழம்புத் தெளிநீர் 1 பலம் விகிதம் அரைப்பதற்கு முதல்நாளிரவிலேயே விட்டு யூறவைத்து, மறுநாளுதயத்திலும் மேற்படி நீர் 1 பலம் வார்த்து பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைசெய்து, பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதய முதல் மாலைவரை யில் பில்லையை வெளிக்காட்சியாகவும், அடுத்த 1-நாள் கவசித் தும் வெய்யிலில் காயவைத்து, அதற்கடுத்தநாளுதயத்தில் 6 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவைத்து மறுநா ளெடுத்துப்பார்க்க, முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இதைப் பிரமாணப்படியே புசித்து வந்தால், இப்பற்ப மானது சரீரத்திற்கு ஓர் கவசம் போன்றிருப்பதுமல்லாமல், சரீரத்துள்ள நோய்களனைத்தையும் விலக்கி, இரத்தவிர்த்தியை யுண்டாக்கி, சரீரத்தில் சுகங்கள் வளரச் செய்யுமென்பதாம். (144)

### பலகரை பற்பத்தின் பிரமாணமும், அனுபானமும்.

சூரமைமன் சோகிக்கை சோபையெரி சத்திகுன்மஞ்
சூரமைமன் சோகிவலை சோபிவலி—சூரமைமன்
கீரையைய மோர்நெய் கிலாலமனை காடிவெந்நீர்
கீரையைய மாரிபுன்ம கிழ்.

(இ - ள்,) [சோகிக்கு ஐ]=பலகரைப் பற்பத்திற்கு அள வாவது [சூரம் ஐ மன்]=கடலையின் ஐந்தில் ஒரு கூறே உத்தம மாகும்; [சோபை எரி சத்தி குன்மம்]=பாண்டு, மேகவுஷ்ணம், வாந்தி, வயிற்றுவலி, [சூர் அம் ஐ மன் சோகி வலை சோபி வலி] =மூர்ச்சை, நளிர் சன்னி, பிடிப்பு, சோகை, பக்கசூலை, வீங்கு

மாந்தம், தேகக் கடுப்பு, [சூர் அமை மன்]=சேத்துமம், பித்தம், வாதம் (என்னும் இவைகட்கு முறையே), [கீரை ஐ அம் மோர் நெய் கிலாலம் அளை காடி வெந்நீர்]=பால், பன்னீர், வெண்ணெய், நீர் மோர், நெய், குளிர்ந்த நீர், தயிர்; புளித்தகாடி, வெந்நீர், [கீரை ஐ அம் மாரி புல் மகிழ்]=சிறுகீரைச் சாறு, கற்ருழைச்சாறு, தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு, கள், சர்க்கரை, மகிழம்பூச் சாறு என்னும் இவைகளில் ஷை பற்பம் அனுபானித்துக் கொடுக்கவும்—எ - று.

(தா - ம்.) பலகரைப் பற்பத்திற்குப் பிரமாணமாவது:- கடலையின் ஐந்திலொரு பாகம் உத்தமமும், ஐந்தில் இரண்டு பாகம் மத்திமமும். ஐந்தில் மூன்று பாகம் அதமமும், ஐந்தில் நான்கு பாகம் அதமாதமமும், ஐந்து பாகம் அநந்தமமுமாம் என்பதும்,

பாண்டுவுக்கு, பாலிலும்; மேகவுஷ்ணத்திற்கு, பன்னீரிலும்; வாந்திக்கு, வெண்ணெய்யிலும்; வயிற்று வலிக்கு, நீர் மோரிலும்; மூர்ச்சைக்கு, நெய்யிலும்; நளிருக்கு, குளிர்ந்த நீரிலும்; சன்னிக்கு, தயிரிலும்; பிடிப்புக்கு, புளித்த காடியிலும்; சோகைக்கு வெந்நீரிலும்; பக்கசூலைக்கு, சிறுகீரைச் சாற்றிலும்; விங்கு மாந்தத்திற்கு, கற்ருழைச் சாற்றிலும்; தேகக் கடுப்புக்கு, தண்ணீர் விட்டான் கிழங்குச் சாற்றிலும்; சேத்தும ரோகங்கட்கு, பனங் கள்ளிலும்; பித்த ரோகங்கட்கு, சர்க்கரையிலும்; வாத ரோகங்கட்கு, மகிழம்பூச் சாற்றிலும்;

ஷை பற்பத்தை அனுபானித்துக் கொடுக்க நிவாரணமாமென்பதே.

சேத்துமம் எனப்பொதுவாகச் சொன்னமையின், அதைச் சேர்ந்த சேத்தும சன்னிபாதம், பீனசம், மகோதரம், உப்பிசம், இருமல், ஈளை என்னும் இவைகளும்,

பித்தம் எனப் பொதுவாகச் சொன்னமையின், பெருவயிறு, விக்கல் என்னும் இவைகளும்,

வாதம் எனப் பொதுவாகச் சொன்னமையின், வாதமகாபாரிசசன்னி, வாதசன்னி பாதம், வாதமகாசலோதயம், வாதசுரம், அஜீரணம் என்னும் இவைகளும் அடங்குதல் காண்க.(145)

## பலகரைப் பற்பத்திற்குப் புறநடை.

பையரவைக் கேட்குமுனர்ப் பட்சிமனைக் கண்டுமறை
பையரவைப் போலே பறக்குமே—பையரவை
தேங்காய்ப்பா லூறு தினவு சொரி மேகமடி
தேங்காய்ப்பா லூறுகளி தின்.

(இ - ள்) [பை அரவை கேட்கும் முன்னர்]=(இப்பற்ப மிருக்கும்) பையின் சத்தத்தைக் கேட்பதற்கு முன்பே, [பட்சி மன்னைக்கண்டு மறை]=கருடனைக் கண்டு மறைகின்ற, [பை அரவைப் போலே]=படத்தையுடைய பாம்பைப்போல், [பைய ரவை தேம் காய்ப்பால் ஊறு]=மெள்ளக் (கொஞ்சம்) கொஞ்ச மாய் (உண்டான) சரீர உஷ்ணத்தால் நேர்ந்த இடையூறு களும், [தினவு சொரி மேகம் அடி[=தினவுகள், சொரிகள், மேகங்கள், இவை முதலிய (ரோகங்கள்), [பறக்கும்]=ஓடிப் போம்; (இவ் வியாதிகட்கு மேற்படி மருந்தைச் சாப்பிடுகை யில்) [தேங்காய்ப்பால் ஊறு களிதின்] = தேங்காய்ப்பால் ஊறிய களியைப் (பலகாரமாகப்) புசிப்பாய்—எ - று.

(தா - ம்.) வாதத்தால் வயிற்றை ஒரு பக்கம் இழுத்துக் கொள்ளுதல்; அக்கினி மந்தம்; திமிர்; பக்கம், அடிவயிறு, கன்னம், கழுத்து என்னும் இவ்விடங்களில் பருவுகண்டு உடை யாமல் உபத்திரவம் செய்தல்; என்னும் இவைகட்கு, மேற்படி பற்பத்தை, மிளகின் ரசத்திலும்;

பித்தத்தால், வாயில் அக்கரம்போற் காணுதல், வாய் நீரூறல்; வாந்தி; விக்கல்; பெருந்தாகம்; உதடு, மோவாய்க் கட்டை, மார்புக்குழி, விரல் என்னும் இவ்விடங்களில் முன்னே பருவுகளாகக் கண்டு, புண்ணாகி ஆறுதிருத்தல்; ஆகிய இவை கட்கு, சுக்கின் ரசத்திலும்;

சேத்துமத்தால் விடா வெயர்வையைக் காட்டுதல்; அவ் வெயர்வையில் ஓர் வகைக் கெந்தகநாற்றம் வீசுதல்; அதனுல் பிறருக்கு அருவருப் புண்டாதல்; பெருவயிறுபோல் வயிறு உப்பி மேற் சுவாசம் கண்டு பசிதாக மில்லாதிருத்தல்; பீனசம் போல் மூக்கில் இரத்தம் வடிதல்; முழங்கால், முதுகு, உச்சி ஆகிய இவ்விடங்களில் பருவும், கட்டியும் காணுதல்; தலையில் சொரித் தேமலைப் போலவும், ஆமையோட்டைப் போலவும்;

பனை மரத்தைப்போலவும், கடினமாகிச் சொரிந்தால் சாம்பலைப் போல் தூள் உதிருதல்; என்னும் இவைகட்கு, திப்பிலியின் ரசத்திலும் கொடுக்கவேண்டுமென்பதும்,

இதற்குப் பத்தியம் புளி, நல்லெண்ணெய், கடுகு, பெண் போகம் ஆகிய இவைகளாகாவென்பதும்,

இரண்டு பட்சம் வரையில் சாப்பிட்டு, மறு பத்திய மிருக்கவேண்டிய தென்பதும்,

அவ்வாறு சாப்பிடுகையில், வாத மேகத்திற்குத் தேங் காய்ப் பாலில் நெல்ல வெல்லத்தைச் சேர்த்துக் குழப்பிய பாலும்; பித்த மேகத்திற்குத் தேங்காய்ப் பாலுடன் சர்க்கரை, கோதுமை கூட்டிச் செய்த பலகாரமும்; சேத்தும மேகத்திற்குத் தேங்காய்ப்பாலில் அரிசி மாவும், கற்கண்டும், பசுவின் பாலும் சேர்த்துச் செய்த தேங்காய்ப் புட்டும் சாப்பிடலாமென்பதுமே.

**இதுவும் பலகரைப் பற்பத்திற்குப் புறநடை.**

கடிக்குக்கன் மாய்நரர்கோ காரானிருளி
கடிக்குக்கன் மாபுனெல்வேய் கைகால்—கடிக்குக்கன்
முட்டையரி வாள்கல்கதை மோதல்கிளி கோழிபுரு
முட்டையரி காகமன்றின் மொய்.

(இ - ள்.) [கடிக்குக்கல்] = வெறிநாய், [மாய்] = வெறி நரி, [நரர்]=வெறிகொண்டமனிதர்கள், [கோ]=வெறிப்பசு, [கார் ஆன்] = வெறி எருமை, [இருளி] = வெறிப் பன்றி, [கடிக்கு]=(என்னும் இவற்றின்) கடிகளுக்கு, [கல் மா]=கல்லா லின் சமூலச்சாறு [புல்]=நிலப்பனைச் சமூலச்சாறு, [நெல்]= கீழாநெல்லி சமூலச்சாறு, [வேய்] = மூங்கிற் சமூலச்சாறு, [கை] = நரிப் பயற்றங்கொடி சமூலச்சாறு, [கால்]=செருப் படை சமூலச்சாறு, (என்னும் இவற்றில் ஷ பற்பம் சேர்த்துக் கொடுக்க முறையே அக்கடி விஷங்கள் தீரும்); [கடிக்கு கல்]= (மருந்து கொடுக்கையில்) (கடி விஷமுள்ளவர்களை) காவலில் வைப்பதற்கு முயற்சிப்பாயாக; [முள் தை] = முள் தைத்த (காயம்), [அரி] = பன்மட்டைக் கருக்கா (லறுபட்ட) (காயம்), [வாள்]=வாள் முதலியவற்ரு (லறுபட்ட காயம்), [கல்]= கற் களா (லடிபட்ட காயம்), [கதை]= தடி (யாதிகளா லுண்டான

காயம்), [மோதல்] = கைக்குத்து (முதலியவற்றா லுண்டான காயம்) (என்னும் இவைகட்கு), [கிளி] = கிளியின் முட்டைக்கரு, [கோழி] = கோழி முட்டைக் கரு [புறு] = புறுமுட்டைக்கரு, [முட்டை அரி] = தவளை முட்டைக் கரு, [காகம்] = காக்கை முட்டைக் கரு, [அன்றில்] = அன்றில் முட்டைக் கரு, (என்னும் இவற்றில் ஷை பற்பத்தை இழைத்துத் தடவக் காயங்கள் ஆறும்); [மொய்] = (காயம் படாத புண்களுக்கு) ஆமை முட்டைக் கரு (வில் இழைத்துத் தடவத் தீரும்) — எ - று.

(தா - ம்.) வெறிக் கடிகள் சாத்தியம், அசாத்தியம் என்றிருவகைப்படும். அவற்றுள், மயானத் தலைப்பற்று ஓட்டில் தங்கியிருக்கும் மழைத் தண்ணீரைக் குடித்த நாய், நரி, பசு, எருமை, பன்றி என்னும் இவைகட்கு, இடையில் உண்டான வெறியால் நேர்ந்த கடிகள் சாத்தியம். மேற்சொல்லியவை கட்குப் பிறந்தது தொடங்கி, இயற்கையான வெறியால் நேர்ந்த கடிகள் அசாத்தியம்.

மனிதர்களுக்கு ஊழ்வினையாற் பிறந்தது முதல் தொடர்ந்த வெறியால் நேர்ந்த கடி அசாத்தியம். இடையில் மருந்து முதலியவற்றாலுண்டான வெறியால் நேர்ந்த கடி சாத்தியம்.

வாய் நீர் மோர்போல் வடிதல், கூச்சலிடும் சத்தம் பேதமாகக் காணுதல், விட்டு விட்டு வெயர்வை தெளிவாகப் புறப்படுதல், மயக்கமும் அவ்வாறே உண்டாதல் என்னும் இக்குணங்கள் செயற்கை வெறிநாய்க் கடியின் லட்சணங்களாம். இதற்கு, கல்லாலின் சாற்றில் ஷை பற்பத்தையனுபானித்துக் கொடுத்து, கொள்ளுக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கத்தீரும்.

வாயில் நுரை தள்ளுதல், விடாமல் வெயர்வை குழம்பாய்க் காணுதல், சத்தமானது நாய் குரைப்பதற்குப் பேதமின்றிக் காணுதல் என்னும் இக்குணங்கள் இயற்கை வெறிநாய்க் கடியின் லட்சணங்களாம், இதற்கு, நிலப்பனைச் சாற்றில் ஷை மருந்தையனுபானித்துக் கொடுத்து, காராமணிப் பயற்றங் கஞ்சி காய்ச்சிக் கொடுக்க தீரும்.

இருமலுடனே வாயிலும், மூக்கிலும், வெயர்வை நீர் போன்ற ஓர் வித நீர் வடிதல், விட்டு விட்டு நடுக்கலுண்டாதல், பேசும்போது தவறித் தவறி ஒரு வகை அழுகைக் குர

லுண்டாதல் என்னும் இக்குணங்கள் செயற்கைப் பேய் நரிக் கடியின் லட்சணங்களாம். இதற்கு, கீழா நெல்லிச் சாற்றில் ஷெ மருந்தைக் கொடுத்து, சிறு பயறு கஞ்சி காய்ச்சிக் கொடுக் கவும்.

வரட்சியாய் வாய் நீருலர்ந்துபோதல், உடம்பெங்கும் உஷ்ணமாய் வெயர்வை யில்லாமற் போதல், நரியின் ஊளை யைப்போற் கூச்சலுண்டாதல் என்னும் இக்குணங்கள் இயற்கை வெறி நரிக் கடியின் லட்சணங்களாம். இதற்கு, மூங்கிற் சாற்றில் ஷெ மருந்தைக் கொடுத்து, துவரம் பருப்புக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

சற்று நேரம் மயக்கம், வாய்நீர் பெருகுதல், விடாமல் வுதறிக்கொண்டிருத்தல்; பசி, நித்திரை, தாகம் கொஞ்சமா யிருத்தல் என்னும் இக்குணங்கள் செயற்கை வெறி நரிக்கடி யின் லட்சணங்களாம். இதற்கு, நரிப் பயற்றங்கொடிச் சாற் றில் மேற்படி மருந்தைக் கொடுத்து, அவரைப் பருப்புக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

மாரடைத்தல், வாயில் நுரை தள்ளுதல், ஒரு வகை விகாரக்கூச்சல்; பசி, நித்திரை, தாகம், ஆகியவை ஒன்றுமில் லாதிருத்தல் என்னும் இக்குணங்கள் இயற்கை வெறியர் கடி யின் லட்சணங்களாம். இதற்கு, செருப்படைச் சாற்றில் ஷெ மருந்தைக் கொடுத்து, உளுந்தின் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

மேய்ச்சல், நீரருந்தல், இனத்திற் சேர்தல், சத்தம் ஆகி யவை பேதமின்றி யிருத்தல், செவ்வையாய்ப் பார்த்தல் என் னும் இக்குணங்கள் செயற்கை வெறிப் பசுவின் லட்சணங் களாம். இதனால் நேர்ந்த கடிக்கு நாயுருவிச் சாற்றில் மேற் படி மருந்தைக் கொடுத்து, கோதுமையரிசிக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

வாய் வரட்சி, உதட்டில் ஈரமில்லாமை; பசி, தாகம், நித்திரை ஆகியவை யில்லாமை என்னும் இக் குணங்கள் இயற்கை வெறிப் பசுக் கடியின் லட்சணங்களாம். இதற்கு, வெற்றிலைச் சாற்றில் ஷெ மருந்தைக்கொடுத்து, சாமையரிசிக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

வெளியில் புறப்படாதிருத்தல், பதுங்கித் திரிதல், பல்லைக் கடித்தல், வித்தியாசமாகக் கூவுதல்; ஆகாரம், நித்திரை ஆகியவை யில்லாதிருத்தல் என்னும் இக்குணங்கள் செயற்கை வெறி எருமைக் கடியின் லட்சணங்களாம். இதற்கு, வன்னியிலைச் சாற்றில் மேற்படி மருந்தைக் கொடுத்துப் புல்லரிசிக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

இருந்த விடத்தில் அசையாமலிருத்தல், உமிநீர் நுரையாக வருதல், ஏரி, குளங்களில் விழத் துரிதப்படுதல், வாய் ஆவென்று திறத்தல், சத்தம் பேதமில்லாமற் கூவுதல், பசி, தாகம், நித்திரை யில்லாதிருத்தல் என்னும் இக்குணங்கள் இயற்கை வெறி எருமைக் கடியின் லட்சணங்களாம். இதற்கு, கோரைச் சாற்றில் மேற்படி மருந்தைக் கொடுத்து, தினையரிசிக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

சற்று தாமதித்துத் தாமதித்துச் சீறுதல், பார்வை தெரியாமல் இருண்டு காட்டல், பூமியில் புரளுதல், வாய்நீர், வற்றிப்போதல், பசி, தாகம், மூர்க்கம் வந்தும் வராமலு மிருத்தல் என்னும் இக்குணங்கள் செயற்கை வெறிப்பன்றிக் கடியின் லட்சணங்களாம். இதற்கு, பாகலிலைச் சாற்றில் மேற்படி மருந்தைக் கொடுத்து, மூங்கிலரிசிக் கஞ்சிக் காய்ச்சிக் கொடுக்கவும்.

கள்ளைப்போல் வாய் நாறுதல், மண்ணைத் தின்னல், எங்கும் தரியாமல் திரிதல், பன்றிச் சத்தத்தைப் போற் கூவுதல் என்னும் இக்குணங்கள் இயற்கை வெறிப் பன்றிக் கடியின் லட்சணங்களாம். இதற்கு, பேய்ப் புடலைச் சாற்றில் மேற்படி மருந்தைக் கொடுத்து கோதுமை நொய்க் கஞ்சிக் காய்ச்சிக் கொடுக்கவும்.

ஆகக் கூடிய இவ்வகைச் சிகிச்சைகள் செய்கையில் நோயாளியை வெளியில் விடாமல் தகுந்த காவலுடன் வைத்திருக்க வேண்டும். அப்படி செய்யாவிட்டால் மேற் கூறிய மருந்தினால் நற்குணம் விளைவதற்குப் பதிலாய்த் துர்க்குணங்கள் விளையும்,

அன்றியும், முள் தைத்ததனாலுண்டான புண்ணுக்கு கிளிமுட்டைக் கருவிலும்; பனமட்டைக் கருக்கினாலுண்டான புண்ணுக்கு, கோழிமுட்டைக் கருவிலும்; வாள் முதலியவற்று

லுண்டான புண்ணுக்கு, புரு முட்டைக் கருவிலும்; கல்லடியாலுண்டான புண்ணுக்கு, தவளை முட்டைக் கருவிலும்; தடியடியாலுண்டான புண்ணுக்கு காக்கை முட்டைக் கருவிலும்; கைக்குத்தலாலுண்டான புண்ணுக்கு, அன்றில் முட்டைக்கருவிலும் காயம்படாமற் காணும் புண்ணுக்கு, ஆமைமுட்டைக் கருவிலும்;

மேற்படி மருந்தைக் குழைத்துத் தடவ நிவாரணமாம் என்பதே. (146)

**நவநீத பற்பம்; அதன் பிரமாண முதலியவைகள்.**

ஐயவி பூதி யவுரி கிலுகிலுப்பை
யையவி பூதி யறமிரட்டி—யையவி
யேகமட்ட மீன மிரட்டை துலாந்தனுவோ
யேகமட்ட மீனவனி யில்.

(இ - ள்.) [ஐய விபூதி]=வெண்ணெய்யின் பற்பமாவது, [அவுரி] = நீலியிலைச்சாறு, [கிலுகிலுப்பை] = வட்டக் கிலுகிலுப்பைச்சாறு, [ஐயவி]=சீந்திற்சமூலச்சாறு, [பூதி]=குப்பைமேனிசமூலச்சாறு,(என்னும் இவற்றாலரைத்துப்புடமிட)[அறம் இரட்டி] = தருமதேவதையைப் (பார்க்கினும்) இரு மடங்கு (வெண்மையான பற்பமாம்); [ஐயவி ஏகம் அட்டம்]= (இப் பற்பத்தின் பிரமாணமாவது) ஒரு கடுகு முதல் எட்டு கடுகுகள் வரையிலுமாம்; [மீனம் இரட்டை துலாம் தனு ஒய்]=பங்குனி ஆனி, ஐப்பசி, மார்கழி (என்னும் இம்மாதங்களை மருந்துண்ணுதற்கு) ஒழிப்பாய்; [ஏகம் அட்டம் ஈன் அவனி இல்] = ஒப்பற்ற அஷ்ட ஐஸ்வரியங்களையும் விளைக்கின்ற மருதநிலமே (மருந்து சாப்பிடுவதற்கு) இடமாகும்.—எ - று.

(தா - ம்.) (*a*) வெண்ணெய் பற்பமாவதற்கு, மேற்படி வெண்ணெய் ஒரு பலத்துக்கு நீலியிலைச்சாறு 1 பலம் விட்டு அரைத்து வில்லைதட்டி இரவில் பனியிலே வைத்து, மறுநாளும் இப்படியே செய்து ஆக எட்டுநாளரைத்து எட்டுநாள் நிழலிலுலர்த்தி,

(*b*) அதன் பின் வட்டக்கிலுகிலுப்பைச் சாறு முன்னளவாகவே விட்டு முன்போலவே எட்டு நாளரைத்து எட்டுநாள் வெய்யிலிலுலர்த்தி,

(c) அப்பால் சீந்திற் சமூலச்சாறு முன்னளவே விட்டு முன்போலவே எட்டுநாளரைத்து எட்டுநாள் நிழலிலுலர்த்தி,

(d) அதன் மேல் குப்பைமேனிச் சமூலச்சாறு முன்னளவே விட்டு முன்போலவே எட்டுநாளரைத்து எட்டு நாள் நிழலிலுலர்த்தி, ஆக அறுபத்து நான்கு நாள் கழிந்த அறுபத்தைந்தாம் நாள் பில்லையை ஓட்டில் வைத்துக் கவசித்து 1-நாள் வெய்யிலிலுலர்த்தி 46-ஆம் நாள் எட்டு காட்டு வரட்டியிற் புடமிட்டு 1-நாள் ஆறவைத்தெடுக்கப் பற்பமாம்.

இப்பற்பத்தை ஒரு கடுகு முதல் எட்டு கடுகு வரையிலும், முறையே உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம், ஒரு புடைத் துணிவு, முழுத்துணிவு, அனந்தம், அபரிமிதம் என்னும் பிரமாணப்படி,

பங்குனி, ஆனி, ஐப்பசி, மார்கழி என்னும் நான்கு மாதங்கள் நீங்க மற்ற மாதங்களிலே,

மருத நிலத்திலே சாப்பிடவேண்டுமென்பதாம்.

**நவநீத பற்பத்திற் கனுபானமும் தீரும் நோய்களும்.**

மருத்தாதி மேகம் வனிவல்லை குன்மமூலம்
மருத்தாதி மம்மயிர்நீர் மாலி – மருத்தாதி
காயமளை சாய கபித்த மிலாங்கலிபால்
காய மளை கோர கை.

(இ - ள்.) [மருத்தாதி மேகம்]=வாத, பித்த, சேத்தும மேகம், [வனி]=வாத, பித்த, சேத்தும சுரம் [வல்லை]=வாத, பித்த சேத்தும வல்லை, [குன்மம்]=வாத பித்த சேத்தும குன்மம், [மூலம்]=வாத பித்த சேத்தும மூலம், (என்னும் இவற்றிற்கு), [மருத்தாது]=தேனிலும், [இமம்]=பனித் தண்ணீரிலும், [அயிர்]=சர்க்கரையிலும், [நீர்]=குளிர்ந்த சலத்திலும், [மாலி]=கள்ளிலும், [மருத்தாதி]=சீந்திற் சமூலச்சாற்றிலும், [காய் அம்] = வெந்நீரிலும், [அளை]=தயிரிலும், [சாய]=கோரைச் சாற்றிலும், [கபித்தம்]=விளாவிலைச் சாற்றிலும், [இலாங் கலி] =தேங்காய்ப் பாலிலும், [பால்[ = முலைப்பாலிலும், [காயம்]=வெண்காயச் சாற்றிலும், [மளை] = கற்றாழைச்

சாற்றிலும், [கோரகை]=கஞ்சாச் சாற்றிலும், முறையே மேற்படி பற்பத்தைச் சேர்த்துக் கொடுக்கவும்—எ - று.

(தா - ம்.) வயிற்றுவலி, பக்கத்தை யிழுத்துக் கொண்டு வேதனை செய்தல், அந்தத் தசைநோதல் என்னும் இக்குணங்களுடைய வாத மேகத்திற்கு, தேனிலும்,

வாய்நீர்ப்பெருகுதல், வாய் இலைத்து அரோசகமாயிருத்தல், வயிற்றெரிவு, மாரடைப்பு என்னும் குணங்களுடைய பித்த மேகத்திற்கு, பனித்தண்ணீரிலும்,

கால், கை ஆகிய இவற்றின் வீக்கம், கள்ளைப்போல் நீரிரங்கல், அதிதாகம், முகவெளுப்பு என்னும் இக்குணங்களுடைய சேத்தும மேகத்திற்கு, சர்க்கரையிலும்,

வாதசுரத்திற்கு, குளிர்ந்த நீரிலும்; பித்த சுரத்திற்கு, கள்ளிலும்; சேத்தும சுரத்திற்கு, சீந்திலிலைச் சாற்றிலும்; வாத வல்லைக்கு, வெந்நீரிலும்; பித்தவல்லைக்கு, தயிரிலும்; சேத்தும வல்லைக்கு, கோரைச் சாற்றிலும்; வாத குன்மத்திற்கு, விளாமரப்பட்டையின் சாற்றிலும்; பித்த குன்மத்திற்கு, தேங்காய்ப் பாலிலும்; சேத்தும குன்மத்திற்கு, முலைப்பாலிலும்; வாத மூலத்திற்கு, வெண்காயச் சாற்றிலும்; பித்த மூலத்திற்கு, கற்றாழைச் சாற்றிலும்; சேத்தும மூலத்திற்கு, கஞ்சாச் சாற்றிலும்,

மேற்படி மருந்தைச் சேர்த்துக் கொடுக்க நிவாரணமாமென்பதே. (149)

## தாளக பற்பம்.

பழையார்க் குவதம் பணிவயிரி வன்னி
பழையார்க் குவதமிரு பானே—பழையார்க்குத்
தாளகவி பூதி சதமாதத் தத்தமிடை
காளகவி பூதிசர தம்.

(இ - ள்.) [பழை]=புளித்த பனங்கள், [ஆர்க்குவதம்]=பொற்கொன்றைச்சாறு, [பணிவயிரி]=கருடன்கிழங்குச்சாறு, [வன்னி] = வன்னியிலைச்சாறு, என்னும் இச்சாறுகளைவிட்டுத் தாளகத்தையரைத்துப் புடமிட்டால், [பழையார்க்கு வதம்]=

(கைபாகம் செய்பாகம்) பழகினோர்க்கே (இப்பற்ப) மாகும்; [இரு பானே]=பெருமைமிக்க சூரியனைப்போலிருக்கும், [தாளக விபூதி பழையார்க்கு]=இத்தாளக பற்பத்தைப் பழமையாக்குதற்கு, [சத்த மாதத்து அத்தம் இடை[=ஏழு மாதங்களிற் பாதியான (மூன்றரை மாதம்) மத்திமம்; [தாள் அக விபூதி சரதம்]=முயற்சியோடு கூடிச் சரீரத்தினுள் அடைய வேண்டிய போகங்களை (இப்பற்பம்) உண்மையாய்ப் பாலிக்கும் —எ - று.

(தா - ம்.) (*a*) சுத்திசெய்த தாளகப்பொடி பலம் 1-க்கு புளித்த பனங்கள் 4-பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் மேற்படி கள் 4 பலம் சிறுகச் சிறுக விட்டு, அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை தட்டி அப்போதும் 4 பலம் மேற்படி கள் வார்த்து பனியில் ஆறவைக்கவேண்டும். இரண்டாம்நாள் உதயத்திலும் முன் கள் 4 பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லை தட்டி முன்போலவே கள் வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 8 நாளும் பிரதி தினமும் முன் கள்ளையே முன் விகிதம் விட்டு விட்டு, ஊறவைத் தூறவைத்து அரைத் தரைத்துப் பில்லை தட்டி பின்பு 11-ஆம் நாள் உதயமுதல் 9-நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யலில் காயவைத்து நன்ருயுலர்ந்த பின்பு 21-ஆம் நாள் காலையில் 10 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒரு நாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க, காற்கூறு பற்பமாகியிருக்கும்.

(*b*) மறுபடியும் 23-ஆம் நாள், காற்கூறு பற்பமான ஷெ தாளகப்பொடி பலம் 1-க்கு பொற்கொன்றையிலைச்சாறு பலம் 4 விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவே யூறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படி கொன்றையிலைச்சாறு 4 பலத்தை சிறுகச் சிறுக விட்டுப் பகல் முமுவதும் அரைத்து, இரவில் பில்லைசெய்து, அப்போதும் 4 பலம் மேற்படி சாறு வார்த்து பனியிலாறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 6-நாளும் பிரதி தினமும் முன்போலவே செய்து, ஊறவைத்தூறவைத்து, 7-நாள் வெளிக்காட்சியாகவும், முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, பின்பு மறுநாளுதயத்தில் 20-காட்டு வரட்டியில் புடமிட்டு 1-நாளாற

வைத்து மறுநாளெடுத்துப்பார்க்க அரைக்கூறு பற்பமாகி யிருக்கும்.

(c) பின்பு 41-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான மேற்படி தாளகப்பொடி பலம் 1-க்கு கெருடன் கிழங்குச்சாறு பலம் 4 விகிதம் அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு யூற வைத்தும், மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி சாறு 4 பலம் விகிதம் விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைதட்டி அப்போதும் 4 பலம் ஷை சாறு வார்த்து பனியிலாறவைக்க வேண்டும், இவ்விதம் மீண்டும் 4 நாளும், பிரதி தினமும் முன்போலவே செய்து, 5-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும், வெய்யிலில் காயவைத்து அடுத்த மறுநாள் காலையில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவைத்து, மறுநாளெடுத்துப் பார்க்க முக்காற்கூறு பற்பமாகியிருக்கும்.

(d) இதன் பின்பு 64-ஆம் நாள், முக்காற்கூறு பற்பமான ஷை தாளகப்பொடி பலம் 1-க்கு, வன்னியிலைச்சாறு பலம் 4 விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவிலே யூற வைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி சாறு பலம் 4 விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைதட்டி அப்போதும் முன்சாறு முன்னளவே விட்டும் பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும் 2-நாள் செய்து 3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும், வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 40 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு மறுநாளெடுத்துப்பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இதை மூன்றரை மாதம் வரையிற் பழக்கி வைத்துக் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதே. (148)

**தாளக பற்பத்திற் கனுபானமும் தீரும் வியாதியும்.**

ஓமமிரு நாலே யூதையன லையனலை
யோம மிருநாலே புள்ளிமழை - யோமம்
படுமது வெந்நீர்காடி பஞ்சுவன மென்னப்
படுமதுமோர் மிச்சைநீ பம்.

(இ - ள்.) [இரு நால் ஏப் ஓமம்] = (உத்தமமாகிய) எட்டு மாதம் பழகிய தாளக பற்பத்தை, [ஊதை அனல் ஐ அனல் ஐ] = வாதம், பித்தம், செத்துமம் (இவற்றுடன்முறையே சேர்ந்த) சுரம், சன்னி, (என்னும் இவைகட்கு), [ஓமம் இரு நாலே]=எட்டு ஓமத்தின் பிரமாணமே (அபரிமிதமான அளவாகும்); (அனுபானம் எவையென்றால்) [உள்ளி] = வெள்ளைப் பூண்டின் ரசம், [மழை ஓமம் படு மது வெந்நீர்[=குளிர்ந்த சலம், நெய், கள், தேன், வெந்நீர், [காடி பஞ்சு வனம் எனப் படும் அது]=புளித் தண்ணீர், செம்பருத்திச் சமூலச்சாறு, வனம் என்னும் பெயரையுடைய துளசிச்சாறு, [மோர் மிச்சை நீபம்]=பசுவின் மோர், உத்தாமணிச்சமூலச்சாறு, செங்கடம்பு சமூலச்சாறு மாம்—எ - று.

(தா - ம்.) தாளக பற்பம் பழகவேண்டிய உத்தம கால அளவாகிய எட்டு மாதமான பின்பு, ஒரு ஓமத்தினளவு முதல் எட்டு ஓமத்தினளவு வரையில் பிரமாணமாகக் கொள்ளவேண்டுமென்பதும்,

வாதமிருந்தால், வெள்ளைப் பூண்டின் சாற்றிலும்; வாதம் குறைந்தால், குளிந்த ஜலத்திலும்;

பித்தமிருந்தால், நெய்யிலும்; பித்தம் குறைந்தால் கள்ளிலும்;

சேத்துமமிகுந்தால், தேனிலும்; சேத்துமங் குறைந்தால் வெந்நீரிலும்;

வாத சுரத்திற்கு, காடியிலும்; பித்த சுரத்திற்கு, செம்பருத்திச் சமூலச் சாற்றிலும்; சேத்தும சுரத்திற்கு, ருத்திரத் துளசிச் சாற்றிலும்;

வாதசன்னிக்கு, பசுவின் மோரிலும்; பித்த சன்னிக்கு, உத்தாமணிச் சமூலச் சாற்றிலும்; சேத்தும சன்னிக்கு, செங்கடப்பஞ் சமூலச் சாற்றிலும்;

இப்பற்பத்தை அனுபானித்துக்கொடுக்க நிவாரணமாகுமென்பதாம். (150)

## இதுவும் தாளக பற்பத்திற் கனுபானமும், தீரும் வியாதியும்.

காரவலி லேசமைத்த கான்முதற்றீ மாறன்முறை
காரவலி லேசமைத்த காய்மதுமூ – காரவலி
பந்தமறுக் குந்தந்தம் பாறுது மாறுகப்
பந்தமறுக் குந்தந்தம் பார்,

(இ - ள்) [கார் அவலில் ஏசு அமைத்த] = நீரானது பள்ளங்களில் தங்கிப் பழிப்பைப் பொருந்திய [கான் முதல் தீ மாறல் முறை]=வாதம் முதலிய முச்சுரங்களும் மாறுவதற்கு முறையே, [கார் அவலிலே சமைத்த காய் மது மூ]=கார் அரிசி அவலிலே செய்த காய்ந்த மூன்றுவித சாராயங்களையும் (அனுபானித்துக் கொடுக்கவும்; [காரவல்லி]=கொம்புப் பாகற் சமூலச்சாற்றில் (அனுபானித்துக்கொடுத்தால்); [பந்தம் அறுக்கும்] =(அபத்தியத்தால் நேர்ந்த (பிடிப்புகளை நிவாரணிக்கும்; [தந்தம் பாறுது]=பற்கள் விழாது; [மாறு ஆகு அப்பு அந்தம் தந்தம் மறுக்கும் பார்]=(இயல்புக்கு) வேறுகின்ற சேத்துமத்தால் (உண்டாகும்) முடிவைத் தத்தம் (ஒழுங்கிலிருக்கும்படி செய்யும்) பார்ப்பாயாக – எ - று.

(தா - ம்.) உண்ணீர், நண்ணீர், புண்ணீர், என நீர் மூன்று விதமாம். அவற்றுள் உண்ணீரெண்பது பானம் செய்யும் நீர்; நண்ணீரென்பது மூத்திரத்தையடக்குதலாற் பந்தித்த நீர்; புண்ணீரென்பது இரத்தம் ஆகியவையாம்; இம் மூன்றும் முறையே தலையின் உச்சிப் பள்ளத்திலும்; மார்பின் பள்ளத்திலும், நாபியின் பள்ளத்திலும், தங்குவதனுல் சேத்தும சீத சுரம், பித்த சீத சுரம், வாத சீத சுரம் என்னும் மூவகைச் சுரங்களும், உண்டாகும். இவற்றிற்கு, அனுபானமாவது காரரிசி அவற் சாராயம், காரரிசிச் சாராயம், காரரிசிச் சோற்றுச் சாராயம் என்னும் மூன்றிலும் முறையே கொடுக்க நிவாரணமாமென்பதும்,

அபத்தியத்தால் நேர்ந்த கை கால் பிடிப்புகளுக்கு, கொம்புப் பாகற் சமூலச் சாற்றில் அனுபானித்துக் கொடுக்கத் தீரு மென்பதும்.

இப்பற்பத்தைக் கிரமப்படி பிரமாணமாகப் புசித்து வந்தால், பற்க ளிறுகிக் கெட்டிப்படும் என்பதுமே. (151)

## தாளக முதலியவற்றின் முறிப்பு.

கல்லாதி லோகங் களின்குற்ற மாறவயல்
கல்லாதி லோகங்க கரியொன்றே—கல்லாதி
தண்டு மணத்தகளி தக்கோல மேலமுன்னெய்
தண்டு மணத்தகளி தான்.

(இ - ள்.) [கல் ஆதி லோகங்களின் குற்றம் மாற] = பாஷாணம் முதலிய உலோக வஸ்துக்களின் வேகம் தணிவதற்கு [அயல் கல்லாதி]=வேறொன்றும் கற்கவேண்டாம்; [லோகம் கரி ஒன்றே]=இவ்வுலகத்துள்ள மிளகு ஒன்றே (போதும்); [கல் ஆதி] = சித்திரமூல வேர்ப் பட்டை, [தண்டு] = துளசி வேர்ப்பட்டை, [மணத்தகளி] = மணத்தக்காளிவேர், [தக்கோலம்] = சாதிக்காய், [ஏலம்]=ஏலம், [முன்னை] = முன்னை வேர், [நெய்]=நேய்ச்சட்டிக்கீரை வேர், [தண்டு]=சிறுகீரை வேர், [மணத்தகள்ளி]=இலைக் கள்ளிவேர், [தான்] = நிலப் பனங்கிழங்கு, என்னும் இவைகளுமாம்.—எ - று.

(தா - ம்.) பாஷாணம், மனோசிலை, லவணம், இரும்பு, வெள்ளி, பொன், எகு, தாம்பிரம், முதலியனவும், தாளகம், நேர்வாளம், லிங்கம், ரசம், கெந்தகம், நாபி, அபினி, கஞ்சா, முதலியனவும் ஆகிய இவைகளின் வேகத்தால் நேர்ந்த பிணிகளுக்குப் பொதுவாக, மிளகைப் பொடித்துப் பசுவின் வெண்ணெயுருக்கிய நெய்யிற் போஜனத்துக்கு முன் ஒரு பிடி சாதத்திற்குள் வைத்து, சுடுகையுடன் உட்கொண்டு மற்ற உணவுகளைப் பின் புசித்து வந்தால், அது உள்ளூறி அன்ன ரசம் முதலிய ஊண் பொருள்களை விரோதப் படுத்தாமல், நன்மையுண்டாக்கி, மருந்தின் வேகங்களைத் தணிக்கும். அன்றியும் அம்மிளகையே குடிநீராகச் செய்து, புளி மிளகாய் இவைகளைக் குறைவாய்ச் சேர்த்துச் சாதத்தில் விட்டுக்கொண்டு புசித்து வந்தாலும் அதே குணத்தைத் தரும். ஆனல், புளியை அறவே நீக்கிவிடுவது சர்வோத்தமம்.

தாளக வேகத்தால், நகக் கண்களில் உதிரம் சுவறிப் பக்கு கட்டிப் புண்ணாகிச் சீழுண்டாய் உபத்திரவம் செய்தால், வயிற்றில் சதா எரிச்சலுண்டாதல், தொனி மாறுபடல், பிரமையாயிருத்தல், மூக்கில் சர சரவென இரத்தம் வடிதல், வாயிலைத்தல், தலையில் தினவுண்டாதல், தலை மயிர் முனை

சிவந்து அக்கினிக் கொழுந்துபோலிருத்தல், சுவாசத்தை அதிகப்படுத்துதல், ஒருவேளை பந்தித்தல், அடிவயிற்றில், கொஞ்சம் வீக்கக் குறிப்பு காணுதல், இடப் பக்கத்தில் வலியுண்டாதல், அன்னத்துவேஷம் காணுதல் என்னும் இக்குணங்களுண்டாம். இதற்கு, வேளை 1-க்கு, சித்திரமூல வேர்ப்பட்டை பலம் $\frac{1}{8}$ மிளகு பலம் $\frac{1}{4}$, உப்பு பலம் $\frac{1}{8}$, ஆக இம் மூன்றையும் ஓர் புதுப் பாண்டத்திற்போட்டு $1\frac{1}{2}$ ஆழாக்கு சலம் வார்த்து $\frac{1}{2}$ ஆழாக்குக் குடி நீராகக் காய்ச்சிக் காலை மாலை என்னும் இரண்டு வேளைகளிலும் தவறாமல் அரை மண்டலம், முக்கால் மண்டலம், ஒரு மண்டலம் என்னும் கணக்கின்படி சாப்பிட்டு வந்தால், நிவாரணமாகும்.

இரச வேகத்தால், வாயில் அட்சரத்தைப் போற் புண்ணுண்டாகி, சிவந்து எரிந்துகொண்டிருத்தல், பல்லின் சந்துகளில் ஈறுகட்டிக்கொள்ளுதல், வயிற்றின் மேல் தேமலைப்போற் பட்டை பட்டையாய்ப் படர்தல், பாதத்தில் வெடித்துப் புண்ணுகி வீங்கிச் சிலை நீரொழுகி விக்கலெடுத்தல், வாய்நீர் பெருகி அக்கினி மந்தப்பட்டுப் பொய்ப் பசியெடுத்தல், பக்கசூலையைப் போல் அடிக்கடி பக்கத்தை இழுத்துக்கொண்டு உபத்திரவம் செய்தல், என்னும் இக்குணங்களுண்டாம். இதற்கு, வேளை 1-க்கு, துளசி வேர்ப்பட்டை $\frac{1}{4}$ பலம், மேல் தோல் நீக்கப்பட்ட சுக்கு $\frac{1}{4}$ பலம், பொட்டலுப்பு $\frac{1}{8}$ பலம், ஆகிய இம் மூன்றையும் முன்போலவே குடிநீராகக் காய்ச்சிக் காலை மாலை என்னும் இரண்டு வேளைகளிலும் தவறாமல், $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$, 1, என்னும் மண்டலக் கணக்காகச் சாப்பிட்டு வரத் தீரும்.

கெந்தக வேகத்தால், கண்களிரண்டும் மஞ்சள் பூத்தல், முகம்மாத்திரம் வெளுத்து உடம்பெல்லாம் மஞ்சள் நிறமாயிருத்தல், பற்கள் கறுப்பாகி ஓர் வகை விகாரமாதல், வெயர்வை நீரானது சேற்று நீரைப்போல் பசுமையாயிருத்தல், மூத்திரமானது வெள்ளாட்டு நீர் போலிருத்தல், மலமானது சாமந்திப் பூவின் நிறமாயிருத்தல், வயிற்றில் எந்நேரமும் நோவுண்டாதல், அதிகபசிபோலத் தோன்றி உஷ்ணத்தால் அக்கினி மந்தப்படுதல்; வாயில் மருந்துப் புகையைப் போல் வெற்று நாற்றமிருத்தல், வேர்க்குருப்பருவு தேகத்தில் விசேடமாயிருத்தல், என்னும் இக்குணங்களுண்டாம், இதற்கு, வேளை 1-க்கு மணத்தக்காளியின் அடிவேர் $\frac{1}{4}$ பலம், திப்பிலி $\frac{1}{4}$ பலம், அதிமதுரம் $\frac{1}{4}$ பலம், ஆகிய இம்மூன்றையும் முன்போலவே குடிநீராகக்

காய்ச்சிக் காலை மாலை என்னும் இரண்டு வேளைகளிலும், தவருமல் ஒரு மண்டலம் வரையிற் புசித்து வர நிவாரணமாகும்.

லிங்கவேகத்தால், வாயின் அடிப்பாகம், உள்நாக்கு முதல் குரல்வளை வரையிலும், இருதயமான மார்பு, வயிற்றின் மேலாகிய பெருங்குடல், என்னும் இவ்விடங்களில் வெந்து, பசும்புண்ணுய் வாடிப் போயிருப்பதுமன்றில், ஷி தானங்களில் காரம் செல்ல வொட்டாதபடி அதிக உபத்திரவத்தைக் கொடுத்துப் போஜனம் செய்ய வொட்டாமலும், தாகம் குடிக்க வொட்டாமலும், அதிக தொந்தரை செய்தல், பேசுதற்கு வருத்தமாயிருத்தல், வாய் திறந்தால் துர்நாற்றம் வீசுதல், அரோசகமாயிருத்தல், வயிற்றில் அக்கினியைப் போலெரிதல், வாய்நீரானது கெட்டுப்போன பனங்கள்ளைப் போலவும், காடி நீரைப் போலவும், வெண்மையாகவும், குழம்பாகவும் காணப்படுதல், என்னும் இக்குணங்களுண்டாம். இதற்கு, வேளை 1-க்கு சாதிக்காய் ஒரு வராகனெடை, வால்மிளகு, ஒரு வராகனெடை, செம்பருத்தி வேர்ப்பட்டை, ஒரு வராகனெடை, கற்கண்டு, ஒரு வராகனெடை, ஆகிய இந்நான்கையும் முன் போலவே குடிநீராகச் செய்து, காலை மாலை என்னும் இரண்டு வேளைகளிலும், தவருமல் ஒரு மண்டலம் புசித்துவரக்குணமாம்.

பாஷாண வேகத்தால், இரத்தமெல்லாம் முறிந்து, கொப்புளமாகவும், சிரங்காகவும், புறப்பட்டு, வேதனையுண்டாய்க் கை கால் வலித்தல்; விரல்களெல்லாம் குரங்கின் விரல்களைப்போலவும், பிசாசின் விரல்களைப் போலவும், விகாரப்பட்டிருத்தல் முகத்திலே நாளாவர்த்தியில் வீக்கம் காணுதல், வாயிற்போடும் எந்த வஸ்துவும் கைப்பாயிருத்தல், மூக்குத் தண்டு அதப்பாய்க் காணுதல், மேல் வாயுதட்டிற் புண்ணுகிக் கொடிய உபத்திரவம் செய்தல், என்னும் இக்குணுங்களுண்டாம். இதற்கு, வேளை 1-க்கு, ஏலம் 1 வராகனெடை, முசுமுசுக்கைவேர் 1 வராகனெடை, வெள்ளைச் சர்க்கரை 1 வராகனெடை படிகாரம் 1 வராகனெடை ஆகிய இந்நான்கையும் குடிநீராகக் காய்ச்சிக் காலை மாலை என்னும் இரண்டு வேளைகளிலும் தவருமல் ஒரு மண்டலம் குடித்துவரக் குணமாம்.

கௌரி பாஷாண வேகத்தால், கண்டைக்காற் சதையில் பருவைப் போலக்கண்டு, அதிக உபத்திரவம் விளைதல், உள்ளங்காலிலும், மார்பின் பள்ளத்திலும், வீக்கங்கண்டு அதிக நோ

யுண்டாதல், நடு வயிற்றில் கனத்த கட்டியாகக்கண்டு உபத்திரவமுண்டாதல், உள்ளங்கையில் தோலுரிதல், கண்சிவந்திருத்தல், பெருவியாதி, குட்டம் என்னும் இவற்றைப் போல் தடித்துத் திமிருண்டாதல், பல்லின் சந்தில் இரத்தம் பொசிதல், இருமல், உப்பசம், வெள்ளோக்காளம், வெதுப்பு ஆகிய இவையுண்டாதல் என்னும் இக்குணங்களுண்டாம். இதற்கு, வேளை 1-க்கு முன்னைவேர் $\frac{1}{4}$ பலம், கறியுப்பு $\frac{1}{4}$ பலம், பனங்கற்கண்டு, $\frac{1}{4}$ பலம், அக்கராகாரம், $\frac{1}{4}$ பலம் ஆகிய இந்நான்கையும் முன்போல குடிநீராகக் காய்ச்சிக் காலை மாலை என்னும் இரண்டு வேளைகளிலும் தவருமல் ஒரு மண்டலம் குடித்துவரக் குணமாம்.

நேர்வாள வேகத்தால், அதிசாரத்தைப் போற் சதா கழிச்சல் காணுதல், முகத்திலும் வாயிலும் நீரில்லாமல் வரண்டிருத்தல், வாய்நீரூறல், காய்ச்சலைப்போற் சூடாயிருத்தல், பல் ஒருவிதமாய்க் கறுத்தல், வாய்கைத்தல், வாந்தி வருதல், அடிக்கடி மூர்ச்சையாதல் என்னும் இக்குணங்களுண்டாம். இதற்கு, வேளை 1-க்கு, நெய்ச்சட்டிக் கீரைவேர், பலம் $\frac{1}{4}$ முருங்கைவேர், பலம் $\frac{1}{4}$, பன்னீர்ச் செடிவேர் பலம் $\frac{1}{4}$, சீரகம் பலம் $\frac{1}{4}$ ஆகிய இந்நான்கையும் முன்போல குடிநீராகக் காய்ச்சிக் காலை மாலை என்னும் இரண்டு வேளைகளிலும் விடாமல் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் வரையில் குடித்துவரக் குணமாம்.

பச்சை நாபியின் வேகத்தால், முகமும் தேகமும் ஒரு வகையான புகை வர்னமாகக் கறுத்தல், வாயுதடுகள் கீற்றுக் கீற்ருய் வெடித்து வெளுத்தல், அடிவயிறு கனத்து வீங்கிக் கல்லைப்போலிருத்தல், பற்களின்மேல் நாவற்கனி தின்ற வர்ணமாயிருத்தல், சிலுசிலுப்புக்காணுதல், தலை திருப்பல், வார்த்தைகள் மாறுபாடாயிருத்தல், ஆசனத்தில் ஒருவிதமான காங்கை, எரிச்சல், தினவு ஆகியவை உண்டாதல், அடிக்கடி மலங்கழிதல், மார்பின் பள்ளத்திற் பருவைப்போற் கண்டு வேதனையுண்டாதல், விக்கல், வருவதைப்போல மேலே வந்து வாந்தியாகி, அதிலே இரத்தமும் கோழையும் காணுதல், இடுப்பும், முழங்கால்களும், முறிந்து போவது போல் வலித்தல் என்னும் இக்குணங்களுண்டாம். இதற்கு, வேளை 1-க்கு, சிறுகீரை வேர் $\frac{1}{4}$ பலம், ஓமம் $\frac{1}{4}$ பலம், விளாம்பட்டை $\frac{1}{4}$ பலம், உப்பு $\frac{1}{4}$ பலம் ஆகிய இந்நான்கையும் முன்போற் குடி நீராகக்

காய்ச்சிக் காலை மாலை என்னும் 2 வேளைகளிலும் விடாமல் 1 வாரம் அல்லது 2 வாரங்கள் வரையிலும் புசித்துவரக் குணமாம்.

இவைகட்கெல்லாம், பொதுவாக, கடுகு, நல்லெண்ணெய் முதலியவைகளை நீக்கவும்.

பச்சை நாபியின் விஷவேகத்திற்காம் முறையே எட்டி, அலரி, ஊமத்தை, முதலிய விஷவேகங்கட்குமாகும்.

அபினி, கஞ்சா என்னும் இவற்றின் வேகத்தால் குன்மத்தின் குணத்தைப்போல் அடிவயிற்றிலும், மார்பிலும், எரிச்சலும் வலியும் உண்டாதல்;நெஞ்சும்,வாயும்ஈரமில்லாமல் வரண்டிருத்தல், உறக்கமாயிருந்து நித்திரைவராதிருத்தல், தண்ணீர் குடிக்கினும் வாந்தியாதல், நேத்திரங்கள் நெருப்பைப்போலெரிதல், ஒருவேளை வாய் ஓயாமற் பேசுதல், ஒருவேளை பேசவொட்டாமற் செய்தல், என்னும் இக்குணங்களுண்டாகும். இதற்கு, வேளை 1-க்கு, இலைக்கள்ளிவேர் பலம் $\frac{1}{4}$, கோரைக்கிழங்கு பலம் $\frac{1}{4}$, சுட்டெரித்த வசம்பு சாம்பல் பலம் $\frac{1}{4}$, மேல் தோல் நீக்கப்பட்ட சுக்கு பலம் $\frac{1}{4}$ ஆகிய இந்நான்கையும் முன் போற் குடி நீராகக் காய்ச்சிக் காலை மாலை என்னும் 2 வேளைகளிலும் விடாமல் ஒருவாரம் குடித்துவரக் குணமாம்.

இரசகற்பூர வேகத்தால், முகத்திற் செவ்வாப்புக்கட்டியைப்போல் வேர்க்குருவும், முகப்பருவும் உண்டாதல், மார்பின் பள்ளத்தில் பருகட்டிரணம், புண் என்னும் இவைகள் காணுதல், இடைப் பக்கங்களில் வலித்தல், வயிறு புண்ணுதல், பீஜங்கள் வீங்கிஉபத்திரவமுண்டாதல், உள்நாக்கில் ரணங்காணுதல் அடிக்கடி பேதியாகி அதில் இரத்தக் களிச்சல் உண்டாதல் என்னும் இக்குணங்களுண்டாம். இதற்கு, வேளை 1-க்கு, நிலப் பனங்கிழங்கு $\frac{1}{4}$ பலம், வல்லாரை வேர் $\frac{1}{4}$ பலம், பொன்னுங்காணி வேர் $\frac{1}{4}$ பலம், கண்டுபாரங்கி $\frac{1}{4}$ பலம், ஆகிய இந்நான்கையும் முன்போற் குடிநீராகச் செய்து காலை மாலை என்னும் 2 வேளைகளிலும் விடாமல் 2 வாரம் அல்லது 3 வாரங்கள் வரையில் குடித்துவரக் குணமாமென்பதே. (152)

## கெந்தகபற்பம்.

கூலமது கையறுகு குன்றிபனை புல்லால்வெண்
கூலமது கைவசமா குங்கெந்தி—கூலமது
கையடையா கண்டலன்வில் கந்தனரி கந்தியெட்டைக்
கையடையா கண்டலன்மேற் கால்.

(இ - ள்.) [கூலம்] = கொம்புப் பாகலிலைச்சாறு, [மது] = இலுப்பைப்பூச்சாறு, [கை] = கையாந்தகரைச்சாறு, [அறுகு] = அறுகின்சாறு, [குன்றி] = வெண்குன்றிச்சமூலச்சாறு, [பனை] = நிலக்பனையின் கிழங்குச்சாறு, [புல்] = புல்லாந்திச்சாறு, [ஆல்] = ஆலின் வேர்ப்பட்டைச்சாறு, (என்னும் இவைகளைவிட்டுக் கெந்தகத்தையரைத்துப் புடமிட்டால்) [கூலமது கைவசம் ஆகும் கெந்திவெண்] = அதிட்டத்தால் அநுகூலமாகும் கைந்தக பற்பம், [கூலமது கை] = கடற்கரையான நெய்த நிலத்தை (மருந்து புசிப்பதற்கு) வெறுப்பாயாக, [அடை ஆகண்டலன்] ... இந்திரனுடைய நிலமான மருதநிலத்தைச் சேர்வாயாக. [வில்] = மார்கழிமாதத்தை (நீக்குவாயாக) [கந்தன் அரி] = முருகக் கடவுளின் (நிலமான குறிஞ்சியையும்) திருமாலின் (நிலமான முல்லையையும் மத்திமமாகக் கொள்க.) [கந்தி எட்டை] = துவரம்பருப்பின் எட்டிலொரு பாகத்தைப் (பிரமாணமாகக் கொள்), [கையடை யாடு] = இந்தப் பற்பத்திற்கு நீ அடைக்கலமாவாயாக, [மேற் கால் அண்டலன்] = இனிமேல் உன்னிடத்து யமன் நெருங்கான்—எ - று.

(தா - ம்.) (a) முன் சொன்ன முறைப்படி சுத்தி செய்த கெந்தகம் பலம் 1-க்கு கொம்புபாகற் சமூலச்சாறு 4-பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷைசமூலச்சாறு 4 பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைத்தட்டி அப்போதும் 4 பலம் ஷைசாறுவார்த்துப் பனியில் ஆறவைக்க வேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் முன் சாறு 4 பலத்தையே சிறுகச் சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைசெய்து அப்போதும் 4 பலம் ஷைசாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 6-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத்தரைத்துப் பில்லைதட்டிப் பனியில் ஆறவைத்தாறவைத்த பின்பு 9-ஆம் நாள் உதயமுதல் 7-நாள்

வரையில் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்ருயுலர்ந்த பின்பு 17-ஆம் நாள் உதயத்தில் 5 காட்டு வரட்டியிற் புடமிட்டு ஒருநாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க, எட்டிலொரு கூறு பற்பமாகியிருக்கும்.

(*b*) மறுபடி 19-ஆம் நாள், எட்டிலொருகூறு பற்பமாகிய ஷை கெந்தகம் பலம் 1-க்கு இலுப்பைப்பூச்சாறு 4 பலம் விகிதம் வார்த்து முன் கண்டபடியே 7-நாள் ஊறவைத்தும், அரைத்தும், பனியில் வைத்த பின்பும் 6-நாள் வெளிக்காட்சியாகவும், முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலிலுலர்த்தின பின்பும், அடுத்த நாளுதயத்தில் 10 காட்டு வரட்டியிற் புடமிட்டு 1-நாள் ஆறவைத்தெடுக்க நான்கிலொருகூறு பற்பமாயிருக்கும்.

(*c*) பின்பு 35-ஆம் நாள், நான்கிலொருகூறு பற்பமான ஷை கெந்தகப்பொடி பலம் 1-க்கு, கையாந்தகரைச் சமூலச்சாறு பலம் 3 விகிதம் வார்த்து முன் கண்டபடியே 6-நாள் ஊறவைத்தும், அரைத்தும் பனியிலாறவைத்துமான பின்பு, 5-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அடுத்த நாளுதயத்தில் 15 காட்டு வரட்டியில் புடமிட்டு 1 நாளாறவிட்டு மறுநாளெடுக்க எட்டில் மூன்று கூறு பற்பமாயிருக்கும்.

(*d*) பின்பு 49-ஆம் நாள், எட்டில் மூன்று கூறு பற்பமான ஷை கெந்தகப்பொடி பலம் 1-க்கு, அறுகுச்சமூலச்சாறு பலம் 3 விகிதம் வார்த்து, முன் கண்டபடியே 5-நாள் ஊறவைத்தும் அரைத்தும் பனியில் ஆறவைத்துமானபின்பு, 4-நாள் அதை வெளிக்காட்சியாகவும், 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும் அடுத்த நாள் காலையில் 20 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவிட்டு, மறுநாளெடுத்துப்பார்க்க அரைக்கூறு பற்பமாயிருக்கும்.

(*e*) பின்பு 61-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான மேற்படி கெந்தகப்பொடி பலம் 1-க்கு, வெண்குன்றிச் சமூலச்சாறு பலம் 2 விகிதம் வார்த்து மேற் கண்டபடி 4 நாள் பிரதி தினமும் ஊறவைத்தும் அரைத்தும் பனியிலாறவைத்து பின்பு

3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும் அடுத்த நாள் உதயத்தில் 25 காட்டு வரட்டியிற் புடமிட்டு 1 நாளாறவிட்டெடுக்க எட்டிலைந்து கூறு பற்பமாயிருக்கும்.

(*f*) இதன் பின்பு 71-ஆம் நாள், எட்டிலைந்து கூறு பற்பமான ஷை கெந்தகப் பொடி பலம் 1-க்கு, நிலப்பனைக் கிழங்குச்சாறு 2 பலம் விகிதம் வார்த்து முன் கண்டபடி 3-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியிலாற வைத்தானபின்பு, அதை 2 நாள் வெளிக்காட்சியாகவும் அடுத்த 1 நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்தும், அதற்கடுத்த நாளுதயத்தில் 30 காட்டு வரட்டியல் புடமிட்டு ஒருநாளாற வைத்து மறுநாளெடுத்துப்பார்க்க, முக்காற் கூறும் பற்பமாயிருக்கும்.

(*g*) பின்பு 79-ஆம் நாள், முக்காற் கூறு பற்பமான ஷை கெந்தகப்பொடி பலம் 1-க்கு புல்லாந்திச் சமூலச்சாறு பலம் 1 விகிதம் வார்த்து 2-நாள் பிரதி தினமும் முன்போலவே ஊற வைத்தும், அரைத்து, பனியில் வைத்துமான பின்பு 1 நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1 நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து அடுத்த மறுநாள் காலையில் 35 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவைத்து, மறுநாளெடுத்துப் பார்க்க எட்டிலேழுகூறு பற்பமாகியிருக்கும்.

(*h*) இதன் பின்பு 85-ஆம் நாள், எட்டிலேழு கூறு பற்பமான ஷை கெந்தகப்பொடி பலம் 1-க்கு, ஆலின் கொழுந்திலைச் சாறு பலம் 1 விகிதம் வார்த்து 1 இரவு ஊறவைத்தும், ஒரு பகல் அரைத்தும், பனியில் வைத்துமான பின்பு, வில்லையை 1-நாள் வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும், வெய்யிலில் உலர்த்தியும் அடுத்த நாள் காலையில் 40 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு, மறுநாளெடுத்துப்பார்க்க முழுக் கூறு பற்பமாயிருக்கும்.

இப்பற்பத்தைச் சாப்பிடுவதற்கு மருதநிலம் உத்தமமும், குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் மத்திமமும், பாலை நிலமும் நெய்தனிலமும் அதமமுமாம்.

மாதங்களில் மார்கழி மாதம் ஆகாது,

இப்பற்பத்தின் பிரமாணம் எப்படி யென்றால் ஒரு துவரையின் எட்டிலொரு பாகமே உத்தமமாகும். மற்ற பாகங்களையும் மத்திம மாதியாகப் பார்த்துக் கொள்ளவும்,

இதைச் சாப்பிடுவோர்க்கு மரணவஸ்தையையொத்த வேதனையை விளைக்கும் ரோகங்களும் நிவாரணமாமென்பதே. (153)

**கெந்தக பற்பத்தின் அனுபானமும் தீரும் நோய்களும்.**

சத்தியுர முக்கால் சனியரியை வல்லைவெண்மை
சத்தியுர முக்கால் சனியரியை—சத்தியுர
மாரி சடுகலமா மஞ்சணெய்மோர் பாலளையை
மாரி கடுகலமா வார்.

(இ - ள்.) [சத்தி] = பிடிப்பு, [உரம்] = மாரடைப்பு, [முக்கால்]=மேற்சுவாசம், [சனி]=சன்னி, [அரி]=சுரம், [ஐ]= சேத்தும பேதம், [வல்லை] = பெருவயிறு, [வெண்மை]=பாண்டு [சத்தி]=வாந்தி, [உரம்]= திமிர், [உக்கு]=இளைப்பு, [ஆல்]= நடுக்கல், [சனி] = தலையிடிப்பு, [அரி] = காசம், [ஐ] = பெரு வியாதி (என்னும் இவைகட்கு) [சத்தி யுரம்]=கெந்தக பற் பத்தை, [மாரி]=கள், [கடுகு அலம் மா மஞ்சள் நெய் மோர் பால் அளை ஐ] = கடுகின் ரசம், இஞ்சிச்சாறு, மாமரத்தின்சமூலச்சாறு, பசுமஞ்சளின்சாறு, பசுவின் நெய், ஷை மோர், ஷை பால், ஷை தயிர், ஷை வெண்ணெய், [மாரி கடுகல் அமா வார்] =குளிர்நத சலம், கடுக்காயின் ரசம், செங்கழுநீர்க்கிழங்குச் சாறு, மாதுளம்பழ ரசம், வெந்நீர் (என்னும் இவைகளில் முறையே அனுபானித்துக் கொடுக்க நிவாரணமாம்.)—எ - று.

(தா - ம்.) வாதப் பிடிப்புக்கு, கள்ளிலும்; மாரடைப்புக்கு, கடுகின் ரசத்திலும்; மேற்சுவாசத்திற்கு, இஞ்சி ரசத்திலும்; சன்னிக்கு மாவிலைச் சமூலச்சாற்றிலும், சுரத்திற்கு, பசுமஞ்சட் சாற்றிலும்; சேத்தும ரோகத்திற்கு, பசுவின் நெய்யிலும்; பெருவயிற்றுக்கு, பசுவின் மோரிலும்; பாண்டுவுக்கு, பசுவின் பாலிலும்; வாந்திக்கு, இளந்தோய்ச்சலான பசுவின் தயிரிலும்; திமிர் வாதத்திற்கு, வெண்ணெய்யிலும்; இளைப்புக்கு, குளிர்ந்த தண்ணீரிலும்; நடுக்கலுக்கு, கடுக்காயின் ரசத்திலும்; தலையிடிப்புக்கு, செங்கழு நீர்க்கிழங்கின் சாற்றிலும்;

காசத்திற்கு, மாதுளம்பழ ரசத்திலும்; பெருவியாதிக்கு வெந்நீரிலும்;

மேற்படி பற்பத்தை அனுபானித்துக் கொடுக்க நிவாரணமாமென்பதே. (154)

**குட்டங்கட்கு, கெந்தக பற்பத்தை யுபயோகிக்கும் வகை.**

அங்குட்ட மாக்கை யடிகருவெண் செம்முவபா
யங்குட்ட மாக்கை யயர்வெறிதீ—யங்குட்ட
மாலலங்கல் வங்க மதுகள்வி ளாவில்வேல்
மாலலங்கல் வங்கமது மா.

(இ - ள்.) [அங்குட்டம் ஆக்கை அடி]=பெருவிரல், முதலிய விரல்களிலும், சரீரமெங்கும், பாதத்திலும், (காணுகின்ற) [கரு வெண் செம் மூ]=கருமை, வெண்மை, செம்மை, என்னும் மூவிதமான, [அபாயம் குட்டம் மா கை அயர் வெறிதீ]=அபாயத்தை (விளைப்பதாகிய) குட்டம் வியாதியால் விசேஷவேதனை ஆயாசம், மயக்கம் என்னும் கொடுமையை, [அங்குட்ட]=குறுகும்படிச் செய்வதற்கு [மாலலங்கல் வங்கம்] = துளசிச் சமூலம், கண்டங்கத்திரி சமூலம், [மதுகள்]=கருவேல் சமூலம், பெருங்கிளா சமூலம், [விளாவில்]=விளா சமூலம், வில்வபத்திரி, [வேல் மால்]=உவளமரத்தின் சமூலம், பனைமரத்தின்சமூலம், [அலங்கல் வங்கம்]= தாழை சமூலம், ஈயக்கொடி சமூலம், [மது மா]=இலுப்பை சமூலம், மாமரச்சமூலம், (என்னும் இவைகளில் குழித்தைலமிறக்கி, அவ்வவற்றிற்கு முறையே ஷை பற்பத்தைச் சேர்த்துக் கொடுத்து, மேலுக்கும் பூசிவர நிவாரணமாம் — எ - று.

(தா - ம்.) வாத சம்பந்தத்தால் கருங்குட்டமும், பித்த சம்பந்தத்தால் வெண்குட்டமும், சேத்தும சம்பந்தத்தால் செங்குட்டமும் காணும். இவற்றுள், ஒவ்வொன்றிலும் திமிர் இருந்தால் சாத்தியமென்றும், திமிர் இராவிட்டால் அசாத்தியமென்றும் கூறப்படும். ஆக ஒவ்வொன்றில் இரண்டிரண்டாக மூன்று குட்டங்கட்கும் ஆறுவகையாம்.

அவற்றிற்கு, முறையே, துளசிச் சமூலம், சண்டங்கத்திரி சமூலம், என்னும் இவ்விரண்டையும் வெய்யிலிலுலர்த்தி,

தனித் தனிக் குழித்தைல மிறக்கி இவ்விரண்டு தைலத்திலும் வகை 1-க்கு சமனளவாக எடுத்துக்கலந்து, அக்கலவையில், வேளைக்கு $\frac{1}{4}$ பலம் வீதம் எடுத்து, அதில் ஷை பற்பத்தைப் பிரமாணப்படி சேர்த்து மத்தித்து, உட்கொள்ள வேண்டும். இவ்விதம், காலை மாலையென்னும் இரண்டு வேளையும் செய்துவர வாத சம்பந்தச் சாத்தியக் கருங்குட்டமும்,

கருவேல் சமூலம், பெருங்கிளா சமூலம் என்னும் இவ்விரண்டையும் முன்போலவே குழித்தைலமிறக்கி முன்போலவே கலந்து, அக்கலவையில் வேளை 1-க்கு $\frac{1}{4}$ பலம் வீதம் எடுத்து, அதில் ஷை பற்பத்தைப் பிரமாணப்படி கலந்து காலை மாலையென்னும் 2 வேளையும் உட்கொண்டும், இவ்விரண்டு தைலமும் சேர்ந்த கலவை 1 பங்கும் மேற்படி பற்பம் $\frac{1}{8}$ பங்குமாகக் கலந்து, மேலுக்குப் பூசி யூறவைத்து, சீயக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானம் செய்தும் வர, வாத சம்பந்த அசாத்தியக் கருங்குட்டமும்,

விளாசமூலம், வில்வபத்திரி என்னும் இவ்விரண்டையும் முன்போலவே குழித்தைல மிறக்கி முன்போலவே கலந்து, அக்கலவையில் வேளை 1-க்கு $\frac{1}{4}$ பலம் வீதம் எடுத்து, அதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி கலந்து 2 வேளையும் உட்கொண்டும், இவ்விரண்டு தைலமும் சேர்ந்த கலவை 1 பங்கும் மேற்படி பற்பம் $\frac{1}{8}$ பங்குமாகக் கலந்து, மேலுக்கும் பூசி யூறவைத்துச் சிறுபயறு அரைத்துத் தேய்த்து வெந்நீரில் ஸ்நானம் செய்தும் வரப் பித்த சம்பந்தச் சாத்திய வெண்குட்டமும்,

உவள மரத்தின் சமூலம், பனைமரத்தின் சமூலம் என்னும் இவ்விரண்டையும் முன்போலவே குழித்தைல மிறக்கி முன்போலவே கலந்து, அக்கலவையில் வேளை 1-க்கு $\frac{1}{4}$ பலம் வீதம் எடுத்து, அதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி கலந்து 2 வேளையும் உட்கொண்டும், இவ்விரண்டு தைலமும் சேர்ந்த கலவை 1 பங்கும் மேற்படி பற்பம் $\frac{1}{8}$ பங்குமாகக் கலந்து மேலுக்ும் பூசி யூறவைத்துப் புளியிலையை வேகவைத்த தண்ணீரிற் குளித்தும் வர, பித்த சம்பந்த அசாத்திய வெண்குட்டமும்,

தாழை சமூலம், ஈயக்கொடி சமூலம் என்னும் இவ்விரண்டையும் முன்போலவே குழித்தைல மிறக்கி முன்போலவே கலந்து, அக்கலவையில் வேளை 1-க்கு $\frac{1}{4}$ பலம் வீதம் எடுத்து,

அதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி கலந்து 2 வேளை யும் உட்கொண்டும், இவ்விரண்டு தைலமும் சேர்ந்த கலவை 1 பங்கும் மேற்படி பற்பம் $\frac{1}{8}$ பங்குமாகக் கலந்து, முன்போலவே மேலுக்கும் பூசி, எள்ளிலை யரைத்துத் தேய்த்து வெந்நீரிற் குளித்தும் வர, சேத்தும சம்பந்தச் சாத்தியச் செங்குட்டமும்,

இலுப்பை சமூலம், மாமரச் சமூலம், என்னும் இவ்விரண்டையும் முன்போலவே குழித்தைலமிறக்கி முன்போலவே கலந்து, அக்கலவையில் வேளை 1-க்கு $\frac{1}{4}$ பலம் வீதம் எடுத்து, அதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி கலந்து 2 வேளை யும் உட்கொண்டும் இவ்விரண்டு தைலமும் சேர்ந்த கலவை 1 பங்கும், மேற்படி பற்பம் $\frac{1}{8}$ பங்குமாகக் கலந்து, முன்போலவே மேலுக்கும் பூசி யூறவைத்து, முன்னையிலையை யரைத்துத் தேய்த்து வேந்நீரில் ஸ்நானம் செய்தும் வர, சேத்தும சம்பந்த அசாத்திய செங்குட்டமும் நிவாரணமாகும்,

இவ்விதமாக ஒரு பட்சம், இரண்டு பட்சம், மூன்று பட்சம் வரையில் இச்சாபத்தியத்துடன் சாப்பிட்டு வரவேண்டுமென்பதே. (155)

இதுவும் கெந்தக பற்பத்தின் அனுபானம்.

சத்தியங்கச் சாம்பற் சனிக்குமுன்னர் முப்பிரமை
சத்தியங்கச் சாம்பற் சனியோடு—சத்தியங்க
பட்டுத் தனமன்று பாலயிர்நெய் மாதளிமான்
பட்டுத் தனமன்று பார்.

(இ - ள்.) [சத்தி அங்கச் சாம்பல் சனிக்கும் முன்னர்] = கெந்தக பற்பம் பிறப்பதற்கு முன்னமே; [முப் பிரமை]= வாதாதி மூன்று பிரமைகளும்; [சத்த இயங்க பல் சனியோடு சாம்]=(இப்பற்பத்தின் பெயராகிய) ஒலியைக் கேட்டவளவில் பல் வியாதிகளுடனே ஒழியும்; [சத்தியம் கபட்டுத்தனம் அன்று]=இஃதுண்மை;வஞ்சகத்தன்மையல்ல,[பால் அயிர்நெய் மாது அளி மான் பட்டு]=பால், சர்க்கரை, நெய் பெண்போகம், கள், மிளகாய்(என்னும் இவற்றை நீக்கி யுண்டால்), [தன்னம் மன்று பார்]=அதி யற்ப நேரத்தில் (இதன் குணங்கள்) வெளியாகும்; இதனை நீ பார்ப்பாயாக.—எ - று.

(தா - ம்.) வாதப் பிரமைக்கு, இலவங்கத்தின் ரசம், இஞ்சிச்சாறு, என்னும் இவ்விரண்டும் வகை ஒன்றுக்கு பலம் காலாகச் சேர்த்து, ஷை பற்பத்தை பிரமாணப்படி கலந்து உள்ளுக்குங் கொடுத்து, சிரசிலும் தேய்த்து அனலிற் காய்ச்சவும், இவ்வாறு பத்தியத்துடனே 9-நாள் செய்த பிறகு, சீக்கிராணிலையை யரைத்துத் தேய்த்து வெந்நீரில் ஸ்நானம் செய்ய அது குணமாம்.

பித்தப் பிரமைக்கு, துளசிச்சாறு, சீரகம், பனங்கள் என்னும் இவை மூன்றும் சமமாகக் கலந்து ஷை பற்பத்தைப் பிரமாணப்படி சேர்த்து, உள்ளுக்குங் கொடுத்து, முன்போலவே மேலுக்கும் பூசி, இவ்வாறு பதினெட்டு நாள் செய்து வந்து, மருந்தை நிறுத்தி, பயற்றை அரைத்துப் பூசி, ஸ்நானம் செய்யவும், பச்சைப்பயறு பதார்த்தம் செய்துகொள்ளவும். அது தீரும்.

சேத்துமப் பிரமைக்கு, தும்பராஷ்டகச் சாறு, திப்பிலிச் சாறு, காய்ச்சின சாராயம் என்னும் இவை மூன்றும் சமமாகச் சேர்த்து அதில் முன்போலவே ஷை பற்பத்தைக் கலந்து உள்ளுக்குக் கொடுத்து, அதையே சர்வாங்கமும் பூசி யூறவைத்து 27 நாள்களான பின் இலுப்பைப் பிண்ணாக்கால் தேய்த்து ஸ்நானம் செய்ய மேற்படி ரோகந்தீரும்.

பத்தியம் கடும் பத்தியம், பால், சர்க்கரை, நெய், பெண் போகம், கள், மிளகாய் என்னும் இவைகளை நீக்கிப் பத்தியமாய்ச் சாப்பிடவேண்டும் என்பதாம். (156)

### கெந்தக பற்பம் சேர்ந்த சர்வ விட தோடாரி மாத்திரை.

புலிங்கமரை முக்கடுகு பூரணியால் மான்கொம்
புலிங்கமரை யெண்ணிமுதிற் பூட்டிப்—புலிங்கமரை
யாதிசைய வுண்டை யயர்நாவிக் கற்பிரமை
யாதிசைய மேனுமில்லை யாம்.

(இ - ள்.) [புலிங்கம் அரை]=(மேற் சொன்ன) கெந்தக பற்பம் பாதியும்; [முக்கடுகு பூரணி ஆல் மான் கொம்பு லிங்கம் அரை]= = சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், கல்லாலின் பட்டை, கலைமான் கொம்பு, லிங்கம் (என்னும் இவைகள்)

பாதியு (மாகச் சேர்த்து), [எண் இழுதில் பூட்டி]=ஆகிய எட்டையும் பொடித்து பசுவின் நெய்யிற் கலந்து; [புலிங்கம் மறையாது இசைய உண்டை அயர்]=நெருப்பிற் போகாதபடி பொருந்தியவாறு குளிகை செய்வாயாக; [நாவி கல் பிரமை ஆதிசையமேனும் இல்லையாம்]=பச்சை நாபி, பாஷாணம் இவை முதலியவற்றின் (தோஷங்கள்) மலையைப் போலிருந்தாலும் ஒழிந்துபோம்—எ - று.

(தா - ம்.) கெந்தக பற்பம், $\frac{1}{2}$ பங்கு, மேல்தோல் நீக்கப்பட்ட சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கப்பட்டை, கல்லாலின் பட்டை, மான்கொம்பு லிங்கம் ஆகிய இவற்றின் தூள், வகை 1-க்கு, $\frac{1}{2}$ பங்குமாகச் சேர்த்துப் பசுவின் நெய் சிறுகச் சிறுக வார்த்து 8-நாள் வரையில் விடாமறபடி யரைத்துச் சிறு பயறளவாகவுருட்டி, நிழலிலுலர்த்தி, ஷை மாத்திரையை நாபியினாலும், மற்றும் சகல பாஷாணங்களாலும், அபினியினாலும், விஷமித்தால், அவர்களுக்கு அடியிற்கண்டபடி அனுபானித்துக் கொடுக்கவேண்டும். அவையாவன.

வாத தேகிக்கு, பச்சை நாபியானது, விஷமித்தால் கடுகு இலைச் சாற்றில், மேற்படி மாத்திரையை உள்ளுக்கும், கொடுத்தும், மேலுக்கும் பூசி வெய்யிலில் அல்லது நெருப்பில் உலர்த்தி, வெந்நீரில் ஸ்நானம் செய்விக்கவும். பத்தியம், உப்பு ஆகும். புளி, கொள், பூசினி, அவரை, அகத்தி, புகையிலை, மோர், காடி, கள், பெண்போகம், ஆகிய இவை ஆகா.

மேற்படி நாபியானது, பித்ததேகிக்கு விஷமித்தால், சித்திரமூலச் சாற்றில் மேற்படி மாத்திரையை அனுபானித்து உள்ளுக்கும் கொடுத்து, மேலுக்கும் பூசி, மேற்சொன்னதுபோற் செய்யவும். பத்தியமும் அவ்வாறே.

மேற்படி நாபியானது, சேத்தும தேகிக்கு விஷமித்தால், கள்ளிச் சாற்றில் மேற்படி மாத்திரையை அனுபானித்துக் கொடுத்து, மேலுக்கும் பூசி, முன்போற் செய்யவும், பத்தியமும் அவ்வாறே.

பாஷாணமானது, வாத தேகிக்கு விஷமித்தால், முள் வழுதலைச்சாற்றில் அனுபானித்துக் கொடுத்து, மேலுக்கும் பூசி முன்போற் செய்யவும், பத்தியமும் அவ்வாறே.

மேற்படி பாஷாணமானது, பித்த தேகிக்கு விஷமித்தால், கற்றாழைச் சாற்றில் அனுபானித்துக் கொடுத்து, முன் போற் செய்யவும். பத்திய மும் அவ்வாறே.

மேற்படி பாஷாணமானது, சேத்தும தேகிக்கு விஷமித்தால், துளசிச் சாற்றில் அனுபானித்துக் கொடுத்து முன்போற் செய்யவும். பத்தியமும் அவ்வாறே.

அபினியானது, வாததேகிக்கு விஷமித்தால், வெற்றிலைச் சாற்றில் அனுபானித்துக்கொடுத்து, முன்போற் செய்யவும். பத்தியமும் அவ்வாறே.

அபினியானது, பித்ததேகிக்கு விஷமித்தால், பாகலிலைச் சாற்றிலனுபானித்துக் கொடுத்து, முன்போற் செய்யவும். பத்தியமும் அவ்வாறே.

அபினியானது, சேத்துமதேகிக்கு விஷமித்தால், வசம்புச் சமூலச் சாற்றிலனுபானித்துக் கொடுத்து, முன்போற் செய்ய வும். பத்தியமும் அவ்வாறே.

பாப்பு விஷத்திற்கு, ஆவாரைச் சாற்றிலனுபானித்துக் கொடுத்து, முன்போற் செய்யவும். பத்தியமும் அவ்வாறே.

மோகினியென்னும் பைத்திய ரோகத்திற்கு, வெண்டிச் சமூலச் சாற்றி லனுபானித்துக் கொடுத்து, முன்போற் செய்ய வும். பத்தியமும் அவ்வாறே.

தண்ணீரில் விழுந்துண்டான தோஷத்திற்கு, நரி விளா இலைச் சாற்றிலனுபானித்துக் கொடுத்து, முன்போற் செய்து பத்தியமும் அவ்வாறே இருக்கவேண்டுமென்பதாம். (157)

### கிளிஞ்சிற் பற்பம்; அதன் பிரமாணம் முதலியவைகள்.

மாவிலங்க முல்லையற்க மாழைசது ரேரன்
மாவிலங்க முல்லை மணியளவை—மாவிலங்கம்
வேலையரி கன்னி மிதுன முன்விலக்கு
வேலையரி கன்னிலமே மேல்.

(இ - ள்.) [மாவிலங்கம் முல்லை அற்கம் மாழை] = மா விலங்க வேர்ப்பட்டைச்சாறு, காட்டு மல்லிகைச் சமூலச்சாறு, வெள்ளெருக்கன் சமூலச்சாறு, புளி மாமர வேர்ப்பட்டைச்சாறு [சதுர் ஏரல்]=ஆக இந்நான்கையும் (முறையே விட்டரைத்துப் புடமிட) கிளிஞ்சில் (பற்பமாம்); [மா விலங்கு அம் முல்லை] = அந்த முல்லை நிலத்தைப் பெரும்பாலும் நீங்குவாயாக; [மணி அளவு ஐ மாவில் அங்கம்]=அளவு குன்றிமணியின் கால்பாகத்திற் பாதியாம்; [வேலை அரி கன்னிமிதுனம் முனி விலக்கு]= மாதங்களிலே ஆவணி, புரட்டாசி, ஆனி, மார்கழி (ஆகிய நான்கையும்) நீக்குவாயாக; [வேலையர் இகல் நிலமே மேல்]= வேலாயுதக் கடவுளின் வலியுள்ள (குறிஞ்சி) நிலமே மேன்மையுடையதாகும்—எ - று.

(தாம்.) (a) பின் சொல்லப்படும் முறைப்படி சுத்தி செய்த கிளிஞ்சிற்பொடி பலம் 1-க்கு மாவிலங்க வேர்ப்பட்டைச் சாறு 4 பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே யூற வைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் மேற்படி சாறு 4 பலம் சிறுகச்சிறுக விட்டு, அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை தட்டி அப்போதும் 4 பலம் மேற்படி சாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இரண்டாம் நாள் உதயத்திலும் முன் சாறு 4 பலம் விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லை தட்டி அப்போதும் 4 பலம் மேற்படி சாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 6 நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன் விகிதம் விட்டு விட்டு, அரைத் தரைத்துப் பில்லைதட்டி பனியில் ஆறவைத்தாறவைத்த பின்பு 9-ஆம் நாள் உதயமுதல் 7 நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1 நாள் கவசித்தும் வெய்யலில் காயவைத்து நன்ருய்க் காய்ந்த பின்பு 17-ஆம் நாள் காலையில் 40 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒரு நாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க, நான்கிலொரு கூறு பற்பமாகியிருக்கும்.

(b) மறுபடியும் 19-ஆம் நாள், நான்கிலொரு கூறு பற்பமாகிய ஷை கிளிஞ்சிற்பொடி பலம் 1-க்கு, காட்டு மல்லிகை அல்லது ஊசி மல்லிகைச் சமூலச்சாறு பலம் 3 விகிதம் விட்டு முன் கண்டபடியே 6 நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும், பனியில் வைத்த பின்பும் 5-நாள் வெளிக்காட்சி

யாகவும், முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலிலுலர்த்தின பின்பும், அடுத்த நாளுதயத்தில் 30 காட்டு வரட்டியிற் புடமிட்டு 1-நாள் ஆறவைத்தெடுக்க அரைக்கூறு பற்பமாயிருக்கும்.

(c) பின்பு 33-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான மேற்படி கிளிஞ்சிற் பொடி பலம் 1-க்கு, வெள்ளெருக்கன் சமூலச் சாறு பலம் 2 விகிதம் வார்த்து முன்கண்டிபடியே 4 நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியிலாறவைத்துமான பின்பு, 3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அடுத்தநாளுதயத்தில் 20 காட்டு வரட்டியில் புடமிட்டு 1 நாளாறவிட்டு மறுநாளெடுக்க முக்காற்கூறு பற்பமாயிருக்கும்.

(d) பின்பு 43-ஆம் நாள், முக்காற் கூறு பற்பமான மேற்படி கிளிஞ்சிற்பொடி பலம் 1-க்கு, புளிமா வேர்ப்பட்டைச் சாறு பலம் 1 விகிதம், வார்த்து முன் கண்டபடியே 2-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியில் ஆறவைத்து மான பின்பு, 1-நாள் அதை வெளிக்காட்சியாகவும், 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும், அடுத்தநாள் காலையில் 10 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவிட்டு, மறுநாளெடுத்துப்பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இதனைப் புசிப்பதற்கு முல்லை நிலம் நீங்கலான மற்ற நிலங்களாம். ஆயினும் குறிஞ்சி நிலமே முக்கியமாம்.

இதன் பிரமாணமாவது:— குன்றிமணியை எட்டு பங்காக்கி அவற்றுள் ஒன்று முதல் எட்டு வரையில் உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம், ஒரு புடைத்துணிவு, முழுத்துணிவு, அநந்தம், அபரிமிதமெனக் கொள்வதாம்.

மாதங்களாவன:— ஆவணி, புரட்டாசி, ஆனி, மார்கழி, என்பவைகள் நீங்கலான மற்ற மாதங்களாம் என்பதே. (160)

## கிளிஞ்சிற் பற்பத்தின் அனுபானமும் தீரும் நோயும்.

ஏர லடலை யினைமூல நீர்ப்பந்தி
யேர லடலை யினைசத்தி—யேரல்
வனமா தளையமுத மச்சிகைநெய் வெந்நீர்
வனமாதளையமுத மா.

(இ - ள்.) [ஏரல் அடலையினை]=கிளிஞ்சிற் பற்பத்தை, [மூலம்] = (வாதாதி மூன்று) மூலங்களுக்கும், [நீர்ப்பந்தி] = (மூவகை) நீர்க்கட்டுக்கும், [ஏர்]=(மூவகை) நீரேற்றத்திற்கும், [அல்]=(மூவகை) மயக்கத்திற்கும், [அடல்]=(மூவகை) சுரத்திற்கும் [ஐ]=(மூவகை) சன்னிக்கும், [இனை]=(மூவகை) உபாதிக்கும், [சத்தி]=(மூவகை) சத்திக்கும், (முறையே) [ஏர்]= நற்சீரகம் (காட்டுச் சீரகம், கருஞ்சீரகம்), [அல்] = சுக்கு, (இஞ்சி தும்பராஷ்டகம்), [வனம்]=பனங்கள், (தென்னங்கள், ஈச்சங்கள்), [மாது[ =பசுவின் வெண்ணெய், எருமை வெண்ணெய், ஆட்டு வெண்ணெய்) [அளை]=பசுவின் தயிர், (எருமைத் தயிர், ஆட்டுத் தயிர்), [அமுதம்]=பசுவின் பால், (எருமைப் பால், ஆட்டுப்பால்), [மச்சிகை] = பசுவின் மோர், (எருமை மோர், ஆட்டு மோர், [நெய்] = பசுவின் நெய் (எருமை நெய், ஆட்டு நெய்), [வெந்நீர்] = சுத்த வெந்நீர், (சுக்கு வெந்நீர், மிளகு வெந்நீர்), [வனம்] = துளசி, (ருத்திரசடை, கஞ்சாங்கோரை), [மாதளை]=மாதளை, (எலுமிச்சை, கெடாரம், [அமுதம்]=சீந்தில், (கோவை, வல்லாரை.) [மா]=புளிமா, (தேமா, நறுமா,) (ஆகிய இவ்வனுபானங்களிற் கொடுக்க வேண்டும்) — எ - று.

(தா - ம்.) வாத மூலத்திற்கு, நற்சீரத்திலும்; பித்த மூலத்திற்கு, காட்டுச் சீரகத்திலும்; சேத்தும மூலத்திற்கு, கருஞ்சீரகத்திலும்;

வாதநீர்க் கட்டுக்கு, சுக்கிலும்; பித்தநீர்க் கட்டுக்கு, இஞ்சியிலும்; சேத்தும நீர்க்கட்டுக்கு, தும்பராஷ்டகத்திலும்;

வாத நீரேற்றத்திற்கு, பனங்கள்ளிலும்; பித்த நீரேற்றத்திற்கு, தென்னங்கள்ளிலும்; சேத்தும நீரேற்றத்திற்கு, ஈச்சங் கள்ளிலும்;

வாதமயக்கத்திற்கு, பசுவின் வெண்ணெய்யிலும்; பித்த மயக்கத்திற்கு, எருமை வெண்ணெய்யிலும்; சேத்தும மயக்கத்திற்கு, ஆட்டு வெண்ணெய்யிலும்;

வாத சுரத்திற்கு, பசுவின் தயிரிலும்; பித்த சுரத்திற்கு, எருமைத் தயிரிலும்; சேத்தும சுரத்திற்கு, ஆட்டுத் தயிரிலும்;

வாத சன்னிக்கு, பசுவின் பாலிலும்; பித்த சன்னிக்கு, எருமைப் பாலிலும்; சேத்தும சன்னிக்கு, ஆட்டுப் பாலிலும்;

வாத நோய்க்கு, பசுவின் மோரிலும்; பித்த நோய்க்கு, எருமை மோரிலும்; சேத்தும நோய்க்கு, ஆட்டு மோரிலும்;

வாத சத்திக்கு, பசுவின் நெய்யிலும்; பித்த சத்திக்கு, எருமை நெய்யிலும்; சேத்தும சத்திக்கு, ஆட்டு நெய்யிலும்;

ஷெ பற்பத்தை அனுபானித்துக்கொடுக்க வேண்டும்.

அன்றியும் வெந்நீர், சுக்கு நீர், மிளகு நீர், துளசிச்சாறு, ருத்திரசடைச் சாறு, கஞ்சாங்கோரைச் சாறு, மாதளை ரசம், எலுமிச்சை ரசம், கெடாரங்காய் ரசம், சீந்திற்சாறு, கோவைச் சாறு, வல்லாரைச் சாறு, புளி மா ரசம், தே மா ரசம், நறு மா ரசம் என்னும் இவற்றினும் முறையே ரோகங்கட் கேற்றவாறு சமயோசிதமாய்த் தனியாகவும் அனுபானித்துக் கொடுக்கலாம்.

பின் சொல்லியவற்றை முன் சொல்லியவற்றுடனே சமயோசிதமாய் சேர்த்து அனுபானித்தும் கொடுக்கலாம். (161)

### இலிங்க பற்பம் அதன் பிரமாணம் முதலியவைகள்

சரக்கொன்றை யெட்டிவழை சாயார்மா வேலால்
சரக்கொன்றை யெட்டிலிங்கச் சாம்பர் — சரக்கொன்றை
யாடகியெண் சேயாமன் னம்புவியாந் தேண்மயிலே
யாடகியெண் சேயாமெய் யாம்,

(இ - ள்.) [சரக்கொன்றை[ = சரக்கொன்றைச் சமூலச் சாறு, [எட்டி வழை சாய் ஆர் மா வேல் ஆல்] = எட்டிச் சமூலச் சாறு, சுர புன்னைச் சமூலச்சாறு, வாட்கோரைச் சமூலச்சாறு, ஆத்தி சமூலச்சாறு, மாமரச் சமூலச்சாறு, 15 வேலின் சமூலச் சாறு, கல்லாலின் சமூலச்சாறு; [லிங்கச் சரக்கு ஒன்றை எட்டு சாம்பர்] = சாதிலிங்கம் என்னும் ஒரு சரக்கை (மேற் சொல்லிய எட்டினாலும் அரைத்துப் புடமிட) பற்பமாம்; [கொன் தை சரம்] = (இப்பற்பம்) வெற்றியுடனே பாய்கின்ற பாணத்திற் (கொப்பாகும்); (இதன் பிரமாணம்) [ஆடகி எண்] = துவரையின் எட்டி (லொருபாகமாம்); [சேய் ஆம் மன் அம்புவி ஆம்] = முறையெ முருகக் கடவுளுக்கும், வருண தேவனுக்கும் (உரிய) (குறிஞ்சி, நெய்தல் என்னும்) நிலங்கள் (இம்மருந்து புசித்

தற்கு) ஆகும், [தேள் மயிலை ஆடு அகி எண்]=கார்த்திகை பங்குனி, சித்திரை, ஆவணி, ஐப்பசி என்னும் ஐந்து மாதங்களும் ஆம்); [சேயாம்]=(மற்ற மாதங்கள்) ஆகாதனவாம், [மெய்யாம்]= இஃதுண்மையாகும் - எ - று,

(தா - ம்) ஒருவீசை அழிஞ்சிற்பட்டையை யிடித்து, நான்கு படி புளித்த காடியிற் போட்டு ஒரு பகல் வெய்யலில் வைத்தும், ஓரிரவு பனியில் வைத்தும் மறுநாட் காலையிற் பிசைந்து கலக்கி, 1-பலம் சாதலிங்கத்தை ஓர் துணியில் முடிந்து கிளிக்கட்டி அதில் தொங்கவிட்டு மேல் சட்டி மூடிச் சீலை மண் செய்து, மறுபடியும் ஒரு பகல் வெய்யிலிலும், ஒரு இரவு பனியிலும் வைத்து மறுநாள் அடுப்பேற்றித் தீபாக்கினியாக 8 சாமம் எரித்து ஆறவிட்டெடுத்து, அதன் பின், ஒரு வீசை புளி கரணை சமூலத்தை யிடித்து 4-படி புளித்த காடியிற் போட்டு முன்போலவே ஒரு பகல் வெய்யிலிலும் ஒரு இரவு பனியிலும் வைத்துக் காலையில் நன்ருய்ப்பிசைந்து, முன் போலவே ஷெ லிங்கத்தைக் கிளிக்கட்டித் தொங்கவிட்டு முன் போலவே வெய்யிலிலும் பனியிலும் வைத்து, மறுநாட் காலையிலடுப்பேற்றி 8 சாமம் எரிக்கவும், இவ்வாறே, ஒரு வீசை நன்ஞரியிலும், 4 படி காடி விட்டு, முன்போலவே செய்து எடுத்துக்கொள்ள, லிங்கம் சுத்தியாம்.

(a) முன்சொன்ன முறைப்படி சுத்தி செய்த லிங்கம் பலம் 1-க்கு, சரக்கொன்றை சமூலச்சாறு 4 பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷெ சமூலச்சாறு 4 பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை தட்டி, அப்போதும் 4 பலம் ஷெ சாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் முன் சாறு 4-பலத்தையே சிறுகச் சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைசெய்து அப்போதும் 4-பலம் ஷெசாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 2-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத்தரைத்துப் பில்லை தட்டிப் பனியில் ஆறவைத்தாறவைத்த பின்பு 5-ஆம் நாள் உதயமுதல் 3-நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்ருயுலர்ந்தபின்பு 9-ஆம் நாள்

உதயத்தில் 32 காட்டு வரட்டியிற்புடமிட்டு ஒரு நாளாற விட்டு மறுநாளுதயத்திலெடுக்க, எட்டிலொருகூறு பற்பமாகி யிருக்கும்.

(*b*) மறுபடி 11-ஆம் நாள், எட்டிலொருகூறு பற்ப மாகிய ஷை லிங்கம் பலம் 1-க்கு நாட்டு எட்டிக்கனி முதலிய சமூலச்சாறு 4 பலம் விகிதம் வார்த்து முன் கண்டபடியே 4 நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும், பனியில் வைத்தபின்பும் 3-நாள் வெளிக்காட்சியாகவும், முடிவில் 1 நாள் கவசித்தும் வெய்யிலிலுர்த்தின பின்பும், அடுத்த நாளுதயத் தில் 30 காட்டு வரட்டியிற் புடமிட்டு 1-நாள் ஆறவைத் தெடுக்க நான்கிலொருகூறு பற்பமாகியிருக்கும்.

(*c*) பின்பு 21-ஆம் நாள், நான்கிலொருகூறு பற்பமான ஷை லிங்கப்பொடி பலம் 1-க்கு, சுரபுன்னைப்பூ முதலிய சமூலச் சாறு பலம் 4 விகிதம் வார்த்து முன்கண்டபடியே 4-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியிலாறவைத்து மானபின்பு, 3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யலில் காயவைத்து, அடுத்த நாளுத யத்தில் 32 காட்டுவரட்டியில் புடமிட்டு 1 நாளாறவிட்டு மறு நாளெடுக்க எட்டில் மூன்றுகூறு பற்பமாயிருக்கும்.

(*d*) பின்பு 31-ஆம் நாள், எட்டில் மூன்று கூறு பற்ப மான ஷை லிங்கப்பொடி பலம் 1-க்கு, வாட்கோரைக்கிழங்கு முதலிய சமூலச்சாறு பலம் 4 விகிதம் வார்த்து, முன்கண்ட படியே 4 நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியில் ஆறவைத்துமானபின்பு, 3-நாள் அதை வெளிக்காட்சி யாகவும், 1-நாள் கவசித்தும் வெய்யலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 30 காட்டுவரட்டியில் புடமிட்டு ஒரு நாளாற விட்டு, மறுநாளெடுத்துப்பார்க்க அரைக்கூறுபற்பமாயிருக்கும்.

(*e*) பின்பு 41-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான மேற் படி லிங்கப்பொடி பலம் 1-க்கு, ஆத்திச்சமூலச்சாறு பலம் 4 விகிதம் வார்த்து மேற்கண்டபடி 4 நாள் பிரதி தினமும் ஊற வைத்தும், அரைத்தும் பனியிலாறவைத்த பின்பு 3 நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த் தியும் அடுத்தநாள் உதயத்தில் 32 காட்டுவரட்டியிற்புடமிட்டு 1 நாளாறவிட்டெடுக்க, எட்டிலைந்துகூறு பற்பமாயிருக்கும்.

(*f*) இதன் பின்பு 51-ஆம் நாள், எட்டிலைந்து கூறு பற்பமான மேற்படி லிங்கப்பொடி பலம் 1-க்கு, மாமர சமூலச் சாறு 4 பலம் விகிதம் வார்த்து 4 நாள் பிரதி தினமும் ஊற வைத்தும், அரைத்தும் பனியிலாறவைத்தான பின்பு, அதை 3-நாள் வெளிக்காட்சியாகவும், அடுத்த 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அதற்கடுத்த நாளுதயத்தில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒரு நாளாறவைத்து மறுநாளெடுத்துப் பார்க்க, முக்காற்கூறு பற்பமாயிருக்கும்.

(*g*) பின்பு 61-ஆம் நாள், முக்காற் கூறு பற்பமான மேற்படி லிங்கப்பொடி பலம் 1-க்கு, பனைவேல் சமூலச்சாறு பலம் 1 விகிதம் வார்த்து, 4-நாள் பிரதி தினமும் முன் போலவே ஊறவைத்தும், அரைத்து, பனியில் வைத்துமான பின்பு, 3-நாள் அதை வெளிக்காட்சியாகவும், 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்தும், அடுத்த மறுநாள் காலையில், 32 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவைத்து, மறுநாளெடுத்துப்பார்க்க எட்டிலேழுகூறு பற்பமாகியிருக்கும்.

(*h*) இதன் பின்பு, 71-ஆம் நாள், எட்டிலேழுகூறு பற்பமான மேற்படி லிங்கப்பொடி பலம் 1-க்கு கல்லாலின் சமூலச் சாறு, பலம் 1 விகிதம் வார்த்து, 4 நாள் பிரதி தினமும் முன் போலவே ஊறவைத்தும், அரைத்தும் பனியில் வைத்துமான பின்பு, வில்லையை 3-நாள் வெளிக்காட்சியாகவும், 1-நாள் கவசித்தும், வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு, மறுநாளெடுத்துப்பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இப்பற்பம் நோய்களின் மீது பாணங்களைப் போற் பாயும்.

இதைச் சாப்பிடுவதற்குக் குறிஞ்சியும், நெய்தலும் தக்க நிலங்களாம்.

இதன் பிரமாணமோ - துவரையின் எட்டிலொரு கூறு கும். எனவே ஒரு கூறு உத்தமமும், இருகூறு மத்திமமும், முக்கூறு அதமமும், நாற்கூறு அதமாதமமும், ஐங்கூறு ஒரு புடைத்துணிபும், அறுகூறு முழுத்துணிபும், எழுகூறு அனந்தமும், எண்கூறும் அபரிமிதமுமாம் என்பது குறிப்பு.

இதைப் புசிக்கத்தக்க மாதங்களாவன:- கார்த்திகை, பங்குனி, சித்திரை, ஆவணி, ஐப்பசி என்னும் இந்த மாதங்களே மற்றவை ஆகாதனவாம் என்பதே. (162)

**லிங்கபற்பத்திற்கு அனுபானமும் தீரும் நோய்களும்.**

மூக்கிரட்டை வீக்க முளரிரண மேகமுளை
மூக்கிரட்டை வீக்க முளரிவனி—மூக்கிரட்டை
யாம்ப லரியா லளைபாலை புல்குளநெய்
யாம்பலரி யாலளைநேய் யார்.

(இ - ள்.) [மூக்கிரட்டை]=வாத சுவாச காசம், (பித்த சுவாசகாசம், சேத்தும சுவாசகாசம்), [வீக்கம்]=வாதவீக்கம், (பித்த வீக்கம், சேத்தும வீக்கம்), [முளரி]=வாதசுரம், (பித்த சுரம், சேத்தும சுரம்), [ரணம்]=வாத ரணம், (பித்தரணம், சேத்தும ரணம்), [மேகம்]=வாத மேகம், (பித்த மேகம், சேத்தும மேகம்), [உளை]=வாத உளை, (பித்த உளை, சேத்தும உளை), [மூக்கு]=வாதமுக்கல், (பித்தமுக்கல், சேத்துமமுக்கல்), [இரட்டை] = வாதப் பிடிப்பு, (பித்தப் பிடிப்பு, சேத்துமப் பிடிப்பு), [வீக்கம்]=வாதஉப்பசம், (பித்த உப்பசம், சேத்தும உப்பசம்), [முன்] = வாதச்சொரி, (பித்தச்சொரி, சேத்தும சொரி), [அரி] = வாதக்குன்மம், (பித்த குன்மம், சேத்தும குன்மம்), [வன்னி] = வாதசன்னி, (பித்த சன்னி, சேத்தும சன்னி), (என்னும் இவைகட்கு) [மூக்கிரட்டை]=மூக்கிரட்டை இரட்டைப் பிரமட்டை, [ஆம்பல்]=அல்லி, கள், [அரி]=கடுக்காய், தான்றிக்காய், [ஆல்]=குருவியால், கல்லால். [அளை]= தயிர், மோர், [பால்]=முலைப்பால், பசுவின் பால், [ஐ]=வெண்ணெய், சர்க்கரை, [புல்]=கற்கண்டு, பனவெட்டு, [குளம்]= வெல்லம் கருப்பஞ்சாறு, [நெய்] = பசுவின் நெய், தேங்காய் நெய், [ஆம்]=இளநீர், பன்னீர், [பல்]=துளசி, உருத்திரசடை, [அரி]=நெல்லி, கீழாநெல்லி, [ஆல்]=பொன்னுங்காணி கரசலாங்கண்ணி, [அள்]=வறண்முள்ளி, நீர்முள்ளி, [ஐ]=தும்பை சாமந்தி, [நெய்] = கொட்டி, நெய்தல், [ஆர்]=வெந்நீர், தண்ணீர், இவைகளில் முறையே அனுபானித்துக் கொடுக்க நிவாரணமாம்—எ - று.

(தா - ம்.) வாத சுவாச காசத்துக்கு, மூக்கிரட்டைச் சாற்றிலும்; பித்தசுவாச காசத்துக்கு, இரட்டைப் பிரமட்டைச்

சாற்றிலும்; சேத்தும சுவாச காசத்துக்கு அல்லிச்சாற்றிலும்;

வாத விக்கத்துக்கு, கள்ளிலும்; பித்த வீக்கத்துக்கு, கடுக்காய்க் குடிநீரிலும்; சேத்தும வீக்கத்துக்கு, தான்றிக்காய்க் குடிநீரிலும்;

வாத சுரத்திற்கு, குருவியாலிலைச் சாற்றிலும்; பித்த சுரத்திற்கு, கல்லாலிலைச் சாற்றிலும்; சேத்தும சுரத்திற்குப் பசுவின் தயிரிலும்;

வாத ரணத்திற்கு, பசுவின் மோரிலும்; பித்த ரணத்திற்கு, முலைப்பாலிலும்; சேத்தும ரணத்திற்கு பசுவின் பாலிலும்;

வாத மேகத்திற்கு, வெண்ணெய்யிலும்; பித்த மோகத்திற்கு. சர்க்கரையிலும்; சேத்தும மேகத்திற்கு, கற்கண்டிலும்;

வாதக் கடுப்புக்கு, பனவெட்டிலும்; பித்தக் கடுப்புக்கு வெல்லத்திலும்; சேத்துமக் கடுப்புக்கு கருப்பஞ் சாற்றிலும்;

வாத முக்கலுக்கு, பசுவின் நெய்யிலும்; பித்த முக்கலுக்கு தேங்கா யெண்ணெய்யிலும்; சேத்தும முக்கலுக்கு, இளநீரிலும்;

வாதப் பிடிப்புக்கு, பன்னீரிலும்; பித்தப் பிடிப்புக்கு, துளசிச் சாற்றிலும்; சேத்துமப் பிடிப்புக்கு, ருத்திரசடைச் சாற்றிலும்;

வாத உப்பசத்துக்கு, நெல்லிச் சாற்றிலும்; பித்த உப்பசத்துக்கு, கீழா நெல்லிச் சாற்றிலும்; சேத்தும உப்பசத்துக்கு, பொன்னுங்காணிச் சாற்றிலும்;

வாதச் சொரிக்கு, கரிசாலைச் சாற்றிலும்; பித்த சொரிக்கு, வறண்முள்ளிச் சாற்றிலும்; சேத்துமச் சொரிக்கு, நீர்முள்ளிச் சாற்றிலும்;

வாத குன்மத்திற்கு, தும்பைச் சாற்றிலும்; பித்தச் குன்மத்திற்கு, சாமந்திச் சாற்றிலும்; சேத்தும குன்மத்திற்கு, கொட்டிச் சாற்றிலும்;

வாத சன்னிக்கு, நெய்தற் சாற்றிலும்; பித்தசன்னிக்கு, வெந்நீரிலும்; சேத்தும சன்னிக்கு, குளிர்ந்த நீரிலும்;

ஷை பற்பத்தை யனுபானித்துக் கொடுக்க நிவாரணமா மென்பதே. (163)

**லிங்கபற்பத்தின் அனுபானமும், தீரும் வேறுநோய்களும்**

கொங்கரும்பை சாசமெனுங் குன்மவனற் புண்ணகலக்
கொங்கரும்பை சாசமுறை கூட்டியமை – கொங்கரும்பை
யம்புயமா கங்கொடிபு லக்கார முக்கடுகு
யம்புயமா கங்கொடிவா யாள்.

(இ - ள்.) [கொங்கரும் பைசாசமெனும்] = மலையாளிகளும் பிசாசென்று கூறுகின்ற, [குன்ம அனல் புண் அகல]= வயிற்றுவலி (மந்தம், நளிர்), வெப்பம், ரணம் (ஆகிய இவைகள்) நீங்க, [கொாங்கு அரும்பு] = கோங்கமலர் மொக்கு, [ஐசு ஆசு அமுறை கூட்டி அமை]=மல்லிகைமொக்கு, அல்லிமொக்கு, பூசனிமொக்கு, புன்னை மொக்கு, கற்றாழை மொக்கு, (என்னும் இவை ஆறையும்) [அம்புயம் ஆகம் கொடி புல் அக்காம் முக்கடு] = தாமரை, குப்பைமேனி, சீந்திற்கொடி, அறுகம்புல், சர்க்கரை, இஞ்சி, (என்னும் இவை யாறுடன் சேர்த்துக் கொடுக்கவும்), [குயம் புயம் ஆகம்கொடி வாய் ஆள்]=முலை, தோள், மார்பு, தாடை, வாய், முழங்கால் மடிப்பு என்னும் இவ்விடங்களிலுண்டாகும் மேற்படி ரோகங்கள் நிவாரணமாம்—எ - று.

(தா - ம்.) கொங்கமலரரும்பு, மல்லிகையரும்பு, அல்லியரும்பு, பூசினியரும்பு, புன்னையரும்பு, கற்றாழையரும்பு, என்னும் இவ்வாறையும், நிழலிலுலர்த்தி பொடியாக்கி வகைக்கிரண்டு பங்காகவும், மேற்படி லிங்கபற்பம் ஒரு பங்காகவும் சேர்த்து, இவை இரண்டு வகையையும் ஒன்றாகக் கலந்து தேன் விட்டுக்கைவிடாமலரைத்து ஒன்வதுநாள் சென்றபின், கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து, ஒன்பது நாள் நிழலிலுலர்த்தி, எடுத்து வைத்துக்கொண்டு, கீழ்க்காணும் முறையே கொடுக்க, கீழ்க்காணும் வியாதிகள் தீரும்: அவையாவன:—

குன்மத்திற்கும், முலைக்கண்ணின் ரணத்திற்கும் தாமரை சமூலச் சாற்றிலும்;

வயிற்று வலிக்கும், தோளின் ரணத்திற்கும், குப்பை மேனிச் சமூலச் சாற்றிலும்;

குன்ம சம்பந்தத்தாற் காணும் நளிருக்குப், மார்பின் பள்ளத்தின் ரணத்திற்கும்; சீந்திற் சமூலச் சாற்றிலும்;

குன்ம சம்பந்தத்தாற் காணும் மந்தத்திற்கும், தாடைப் பள்ளத்திலுள்ள ரணத்திற்கும், அறுகுசமூலச் சாற்றிலும்;

குன்ம சம்பந்தத்தாற் காணும் வெப்பத்திற்கு, வாயின் ரணத்திற்கும், சர்க்கரையிலும்;

குன்ம சம்பந்தத்தாற் கண்ட ரணத்திற்கும், முழங்கால் மடிப்பின் ரணத்திற்கும், இஞ்சிச்சாற்றிலும்;

வேளை 1-க்கு ஷை 1 மாத்திரையை அனுபானித்துக் கொடுக்க முறையே மேற்கண்ட ரோகங்கள் நிவாரணமா மென்பதே. (164)

**சிறுகிளிஞ்சிற் பற்பம், இதன்பிரமாணம் முதலியவைகள்.**

ஏகா தசிக்குப்பி னஞ்சிறிய வேரலைமை
யேகா தசிக்கு மிரளிவன்னி—யேகா
மனையட்டா ராபரணி மாரிசிநான் கூர்கா
மனையட்டா ராபரணி மை.

(இ - ள்.) [ஏகா தசிக்குப்பின்]=பதினொரு தினங்கட்குப் பிறகு, [அம் சிறிய ஏரலை]=அழகுள்ள சிறு கிளிஞ்சிலை, [மை ஏகாதி அசிக்கும் இரளி வன்னியே] = கறுப்போடாமல் வாள் போன்று அறுக்கும் குருவியாலின் சமூலச்சாறும், வன்னியிலைச் சாறுமே, [காமனை அட்டார் ஆபரணி]=(அதன்பின் கிளிஞ்சிலானது) மன்மதனைத் தகித்தவருடையி ஆபரணமான எலும்பு போல் வெளுப்பாகும்); [மாரிசி நான்கு] = (இதன் பிரமாணமாவது) மிளகின் நாலி (லொருபாகமே); [ஊர்காமன் ஐ அண்டார்]=(இதைப் புசிக்கவேண்டிய நிலங்களாவன) இந்திரனுடையதும், முருகக் கடவுளுடையதும், இடையர்களுடையதுமான (மருதம், குறிஞ்சி, முல்லை என்பவைகளே; [ஆ பரணி மை (இதைப் புசிக்க வேண்டிய மாதங்களாவன) வைகாசி, சித்திரை, ஆனி (என்பவைகளே)—எ - று.

(தா - ம்.) (a) பின் சொல்லப்படும் முறைப்படி சுத்தி செய்த சிறு கிளிஞ்சில் பலம் 1-க்கு குருவியால் சமூலச்சாறு 4 பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை சமூலச்சாறு 4

பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத்தட்டி அப்போதும் 4 பலம் ஷெசாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் முன்சாறு 4 பலத்தையே சிறுகச் சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைசெய்து அப்போதும் 4 பலம் மேற்படி சாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 9-நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லை தட்டிப் பனியில் ஆறவைத் தாறவைத்த பின்பு 12-ஆம் நாள் உதயமுதல் 10-நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்ருயுலர்ந்த பின்பு 23-ஆம் நாள் உதயத்தில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க, அரைக்கூறு பற்பமாயிருக்கும்.

(b) மறுபடி 25-ஆம் நாள், அரைக்கூறு பற்பமாகியஷெகிளிஞ்சிற்பொடி பலம்1-க்கு, வன்னியிலைச்சாறு 4 பலம் விகிதம் வார்த்து முன் கண்டபடியே11-நாள் பிரதிதினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியில் வைத்த பின்பும் 10-நாள் வெளிக்காட்சியாகவும் முடிவில்1-நாள் கவசித்தும் வெய்யிலுலர்த்தின பின்பு, அடுத்த நாளுதயத்தில் 30 காட்டு வரட்டியிற் புடமிட்டு 1-நாள் ஆறவைத்தெடுக்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இப்பற்பத்தின் பிரமாணமாவது:— மிளகின் நான்கிலொருபாகம் உத்தமமாகவும், இருபாகம் மத்திமமாகவும், முப்பாகம் அதமமாகவும், மிளகின் முழுப்பாகம் அதமாதமமாகவும் கொண்டு புசிக்க வேண்டும்.

இதைப் புசிக்க வேண்டிய நிலங்களாவன:— மருதம், குறிஞ்சி, முல்லை என்பவைகள்.

இதைப் புசிக்க வேண்டிய மாதங்களாவன:— வைகாசி, சித்திரை, ஆனி என்னும் மாதங்களும் என்பதே. (165)

**சிறுகிளிஞ்சிற் பற்பத்தின் அனுபானமும், தீரும் நோய்களும்.**

பசலை வனமா பருத்தி சிறுகீரை
பாலை வனமா பனைபிரசை—பாலை

மதுமேக மாலரிகால் வாதையுளை யீளை
மதுமேக மாலரிகால் வாள்.

(இ - ள். [பாலை]=சிறு பாலை, (பெரும் பாலை, [வனம்] =சிறு துளசி, (பெருந் துளசி), [மா]=சிறுமாமரம், (பெரு மாமரம்), [பருத்தி]=சிறுபருத்தி, (பெரும் பருத்தி), [சிறு கீரை]=சிறு சிறு கீரை. (பெருஞ் சிறு கீரை), [பால்]=பசுவின் பால், (ஆட்டுப்பால்), [ஐ]=பசுவின் வெண்ணெய். (ஆட்டு வெண்ணெய்), [வனம்]=தண்ணீர், (வெந்நீர்), [மா]=நெல்லரிசிமா, (தினையரிசிமா), [பனை]=தென்னங்கள், (பனங்கள்) [பிரசை] = தேன், (கொசுத்தேன்), [பாலை] = பழச்சாராயம், (பட்டைச்சாராயம்), (என்னும் இவைகளில் முறையே அனுபானித்து), [மது மேகம்]=சாத்திய மது மேகம், (அசாத்திய மது மேகம்) [மால்]=சாத்திய வாதம், (அசாத்திய வாதம்), [அரி] = சாத்திய பித்தம், (அசாத்திய பித்தம்), [கால்]= சாத்தியப் பிடிப்பு, (அசாத்தியப் பிடிப்பு), [வாதை] = சாத்தியக் கடுப்பு, (அசாத்தியக் கடுப்பு), [உளை]=சாத்திய உப்பசம், (அசாத்திய உப்பசம்), [ஈளை]=சாத்திய இருமல் (அசாத்திய இருமல்), [மதுமேகம்]=சாத்திய மயக்க சன்னி, (அசாத்திய மயக்க சன்னி), [மால்] = சாத்தியப் பிரமை, (அசாத்தியப் பிரமை, [அரி]=சாத்திய சுரம், (அசாத்திய சுரம்), [கால்]= சாத்திய சத்தி, (அசாத்திய சத்தி), [வாள்]=சாத்தியக் கய ரோகம், (அசாத்தியக் கயரோகம்), (என்னும் இவைகட்கு முறையே கொடுக்க நிவாரணமாம்) எ - று

(தா - ம்.) சாத்திய மதுமேகத்துக்கு, சிறுபாலைச் சாற்றிலும்; அசாத்திய மதுமேகத்துக்கு, பெரும்பாலைச் சாற்றிலும்;

சாத்திய வாதத்திற்கு, சிறு துளசிச் சாற்றிலும்; அசாத்திய வாதத்திற்கு, பெருந்துளசிச் சாற்றிலும்;

சாத்திய பித்தத்திற்கு, சிறு மாமரச் சாற்றிலும்; அசாத்திய பித்தத்திற்கு பெரு மாமரச் சாற்றிலும்;

சாத்தியப் பிடிப்புக்கு, சிறு பருத்திச் சாற்றிலும்; அசாத்தியப் பிடிப்புக்கு, பெரும் பருத்திச் சாற்றிலும்;

சாத்தியக் கடுப்புக்கு, சிறு சிறு கீரைச் சாற்றிலும்; அசாத்தியக் கடுப்புக்கு, பெருஞ் சிறு கீரைச் சாற்றிலும்;

சாத்திய உப்பசத்திற்கு, பசுவின் பாலிலும்; அசாத்திய உப்பசத்திற்கு, ஆட்டின் பாலிலும்;

சாத்திய இருமலுக்கு, பசுவின் வெண்ணெய்யிலும்; அசாத்திய இருமலுக்கு, ஆட்டின் வெண்ணெய்யிலும்;

சாத்திய மயக்க சன்னிக்கு, குளிர்ந்த ஜலத்திலும்; அசாத்திய மயக்கச் சன்னிக்கு வெந்நீரிலும்;

சாத்தியப் பிரமைக்கு, நெல்லரிசிமாவிலும்; அசாத்தியப் பிரமைக்கு, திணையரிசிமாவிலும்;

சாத்திய சுரத்திற்கு, தென்னங்கள்ளிலும்; அசாத்திய சுரத்திற்கு, பனங்கள்ளிலும்;

சாத்திய சத்திக்கு, தேனிலும், அசாத்திய சத்திக்கு, கொசுத் தேனிலும்;

சாத்தியக் கயரோகத்திற்கு, பழச் சாராயத்திலும்; அசாத்தியக் கயரோகத்திற்கு, பட்டைச் சாராயத்திலும்;

ஷை பற்பத்தை முறையே யனுபானித்துக் கொடுக்க மேற்கண்ட ரோகங்கள் நிவாரணமாமென்பதே.

**சிறுகிளிஞ்சில் பெருங்கிளிஞ்சில் இவைகளின் சுத்தி.**

தமரத்தை யார்கழுநீர் தக்களிய மாலுத்
தமரத்தை யார்திவசந் தங்கத்—தமரத்தை
யாகமந்த மாமை யறுமெக் கிளிஞ்சிற்கே
யாகமந்த மாமையிலை தாம்.

(இ - ள்.) [தமரத்தை ஆர் கழுநீர் தக்களி அம்] = தமரத்தைச்சாறு, மோர், செங்கழுநீர்ச்சாறு, மணத்தக்காளிச் சாறு, காடித்தண்ணீர் (என்னும் இவற்றில், [மால் உத்தமர் அத்தையார் திவசம் தங்க] = திருமாலென்னும் புருஷோத்தமருடைய மாமியாரான (கடலின் தொகையாகிய ஏழு) நாள் ஊற (வைத்தால்), [தமரத்து ஐ ஆகம் மந்தமாம் மை அறும் எக் கிளிஞ்சிற்கே] = கடலில் பிறந்த அழகிய உடலை அழுக்காக்குகின்ற கருநிறம் நீங்கும் எவ்வகைக் கிளிஞ்சில்களுக்குமே,

[ஆகம அந்தம் மாமை இஃது ஆம்] = ஆயுள்வேதத்தின் முடிவான அழகு இஃதாகும்—எ -று.

(தா - ம்) (*a*) ஒரு வீசை கிளிஞ்சிலுக்கு தமரத்தை சமூலச்சாறு ஒருபடி, காடித் தண்ணீர் ஒருபடி, மோர் ஒருபடி, இவற்றை ஒன்ருய்க் கலந்து ஓர் பாத்திரத்தில் விட்டு அதில் ஷை கிளிஞ்சிலேப் போட்டு, அப்பாத்திரத்தின் வாய்க்கு வேடு கட்டி ஏழுநாள் வெய்யிலில் வைத்து எடுக்கவும்.

(*b*) அதன்பின், செங்கழுநீர்ச் சமூலச் சாறு ஒருபடி, மோர் ஒருபடி, காடி ஒருபடி, இவற்றையும் ஒன்ருய்க் கலந்து முன்போலவே ஓர் பாத்திரத்தில் விட்டு அதில் மேற்படி கிளிஞ்சிலே மறுபடியும் போட்டு, அப்பாத்திரத்தின் வாய்க்கு வேடுகட்டி ஏழு நாள் வெய்யிலில் வைத்து எடுக்கவும்,

(*c*) அப்பால், மணத்தக்காளி சமூலச்சாறு ஒருபடி, மோர் ஒருபடி, காடி ஒருபடி, இம்மூன்றையும் ஒன்ருய்ச் சேர்த்து முன்போலவே ஓர் பாத்திரத்தில் விட்டு அதில் மேற்படி கிளிஞ்சிலேப் போட்டு அப்பாத்திரத்தின் வாய்க்கு வேடு கட்டி ஏழு நாள் வெய்யிலில் வைத்து எடுக்கவும். இதுவே ஆயுள்வேதத்திற் கூறிய சிறந்த கிளிஞ்சில்களுக்குரிய சுத்தியாம் என்பதே,

## முன்சொன்னவைகளேக்கூறி இனிச் சொல்பவைகளேக் கூறுதல்

பொன்ஞதி கல்சரக்கைப் போந்தபுக ழீதுசிலேப்
பொன்ஞதி கல்சரக்கைப் பூபரெனப்—பொன்ஞதி
யண்டங் குளம்புதந்தி யங்கி சிருங்கிபிச்சி
யண்டங் குளம்புவெள்ளே யாம்.

(இ - ள்.) [பொன் ஆதி கல் சரக்கை]=இரும்பு முதலிய (உலோகங்களும்), தாளகம் முதலிய (பாஷாணங்களும்), ஜாதிலிங்கம் முதலிய (சரக்குகளும்). [போந்த புகழ் ஈது]=அடைந்த கீர்த்தி இவைகளாம்; பொன்ஞது இகல் சிலே சரக்கை பூபர் என பொன் ஆதி]=திருமகளின் வல்லபத்தால் வில்லிற் பூட்டும் அம்பேந்திய கைகளே யுடைய அரசரைப் போன்று (ஆயுள் வேத) பாஸ்கரஞக விளங்குவாய்; [அண்டம் குளம்பு தந்தி

அங்கி சிருங்கி பிச்சி]=முட்டை, காற் குளம்பு, தந்தம், எலும்பு, கொம்பு, இறகு, (என்னும் இவைகள்) [அண்டு அம் குளம் பூ வெள்ளை ஆம்]=குளத்தின் ஜலத்தைப்போலவும், வெள்ளைத் தாமரையைப் போலவும் பற்பமாகிற (விதத்தைச் சொல்லு வாம்—எ - று.

(தா - ம்.) இதுவரையில் இரும்பு முதலிய உலோகங் களும், தாளகம் முதலிய பாஷாணங்களும், ஜாதிலிங்கம் முதலிய சரக்குகளும், பற்பமாகின்ற விதங்களைச் சொல்லி முடித்தோ மாகையால், இனி பறவைகளின் முட்டைகள், இறகுகள், என்னும் இவற்றினும், மிருகங்களின் எலும்புகள், தந்தங்கள், கொம்புகள், குளம்புகள் என்னும் இவற்றினும் பற்பம் செய்யும் முறைகளைக் கூறுவோமென்பதே. (168)

## முட்டையோடுகளின் பற்ப வகைகளும் அவற்றால் தீரும் நோய்களும்.

ஆண்டலை பாறுவனி யாரிட்டை காடைமஞ்ஞை
யாண்டலை பாறுசினை யாடலையை—யாண்டலை
யத்திசுர மூர்ச்சை யரிகாலார் மேகமுளை
யத்திசுர மூர்ச்சை யையம்.

(இ - ள்.) [ஆண்டலை பாறு வனி ஆரிட்டை காடை மஞ்ஞை]=கோழி, பருந்து, கிளி, காகம், காடை, மயில், (என் னும் இவற்றின் முட்டைத்தோல்களைப் பற்பமாக்கி', [ஆண்டு அலை பாறு]=அவ்விடத்தில் நோய்கள் ஒழியும் (வண்ணம்). [சினை அடலையை]=ஷை முட்டைப் பற்பத்தை, [ஆண் தலை அத்தி சுரம் மூர்ச்சை அரி கால் ஆர் மேகம் உளை]=ஆண்மை யுடனே முதன்மை படைத்த அஸ்தி சுரம், மூர்ச்சை, காசம், சத்தி, பிடிப்பு, வெட்டை, உப்பிசம்; [அத்திசுரம் மூர்ச்சை ஐ அம்] = பெருவியாதி, வெப்பங், மாரடைப்பு, கபரோகம், சன்னி, (என்னும் இவைகட்கு முறையே கொடுக்க நிவாரண மாம்—எ - று.

(தா - ம்.) முட்டையோடுகளின் சுத்தி-முட்டையோடு வீசை 1-க்கு, ¼ படி சுறி யுப்பில் 1½, படி ஆற்று சலம் வார்த்து, நன்றாய்க் கலக்கி, 1 மணி நேரம் வைத்துத் தெளிவிறுத்து, ஷை முட்டையோட்டைப் போட்டு, இராப் பகலாகிய ஒரு

நாள் முழுவதும் வைத்து, மறுநாட் காலையில் அடுப்பேற்றிக் கொதிக்கவைத்து, மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கி, ஆறவிட்டு, குளிற ஆறினபின், முட்டையோட்டி லுள்ள ஜவ்வுகளை நீக்கி, வேறு தண்ணீர் வார்த்து நன்ருய்க் கழுவி சுத்தியாக்கி வெய்யிலிலுலர்த்தியெடுத்துக் கொள்வதே முட்டையோடுகளின் சுத்தியாம்.

இவ்வாறே, கோழி, பருந்து, கிளி, காகம், காடை, மயில் முதலிய பறவைகளின் முட்டையோடுகளைச் சுத்தி செய்ய வேண்டும்.

## முட்டையோடுகளின் பற்பமுறை.

(*a*) முன் சொன்ன முறைப்படி சுத்தி செய்த முட்டை யோடு பலம் 1-க்கு, நீர்முள்ளிச் சமூலச்சாறு, 5-பலம் விகிதம் விட்டு, அரைப்பதற்கு முதல்நாளிரவே ஊறவைத்து, மறுநா ளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை சமூலச்சாறு, 5-பலத் தைச் சிறுகச் சிறுக வார்த்து, அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில வில்லைத்தட்டி, அப்போதும் 5-பலம் ஷை புதிதான சாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். 2-ஆம் நாளு தயத்திலும் புதிதான முன்சாறு 5-பலத்தையே சிறுகச் சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைசெய்து அப்போதும் 5-பலம் ஷை சாறு புதிதாகவே வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும். 3 நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே முன்னளவே புதிது புதிதாய் வார்த்து வார்த்து அரைத்தரைத்துப் பில்லை தட்டிப் பனியில் ஆறவைத்தாறவைத்த பின்பு, 6-ஆம் நாள் உதயமுதல் 4-நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும், முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்ருயுலர்ந்த பின்பு, 11-ஆம் நாள் உதயத்தில், 30 காட்டு வரட்டியிற் புடமிட்டு ஒரு நாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க, நான்கிலொரு கூறு பற்பமாகியிருக்கும்.

(*b*) மறுபடி 13-ஆம் நாள், நான்கிலொரு கூறு பற்ப மான ஷை முட்டையோட்டுப்பொடி பலம் 1-க்கு, புதிதான முன் நீர்முள்ளிச் சாறு பலம் 4 விகிதம் வார்த்து முன் கண்ட படியே 4-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும், பனியில் வைத்த பின்பு, 3-நாள் வெளிக்காட்சியாகவும், முடி

வில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, பின்பு, அடுத்த நாளுதயத்தில் 25 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒரு நாளாறவைத்து மறுநாளெடுத்துப்பார்க்க, அரைக்கூறு பற்பமாயிருக்கும்.

(c) பின்பு 23-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான ஷை முட்டையோட்டுப்பொடி பலம் 1-க்கு, புதிதான முன் நீர்முள்ளிச் சமூலச்சாறு 3-பலம் விகிதம்வார்த்து முன்கண்டபடியே 3-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும், பனியில் வைத்துமான பின்பு, 2-நாள் அதை வெளிக்காட்சியாகவும், 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அடுத்த மறுநாள் காலையில் 20 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாற வைத்து, மறுநாளெடுத்துப்பார்க்க முக்காற்கூறு பற்பமாகியிருக்கும்.

(d) பின்பு 31-ம் ஆநாள், முக்காற்கூறு பற்பமான ஷை முட்டையோட்டுப் பொடி பலம் 1-க்கு, புதிதான நீர்முள்ளிச் சமூலச்சாறே பலம் 2 விகிதம் வார்த்து முன் கண்டபடியே 2-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும், பனியில் ஆறவைத்துமான பின்பு, 1-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும், வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 15 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவிட்டு மறுநாளெடுத்துப்பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இப்பற்பங்களின் பிரமாணமாவது:— ஒரு கடலைப் பிரமாணம் உத்தமம், முக்காற் கடலைப் பிரமாணம் மத்திமம்; அரைக் கடலைப் பிரமாணம் அதமம்; காற்கடலைப் பிரமாணம் அதமாதமமாம்.

அஸ்தி சுரத்திற்கும் மூர்ச்சைக்கும், கோழிமுட்டையோட்டின் பற்பத்தையும்;

காச ரோகத்திற்கும், சத்திரோகத்திற்கும், பருந்து முட்டையோட்டின் பற்பத்தையும்;

பிடிப்பு ரோகத்திற்கும் வெட்டை ரோகத்திற்கும் கிளி முட்டை யோட்டின் பற்பத்தையும்;

உப்பிச ரோகத்திற்கும் பெரு வியாதிக்கும், காக்காய் முட்டையோட்டின் பற்பத்தையும்;

வெப்ப ரோகத்திற்கும், மாரடைப்புக்கும், காடை முட்டையோட்டின் பற்பத்தையும்;

கபரோகத்திற்கும், சன்னிக்கும், மயில் முட்டையோட்டின் பற்பத்தையும்;

முன் பிரமாணப்படி தேனிலனுபானித்துக் கொடுக்க முறையே மேற்கண்ட ரோகங்கள் நிவாரணமாமென்பதே.

(169)

## காற் குளம்புகளின் பற்ப வகைகளும் அவற்றால் தீரும் நோய்களும்.

காணாட்டு மையா கரடிபுலி மாவுழைமை
காணாட்டு மையா கலைப்பொடிசெய்—காணாட்டு
கண்டா விடதமனல் காலறல்கால் குன்மமுமை
கண்டா விடதமனல் கை.

(இ - ள்.) [கான் நாட்டு மை ஆ கரடி புலி மா உழை மை]=காட்டிலும், நாட்டிலுமுள்ள எருமை, பசு, கரடி, புலி, குதிரை, மான், ஆடு, (என்னும் இவற்றின்) [கால் நாட்டும் ஐ ஆகலை பொடி செய்]=கால்களில் பதித்திருக்கும் அழகமைந்துள்ளவைகளான குளம்புகளைப் பற்ப மாக்குவாயாக; [கான் ஆட்டு]=தேனிற் குழைப்பாயாக, [கண்டா விடதம்]=இதன் பெயர் கண்டா விடதமாகும்; [அனல் கால் அறல் கால் குன்மம் முமை]= பித்தாதிக்க ரோகம், வாதாதிக்க ரோகம், சேத்துமாதிக்க ரோகம், சத்தி, வயிற்று நோய், மூவகைச் சன்னிகள், [கண் தா விடதமன் அல் கை]=நேத்திர வாயு, இசிவு, ருத்திர வாயு, உன்மத்தம், கண்மறைவு, காசரோகம் (என்னும் இவ் வியாதிகட்கு முறையே கொடுக்க நிவாரணமாம்—எ - று.

(தா - ம்.) காட்டெருமை, நாட்டெருமை, காட்டுப் பசு, நாட்டுப் பசு, காட்டுக் கரடி, நாட்டுக் கரடி, என்னும் பன்றி, காட்டுப் புலி, நாட்டுப் புலி என்னும் பூனை, காட்டுக் குதிரை யென்னும் கோவேறு கழுதை, நாட்டுக் குதிரை. காட்டு மான் என்னும் கலை மான், நாட்டு மான், காட்டாடென்னும் வெள்ளாடு, நாட்டாடென்னும் செம்மறி யாடு, என்னும் இவற்றின் காற் குளம்புகளை பற்பம் செய்கிற விதம் பின்வரும் விதமாம்.

காற்குளம்புச் சுத்தி:— இராவின காற் குளம்புப் பொடி பலம் 1-க்கு, 5 பலம் இளநீர் விட்டு, சூரியோதய முதல் அத்தமிக்கும் வரையில் வெய்யிலில் வைக்கவேண்டும். இவ்விதம் 5-நாள் பிரதி தினமும் 5, 5 பலம் இளநீர் புதிது புதிதாய்விட்டு, காலைமுதல் மாலை வரையில் வெய்யிலில் வைத்தும் பின்பு, 2-நாள் மேற்படி இளநீர் விடாமல் வெய்யிலில் வைத்தும், நீரெல்லாம் சுவறி யுலர்ந்த பின்பு கழுவியெடுக்க, காற்குளம்புப் பொடி சுத்தியாம்.

## காற் குளம்பின் பற்ப முறை.

(*a*) முன் சொன்ன முறைப்படி சுத்தி செய்த காற்குளம்புப் பொடி பலம் 1-க்கு, வன்னியிலைச் சாறு 6-பலம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷிசமூலச்சாறு 6 பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத் தட்டி, அப்போதும் 6 பலம் ஷி சாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் முன் சாறு 6 பலத்தையே சிறுகச் சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைசெய்து அப்போதும் 6 பலம் ஷிசாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 4-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத்தரைத்துப் பில்லைதட்டிப் பனியில் ஆறவைத்தாறவைத்த பின்பு 7-ஆம் நாள் உதய முதல் 6-நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்றாயுலர்ந்த பின்பு 13-ஆம் நாள் உதயத்தில் 40 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாற விட்டு மறுநாளுதயத்திலெடுக்க, நான்கிலொருகூறு பற்பமாகியிருக்கும்.

(*b*) மறுபடி 15-ஆம் நாள், நான்கிலொருகூறு பற்பமாகிய ஷி குளம்புப்பொடி பலம் 1-க்கு, ஷி வன்னியிலைச் சாறு 5-பலம் விகிதம் வார்த்து முன்கண்டபடியே 5-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும், பனியில் வைத்த பின்பும் 4-நாள் வெளிக்காட்சியாகவும், முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலுலர்த்தின பின்பும், அடுத்த நாளுதயத்தில் 35 காட்டு வரட்டியிற் புடமிட்டு 1-நாள் ஆறவைத்தெடுக்க அரைக்கூறு பற்பமாயிருக்கும்,

(c) பின்பு 27-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான ஷை குளம்புப்பொடி பலம் 1-க்கு, மேற்படி சாறு பலம் 4 விகிதம் வார்த்து முன் கண்டபடியே 4 நாள் பிரதி தினமும் ஊற வைத்தும், அரைத்தும் பனியிலாறவைத்துமான பின்பு, 3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அடுத்தநாளுதயத்தில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு 1 நாளாறவிட்டு மறுநாளெடுக்க முக்காற் கூறு பற்பமாயிருக்கும்.

(d) பின்பு 37-ஆம் நாள், முக்காற்கூறு பற்பமான ஷை குளம்புப்பொடி பலம் 1-க்கு, மேற்படி சாறு பலம் 3-விகிதம் வார்த்து, முன் கண்டபடியே 3-நாள் பிரதி தினமும் ஊற வைத்தும், அரைத்தும் பனியில் ஆறவைத்துமான பின்பு, 2-நாள் அதை வெளிக்காட்சியாகவும், 1-நாள் கவசித்தும் வெய்யலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 25 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவிட்டு, மறுநாளெடுத்துப் பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இப்பற்பங்களின் பிரமாணமாவது:— கடலையின் முழுக் கூறு உத்தமம்; முக்காற்கூறு மத்திமம்; அரைக்கூறு அதமம்; காற்கூறு அதமாதமம் ஆம்.

பித்தாதிக்க ரோகங்களுக்கு, காட்டெருமைக் குளம்பின் பற்பத்தையும்;

வாதாதிக்க ரோகங்களுக்கு, நாட்டெருமைக் குளம்பின் பற்பத்தையும்;

சேத்துமாதிக்க ரோகங்களுக்கு, காட்டுப் பசுவின் குளம்புப் பற்பத்தையும்;

சத்தி ரோகங்களுக்கு, நாட்டுப் பசுவின் குளம்புப் பற்பத்தையும்;

வயிற்று நோவுகளுக்கு, காட்டுக் கரடிக் குளம்பின் பற்பத்தையும்:

வாத சன்னிக்கு, பன்றியின் குளம்பின் பற்பத்தையும்;

பித்த சன்னிக்கு, காட்டுப் புலிக் குளம்பு பற்பத்தையும்;

சேத்தும சன்னிக்கு, பூனைக் குளம்பின் பற்பத்தையும்;

நேத்திர வாயுவுக்கு, கோவேறு கழுதையின் குளம்பின் பற்பத்தையும்;

இசிவிற்கு, நாட்டுக் குதிரையின் குளம்பின் பற்பத்தையும்;

ருத்திர வாயுவுக்கு, கலை மான் குளம்பின் பற்பத்தையும்;

உன்மத்தத்திற்கு, நாட்டு மான் குளம்பின் பற்பத்தையும்;

கண் மறைவிற்கு, வெள்ளாட்டுக் குளம்பின் பற்பத்தையும்;

காச ரோகங்களுக்கு, செம்மறியாட்டின் குளம்புப் பற்பத்தையும்;

மேற்படி பற்பங்களை முன் பிரமாணப்படி தேனில் அனுபானித்துக் கொடுக்க முறையே மேற்கண்ட ரோகங்கள் தீரும்.

அன்றியும், காட்டு நரிக் குளம்பு பற்பத்திற்கு, சூலையும்; நாட்டு நரிக் குளம்பு பற்பத்திற்கு, வல்லையும்; காட்டு நாயென்னும் செந்நாய்க் குளம்பு பற்பத்திற்கு, மூலமும்; நாய்க்குளம்பு பற்பத்திற்கு, மூலமும்; காட்டு முசல் குளம்பு பற்பத்திற்கு, பாரிச வாயுவும்; நாட்டு முசல் குளம்பு பற்பத்திற்கு, பக்கவாதமும்; முன் கண்ட அளவே முன் அனுபானத்திற் கொடுக்க நிவாரணமாகுமென்றறிக. (170)

### தந்தங்களின் பற்ப வகைகளும், அவற்றால் தீரும் நோய்களும்.

பல்லமைமா தங்கம் பசுமையொட்டை மாவேனம்
பல்லமைமா நீற்றைப் பதிமதுவிற் – பல்லமைமா
காங்கை யனிலங் கயமால் களிகிரந்தி
காங்கை யனிலமறு கல்.

(இ - ள்.) [பல்லம்]=ஆண் கரடி, (பெண் கரடி) [மை] =ஆண் செம்மறி (பெண் செம்மறி), [மாதங்கம்]=ஆண்யானை, (பெண் யானை), [பசு[=எருது, (பசு), [மை]=எருமைக்கடா, (எருமை), [ஒட்டை]=ஆண் ஒட்டை, (பெண் ஒட்டை), [மா] =ஆண் குதிரை (பெண் குதிரை), [ஏனம்]=ஆண் பன்றி (பெண் பன்றி), (என்னும் இவற்றின்) [பல் அமை மா நீற்றை] பற்களால் அமைந்த சிறந்த பற்பத்தை, [பதி மதுவில்]=கள்ளிற்குழைத்து [பல்]=மகோதரம், [அம்]=சன்னி, [ஐ] = சேத்துமம், [மா]=பெருவியாதி, [காங்கை]=சுரா திக்கம், [அனிலம்]=வாதாதிக்கம், [கயம்]=காசம், [மால்]=பித்தம் [களி] =பிரமை, [கிரந்தி]=மேகம், [காம்]=பீனசம், [கை]=பிடிப்பு, [அல்]=அதிசாரம், [நிலம்]=நீரிழிவு, [மறு]=குட்டம், [கல்]= இருமல் (என்னும் இவைகட்கு முறையே கொடுக்கவும்)-எ - று.

(தா - ம்) ஆண்கரடி, பெண்கரடி, ஆண் செம்மறி, பெண் செம்மறி, ஆண்யானை, பெண்யானை, பசு, இடபம், எருமைக்கடா, எருமை, ஆண் ஒட்டை, பெண் ஒட்டை, ஆண் குதிரை, பெண் குதிரை, ஆண் பன்றி, பெண் பன்றி, என்னும் இவற்றின் பற்களைப் பின்வரும் விதமாய்ப் பற்பம் செய்து, பின் காணும் விதமாய் உபயோசிக்க வேண்டும்.

பற்களின் சுத்தி:— இடித்துத் தூள் செய்த பற்பொடி பலம் 1-க்கு முலைப்பால் பலம் 5 விட்டு, சூரியோதய முதல் அத்தமிக்கும் வரையில் வெய்யலில் வைக்கவேண்டும. இவ்விதம் 5-நாள் பிரதி தினமும் 5 - 5 பலம் முலைப்பால் புதிது புதிதாய் விட்டுக் காலை முதல் மாலை வரையில் வெய்யிலில் வைத்துப் பின்பு 2-நாள் மேற்படி பாலெல்லாம் சுவறி யுலறுகிறவரையில் வெய்யிலில் வைத்து, நன்றுயுலர்ந்தபின்புக் கழுவியெடுக்க பற்கள் சுத்தியாம்.

## தந்தங்களின் பற்ப முறை

(a) முன் சொன்ன முறைப்படி சுத்திசெய்த பற்பொடி பலம் 1-க்கு, தூதுவேளைச் சமூலச்சாறு பலம் 4 விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படி சமூலச்சாறு 4 பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைதட்டி அப்போதும் 4 பலம் மேற்படி சாறு

வார்த்துப் பனியில் ஆறவைக்க வேண்டும். 2-ஆம் நாளுதயத் திலும் முன்சாறு 4 பலத்தையே சிறுகச் சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லை செய்து அப்போதும் 4 பலம் மேற்படி சாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 2-நாளும் பிரதிதினமும் முன் சாற்றையே முன்னளவே வார்த்து வார்த்து அரைத்தரைத்துப் பில்லை தட்டிப் பனியில் ஆறவைத் தாறவைத்த பின்பு 5-ஆம் நாள் உதய முதல் 3 நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்று யுலர்ந்த பின்பு 9-ஆம் நாளுதயத்தில் 40 காட்டு வரட்டியிற் புடமிட்டு ஒருநாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க, நான்கி லொருகூறு பற்பமாகியிருக்கும்.

(b) மறுபடி 11-ஆம் நாள் நான்கிலொரு கூறு பற்ப மாகிய மேற்படி பற்பொடி பலம் 1-க்கு மேற்படி சமூலச்சாறு 4 பலம் விகிதம் வார்த்து முன்கண்டபடியே 4 நாள் பிரதி தினமும் ஊறவைத்தும். அரைத்தும், பனியில் வைத்த பின்பும் 3-நாள் வெளிக்காட்சியாகவும், முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலிலுலர்த்தின பின்பு, அடுத்த நாளுதயத்தில் 35 காட்டு வரட்டியிற் புடமிட்டு ஒருநாள் ஆறவைத்தெடுக்க அரைக்கூறு பற்பமாயிருக்கும்.

(c) பின்பு 21-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான மேற் படி பற்பொடி பலம் 1-க்கு மேற்படி சமூல்ச்சாறு பலம் 4 விகிதம் வார்த்து முன் கண்டபடியே 4-நாள் பிரதி தினமும் ஊற வைத்தும், அரைத்தும் பனியிலாற வைத்த பின்பு 3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும் அடுத்த நாள் உதயத்தில் 30 காட்டு வரட்டியிற் புடமிட்டு 1-நாளாறவிட்டெடுக்க, முக்காற் கூறு பற்பமா யிருக்கும்.

(b) இதன் பின்பு 31-ஆம் நாள், முக்காற்கூறு பற்ப மான மேற்படி பொடி பலம் 1-க்கு, மேற்படி சமூலச்சாறு 4 பலம் விகிதம் வார்த்து முன் கண்டபடியே 4 நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியிலாறவைத்தான பின்பு, அதை 3-நாள் வெளிக்காட்சியாகவும், 1-நாள் கவசித் தும் வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் இருபத்

தைந்து காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவிட்டு, மறு நாளெடுத்துப் பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இப்பற்பங்களின் பிரமாணமாவது:— முழுக் கடலைப் பிரமாணம் உத்தமம்; முக்காற் கடலைப் பிரமாணம் மத்திமம்; அரைக் கடலைப் பிரமாணம் அதமம்; காற்கடலைப் பிரமாணம் அதமாதமமாம்.

மகோதரத்திற்கு, ஆண் கரடிப் பல்லின் பற்பத்தையும்; சன்னிக்கு, பெண் கரடிப் பல்லின் பற்பத்தையும்; சேத்தும ரோகங்களுக்கு, ஆண் செம்மறியாட்டுப் பல்லின் பற்பத்தையும்; பெரு வியாதிக்கு, பெண் செம்மறியாட்டுப் பல்லின் பற்பத்தையும்; சுர விசேடத்திற்கு, ஆண் யானைப் பல்லின் பற்பத்தையும்; வாதாதிக்க ரோகங்கட்கு, பெண் யானைப் பல் பல்லின் பற்பத்தையும்; காசரோகங்களுக்கு, இடபத்தின் பல்லின் பற்பத்தையும்; பித்த ரோகங்களுக்கு, பசுவின் பல்லின் பற்பத்தையும்; பிரமை ரோகங்களுக்கு, எருமைக் கடாவின் பல்லின் பற்பத்தையும்; மேக ரோகங்களுக்கு, எருமைப் பல்லின் பற்பத்தையும்; பீனச ரோகங்களுக்கு, ஆண் ஒட்டைப் பல்லின் பற்பத்தையும்; பிடிப்பு ரோகங்களுக்கு, பெண் ஒட்டைப் பல்லின் பற்பத்தையும்; அதிசார ரோகங்களுக்கு, ஆண் குதிரைப் பல்லின் பற்பத்தையும்; நீரழிவு ரோகங்களுக்கு, பெண் குதிரைப் பல்லின் பற்பத்தையும்; குட்ட ரோகங்களுக்கு, ஆண் பன்றிப் பல்லின் பற்பத்தையும்; இருமல் ரோகங்களுக்கு, பெண் பன்றிப் பல்லின் பற்பத்தையும்;

முன் பிரமாணப்படி, தேனிலனுபானித்துக் கொடுக்க, முறையே முன் கண்ட வியாதிகள் நிவாரணமாகுமென்பதே.

(171)

## மிருகங்களின் அஸ்தி பற்ப வகைகளும், அவற்ருல் தீரும் வியாதிகளும்.

கர்த்தவமா மையா கரடிபுலி மான்மையங்கங்
கர்த்தவமா மையகலக் காணடலைக்—கர்த்த
மதுமேக மாலரந்தை வாந்திவிக்க லைதீ
மதுமேக மாலுளைநோய் மல்.

(இ - ன்.) [கர்த்தவம்]=ஆண் கழுதை, (பெண் கழுதை) [மா]=ஆண் குதிரை, (பெண் குதிரை), [மை]=எருமைக்கடா, (எருமை), [ஆ]=எருது, (பசு), [கரடி]=ஆண் கரடி, (பெண் கரடி), [புலி]=ஆண்புலி, (பெண் புலி), [மான்]=ஆண்மான், (பெண்மான்), [மை]=ஆண் ஆடு, (பெண் ஆடு), (என்னும் இவற்றின்), [அங்கம்]=எலும்பை, [கர்த்த அம் மா மை அகல காண் அடலை] = கரத்துக் கொண்டிருக்கும் அப்பேர்ப்பட்ட சிறந்த களங்கம் நீங்கும்படி தோன்றுகின்ற பற்பத்தை, [கர்த்து]= மேகப்பிணி, [அம்]=சன்னி, [மது]=உன்மத்தம், [மேகம்]=உஷ்ணம், [மால்]=பித்த ரோகம், [அரந்தை]= உபத்திர ரோகம், [வாந்தி]=வாந்தி ரோகம், [விக்கல்]= விக்கல் ரோகம், [ஐ]=சேத்தும ரோகம், [தீ]=பித்தாதிக்கம், [மது]=வாதாதிக்கம், [மேகம்]=தலைவலி, [மாய்]=மகாரோகம், [உளை[=உளைப்பு ரோகம், [நோய்]=நோய்ப்பிணி, [மல்]= மாரடைப்பு, (ஆகிய இவற்றிற்கு முறையே தனித்தனி பழச் சாற்றில் அனுபானித்துக் கொடுக்க நிவாரணமாம்) – எ - று.

மிருகங்களின் அஸ்தி சுத்தி:— பொடித்த அஸ்தித்தூள் பலம் 1-க்கு, புளித்த பசுவின் மோர் 3 பலம் விகிதம் வார்த்து சூரியோதயமுதல் அஸ்தமிக்கும் வரையில் வைக்கவும். இவ் விதம் 5-நாள் பிரதி தினமும் மேற்படி மோர் 3, 3 பலம் வார்த்து சூரியபுடம் வைக்கவும். அதன்பின்பு, மேற்படி மோர் விடாமல் 2-நாள் வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் நன்று யுலர்ந்தபின்பு சலம் விட்டுக் கழுவி யுலர்த்திக் கொள்வதே அஸ்தியின் சுத்தியாம்.

## மிருகங்களின் அஸ்தி பற்ப முறை.

(a) முன் சொன்ன முறைப்படி சுத்தி செய்த அஸ்திப் பொடி பலம் 1-க்கு, கற்றாழைச் சாறு 2 பலம் விட்டு, அரைப் பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படி சாறு 2 பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத் தட்டிப் அப்போதும் 2 பலம் மேற்படி சாறு வார்த்துப் பனி யில் ஆறவைக்கவேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் முன் சாறு 2 பலத்தையே சிறுகச் சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லை செய்து அப்போதும் 2 பலம் மேற்படி சாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே

மீண்டும் 2-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே முன்னளவே விட்டு விட்டு, அரைத் தரைத்துப் பில்லை தட்டி பனியில் ஆறவைத் தாறவைத்த பின்பு 5-ஆம் நாள் உதயமுதல் 3-நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1 நாள் கவசித்தும் வெய்யிலில் நன்ருய்க் காய்ந்த பின்பு 9-ஆம் நாள் காலையில் 32 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாற விட்டு மறுநாளுதயத்திலெடுக்க, நான்கிலொரு கூறு பற்பமாகியிருக்கும்.

(*b*) மறுபடியும் 11-ஆம் நாள், நான்கிலொரு கூறு பற்பமாகிய ஷை அஸ்திப் பொடி பலம் 1-க்கு, மேற்படி சாறு பலம் 2 விகிதம் விட்டு முன் கண்டபடியே 4-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும், பனியில் வைத்த பின்பும் 3-நாள் வெளிக்காட்கியாகவும், முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலிலுலர்த்தின பின்பு, அடுத்த நாளுதயத்தில் 28 காட்டு வரட்டியிற் புடமிட்டு 1-நாள் ஆறவைத்தெடுக்க அரைக் கூறு பற்பமாயிருக்கும்,

(*c*) பின்பு 21-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான மேற்படி அஸ்திப்பொடி பலம் 1-க்கு, மேற்படி சாறு பலம் 2 விகிதம் வார்த்து முன்கண்டபடியே 4-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியிலாறவைத்துமான பின்பு, 3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அடுத்த நாளுதயத்தில் 24 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவிட்டு மறுநாளெடுக்க முக்காற் கூறு பற்பமாயிருக்கும்.

(*d*) பின்பு 31-ஆம் நாள், முக்காற் கூறு பற்பமான மேற்படி அஸ்திப்பொடி பலம் 1-க்கு, மேற்படி சாறு பலம் 2 விகிதம் வார்த்து, முன் கண்டபடியே 4-நாள் பிரதி தினமும் ஊறவைத்து மரைத்தும், பனியில் ஆறவைத்துமான பின்பு 3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 20 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளறவிட்டு மறுநாளெடுத்துப் பார்க்க, முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

அஸ்திப் பற்பப் பிரமாணமாவது:— கடலையின் முழுக் கூறு உத்தமம்; முக்காற் கூறு மத்திமம்; அரைக்கூறு அதமம்; காற்கூறு அதமாதமமாம்.

மேகப்பிணிகளுக்கு, ஆண்கழுதை அஸ்தியின் பற்பத்தையும்; சன்னிகளுக்கு, பெண்கழுதை அஸ்தியின் பற்பத்தையும்; உன்மத்த ரோகங்களுக்கு, ஆண் குதிரை யெலும்பின் பற்பத்தையும்; உஷ்ண ரோகங்களுக்கு, பெண்குதிரையெலும்பின் பற்பத்தையும்; பித்த ரோகங்களுக்கு, எருமைக் கடாவின் எலும்பின் பற்பத்தையும்; உபத்திரவ ரோகங்களுக்கு, எருமையின் எலும்பின் பற்பத்தையும்; வாந்தி ரோகங்களுக்கு, எருதின் எலும்பின் பற்பத்தையும்; விக்கல் ரோகங்களுக்கு, பசுவின் எலும்பின் பற்பத்தையும்; சேத்தும ரோகங்களுக்கு, ஆண் கரடியின் எலும்பின் பற்பத்தையும்; பித்த ரோகங்களுக்கு, பெண் கரடியின் எலும்பின் பற்பத்தையும்; வாத ரோகங்களுக்கு, ஆண்புலியின் எலும்பின் பற்பத்தையும்; தலைவலிகளுக்கு, பெண்புலியின் எலும்பின் பற்பத்தையும்; மகா ரோகங்களுக்கு, ஆண்மானெழும்பின் பற்பத்தையும்; உளைப்பு ரோகங்களுக்கு, பெண்மானெழும்பின் பற்பத்தையும்; நோவுப் பிணிகளுக்கு, ஆண் ஆட்டெழும்பின் பற்பத்தையும்; மாரடைப்பு ரோகங்களுக்கு, பெண்ணுட்டெலும்பின் பற்பத்தையும்;

மேற்கண்ட பிரமாணப்படி, பழச்சாராயத்தில் அனுபானித்துக் கொடுக்க, முறையே மேற்கண்ட ரோகங்கள் நிவாரணமாகும் என்பதே. (172)

### அஸ்தி பற்பத்திற்குப் புறநடை.

நிதம்பத் துடைகோச நேர்வாமக் கட்டி
நிதம்பத் துடைகோச நேராய்—நிதம்பத்துக்
கன்னலற லாமுமனங் கப்பொடிபூ சம்பீர்பேய்க்
கன்னலற லாகுமுவ கை.

(இ-ள்.) [நிதம்பத்துடை கோசம் நேர்வு ஆம் அக்கட்டி]= (பெண்களுக்கு) நிதம்பத்துக்கடுத்துத்துடையிலும், (ஆண்களுக்கு கோசத்துக்கு நேரிலும் உண்டாகும் அவ்வகைக் கட்டிகளுக்கு, [நிதம்பத்து உடைகோசம் நேராய்]=கல்லினுல் உடைப்பட்ட முட்டையைப்போன்று, [நிதம்பத்துக் கன்னல் அறல் ஆம்]= பிரதிதினமும் பத்து நாழிகைக்கு மேல் கடுப்புண்டாகும், [ஊமன் அங்கம் பொடி]=கோட்டான் எலும்பின் பற்பத்தை, [பூசம் பீர் பேய்க்கன்னல்] = பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, பேய்க்கரும்பு, [அறல் ஆகும் உவகை] = (என்னும் இவற்றின்)

சாற்றில் (அனுபானித்துக் கொடுத்தால்) (அந்நோய் நீங்கிக்) களிப்புண்டாகும் — எ - று.

(தா - ம்.) பெண்களுக்கு நிதம்பத்தானத்திற்கு நேரான அடித்துடையிலும் வாத சம்பந்தத்தால் விருத்தகமாகவும், பித்த சம்பந்தத்தால் நீளமாகவும், சேத்தும சம்பந்தத்தால் சதுரமாகவும், ஆண்களுக்குக் கோசத்திற் சடுத்த அடித் துடையில் வாத சம்பந்தத்தால் விருத்தமாகவும், பித்த சம்பந்தத்தால் நீளமாகவும், சேத்தும சம்பந்தத்தால் சதுரமாகவும் கட்டி காணுவதும் அவ்வாறு காண்பதற்கு முன்னே உற்பாதமான சுரம், தலைவலி, முதலியவை காண்பதும், அக்கட்டிகள் கல்லிலகப்பட்டுடைந்த முட்டையைப் போன்றிருப்பதும், பிரதி தினமும் பத்து நாழிகைக்குமேல் கடுப்பும், எரிவும், உண்டாதலும் ஆகிய இவ்வகைக் குணங்களிருந்தால், அதற்கு, முறையே ஆண் கோட்டான் பெண் கோட்டான் என்னும் இரண்டின் எலும்பையும் தனித்தனி பின்வரும் முறைப்படி பற்பஞ்செய்து பின் கண்டபடி கொடுக்க வேண்டும்.

## கோட்டான் அஸ்தி பற்பமுறை

(தா - ம்.) (a) முன் சொன்ன எலும்புகளின் சுத்தி முறைப்படி சுத்திசெய்த கோட்டான் எலும்புப் பொடி பலம் 1-க்கு தண்ணீர்விட்டான் கிழங்கு சாறு 3 பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான ஷை சாறு 3 பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத் தட்டி அப்போதும் 3 பலம் ஷை சாறு வார்த்துப் பனியில் ஆற வைக்கவேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் முன் சாறு 3 பலத்தையே சிறுகச்சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து இரவில் பில்லைசெய்து அப்போதும் 3 பலம் ஷைசாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 2—நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைதட்டிப் பனியில் ஆறவைத் தாறவைத்த பின்பு 5-ஆம் நாள் உதயமுதல் 3-நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்றாயுலர்ந்த பின்பு 9-ஆம் நாள் உதயத்தில் 32 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒரு நாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க, நான்கிலொருகூறு பற்பமாயிருக்கும்.

(*b*) மறுபடி 11-ஆம் நாள், நான்கிலொரு கூறு பற்பமாகிய ஷை கோட்டான் அஸ்திப்பொடி பலம் 1-க்கு, ஷை சாறு 3 பலம் விகிதம் வார்த்து முன் கண்டபடியே 4 நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும், பனியில் வைத்த பின்பும் 3-நாள் வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலுலர்த்தின பின்பு, அடுத்த நாளுதயத்தில் 28 காட்டு வரட்டியிற் புடமுட்டு 1-நாள் ஆறவைத்தெடுக்க அரைக்கூறு பற்பமாயிருக்கும்.

(*c*) பின்பு 21-ஆம் நாள், நான்கிலொரு கூறு பற்பமான ஷை அஸ்திப்பொடி பலம் 1-க்கு ஷை சாறு பலம் 2 விகிதம் வார்த்து முன் கண்டபடியே 3-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும், பனியிலாறவைத்துமான பின்பு 2-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காய வைத்து, அடுத்த மறுநாள் காலையில் 24 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒருநாளாறவைத்து, மறுநாளெடுத்துப் பார்க்க முக்காற்கூறு பற்பமாகியிருக்கும்.

(*d*) பின்பு 29-ஆம் நாள், முக்காற்கூறு பற்பமான ஷை அஸ்திப்பொடி பலம் 1-க்கு, மேற்படி சாறு பலம் 3 விகிதம் வார்த்து முன் கண்டபடியே 3-நாள் பிரதி தினமும் ஊற வைத்தும், அரைத்தும், பனியில் ஆறவைத்துமானபின்பு, 2 நாள் அதை வெளிக்காட்சியாகவும், 1-நாள் கவசித்தும், வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 20 காட்டு வரட்டியில் புடமிட்டு, 1-நாளாறவிட்டு, மறுநாளெடுத்துப் பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்

ஆண் கோட்டான், பெண் கோட்டான் ஆகிய இருசாதி பக்ஷிகளின் அத்தியையும் மேற்கண்ட பாகப்படியே தனித்தனி செய்துகொள்ளவேண்டும்.

இப்பற்பங்களின் பிரமாணமாவது:— கடலையின் முழுக்கூறு உத்தமம், முக்காற்கூறு மத்திமம், அரைக்கூறு அதமம், காற்கூறு அதமாதமம் ஆம்.

ஷை பற்பத்தை யுபயோகிக்கும் விதமாவது:— முன் சொன்னவகைக் கட்டியானது ஆண் பாலார்க்காகில், பெண் கோட்டான் எலும்பிற் செய்த பற்பத்தையும்.

முன் சொன்ன வகைக் கட்டியானது பெண் பாலார்க் காகில் ஆண் கோட்டான் எலும்பிற் செய்த பற்பத்தையும்,

ஆண் பாலார்க்கு, அது வாதத்தைப் பற்றியதாகில், பேய்ப்புடற்சாறு, பழச் சாராயம் என்னும் இரண்டையும் கலந்தும்; மேற்படி யார்க்கு அது பித்தத்தைப் பற்றியதாகில் பேய்ப்பீர்க்குச் சாறு, பட்டைச் சாராயம் என்னும் இரண்டையும் கலந்தும்; மேற்படி யாருக்கு அது சேத்துமத்தைப் பற்றிய தாகில் பேய்க்கரும்புச்சாறு, அரிசிச்சாராயம் என்னும் இரண்டையும் கலந்தும்; பெண் கோட்டான் எலும்பின் பற்பத்தை அனுபானித்தும்;

பெண் பாலார்க்கு, அது வாதத்தைப் பற்றியதாகில், பேய்ப்புடற் சாறு, தென்னங்கள் என்னும் இரண்டையுங் கலந்தும்; மேற்படி யாருக்கு அது பித்தத்தைப்பற்றியதாகில், பேய்ப்பீர்க்குச்சாறு, பனங்கள் என்னும் இரண்டையும் கலந்தும்; மேற்படி யாருக்கு சேத்துமத்தைப் பற்றியதாகில், பேய்க் கரும்புச் சாறு, ஈச்சங்கள் என்னும் இரண்டையுங் கலந்தும்; ஆண் கோட்டான் அத்தியின் பற்பத்தையும் அனுபானித்துக் கொடுக்க மேற்கண்ட ரோகம் நிவாரணமாமென்பதே.

**கொம்பின் பற்பமும், தீரும் வியாதி முதலியவைகளும்.**

கலைக்கோ டுமையாமை காண்டா கடமை
கலைக்கோ டுமையடலை காண்வி – கலைக்கோடு
முக்க லிருமல்பன்னல் மோதலழ லாதறுமமல்
முக்க லிருமல்சுதை முன்.

(இ - ள்.) [கலை] = ஆண்கலைமான், (பெண் கலைமான்) [மை]=எருமைக்கடா, (எருமை), [ஆ]=எருது, (பசு), [மை]= ஆட்டுக்கடா, (ஆடு), [காண்டா] = ஆண் காண்டாமிருகம், (பெண் காண்டாமிருகம்), [கடமை]=ஆண்கடமை, (பெண் கடமை), (என்னும் இவற்றின்), [கோடு]=கொம்புகளை, [கலைக் கோடு மை அடலை கான்]=மூன்றும் பிறையைப் போல் (நிற முடைய) பற்பமாக்குவாய், (அவ்வாறாக்கினால்), [விகலைக்கு]= ஒரு நிமிஷத்திற்குள், [ஓடும்]= நீங்கிவிடும், (எவை யென்றால்), [முக்கல் இருமல் பன்னல் மோதல் அழலாதல் தும்மல்]= மூவகை முக்கல்: மூவகை இருமல், மூவகைத் தெறித்தல்,

மூவகை இடிப்பு, மூவகைச் சுரம், மூவகைத் தும்மல், [முக்கல் இருமல் சுதை முன்]=மூவகைக்கல்லடைப்பு, மூவகைப் பிடிப்பு, மூவகைச் சன்னி, மூவகை உன்மத்தம், (என்னும் இவைகள்) [முன் ஓடும்]=முன்னமே ஓடிவிடும்-எ - று.

(தா - ம்.) ஆண் கலைமான், பெண் கலைமான்; எருமைக் கடா, எருமை; எருது, பசு, ஆட்டுக்கடா, ஆடு, ஆண் காண்டா, மிருகம், பெண் காண்டா மிருகம், ஆண் கடமை, பெண் கடமை, ஆண் புள்ளிமான், பெண் புள்ளிமான், ஆண் காட்டுப் பசு, (பெண் காட்டுப்பசு, ஆண் காட்டாடு; பெண் காட்டாடு) ஆண் காட்டெருமை, பெண் காட்டெருமை, ஆண் வரையாடு, பெண் வரையாடு, ஆண் வரைப்பசு, பெண் வரைப்பசு, ஆண் வரைஎருமை, பெண்வரை எருமை, ஆண்வரைக் கடமை, பெண் வரைக் கடமை, ஆண்வரைக் காண்டா மிருகம், பெண் வரைக் காண்டா மிருகம், என்னும் ஒவ்வொன்றின் கொம்புகளைத் தனித்தனியே பின்காணும் முறைப்படி பற்பம் செய்து பின் காணும் விதமாய் உபயோகிக்கவேண்டும். ()

கொம்புகளின் சுத்தி:- சீவின கொம்புத்தூள் பலம் 1-க்கு அகத்தியிலைச்சாறு 3 பலம் விகிதம் வார்த்து, சூரியோதய முதல் அத்தமிக்கும் வரையில் வெய்யிலில் வைக்கவும். இவ் விதம் மீண்டும் 4-நாள் பிரதி தினமும் ஷெயிலைச்சாறு 3, 3 பலம் விகிதம் வார்த்து வார்த்து சூரிய புடம் வைத்து, பின்பு, 6-ஆம் நாள் முதல் மேற்படி சாறு விடாமல் வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் நன்றாயுலர்ந்த பின்பு, சலம் விட்டுக் கழுவி யுலர்த்திக்கொள்வதே கொம்புகளின் சுத்தியாம்,

## கொம்புகளின் பற்பமுறை.

(*a*) முன் சொன்ன முறைப்படி சுத்தி செய்த கொம்பின் பொடி பலம் 1-க்கு, பச்சை தும்பராஷ்டச் சாறு, 4 பலம் விட்டு, அரைப்பதற்கு முதல்நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படி சாறு, 4 பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத்தட்டி, அப்போதும் 4 பலம் ஷெ புதிதான சாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் புதிதான முன்சாறு 4 பலத்தையே சிறுகச் சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லைசெய்து

அப்போதும் 4 பலம் ஷை சாறு புதிதாகவே வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும், 4-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன்னளவே புதிது புதிதாய் வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைதட்டிப் பனியில் ஆறவைத் தாறவைத்த பின்பு, 7-ஆம் நாள் உதய முதல் 5-நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும், முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்றுயுலர்ந்த பின்பு, 13-ஆம் நாள் உதயத்தில், 40 காட்டு வரட்டியிற் புடமிட்டு ஒரு நாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க, நான்கிலொரு கூறு பற்பமாகியிருக்கும்.

(*b*) மறுபடி 15-ஆம் நாள், நான்கிலொரு கூறு பற்பமான ஷை கொம்புப்பொடி பலம் 1-க்கு, ஷை சாறு 4 பலம் விகிதம் வார்த்து முன் கண்டபடியே 5-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும், பனியில் வைத்த பின்பு, 4 நாள் வெளிக்காட்சியாகவும், முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, பின்பு, அடுத்த நாளுதயத்தில் 35 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவைத்து மறுநாளெடுத்துப் பார்க்க, மூன்றி லொரு கூறு பற்பமாயிருக்கும்.

(*c*) பின்பு 27-ஆம் நாள், மூன்றிலொருகூறு பற்பமான மேற்படி கொம்புப் பொடி பலம் 1-க்கு, மேற்படி சாறு பலம் 3 விகிதம் வார்த்து முன்கண்டபடியே 4 நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியிலாறவைத்து மான பின்பு, 3-நாள் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அடுத்த நாளுதயத்தில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவிட்டு மறுநாளெடுக்க அரைக்கூறு பற்பமாயிருக்கும்.

(*d*) பின்பு 37-ஆம் நாள், அரைக்கூறு பற்பமான மேற்படி கொம்புப் பொடி பலம் 1-க்கு, மேற்படி சாறு பலம் 3 விகிதம் வார்த்து, முன்கண்டபடியே 3 நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியில் ஆறவைத்து மான பின்பு, 2 நாள் அதை வெளிக்காட்சியாகவும், 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும் அடுத்தநாள் காலையில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவிட்டு, மறுநாளெடுத்துப்பார்க்க மூன்றிலிரண்டு கூறு பற்பமாயிருக்கும்.

(e) பின்பு 45-ஆம் நாள், மூன்றிலிரண்டுகூறு பற்பமான மேடி கொம்புப் பொடி பலம் 1-க்கு, மேற்படி சாறு பலம் 2 விகிதம் வார்த்து மேற்கண்டபடி 2-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியிலாறவைத்த பின்பு 1-நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தியும் அடுத்தநாள் உதயத்தில் 25 காட்டு வரட்டியிற் புடமிட்டு 1-நாளாறவிட்டெடுக்க, ஆறிலைந்து கூறு பற்பமாயிருக்கும்.

(f) இதன் பின்பு 51-ஆம் நாள், ஆறிலைந்து கூறு பற்பமான மேற்படி கொம்புப் பொடி பலம் 1-க்கு, மேற்படி சாறு 4 பலம் விகிதம் வார்த்து, 2-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியிலாறவைத்துமான பின்பு, அதை 1-நாள் வெளிக்காட்சியாகவும், அடுத்த 1-நாள் கவசித்தும் வெய்யிலில் காயவைத்து, அதற்கடுத்த நாளுதயத்தில், 20 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒருநாளாறவைத்து மறுநாளெடுத்துப் பார்க்க முழுக்கூறும் பற்பமாயிருக்கும்.

கொம்பு, பற்பங்களின் பிரமாணமாவது:- முழுக்கடலைக் கூறு உத்தமம்; முக்காற் கடலைக்கூறு மத்திமம்; அரைக்கடலைக் கூறு அதமம்; காற்கடலைக்கூறு அதமாதமம்.

வாத முக்கலுக்கு, ஆண் கலைமான் கொம்பு பற்பத்தையும்; பித்த முக்கலுக்கு, பெண் கலைமான்கொம்பு பற்பத்தையும்; சேத்தும முக்கலுக்கு, எருமைக் கிடாவின் கொம்பு பற்பத்தையும்;

வாத இருமலுக்கு, எருமைக் கொம்பின் பற்பத்தையும்; பித்த இருமலுக்கு, எருதின் கொம்பு பற்பத்தையும்; சேத்தும இருமலுக்கு, பசுவின் கொம்பு பற்பத்தையும்;

வாதத் தெறித்தலுக்கு, ஆட்டுக் கடாவின் கொம்பின் பற்பத்தையும்; பித்த தெறித்தலுக்கு, ஆட்டுக்கொம்பின் பற்பத்தையும்; சேத்தும தெறித்தலுக்கு, ஆண் காண்டாமிருகத்தின் கொம்பு பற்பத்தையும்;

வாத இடிப்புக்கு, பெண் காண்டா மிருகத்தின் கொம்பு பற்பத்தையும்; பித்த இடிப்புக்கு, ஆண் கடமைக் கொம்பின்

பற்பத்தையும்; சேத்தும இடிப்புக்கு, பெண் கடமைக் கொம்பின் பற்பத்தையும்;

வாத சுரத்திற்கு, ஆண் புள்ளிமான் கொம்பு பற்பத்தையும்; பித்த சுரத்திற்கு, பெண் புள்ளிமான் கொம்பின் பற்பத்தையும்; சேத்தும சுரத்திற்கு, ஆண் காட்டுப்பசுக் கொம்பின் பற்பத்தையும்;

வாதத் தும்மலுக்கு, பெண் காட்டுப் பசுவின் கொம்பின் பற்பத்தையும்; பித்தத் தும்மலுக்கு, ஆண் காட்டாட்டுக் கொம்பு பற்பத்தையும்; சேத்தும தும்மலுக்கு, பெண் காட்டாட்டுக் கொமபு பற்பத்தையும்;

வாதக் கல்லடைப்பிற்கு, ஆண் காட்டெருமைக் கொம்பு பற்பத்தையும்; பித்தக்கல்லடைப்பிற்கு, பெண் காட்டெருமைக் கொம்பு பற்பத்தையும்; சேத்துமக் கல்லடைப்பிற்கு, ஆண் வரையாட்டுக் கொம்பு பற்பத்தையும்;

வாதப் பிடிப்புக்கு, பெண் வரையாட்டுக் கொம்பு பற்பத்தையும்; பித்தப் பிடிப்புக்கு, ஆண் வரைப் பசுவின் கொம்பு பற்பத்தையும்; சேத்துமப் பிடிப்பிற்கு, பெண் வரைப் பசுவின் கொம்பு பற்பத்தையும்;

வாத சன்னிக்கு, ஆண் வரை யெருமைக் கொம்பு பற்பத்தையும்; பித்த சன்னிக்கு, பெண் வரை யெருமைக் கொம்பின் பற்பத்தையும்; சேத்தும சன்னிக்கு, ஆண் வரைக் கடமைக் கொம்பின் பற்பத்தையும்;

வாத உன்மத்தத்திற்கு, பெண் வரைக் கடமைக் கொம்பின் பற்பத்தையும்; பித்த உன்மத்தத்திற்கு, ஆண் வரைக் காண்டாமிருகக்கொம்பு பற்பத்தையும்; சேத்தும உன்மத்தத்திற்கு, பெண் வரைக் காண்டா மிருகக் கொம்பு பற்பத்தையும்;

முன் பிரமாணப்படி முலைப் பாலில் அநுபானித்துக் கொள்ள, முறையே முன்கண்டபடி ரோகங்கள் தீரும் என்பதே

**கொம்பின் பற்பப் புறநடை மதன காமமேசுரம்.**

செவ்வி யுறுமிச் சிருங்கா டலைகாமச்
செவ்வி யுறுமித் திருப்பவே—செவ்வி

வரவத்தி மாதவசி வாதுமைநெய் புன்மா
வரவத்தி மாதவசி மார்.

(இ - ள்.) [செவ்வி உறும் இச் சிருங்க அடலே]=பக்குவமடைந்துள்ள இக் கொம்பு பற்பங்களை), [மாதவசிமார்] = பெருந் தவத்தை யுடையவர்களும், [காமச் செவ்வி உறுமித் திருப்ப அத்தி வர[=காம விகாரத்தின் குறிகள் கோபித்துத் திருப்புவதால் மதங் கொண்ட யானையைப்போற் பாய்ந்து வருவதற்கு; [செவ் விவரதி]=செந்நிறமுடைய அத்திக் கனியின் விதையும், (அதன் பிசினும்), [மா]=மாம் பருப்பும், (அதன் பிசினும்) [தவசி]=முருங்கை விதையும், (அதன் பிசினும்) [வாதுமை] = வாதுமைப் பருப்பும், (அதன் பிசினும்) [நெய்] = பசுவின் நெய்யும், [புல்]=கற்கண்டும்; [மா] = கோதுமை மாவும், (ஆகிய இவைகளை லேகியமாக்கி மேற்படி பற்பங்களைச் சேர்த்துக் கொடுக்கவும்)— எ - று.

(தா - ம்.) முன் கூறிய முப்பது வகைப் பற்பத்திலும் ஒன்றும் தவருமல் வகை 1-க்கு, ¼-வராகனெடையாகக் கூடிய 7½ வராகனெடையும், அத்தி விதை அதன் பிசின், மாம் பருப்பு, அதன் பிசின், முருங்கை விதை, அதன் பிசின், வாதுமைப் பருப்பு, அதன் பிசின், என்னும் இவ்வெட்டும் வகை 1-க்கு, விராகனெடை - ஒன்றே முக்காலரைக்காலாகக் கூடியவாராகனெடை பதினைந்தையும் ஒன்ருகச் சேர்த்து, சாதிக்காய் ¾ பலமும் சேர்த்து. ஆகத் தொகையான பலம் மூன்றையும், நாள் ஒன்றுக்கு ஐந்து பலம் விகிதம் அத்திக் கள் விட்டு, ஐந்து நாளரைத்து, ஆரும் நாள், பசுவின் நெய் 3 பலம், கற்கண்டுப் பொடி 1 பலம், கோதுமை மாவு ½ பலம், ஆகிய இவற்றுள், கோதுமை மாவைக் கொஞ்சம் நெய்யில் சிவக்க வறுத்து மற்றவைகளையெல்லாம் ஒன்ருய்க்கலந்து லேகியமாகச்செய்துக் கொள்ளவும்;

மருந்து புசிக்கும் இரண்டு நாளைக்கு முன், ஸ்நானம் செய்து, மறு நாள் விரோசன மெடுத்துக்கொண்டு, புளி, மோர், தயிர், கனி வகைகள், பெண்போகம் என்னும் இவற்றை நீக்கிப் பத்தியமா யிருந்து ஷெ லேகியத்தை வேளை 1-க்கு, விராகனெடை ½, ¾, அளவாக புசித்துவர, ஓடும் வெள்ளத்தை அணைகட்டித் திருப்புவதுபோல், மேக வெட்டை, நரம்பு வாதம் என்னும் இவற்ருல் இரத்த சத்து நீத்துப்போயாவது அல்லது நரம்பில் வாதம் தங்கி அசைவில்லாமற் போயாவது,

இவ்விரண்டினுலல்லாமல் இரத்த சத்தை நஷ்டப்படுத்தும் மருந்துகளைப் புசித்து அதனுல் இரத்த சத்து நீத்துப்போயாவது இருப்பவர்களுக்கும், பெருந் தவ சிரேஷ்டர்களாயுள்ளவர்கட்கும், உடனே இரத்தப் பசையுண்டாகி, நரம்புகள் முறுக்கேரி, தாருட்டியம், ஊக்கம் முதலியவை விசேடமாமென்பதே (175)

## இறகின் பற்ப வகைகளும், அவற்ருல் தீரும் நோய்களும்.

கழுகிறகை வன்னிமயில் காரிதின்று சூரங்
கழுகிறகை வன்னிமழை காற்றி—கழுகிறகை
யச்சை நடுக்கை யலிபிரமை வேர்வையடை
யச்சை நடுக்கை வெண்ணெ யாம்.

(இ - ள்.) [கழுகு இறகு]=பெருங் கூளி இறகு, (சிறுகூளி இறகு, காட்டுக்கூளி இறகு, நாட்டுக்கூளி இறகு), [ஐ]=பெரும் பருந்திறகு, (சிறு பருந்திறகு, காட்டுப் பருந்திறகு, நாட்டுப் பருந்திறகு,) [வன்னி]=பெருங் கிளியிறகு, (சிறு கிளியிறகு, காட்டுக்கிளியிறகு.நாட்டுக்கிளியிறகு)[மயில்]=பெருமயிலிறகு, (சிறுமயிலிறகு, காட்டு மயிலிறகு, நாட்டு மயிலிறகு,) [காரி]= பெருங் காக்கை இறகு, (சிறு காக்கை இறகு, காட்டுக் காக்கை இறகு, நாட்டுக் காக்கை இறகு), ஆகிய (இருபது வகைகளையும்) முறையே பற்பமாக்கி [சூரம் தின்று]=கடலையின் பிரமாணப் புசித்து வரின்; [கழுவுகிற கை]=அவற்ருல் தீரும் நோய்களாவன, [வன்னி] = பித்த மிகுதிப் பிணி, (பித்தக் குறைப் பிணி), [மழை]=சேத்தும மிகுதிப் பிணி, (சேத்துமக் குறைப் பிணி), [காற்றி]= வாத மிகுதிப்பிணி, (வாதக் குறைப் பிணி), [கழு]=காசம், [கிற]=குட்டம், [கை]=பெருவியாதி, [அச்சை]=பீதி ரோகம், [நடுக்கை]—நடுக்கல், [அலி]=நபுஞ்சகம், [பிரமை]=பிரமிப்பு, [வேர்]=வேர்வை, [வை]=அகாத ரோகம், [அடை]=அடைப்பு ரோகம், ]அச்சை]=பைத்தியம், [நடுக்கை]=குன்மம், [வெண்ணெய்]=பாண்டு ரோகம், [ஆம்] =சன்னி; (என்னும் இவைகள் முறையே குணமாம் எ - று.

(தா - ம்.) பெருங் கூளி, சிறு கூளி, காட்டுக் கூளி, நாட்டுக் கூளி; பெரும் பருந்து, சிறு பருந்து, காட்டுப் பருந்து, நாட்டுப் பருந்து; பெருங் கிளி, சிறு கிளி, காட்டுக் கிளி, நாட்டுக் கிளி; பெரு மயில், சிறு மயில், காட்டு

மயில், நாட்டு மயில்; பெருங் காக்கை, சிறு காக்கை, காட்டுக் காக்கை, நாட்டுக் காக்கை; பெருங் கோழி, சிறு கோழி, காட்டுக் கோழி, நாட்டுக் கோழி; பெரும் புறு, சிறு புறு, காட்டுப் புறு, நாட்டுப் புறு; பெருங் காடை, சிறு காடை, காட்டுக் காடை, நாட்டுக் காடை, பெருங் கோட்டான், சிறு கோட்டான், காட்டுக் கோட்டான், நாட்டுக் கோட்டான்; பெருங் கவுதாரி, சிறு கவுதாரி, காட்டுக் கவுதாரி, நாட்டுக் கவுதாரி என்னும் இந்நாற்பது பட்சிகளின் இறகுகளையும் தனித்தனி பின் வரும் விதம் பற்பஞ் செய்து பின் காணும் விதமேயுபயோகிக்க வேண்டும்.

இறகுகளின் சுத்தி:- இறகுகளைச் சிறு துண்டுகளாய்க் கத்தரித்து ஓட்டிலெரித்து அல்லது புடம்போட்டுக் கரிக்கிக் கொள்வதே சுத்தியாம்.

## இறகுகளின் பற்பமுறை.

(*a*) முன் சொன்ன முறைப்படி சுத்தி செய்த இறகுப் பொடி பலம் 1-க்கு, கையாந்தகரைச் சாறு 4 பலம் விட்டு, அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத் திலும் மீண்டும் புதிதான மேற்படி சாறு 4 பலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத் தட்டி, அப்போதும் 4 பலம் ஷை சாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். 2-ஆம் நாளுதயத்திலும் முன் சாறு 4 பலத்தையே சிறுகச் சிறுக வார்த்துப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் பில்லை செய்து அப்போதும் 4 பலம் ஷை சாறு வார்த்துப் பனியில் ஆறவைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 2-நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே முன் னளவே வார்த்து வார்த்து அரைத் தரைத்துப் பில்லைதட்டிப் பனியில் ஆறவைத் தாறவைத்த பின்பு 5-ஆம் நாள் உதய முதல் 3-நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும் முடிவில் 1-நாள் கவசித்தும் வெய்யிலில் உலர்த்தி நன்றுயுலர்ந்த பின்பு 9-ஆம் நாள் உதயத்தில் 40 காட்டு வரட்டியிற் புடமிட்டு ஒரு நாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுத்துக்கொள்ளவும்.

(*b*) (*c*) இவ்வாறே மீண்டும், 2 தடவைகள் முன் போலவே ஊறவைத்தும், அரைத்தும் ஆறவைத்தும், புடமிட்டு மெடுக்க காற்கூறு பற்பமாயிருக்கும்.

(*d*) பின்பு 31-ஆம் நாள், காற்கூறு பற்பமான இறகுப் பொடி பலம் 1-க்கு, ஷி சாறு பலம் 4 விகிதம் வார்த்து, முன் கண்டபடியே 4-நாள் பிரதி தினமும் ஊறவைத்தும், அரைத்தும் பனியில் ஆறவைத்துமான பின்பு, 3-நாள் அதை வெளிக் காட்சியாகவும், 1-நாள் கவசித்தும் வெய்யலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 15 காட்டு வரட்டியில் புடமிட்டு ஒரு நாளாறவிட்டு, மறுநாளெடுத்துக்கொள்ளவும்.

இவ்விதமே மீண்டும் 8 தடவைகள் முன்போலவே ஊற வைத்தும், அரைத்தும், ஆறவைத்தும் புடம் வைத்துமெடுக்க முழுக்கூறு பற்பமாயிருக்கும். இப்பற்பத்திற்கு ஆகக்கூடிய மொத்தம் (30ம்-90)=120-நாள் என அறிய வேண்டியது.

இறகுகளின் பற்பப் பிரமாணமாவது:- முழுக்கடலைக் கூறு, உத்தமம்; முக்காற் கடலை, மத்திமம்; அரைக்கடலை, அதமம்; காற்கடலை, அதமாதமமாம்.

பித்த மதிகரித்துண்டான பிணிகளுக்கு, பெருங்கூளி யிறகின் பற்பத்தையும்; பித்தங் குறைந்துண்டான பிணி களுக்கு, சிறுகூளி யிறகின்பற்பத்தையும்; சேத்தும மதிகரித் துண்டான பிணிகளுக்கு, காட்டுக் கூளியிறகு பற்பத்தையும்; சேத்துமங் குறைந்துண்டான பிணிகளுக்கு, நாட்டுக்கூளி யிறகு பற்பத்தையும்;

வாதமிகுதிப் பிணிக்கு, பெரும்பருந்திறகு பற்பத் தையும்; வாதங்குறைப் பிணிக்கு சிறு பருந்திறகு பற்பத்தை யும்; காசத்திற்கு, காட்டுப் பருந்திறகு பற்பத்தையும்; குட்டத் திற்கு, நாட்டுப் பருந்திறகு பற்பத்தையும்;

பெருவியாதிக்கு, பெருங்கிளியிறகு பற்பத்தையும்; பீதி ரோகத்திற்கு, சிறுகிளியிறகு பற்பத்தையும்; நடுக்கல் ரோகத் திற்கு, காட்டுக்கிளியிறகு பற்பத்தையும்; நபுஞ்சகரோகத் துக்கு, நாட்டுக்கிளியிறகு பற்பத்தையும்;

பிரமிப்பு ரோாகத்திற்கு, பெருமயிலிறகு பற்பத்தையும்; வேர்வை ரோகத்திற்கு, சிறு மயிலிறகு பற்பத்தையும்; அகாத ரோகத்திற்கு, காட்டு மயிலிறகு பற்பத்தையும்; அடைப்பு ரோகத்திற்கு, நாட்டு மயிலிறகு பற்பத்தையும்;

பைத்திய ரோகத்திற்கு, பெருங் காக்கை யிறகு பற்பத்தையும்; குன்மத்திற்கு, சிறு காக்கை யிறகு பற்பத்தையும்; சன்னிக்கு, காட்டுக் காக்கை யிறகின் பற்பத்தையும்; நீரிழிவிற்கு, நாட்டுக் காக்கை யிறகின் பற்பத்தையும்;

நீர்க் கட்டிற்கு, பெருங் கோழி யிறகு பற்பத்தையும்; நீரேற்றத்திற்கு, சிறு கோழி பற்பத்தையும்; நீர்க் கோவைக்கு, காட்டுக் கோழி யிறகு பற்பத்தையும்; மல பந்தத்திற்கு, நாட்டுக் கோழி யிறகு பற்பத்தையும்;

மலக் கழிச்சலுக்கு, பெரும் புரு இறகு பற்பத்தையும்; இரத்த மூலத்திற்கு, சிறு புரு இறகு பற்பத்தையும்; சீழ் மூலத்திற்கு, காட்டுப் புரு இறகு பற்பத்தையும்: உப்பிசத்திற்கு, நாட்டுப் புரு இறகு பற்பத்தையும்;

மார் எரிவுக்கு, பெருங் காடை யிறகு பற்பத்தையும்; பெரு வயிற்றுக்கு, சிறு காடை யிறகு பற்பத்தையும்; வாதிப்பு ரோகத்திற்கு, காட்டுக் காடை யிறகின் பற்பத்தையும்; பித்த சுரத்திற்கு, நாட்டுக் காடை யிறகு பற்பத்தையும்;

வாத சுரத்திற்கு, பெருங் கோட்டானிறகு பற்பத்தையும்; சேத்தும சுரத்திற்கு, சிறு கோட்டானிறகு பற்பத்தையும்; அதி சாரத்திற்கு, காட்டுக் கோட்டானிறகு பற்பத்தையும்; அதி சாரத்திற்கு, நாட்டுக் கோட்டானிறகு பற்பத்தையும்;

இரத்தக் கழிச்சலுக்கு, பெருங் கவுதாரி யிறகு பற்பத்தையும்; சீதக் கழிச்சலுக்கு, சிறு கவுதாரி யிறகு பற்பத்தையும்; இரத்த பீனசத்திற். காட்டுக் கவுதாரி யிறகு பற்பத்தையும்; சல பீனசத்திற்கு, நாட்டுக் கவுதாரி யிறகு பற்பத்தையும்;

முன் பிரமாணப்படி வெண்ணெயிற் அனுபானித்துக் கொள்ள, முறையே முன் கண்ட ரோகங்கள் திரும் என்பதே.

(176)

**இறகு பற்பப் புறநடையும்; அதன் அனுபானமும்.**

கண்டுபா றங்கிகரி கண்டுபாறங் கிரவி
கண்டுபா றங்கிமது கள்சாராய்—கண்டு
சகுந்தபக்கத் தாடலையுண் சக்கிரிமுன் ஞனஞ்
சகுந்தபக்கத் தாடலையுந் தள்.

(இ - ள்.) [கண்டு பாறங்கி கரி கண்டு பாறங்கி ரவி] = சிறு தேக்கு, மிளகு, கற்கண்டு, பறங்கிச் செக்கை, சித்திரமூல வேர்ப்பட்டை; [கண்டு பாறு அங்கி] = (மணி தரைக் கண்ட வுடன் ஓடுகின்ற உறுப்புக்களையுடைய) ஆமையோடு; (மது கள் சாராயம்] = தேன், கள், சாராயம், (என்னும் இவைகளைக் குளிகை செய்து) [சகுந்த பக்கத்து அடலை உண்] = பறவைத் தொகுதிகளின் (இறகாலாய) பற்பத்தை (ச்சேர்த்து) உட் கொள்வாயாகில், [சக்கிரி முன்னும் நஞ்சு ஆகும்] = நல்ல பாம்பு முதலாக (எல்லாப் பாம்புகளின்) விஷமாகிய [தப கத்து ஆட லையும் தள்] = விசேடமாய் ஒலிக்கின்ற (அழுகையோடு கூடிய) வேதனையையும் நீங்குவாய்—எ - று.

(தா - ம்.) சிறு தேக்கு 1 பலம், மிளகு $\frac{1}{4}$ பலம், கற்கண்டு $\frac{1}{4}$ பலம், பறங்கிச் செக்கை $\frac{1}{4}$ பலம், சித்திரமூல வேர்ப்பட்டை $\frac{1}{4}$ பலம், ஆமையோட்டுப் பற்பம் $\frac{1}{4}$ பலம் ஆகக்கூடிய $2\frac{1}{4}$ பலத் துடனே, இறகின் பற்பம் $2\frac{1}{4}$ பலமும் சேர்த்து, மொத்தமான நாலரைப் பலத்தையும், தேன் ஒரு நாளைக்கு ஒன்பது பலம் விதம் விட்டு மூன்றுநாள் பிரதி தினமும் அரைத்தும், அதன் பின் ஒன்பது பலம் தென்னங்கள் ஒரு நாளைக்கும் ஒன்பது பலம் பனங்கள் ஒரு நாளைக்குமாக விட்டுத் தனித்தனி இரண்டு நாள ரைத்தும், மறுபடியும் தென்னங்கள் ஷை யளவே விட்டொரு நாளரைத்தும், அப்பால், சரக்குச் சாராயம் ஒன்பது பலம் விட்டு ஒரு நாளைக்கும், பழச்சாராயம் மேற்படி அளவே விட்டு ஒரு நாளைக்கு பட்டைச் சாராயம் மேற்படி யளவே விட்டு ஒரு நாளைக்கும் அரைத்து, குளிகை செய்து பத்திரமாய்ப் பரணியில் அடைத்து வைத்துக் கொள்ளவும்,

இதற்குச் சர்வ விடாரிக் குளிகை, பட்சிராசக் குளிகை, காரூட மகிமைக் குளிகை என்று பெயர்.

இதை நாகப்பாம்பின் விஷத்திற்குத் துளசிச் சாற்றி லிழைத்துச் சிறு மிளகளவு நாவில் தடவிக் கண்ணுக்கும் கலிக் கம் போட்டு, உச்சியில் கீறிச் சற்று நேரம் சென்று, சிறு பயற் றன் கஞ்சி கொடுக்க நிவாரணமாமென்பதும்.

நீர் நாகத்தின் விஷத்திற்கு, பேய்த்தும்பைச் சாற்றில் முன்போலவே கொடுத்தும், கலிக்கஞ் செய்தும், உச்சியில் தேய்த்தும், கொள்ளுக்கஞ்சி கொடுக்க நிவாரணமாமென்பதும்

கருநாக விஷத்திற்கு, பிரமியிலைச் சாற்றில், முன் போலவே கொடுத்தும் கலிக்கஞ் செய்தும் உச்சியில் தேய்த்தும் தினையரிசிக் கஞ்சி கொடுக்க நிவாரணமாமென்பதும்,

செந்நாக விஷத்திற்கு, கள்ளியிலைச் சாற்றில், முன் போலவே கொடுத்தும் கலிக்கஞ் செய்தும், உச்சியில் தேய்த்தும் சாமையரிசிக் கஞ்சி கொடுக்க நிவாரணமாமென்பதும்,

விரியன், பனையன், சுருட்டை, இரத்தக்கத்திரி, விரியன் கத்திரி, புலிக்கத்திரி, என்னும் இவை முதலிய சகல விஷங்கட்கும், வெள்ளெருக்குச் சமூலச் சாற்றில் முன்போலவே கொடுத்தும் கலிக்கஞ் செய்தும் உச்சியில் தேய்த்தும் கம்பரிசிக் கஞ்சி கொடுக்க நிவாரணமாமென்பதும்.

தேள், நண்டுத் தெறுக்கை, செய்யான், இவை முதலிய விஷங்களுக்கு வெற்றிலைச் சாற்றில் முன்போலவே கொடுத்தும் கலிக்கஞ் செய்தும் உச்சியில் தேய்த்தும், கேழ்வரகுக் கஞ்சி கொடுக்க நிவாரணமா மென்பதுமே. (177)

## மருந்தின் முரிவுகள்.

பாண்டு மகிமையிது பாடலமேற் கூறுதுமுன்
பாண்டு மகிமையறு பாண்டிதர்காள்—பாண்டு
யிரும்பி லவணமுமிள கிஞ்சிமணி நீர்தே
னிரும்பி லவணமடி யே.

(இ - ள்.) [பாண்டு மகிமையிது]=பற்பங்களின் பெருமை இதுவாகும், [பாடலம் மேல் கூறுதும்]=செந்தூர வகைகளை இனிமேற் சொல்வோம், [முன் பாண்டு மகி மை அறு பாண்டி தர்காள்] = தொன்று தொட்டுப் பழமையான உலகத்திற் குற்றம் நீங்கிய வைத்தியர்களே, [பாண்துய்]=கெடுதியான அனுபவங்கள் (வாய்த்தால்), [இரும்பு] = அயச்செந்தூரம், [இலவணம்]=லவண செந்தூரம், [மிளகு]=மிளகு, [இஞ்சி] =இஞ்சி, [மணி]=உத்தாமணி சமூலச்சாறு, [நீர்]=குளிர்ந்த ஜலம், [தேன்]=தேன், (என்னும் இவற்றால் மேற்படி தோஷங்கள், [இரும்]=பெரிய, [பில வண்ணம் அடி]=பிலத்தில் விழுவதுபோலக் கீழிறங்கும்.

(தா - ம்.) இரும்பு முதலிய உலோகங்களாகிய பற்பம், செந்தூரம், மாத்திரை, என்னும் இவைகளால் நேர்ந்த தோஷங்கட்கு, அயபற்பம், அயச்செந்தூரம் இவைகளாலும்,

பாஷாண பற்பம், செந்தூரம், மாத்திரை, என்னும் இவற்றுல் நேர்ந்த தோஷங்கட்கு, லவணச் செந்தூரம், பற்பம் முதலியவைகளாலும்,

மற்றைச் சரக்குகளால் நேர்ந்த தோஷங்கட்கு மிளகுக் குடிநீராலும்,

அனுபானத் திரவியங்களால் நேர்ந்த தோஷங்கட்கு இஞ்சிச் சாற்றினுலும்,

குடிநீர் வகையால் நேர்ந்த தோஷங்கட்கு, உத்தாமணிச் சமூலச் சாற்றினுலும்,

உணவுகளால் நேர்ந்த தோஷங்கட்கு, குளிர்ந்த ஜலத்தினுலும்,

பானங்களால் நேர்ந்த தோஷங்கட்கு, தேனினுலும் நிவாரண முண்டா மென்பதே. (178)

**இராஜ வைத்திய மகுடம் முதற்பாகம்,**
**முற்றுப் பெற்றது.**